AR
903

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

ஒன்பதாம் பகுதி

தம்பிக்கு

அண்ணாவின் கடிதங்கள்

ஒன்பதாம் பகுதி

அறிஞர் அண்ணா

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

தம்பிக்கு

அண்ணாவின் கடிதங்கள்

ஒன்பதாம் பகுதி

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

முதற்பதிப்பு : டிசம்பர், 1981
பதிப்பு : உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09213
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

விலை ரூ. 12-00

மாருதி பிரஸ், 173 பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

பதிப்புரை

அமரர், அறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையும் பேச்சும் எழுத்தும் மகத்தான சக்தி படைத்தவை; தமிழர் உள்ளங்களைத் தம் வசப்படுத்தும் ஆற்றலும் ஊட்டமும் பெற்றவை.

எளிமை, நயம், கருத்துச் செறிவு, அரசியல் தெளிவு, வரலாற்றுப் படப்பிடிப்பு எல்லாவற்றையும் அவற்றிற் காணலாம். அவை காலத்தை வென்று நிலைக்கும் சிறந்த தமிழ் இலக்கியங்கள்!

அண்ணாவின் கடிதங்களின் ஒன்பதாம் தொகுதி இது. தமிழக வரலாற்றின் முதன்மையான ஒரு வரலாற்றுத் திருப்பத்தில் எழுதப்பட்டவை. அண்ணாவின் ஆழமான அமைதியான உள்ளுணர்வுகளின் பிரவாகத்தை இக் கடிதங்கள் பிரதிபலிக்கின்றன. இவை தமிழன்பர்களின் சிந்தனைக்கு விருந்தும், நல்ல மருந்தும் ஆகும்.

அண்ணாவின் கடிதங்களின் பிற தொகுதிகளும் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— பாரி நிலையத்தார்

முதல் இரண்டு தொகுதிகளின்
முதற் பதிப்பின்
முன்னுரை

திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு, அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ்மூலம் அருமைத் தம்பிமார் களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல் கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட் களாக எழுந்ததுண்டு. என்னைப்போன்ற பல்லாயிரக்கணக் கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும்பெருந் தொண்டை, 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரி நிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள்—நாடகங்கள்—திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச்சிறந்த முறையில் கமழ்வதை யும், இனிய ஓசைபயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சி யெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்றலும்—உண்மையும் உயர்வும் திண்மையும் திட்பமும் சொல்லழகும் பொருளாழமும் ஒன்றை யொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லாவகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லா வகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக் கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்கு பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுப் பரபரப்புணர்ச்சியுடன் அவற்றைப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும், நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ, அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும், அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே, விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக்கொண்டு இலக்கியவிருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன் பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63 — இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

கடித எண்				பக்க எண்
137	புதுப்பா	18-6-61	...	9
138	அழியாச் செல்வம்	25-6-61	...	27
139&140	கதைகள்—கருத்தளிக்க	2-7-61	...	56
141	முதல் பந்தி	20-8-61	...	76
142	பட்டப் பகலில்...! (1)	3-9-61	...	105
143	பட்டப் பகலில்...! (2)	10-9-61	...	118
144	பட்டப் பகலில்...! (3)	24-9-61	...	131
145	குன்றம் பல சென்றிருந்தேன்	29-10-61	...	145
146	பணபாணம், பஞ்சு பஞ்சாக...	19-11-61	...	169
147	முயன்றால் முடியும்!	26-11-61	...	187
148	தீமைகளை ஒழித்துக்கட்ட உதயசூரியன்	3-12-61	...	225

★ தமிழ் நூல் காப்பகம் ★
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

புதுப் பா!

திராவிடர் உரிமை—

தனி அரசு—

தமிழ்நாடு பிரச்சினை.

தம்பி!

"ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தல் இலாபமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கும் விலையில்லை."

அதுசரி, அண்ணா! நாடு விடுதலைப் பெறவேண்டும் என்பதனை அழுத்தந்திருத்தமாகக் கூறவேண்டியதுதான் மரமண்டைகளுக்கும் புரியும்படி; ஆனால் விலகியோர் கூறுகிறபடி, எதற்காக அண்ணா! பால் உணர்ச்சி உள்ள பேச்சுப் பேசுகிறாய்?—என்றுதானே, தம்பி! கேட்கிறாய். இது, என் பேச்சு அல்ல! விலகியோரில் ஒருவரின் பேச்சு! சட்டசபை உறுப்பினர்! அமைதியாகப் பேசுபவர். அவருக்கே மனம் குமுறி, புதுவை மாநாட்டிலே, பேசினார் இதுபோல!

எடுத்துக்காட்டுகள், உவமைகள், கவிதைகள், கதைகள் ஆகியவைகளைக்கொண்டு, தேவையான அரசியல், சமுதாயக் கருத்துக்களை, எளிய முறையிலே அனைவரும் புரிந்துகொள்ளச் செய்யும் முறை—என் கண்டுபிடிப்பு அல்ல! நீண்ட பழம்காலந்தொட்டு, அறிவாளர் மெத்த அருமையாகக் கையாண்டவழி—அதே முறைப்படித்தான், நம்மைவிட்டு விலகிய சட்டசபை உறுப்பினர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள், கழக மாநாட்டிலே, நாட்டு விடுதலையின் அடிப்படைத் தன்மையை விளக்க, இந்த உவமை காட்டிப் பேசினார்—புதுவையில். வழக்கறிஞர். பேச்சு வெறும் பேச்சாக அல்ல, வழக்கை விளக்க வாதம் தேவை அல்லவா —அம்முறையில்,

"நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத்திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிடநாடு கேட்க மாட்டீர்களா?" என்பார்கள்.

"ஒரு நாடு விடுதலைபெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்தர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டக் கணக்கல்ல—நாம் பார்க்கவேண்டியது. எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் 'சிறைக்கைதியாக இருப்பாயா? என்று ஒருவனைக் கேட்டால், கூலிக்காரனாக இருந்தாலும் சுதந்திர மனிதனாகவே இருக்க விரும்புவான் என்பது மறுக்க முடியாததாகும்."

என்று விளக்கம் அளித்தார்.

இந்த விளக்கம் போதும்போலிருக்கிறதே! மேலும் இதிலே பால் உணர்ச்சி இல்லை. இதுபோல் பேசினால் போதுமே! என்று, தம்பி! உனக்குத் தோன்றுகிறது. ஆனால், அவருக்கு அப்படித் தோன்றவில்லை; ஆகவே அவர் தமது வாதத்தைத் தொடர்ந்து பேசுகிறார்:

"அதைப் போலத்தான் ஒரு நாடு அடிமையாக இருப்பதால் இலாபமா? சுதந்தர நாடாக இருப்பதால் இலாபமா என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது—ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா? என்று யாரும் கேட்க மாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ, அதுபோல ஒரு நாட்டின் சுதந்தரத்திற்கும் விலையில்லை."

நம்மோடு இருந்தாலாவது இத்தகைய விளக்க உரைகளை நாம் அடிக்கடி கேட்கலாம்—ஆனால் இல்லை—என்ன செய்வது —எப்படி எப்படிப் பேசினார்—பேசக்கூடியவர்—என்பதை எண்ணி மகிழ, அவருடைய உரையிலே சில பகுதிகளைத் தந்திருக்கிறேன்.

"'இருண்ட கண்டம்' என்று சொல்லப்படும் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் இதுவரை ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் காலனிகளாக வைக்கப்பட்டிருந்த நாடுகள், இழைக்கப்பட்ட கொடுமைகளை வாய்திறந்து ஏனென்று கேட்காமல், அடிமைகளாய் வாழ்ந்த மக்கள், 'மனிதர்களாய்ப் பிறந்தோம்; அடிமைகளாய் வாழ்ந்தோம்; கொடுமைகளைச் சுமந்தோம்; இனியும் சகியோம்; வாழ்ந்தால் விடுதலைபெற்ற மக்களாய் வாழ்வோம்; அல்லது விடுதலைப் போரிலே மாள்வோம்; இனி, வீணில் காலம் கடத்தமாட்டோம்' என்று ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் விடுதலைப்போரிலே தங்களைத் தியாகம் செய்யும் நிலையினைப் பார்க்கிறோம்.

கொடுக்கவேண்டிய பலிகளைக் கொடுத்து, செய்ய வேண்டிய தியாகங்களைச் செய்து, விடுதலைபெற்ற மொராக்கோ, டுனீஷியா, கனா, சைப்ரஸ் நாடுகளைக் காண்கிறோம். வெற்றியின் அருகிலே உயிரைப் பணயம் வைத்துப் போராடும் அல்ஜீரியா, நயசாலாந்து நாடுகளையும் காண்கிறோம்.

இங்கே—'திராவிடம் விடுதலை அடையவேண்டும்' என்று நாம் சொல்லுகிறோம். இந்தியா ஒன்று என்பது என்று இருந்ததில்லை? இந்திய உபகண்டத்தின்மீது படையெடுத்தவர்கள் எத்தனையோ பேர். ஆனால், எவரும் திராவிடத்தில் நுழைந்ததில்லை. பேரரசர்கள் என்று புகழ் பெற்றோர் இந்திய உபகண்டத்தில் ஏராளம்; ஆனால், எவரும் திராவிடத்தைத் தன்னாட்சியின்கீழ்.கொண்டு ஆண்டதில்லை.

'இந்தியா ஒன்று' என்று சந்திரகுப்தன் காலத்தில் இல்லை! சமுத்திரகுப்தன் காலத்தில் இல்லை! அசோகன் காலத்தில் இல்லை! ஹர்ஷன் காலத்தில் இல்லை! கனிஷ்கன் காலத்தில் இல்லை! அக்பர் காலத்தில் இல்லை! ஔரங்கசீப் காலத்தில் இல்லை! ஆனால், அலகாபாத் பண்டிதர் காலத்தில் மட்டும் எப்படி இந்தியா ஒன்றாகும்?

அந்நியன்—வெள்ளையனும், பிரெஞ்சுக்காரனும் ஆண்ட காலத்தில், தன் நிர்வாக வசதிக்காகத் துப்பாக்கி முனையில்,

சர்க்கஸ் கம்பெனியில் ஆட்டையும் சிங்கத்தையும் ஒருசேர வைப்பதுபோல்—இந்தியாவை 'ஏக இந்தியா'வாக வைத்திருந்தான். அதனாலேயே, நாம், எப்படி வடவரோடு ஒன்றாக முடியும்?

மொழியால், கலையால், பண்பாட்டால், வரலாற்றால், பழக்கவழக்கங்களால், பூகோளரீதியாகத் திராவிடர் வேறு—வடவர் வேறு; அப்படியிருக்க, நாம் அனைவரும் ஒன்று என்று எப்படிச் சொல்லமுடியும்?

இந்த மதத்தைத் தழுவியவர்கள் இந்தியா முழுமையும் உள்ளவர்கள்; ஆகவே இந்தியா ஒன்றாக இருக்கவேண்டும்—என்றால், இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள் எல்லோரையும் ஓர் அரசின்கீழ் கொண்டுவர இயலுமா? கிருத்துவ மதத்தைத் தழுவியிருக்கின்ற காரணத்தினாலேயே அமெரிக்காவும், இங்கிலாந்தும், பிரான்சும், ஜெர்மனியும், ஓர் ஆட்சியின்கீழ் இருப்பது சாத்தியமாகுமா? அதைப்போலத்தான், திராவிடமும் இந்தியாவோடு ஒன்றாக இருக்க இயலாது.

இரண்டு கைதிகளை, வசதிக்காகப் போலீசுக்காரன் ஒரு கைதியின் வலதுகையுடன் மற்றவனின் இடதுகையைச் சேர்த்து விலங்கிட்டு, சிறைக்கு அழைத்துச் சென்று ஓர் அறையில் பூட்டிவைப்பதாக வைத்துக்கொள்வோம். விடுதலை அடைந்ததும், அந்தக் கைதிகள் வீடு திரும்புகையில், அவரவர்கள் வீட்டுக்கு அவரவர்கள் போவார்கள். இதுவரை ஒன்றாகவே சிறையில் வைக்கப்பட்டிருந்தோம்; ஆதலால் இனியும் ஒன்றாகவே வெளியிலும் வாழ்க்கை நடத்துவோம்; அப்படித்தான் இருக்கவேண்டும்—என்பது எப்படி நீதியல்லவோ, அதைப் போலத்தான் வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்ட நாம் வெள்ளையர்கள் வெளியேறியவுடன் தனித்தனியே வாழ்வது—அரசோச்சுவதுதான் நீதி என்கிறோம்.

நாம் நமது உரிமையைக் கேட்டால், 'பகைமை பாராட்டுகிறோம்' என்கிறார்கள். 'என் வீட்டுக்குக் காம்பவுண்டு சுவர் போடுகிறேன்' என்றால், 'பக்கத்து வீட்டுக்காரன் திருடனா?' என்கிறார்கள்—இது எப்படி நியாயமாகும்?

இந்திய அரசியல் சட்டம் என்பது, திராவிடர்களை வடவர்கள் அடிமைப்படுத்த ஏற்பட்ட அடிமை சாசனம் ஆகும்.

★

வெள்ளைக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகி விட்டன? பிரெஞ்சுக்காரன் வெளியேறி எத்தனை ஆண்டுகளாகி விட்டன? என்ன மாறுதல்களை வாழ்க்கையில் கண்டோம்.

★

வாழ்வு இங்கு மலர்ந்ததா என்றால், இல்லை! போதிய உணவு இந்த அரசால் இதுவரை நமக்கு அளிக்கப்படவில்லை! மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் வசதியாகக் கிடைக்கவில்லை! ஆயிரக் கணக்கான நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை! இன்று மக்கள் குடிதண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலையினைக் கண்கூடாகக் காண்கிறோம்! இலட்சக்கணக்கானவர்களுக்குக் குடியிருக்க வீடில்லை! மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் எனப்படுபவை, உணவு—இருப்பிடம்—தண்ணீர்! இவைகள்கூட உத்தரவாதம் செய்யப்படவில்லை இந்த அரசால்! நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது! வறுமை ஒழிந்தபாடில்லை! கல்வி எல்லோருக்கும் அளித்தபாடில்லை! இந்நிலை ஏன்?

அரசு நல்ல அரசு இல்லை; திறமையான அரசு இல்லை என்ற காரணத்தால் மட்டுமல்ல—நம்மவர் அரசாகவும் இல்லை என்பதுதான் மேலே சொன்ன நலிவுகளுக்கு எல்லாம் காரணம் என்று நாம் சொல்கிறோம்.

பக்ரா—நங்கலைக் காட்டுகிறார்கள்; இராகுட் அணைத் திட்டத்தைக் காட்டுகிறார்கள்; தாமோதர் திட்டம், சிந்தரித் திட்டம் என்கிறார்கள்; பிலாய் என்கிறார்கள்! ரூர்கேலா என்கிறார்கள்; அத்தனையும் எங்கே—வடநாட்டில்!

இங்கே—சொந்த நாட்டான் பிறந்த நாட்டில் வாழ்வதற்கு வழிவகை இல்லாமல், கூலிகளாய் சிலோனுக்கும், பர்மாவிற்கும், சிங்கப்பூருக்கும், மலேயாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் சென்றவன், அங்கிருந்து தற்போது துரத்தி அடிக்கப்படுகிறான். 'நாடற்றவன்' என்று உதைத்துத் தள்ளப்படுகிறான். ஏனென்று கேட்க நாதியில்லை—வாவென்று சொல்ல நமக்கு உரிமை இல்லை—வந்தாலும், இன்று வசதி அளிக்கும் அதிகாரம் டில்லியில்! ஏன் இந்த நிலை?

திராவிடம் புறக்கணிக்கப்படுவதைப் புள்ளி விவரத்தோடு நாள்தோறும் நாம் எடுத்துக் கூறிவருகிறோம். ஒப்ப மறுக்கும் ஆட்சியாளர்கள், மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் சிலபல

சந்தர்ப்பங்களில் நாம் சொல்லியவற்றைச் சொல்லி மத்திய அரசினைக் கெஞ்சிக் கேட்கிறார்கள். நிதியமைச்சர் சுப்பிரமணியம் ஆனாலும் சரி—மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையாவானாலும் சரி—இப்போதைய ஜெட்டியானாலும் சரி—ஆந்திரத்தின் சஞ்சீவியானாலும் சரி—நாம் சொல்லிய வற்றைச் சிலபல சந்தர்ப்பங்களில் ஒம்புக்கொள்கிறார்கள்.

மாற்றார், உடலில் உள்ள நோயை உணருகிறார்கள். ஆனால், நாம் சொல்லும் பரிகாரத்தை உணர மறுக்கிறார்கள்—ஒப்ப மறுக்கிறார்கள்.

ஒரு நாடு விடுதலை பெற்ற நாடாக இருப்பதும், ஒரு மனிதன் சுதந்தர மனிதனாக வாழ்வதும், அதனால் ஏற்படக் கூடிய இலாபநட்டக் கணக்கல்ல—நாம் பார்க்க வேண்டியது; 'எல்லா வசதிகளையும் கொடுத்து வாழ்நாள் முழுவதும் சிறைக் கைதியாக இருப்பாயா?'...என்று ஒருவனைக் கேட்டால், கூலிக் காரனாய் இருந்தாலும் சுதந்தர மனிதனாகவே இருக்க விரும்பு வான் என்பது மறுக்க முடியாததாகும்.

அதைப்போலத்தான், ஒரு நாடும் அடிமையாக இருப்ப தால் இலாபமா? சுதந்தர நாடாக இருப்பதால் இலாபமா—என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது. ஒரு பெண் கற்போடு இருப்பது இலாபமா? கற்பிழந்தவளாக இருந்தால் இலாபமா?—என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலையில்லையோ அதுபோல ஒருநாட்டின் சுதந்தரத்திற்கும் விலையில்லை.

நாடு புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட்டால்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போதிய பணம் திராவிடத் திற்கு ஒதுக்கப்பட்டால், திராவிடநாடு கேட்கமாட்டீர்களா?—என்பார்கள்.

ஆகவேதான், திராவிடம் தனிநாடாக—விடுதலை பெற்ற நாடாக ஆகவேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஒரு சிலர் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்—உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வாழ நினைக்கும் இந்த நேரத்தில், நாடு பிரியவேண்டும் என்கிறீர்களே; உலகப் போக்கினை உணர வில்லையே'—என்று. இன்று உலகத்திலுள்ள சின்னஞ்சிறு நாடுகளும் விடுதலைபெற்ற நாடாகத் தனிநாடாகவே திகழ விரும்புகின்றனவே தவிர, அண்டை நாட்டோடு ஒட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஒரு நாடும் மற்றொரு நாடும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும், ஐக்கியநாட்டு அமைப்புப் போன்ற

வைகள் எல்லாம் தாங்கள் பெற்ற சுதந்தரத்தைப் பாது காத்துக் கொள்ளவும், சிறிய நாடுகளாயினும் பெரிய வல்லரசு களோடு சரிநிகர் சமானமாக வாழ்வதற்குச் செய்துகொள்ளும் ஏற்பாடுகளே தவிர, வேறில்லை. ஆதலால், திராவிடம் பிரிய வேண்டும் என்பது குறுகிய மனப்பான்மையுமல்ல—உலகப் போக்கிற்கு மாறுபாடானதுமல்ல.

திராவிடம் தனித்து வாழுமா—என்கிறார்கள்; இந்தியா தனித்து வாழ்கிறதா, உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்கா தனித்து வாழ்கிறதா என்றால்—இல்லை; இயலாது. அதைப்போலவேதான், பிரிந்த திராவிடம் தன் நலனுக்கு ஏற்ற வகையில் நேச நாடுகளோடு வியாபார ஒப்பந்தங்களோ, மற்றப் பல ஒப்பந்தங்களோ செய்துகொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவேதான், திராவிடம் பிரிந்தாகவேண்டும் என்று கூறுகிறோம். சின்னஞ்சிறு நாடுகள்—மொராக்கோ, டுனீஷியா, சைப்ரஸ், கனா போன்ற நாடுகளின் விடுதலை வரலாறுகள், விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்றுத் தங்கள் உயிரைக் கொடுக்க முன்வந்த இலட்சக்கணக்கான மக்கள்—விடுதலைப் போராட்டம் நடத்துகின்ற அல்ஜீரியா, நயாசாலாந்து. திராவிடம் போன்ற நாடுகளுக்கு நம்பிக்கையையும், ஊக்கத் தையும் ஊட்டுகின்றன.

இந்தப் பணியை—தாய்த்திருநாட்டினை மீட்கும் பணியை ஏற்க இன்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தேசிய இயக்கமாக வளர்ந்துள்ளது. இதன் வரலாறு குறுகியகால வரலாறு என்றாலும், பெருமைமிக்க வரலாறு."

வாய் குளிர, கேட்போர் காதுகுளிர, பெருமை மிக்க வரலாறு!—என்று பேசக் கேட்டோம். ஒருமுறை அவரை எண்ணி நன்றி கூறிக்கொள், தம்பி! இனி அந்தப் 'பெருமை மிக்க வரலாறு' எப்படி ஏற்பட்டது என்பதை எண்ணிப்பார். இன்றுள்ள எதிர்ப்பு, புதிதுமல்ல எதிர்ப்புமல்ல என்பது விளங்கும்.

வசவாளர்கள் இழிமொழி வீசினர்; பழி சுமத்தினர்; ஏளனம் செய்தனர்; எதனையும் நாம் பொருட்படுத்தவில்லை. அதனால்தான், குறுகியகால வரலாறு என்றாலும், பெருமை மிக்க வரலாறு என்று நற்சான்று அளித்தார் நண்பர்—அன்று.

அந்தப் 'பெருமைமிக்க வரலாறு' படைத்த பொறுப்பாளர்களான, நமது தோழர்கள் முன் வைக்கப்படும் பிரச்சினை யாயினும் சரி! சிக்கலென்பனவாயினும் சரி, எல்லாமே, 'பழைய சரக்கு'—புதிய கண்டுபிடிப்புகள் ஏதுமில்லை. நைந்து போனவை! வந்துவந்து போனவை! பலமுறை பாய்ந்துவந்து, சுருண்டு கீழே விழுந்தவை!—இப்படித்தான் உள்ளன இன்று கிளப்பப்படும் ஏசல், தூற்றல், எரிச்சல் யாவும்.

தூற்றல்களைப் பொறுத்தவரையிலே, அண்ணு! தரம் கெட்ட பலரும் முன்பு தூற்றிக்கொண்டுதான் உலவினர்; இது ஒன்றும் புதிது அல்ல; இவர்கள் பாபம், முன்பு 'நாமாவளி' பாடியவர்கள்; அதற்காகவேனும் இவர்கள்மீது நமக்கு அனுதாபம் ஏற்படவேண்டும்! ஆனல், இப்போது தமிழ்நாடா? திராவிடநாடா? என்றல்லவா, பிரச்சினை புதிய வடிவமெடுத்திருக்கிறது—என்று கேட்கிருய்.

தம்பி! இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல!!

ஏன் பிரச்சினை அல்ல, என்கிறேன் என்ருல், விடுதலைக்குப் போரிடுவோர், விடுதலையை மறுப்போர், என்ற இரு பிரிவினருக்குள்தான், பிரச்சினை எழ முடியும்—விடுதலைக்குப் போரிடுவோருக்குள்ளாகவே பிரச்சினை எழ முடியாது—போராட்ட முறைகளில், அளவில், வகையில் கருத்து வேறுபாடுகள் எழலாம்—பிரச்சினையாகா அவை.

வடிவம் அல்ல என்று கூறுகிறேன்—தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்று கூறிக்கொண்டே, அது இந்தியப் பேரரசில் இணைந்து நிற்கும், பிரிந்து செல்லும் உரிமைபெற்று என்று பேசப்படுவதால்!

புதிது அல்ல என்று கூறிடக் காரணம், தமிழ் நாடா? திராவிடநாடா? என்று திருச்சித் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் விவாதம் நடத்தியது, பல ஆண்டுகளுக்கு முன்பே யாதலால்.

எனவேதான், இது பிரச்சினையுமல்ல, வடிவமுமில்லை, புதிதுமல்ல, என்றேன்.

ஆனல், இது, விலகியோர் இதனைக் கிளப்புவதைப் பொறுத்தவரையில்தான்,

தன்னுட்சி ஆர்வம் குன்ருமல், விடுதலை வேட்கையை மறவாமல், தமிழ்நாடுதான் சாலச் சிறந்தது, திராவிடநாடு அல்ல என்று பேசுவோரும் உளர். அவர்கள் கூறுவது புதிது அல்ல—எனினும் வடிவம் தெரிகிறது, ஏனெனில் வடவர்பிடி அறவே கூடாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

அவர்கள் இதனை ஒரு பிரச்சினையாக்குவது, மாற்ருருக்குத் தான் மகிழ்ச்சி அளிக்கும், என்பதற்காகச் சில கூற விரும்புகிறேன்.

அதற்கு முன்னர், அவர்கள் அறிந்துகொள்ள, வேருென்றும் கூறவேண்டும்—தமிழ்நாடு தமிழருக்கே,என்பது இன்றைய கண்டுபிடிப்பு அல்ல—நமக்கு அது நுழைவுவாயில்! ஆம்! நமது துவக்கக் கட்டம்!!

தனி அரசாகத் திகழவேண்டியது, தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பிரச்சினையை, ஒன்றின்மீது மற்றதை ஏவிவிட்டு, மோதவிட்டு, அந்தத் தாக்குதலால், இரண்டுமே வதைபட்டு வலிவு குன்றிப் போகும் நிலையை உண்டாக்க வேண்டும் என்று எண்ணிப் பயன்படுத்தும் வன்கணளர்கள் இருக்கிருர்கள்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சை, இரண்டுக்கும் இடையே பகையை மூட்டிவிடப் பயன்படுத்துவோருக்கு, உள்ள நோக்கம். தனிஅரசு எனும் திட்டத்தைத் தகர்க்க வேண்டும் என்பதாகும்.

தமிழ் நாடா? திராவிடநாடா? என்று பிரச்சினைக்கு வடிவம் கொடுத்து, எதற்கு எது விரோதம் என்று மோப்பம்பிடித்து, மோதுதலை உண்டாக்க நினைப்போர் நிறைய இருக்கிருர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

திராவிடநாடு கேட்பவர்கள் தமிழ்நாட்டுக்குத் துரோகிகள் என்ருே, தமிழ்நாடு கேட்பவர்கள் திராவிடநாட்டுக்குப் பகைவர்கள் என்ருே பேசும்படி தூண்டிவிடுவது அடிப்படைப் பிரச்சினையை மாய்க்கமுனையும் மாபெருங் குற்றமாகும்; மாற்ருருக்கு, தெரிந்தோ தெரியாமலோ, கைக்கூலிகளாகி விடும் கயமைப்போக்கை ஏற்படுத்திவிடும்.

அடிப்படைப் பிரச்சினை, தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற அளவு, முறை, வகை, என்பதுதானு? அல்ல.

அடிப்படைப் பிரச்சினை இந்தியப் பேரரசு என்ற ஒன்றின் கீழ் அடிமையாக இருக்கத்தான் வேண்டுமா? அல்லது விடுபட்டுத் தனிஅரசு ஆகவேண்டுமா, என்பதுதான்.

தமிழ்நாடா? திராவிடநாடா என்று பிரச்சினையைப் பேசத்தொடங்கி, இந்த அடிப்படையை, விடுதலையை, தன்னாட்சியை, தனி அரசை, மறப்பதோ, இழப்பதோ, மாபெருந் துரோகச் செயலாகும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று பேசும், இரு வேறு முகாம்கள், ஒன்றை ஒன்று எதிர்ப்பதற்காக அமைக்கப் படுகிறது என்று நிலைமை எழுந்தால், அது அந்த இரு முகாம் களுக்கு அல்ல, இந்தியப் பேரரசுக்குக் கப்பங்கட்டிக்கொண்டு, கட்டியங் கூறிக்கொண்டு, காவடி எடுத்துக்கொண்டு, மற்ற வர்கள் அனைவரும் சீரிழந்து, பேரிழந்து, சிற்றினமாகக் கிடக்க வேண்டும் என்று எண்ணுபவர்களின் முகாமுக்குத்தான் வாய்ப்பு; வலிவு; மகிழ்ச்சி தரும்.

தமிழ்நாடு என்று கூறுவோர் உள்ள முகாம், திராவிட நாடு என்றுரைப்போர் உள்ள முகாம் எனும் இரு முகாம்களுமே, இந்தியப் பேரரசு எதனையும் தன் காலடி யில் போட்டு மிதிக்கும் நினைப்புடன், நிலையுடன், வலிவுடன் இருத்தல்வேண்டும் என்று திட்டமிட்டுக் கொட்டமடிக்கும் முகாமுக்கு எதிர்ப்பாக அமைந்தவை என்று திட்டவட்டமாக நிலைமை தெளிவுபடுத்தப்பட்டாக வேண்டும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சைப் பெரிது படுத்தி அதற்குப் பேருருவம், போருருவம் கொடுப்பதை, இந்தியப் பேரரசு புன்னகையுடன் வரவேற்கும்!

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று இரு முகாம்களும் போரிட்டு மடியட்டும், நாம் கொடிகட்டி ஆண்டிடுவோம்—கொழுத்துத் திரிந்துகொண்டிருப்போம் என்று திட்டமிடும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று சச்சரவு எழட்டும், அந்தச் சச்சரவிலே இரு முகாம்களும் ஈடுபட்டுக் கொண்டிருக் கும்போது, நாம் நமது ஆதிக்கத்தை வலிவுள்ளதாக்கிக் கொள்ளுவோம், என்று 'ஏக இந்திய' முகாம், எண்ணி இறுமாந்து கிடக்கும்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பிரச்சினையைக் கிளப்பிவிட்டுவிட்டு, 'ஏக இந்தியா' எனும் 'பகைமுகாம்'

தன்னை நோக்கிப் பாய்ந்துவரும் எதிர்ப்பை முறியடிக்க முனையும்.

அடிப்படை பிரச்சினை, 'ஏக இந்தியா' எனும் பொறி உடைக்கப்பட்டாகவேண்டும்; இந்தியப் பேரரசு எனும் திட்டம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் என்பதை மறத்தல் ஆகாது.

இன்று, 'ஏக இந்தியா'—'இந்தியப் பேரரசு'—எனும் ஆட்சிமுறைத் திட்டம், ஏட்டளவிலோ, பேச்சளவிலோ, விவாத அரங்கிலோ அல்ல, சட்டமாக்கப்பட்டு, நடைமுறை யில் இருந்து வருகிறது. அந்த 'நடைமுறை' நிலை குலையா திருக்க, நாளும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

புன்னகையுடன் நல்லுரை கூறுவோராகச் சில வேளை களிலும், புருவத்தை நெரித்தபடி மிரட்டும் பேச்சினராகச் சில வேளைகளிலும், ஏக இந்தியாக்கள் உள்ளனர். அவர் களின் ஒரே எண்ணம், தன்னாட்சி தனி அரசு என்ற உரிமை உணர்ச்சி, விடுதலை வேட்கை, எழாமல், கருககிவிடவேண்டும் என்பதுதான்.

இந்தியப் பேரரசுக்குக் காவலர்களாக உள்ளவர்கள், இதனைத்தான் நோக்கமாகக்கொண்டு, 'தேசியம்' இருக்கின் றனர்—தேனில் குழைத்த நச்சுப்பொடி தருகின்றனர்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்று விவாதம் நடத்திக் கொண்டு அவர்கள் இருக்கட்டும்...அதுதான் நமக்கு இலாபம் —அப்படி ஒரு சச்சரவு உருவானால்தான், நம்மீது பாய, நேரமோ, நினைப்போ, வலிவோ, வாய்ப்போ, கிடைக்காது போகும், என்பது, 'ஏகஇந்தியா'க்களின் எண்ணம்.

அந்த எண்ணம் காரணமாகத்தான், எப்போது திராவிட நாடா? தமிழ்நாடா? என்ற பேச்சு, விவாதமாக்கப்பட்டாலும், தூபமிட, தூக்கிவிட, ஏகஇந்தியாக்கள் துடியாய்த் துடிக் கிறார்கள்; துந்துபி முழக்குகிறார்கள்.

ஏகஇந்தியாக்களைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு, திராவிடநாடு, என்ற திட்டம் எந்த வகையினதாக, அளவினதாக, முறையினதாக இருப்பினும் கூடாது என்பதுதான், எண்ணம். சில வேளைகளிலே, 'தமிழ்

நாடு' எனும் திட்டத்தினிடம் பரிவுகாட்டுவதுபோலப் பொய்க்கோலம் காட்டுவர்; உண்மை நிலைமை, அஃதன்று.

பெயரும் வகையும் முறையும் அளவும் எதுவாக இருப்பினும், தமிழ்நாடு என்று இருப்பினும், திராவிடநாடு என்று இருப்பினும் உரிமை உணர்ச்சியாக, விடுதலை வேட்கையாக தனிஅரசுத் திட்டமாக,இருக்கும், எதனையும் 'ஏகஇந்தியாக்கள்' எதிர்த்து ஒழிக்கத்தான், ஆதிக்கத்தால் கிடைக்கும் ஆற்றலைப் பயன்படுத்துவரேயன்றி, இரண்டில் ஏதேனும் ஒன்றை ஆதரித்து, மற்றதை எதிர்ப்பர் என்று மதியிலியும் கூற மாட்டான்.

பிரிந்துபோகிறோம்—பேரரசுக்கு எடுபிடியாக இருக்க மாட்டோம்—தனி அரசாகிவிடப் போகிறோம். என்ற முழக்கம், எங்கிருந்து கிளம்பினாலும், தமிழ்நாடு பேசும் முகாமிலிருந்து எழும்பினாலும், திராவிடநாடு கேட்கும் பாசறையினின்று கிளம்பிடினும், ஏக இந்தியாக்களுக்கு, வெறுப்புத்தான் உண்டாகும்.

இந்தியப் பேரரசு, 'பேரரசாக' இருக்கவேண்டும் என்று தான் எண்ணுகிறதேயன்றி, பிரிவினை, தமிழ் நாடாக இருந்தால் பரவாயில்லை, திராவிடநாடுதான் கூடாது என்ற நிலையில் இல்லை; இருக்கமுடியாது.

பிரிவினை கூடாது—பேரரசு உடைபடக்கூடாது—தனி அரசு அமையக்கூடாது—என்ற இதிலேதான், இந்தியப் பேரரசு கண்ணுங்கருத்துமாக இருக்கும்—தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற அளவுபற்றிய அக்கரை கொண்டது போலச் சிலருக்குத் தூபமிட்டுப் பேச வைப்பதுகூட, மொத்தத்தில், 'தனி அரசு' கேட்கும் உரிமை உணர்ச்சியை மாய்க்கவே யன்றித், தமிழன் என்ற உணர்ச்சியை மதித்திட அல்ல.

திராவிடநாடு கூடாது நடவாது என்று, தமிழ் நாடு கேட்போர் கூறுவதாகப் பெரிதுபடுத்திப் பேசும், ஏகஇந்தியாக்களின் நோக்கம், ஏகஇந்தியா உடைபடாதிருக்கவேண்டும் என்பதுதான்.

அஃதேபோல, திராவிடநாடு எனும் திட்டத்தார், தமிழ் நாடு மட்டும் தனிநாடு ஆகவேண்டும் என்ற வாதத்திலே உள்ள குறைபாடுகளைப் பேசும்போது அக்கரை காட்டி அதனை எடுத்துரைப்பதும், 'ஏக இந்தியா' எனும் திட்டத்தைக் காப்பாற்றத்தான்,

'திராவிடநாடு!' கேட்கும் குரல் வலிவடைந்து, நாட்டிலே ஆதரவு பெருகிடும் நிலை வளர்ந்ததும், ஆந்திரர் வேறு, கர்னடகர் வேறு, கேரளத்தார் வேறு, எங்ஙனம் அவர்களை இணைத்து ஆட்சி நடக்கும்; ஆகாதே! கூடாதே! ஆபத்தாயிற்றே! என்று கூச்சலைக் கிளப்பி, தனி அரசுத் திட்டத்தைத் தகர்க்க நினைக்கிறார்கள்—அதற்கு, 'தமிழ்நாடு' கேட்போர், 'திராவிடநாடு' திட்டத்துக்கு எதிர்ப்பாகக் கூறும் காரணங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதுபோலவே, தமிழ் நாடு தனி நாடு ஆதல்வேண்டும் என்ற உரிமை உணர்ச்சியை உருக்குலைக்க, திராவிடநாடு கேட்பவர்கள் பேச்சினை எடுத்துப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்தியப் பேரரசினர் மேற்கொள்ளும் இந்தப் போக்குக்கு உள்ள நோக்கம், 'ஏக இந்தியா' காப்பாற்றப்படவேண்டும் என்பதாகும்.

தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம், எழுப்பப்பட்ட போது, எலி வளை எலிகளுக்கே என்றுதான் ஏக இந்தியாக்கள் கேலிக் குரலொலி கிளப்பின.

திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய முழக்கம் எழுந்தது; திராவிடம் திராவிடம் என்று இரைச்சலிட்டன, ஏக இந்தியாக்கள்!

இப்போது, தமிழ்நாடு கேட்போரைக்கொண்டு, திராவிட நாடு திட்டத்தைத் தாக்கவைத்து, தகர்த்திடலாம் என்பது, ஏக இந்தியாக்களின் நப்பாசை!!

திராவிடநாடு திட்டத்தைத் தாக்க, தமிழ்நாடு கேட்போருக்கு வாய்ப்புத் தேடிக்கொடுத்த பிறகு; தமிழ்நாடு தமிழருக்கே என்ற திட்டத்துக்கு வலிவு ஏறிவிட்டால், ஏக இந்தியா என்ன செய்யுமெனில், முன்பு எழுப்பிய முழக்கம் இருக்கவே இருக்கிறது, எலி வளை எலிகளுக்கே?—அதனைக் கருவியாக்கிக் கொள்ளும்.

எந்த முறையைக் கையாண்டாகிலும். யாரை யார்மீது ஏவிவிட்டாகிலும், உரிமை உணர்ச்சியை, விடுதலை வேட்கையை, தன்னாட்சி ஆர்வத்தை ஒழித்தாகவேண்டும் என்பது ஏக இந்தியாக்களின் திட்டம்.

ஏக இந்தியாக்களின் இந்தச் சதித்திட்டம் புரியும் எவரும், தனி அரசு உணர்ச்சிக்கு ஊறு தேடிடத்தக்க கேடான முறை

யிலே, தங்கள் போக்கையும் நோக்கையும், பேச்சையும், செயலேயும் ஆக்கிக்கொள்ளமாட்டார்ாள். மிகுந்த விழிப்புடனிருந்து, ஏக இந்தியாக்களின் சதியை முறியடிப்பர்.

விலேக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர, வழுக்கி விழுந்தவர்கள் தவிர, குறுக்கு வழியில் புகழடைய நினைப்பவர் தவிர, மற்ற எவரும், ஏக இந்தியா நடத்தும் கபட நாடகத்தால், ஏமாந்து போகமாட்டார்கள், என்பது திண்ணம்.

"என்னய்யா திராவிடநாடு! தமிழ்நாடுதான் வேண்டுமென்கிருர்களே இன்னின்னுர்! உன்னுடைய திராவிடநாடு கேலிக்கூத்தாமே! தமிழ்நாடுதான் சரியான திட்டமாமே!"—என்று, ஏக இந்தியாக்கள் கேட்கும்போது, நாம் நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும், அந்த 'ஏக இந்தியாக்கள்' நமது நோக்கை வேறுபக்கம் திருப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருர்கள் தந்திரமாக! என்பதை.

தமிழ்நாடு கேட்பவர்களிடம், ஏக இந்தியாக்கள் சென்று, இதுபோலவே கிளறுவார்கள்—தமிழ்நாடு கூடாதாமே! திராவிடத்தார் கூறுகிருர்களே!—என்று. உடனே, தமிழ்நாடு கேட்பவர்கள், வந்தது சண்டை! இறக்கடி கூடையை!! என்ற போக்கிலே, திராவிடநாடு கேட்பவர்கள்மீது பாய்ந்தால், ஏக இந்தியாக்கள், தனியாகச் சென்று, கைகொட்டிச் சிரிப்பார்! சிண்டு முடிந்துவிட்டோம்! கண்டபடி பேசுகிருர்கள்!!—நம்பாடு இலாபந்தான்!!—என்று பேசி மகிழ்ந்துகொண்டிருக்கும்.

மாரு ஏகஇந்தியாக்கள் கிளற, கிண்டிவிட, தூபமிட, தூக்கிவிட, சிண்டுமுடிந்துவிட, முனையும்போது, அடிப்படையை மறவாமல், "ஐயா! ஏக இந்தியா! உம்வேலே எமக்குப் புரியும் நன்ருக! கபடநாடகம் கண்டு கருத்தழிய மாட்டோம். எமக்குள்ள நோக்கம், இந்தியப் பேரரசு எனும் சூழ்ச்சிக்கோட்டையைச் சுக்குநூருக்குவது. அந்தக் காரியத்தை நாங்கள் செய்யாமல் தடுக்க, சூது செய்கிருய்—புரிகிறது. நாங்கள் பலியாக மாட்டோம். எமது எதிர்ப்பை நிறுத்திக்கொள்ளவும் மாட்டோம், மாற்றிக்கொள்ளவும் மாட்டோம். என்று கூறிடும், துணிவும் தூய்மையும் எழவேண்டும். எழுந்திடின் 'ஏதேது! சிண்டு முடிந்துவிட முடியாது போலிருக்கிறதே!" என்று உணர்ந்து, ஏக இந்தியாக்கள் மூலே செல்வர்.

தமிழ்நாடா? திராவிடநாடா? என்பதற்கான விளக்கப் பேச்சுக்கள் அதிகப்பட அதிகப்பட, இந்தியப் பேரரசின் இறுமாப்பு, ஆதிக்கவெறி, சுரண்டல்முறை, இனம் அழிக்கும் கொடுமை, என்பவை குறித்த பேச்சுக் குறையும், மறையும். அந்தப் பேச்சுக் குறையக் குறைய, உரிமை உணர்ச்சி உருக்குலேயும். தனி அரசுத் திட்டம் துருப்பிடித்துப்போகும், விடுதலே அணி உடைபடும்; சிதறுண்டுபோகும்.

நாம், தம்பி! ஒருதுளியும் இந்த நிலேமை எழ இடமளிக்கக் கூடாது.

வடக்கு வேறு—தெற்கு வேறு—என்ற விளக்கம் இப்போது நல்ல முறையிலே கிடைத்து, மக்கள் உணரத் தலேப்பட்டுள்ளனர்.

'வடக்கு நரகலோகமுமல்ல—வடக்கே உள்ளவர்கள் யமகிங்கரருமல்ல' என்ற புதிய சித்தாந்தம், மக்கள் காதுக்கு நாராசமாக இருக்கிறது.

எனக்குள்ள மகிழ்ச்சி, தமிழ்நாடு தனிநாடு ஆகவேண்டும் என்று கூறும் ஆதித்தனுர், இப்படிப்பட்ட ஒரு ஆபாசமான சித்தாந்தத்தை ஏற்கவில்லே என்பதுதான்.

வடவரின் பிடியை எதிர்ப்பதில், இந்தியப் பேரரசு கூடாது என்பதில், ஆதித்தனுர், தீவிரம் காட்டுவதை வரவேற்கிறேன், மகிழ்கிறேன்—வடநாடு நரகலோகமுமல்ல, வடவர் யமகிங்கரமல்ல அவர் என்று அவர் கூறவில்லே. அவருக்கு இல்லே அந்தக் கெடுமதி! அந்த நிலேமைக்குத் தாழ்ந்துபோகவில்லே. தலே நிமிர்ந்து நின்று, தமிழ்நாடு தமிழருக்கு என்ருர்! அதுகேட்டு நான் இன்புறுகிறேன்.

இந்தியப் பேரரசு என்பது அரசியல் ஆதிக்கத்தால் இறுமாந்துகிடக்கும் ஒரு புதிய ஏகாதிபத்தியம்; வடநாட்டு முதலாளிகளுக்கு அமைந்துள்ள கோட்டை; தென்னுட்டைத் தேயவைக்கும் சுரண்டல் யந்திரம், என்ற பேருண்மையை இப்போது மக்கள், மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டு விட்டனர்.

இந்த உணர்ச்சி பாழாகும்படியான பேச்சிலே ஈடுபடுபவர்களேவிட நாட்டுக்குக் கேடு செய்பவர்கள் வேறு எவரும் இருக்கமுடியாது.

09213

தமிழ்நாடா? திராவிடநாடா? என்ற பேச்சுக்குப் பின்னுலே பதுங்கிக்கொண்டு, தென்னுட்டைச் சுரண்டிக்கெடுக்கும் வடநாட்டு முதலாளிகளின் கோட்டையாகிவிட்ட இந்தியப் பேரரசு எனும் புதிய ஏகாதிபத்தியத்துக்கு உடந்தையாக இருப்பவர் எவரேனும், அவரினும் இழிதன்மையான செயல் புரிவோர் வேறெவரும் இருக்கமுடியாது.

தம்பி! என்னைப்பற்றி, என் திறமைக்குறைவு, தெளிவற்ற தன்மை, பெருந்தலைவர்களிடம் பேசமுடியாத பயங்கொள்ளித் தனம், என்ற எதைப்பற்றி வேண்டுமானுலும் பேசி மகிழட்டும்; மகிழக்கூடியவர்களுக்கு விருந்தளிக்கட்டும். நான் துளிகூட வருத்தப்படவில்லை. ஆனுல், அதே வேகத்துடன், விறுவிறுப் புடன், நம்மை அடிமைப்படுத்தி, அலைக்கழிக்கும் ஏக இந்தியா' எனும் ஏற்பாட்டை, எதிர்த்துத் தாக்கினுல் போதும்.

அண்ணன் என்பவன் யாரடா!
அப்படி ஒருவனெனக் கேனடா!

என்று வீரச்சிந்து கேட்போரைப் பரவசப்படுத்தும் அளவுக்குப் பாடட்டும். ஆனுல், வடநாட்டு ஆதிக்கத்தால் வதைபடும் மக்களை விடுவிக்க, வீரம் கொந்தளிக்கும் வெண்பாக்கள் பாடுவதை, விட்டுவிட வேண்டாமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு தனி ஆள்—மிகச் சாதாரண மானவன்—என்னை அடக்க, அல்லது அழிக்க, இத்தனை பெரிய முயற்சியும் ஆற்றலும் தேவையா!! அந்த ஆற்றலை, நமது மக்களை, சிங்களத்துத்துக்கும், சிங்கப்பூருக்கும், ஜான்சிபாருக் கும், மோரிசுக்கும், நெட்டாலுக்கும் துரத்திவிட்டிருக்கிற இந்தியப் பேரரசின்—ஆதிக்கத்தை எதிர்த்திடப் பயன்படுத்த வேண்டும். வெண்ணெய் வெட்ட வாள் ஏன்? என்னைத் தாக்கவா இவர்களின் அறிவாற்றல் தேவைப்பட வேண்டும்!

ஐயம் ஏற்படும், நாட்டுமக்களுக்கு, இவர்களுக்கு உள்ள ஆற்றல் இந்த அண்ணுத்துரையை ஏசமட்டுமே பயன்படும் அளவு போலும் என்று!!

அதுமட்டுமல்ல! அவனேடு இருந்தபோது, வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தாக்க, நேருவிலிருந்து நேருதாசர் வரையிலே, "ஏ! மாமிச மலைகளே! சோற்றுலடித்த பிண்டங்களே! உணர்ச்சியற்ற உருவாரங்களே!" என்றெல்லாம் கண்டித்தார்கள், இடிமுழக்கமிட்டு, இப்போது ஒரு வார்த்தை கூறப் பயப்படுகிறுர்களே! அந்த இடத்தைவிட்டு வந்து

விட்டதும் இத்துணை தொடை நடுக்கமா!—என்று ஏளனமாக எண்ணுவர்.

அதுமட்டுமல்லவே! வடநாட்டு ஏகாபத்தியத்தை மகிழச் செய்வதற்காகவே, இப்போது, தி.மு. கழகத்தவரைத் தூற்றிக்கொண்டிருக்கிறுர்கள் போலிருக்கிறது என்று எண்ணு வார்கள். அந்த ஐயம் அகற்றவும், ஆற்றலைத் தக்க வழியில் பயன்படுத்தவும், வீரவெண்பாப் பாடிவர வேண்டுகிறேன். இடையிடையே என்னை இகழ்ந்து விருத்தம் பாடிக் கொள்ளட்டும்—வேண்டாமென்று சொல்ல நான் யார்?—மேட்டுக்குடியினனு? ஒட்டா? உறவா? உம்! ஆகட்டும், என்னை ஏசி, அகவல் அந்தாதி, எதெது முடிகிறதோ அவ்வளவும். ஆனுல், அந்தப் பழைய போர்க்குரல்—முழக்கம்—கண்டதுண்ட மாக்கிடும் வீராவேசம்—அந்தப் பக்கம் கொஞ்சம் பாயட்டும். வடநாட்டு ஏகாதிபத்தியத்தின்மீது வெகுண்டு பாடிய வெண்பாக்களை, நாடு கேட்கட்டும்.

என் காதுகளிலே ஒலித்தபடிதான் இருக்கின்றன, அந்த வெண்பாக்கள்.

தெற்கு வரண்டதேன்? தீக்காடாய்ப் போனதேன்?
குற்றுயிராய் வாழ்வு குலைந்ததேன்?—பொற்றெடியே!
அஞ்சாமல் கூறிடுவேன் அத்தனைக்குங் காரணந்தான்
வஞ்சனையாளர் வடக்கு.

தென்னுட்டின் செல்வமெலாஞ் சேர்த்து டில்லியில்
குவித்தே
அந்நாட்டைப் பூக்காடாய் ஆக்குவதும்—இந்நாட்டில்
மிஞ்சும் தொழில்களையும் வேரறுத்து மாய்ப்பதுவும்
வஞ்சனையாளர் வடக்கு.

★

துன்பநிலை நீங்காத் தூயோர் புகழ்கின்ற
'இன்பத் திராவிடம்' இங்க மைந்தால்—தென்னவர்பால்
தஞ்ச மடைவதல்லால் தன்னுட்சி காணுமோ
வஞ்சனையாளர் வடக்கு.

★

நெஞ்சுடையப் பாடுபட்ட நீர்மையார் தென்னாட்டில்
பஞ்சடைந்த கண்ணாய்ப் பரிதவிக்க—அஞ்சாமல்
மிஞ்சிய செல்வத்தை மேவிச் செழிக்குதடா
வஞ்சனையாளர் வடக்கு.

★

நாடாண்ட தென்னவர்கள் நாதியற்று வாழ்விழந்து
ஓடாகி நாளும் உழைத்தாலும்—வாடாமல்
நெஞ்சில் இரக்கமின்றி நித்தம் வதைக்கின்றார்!
வஞ்சனையாளர் வடக்கு.

★

இத்தகைய விடுதலை உணர்ச்சி கொப்பளிக்கும் வெண்பாக்கள், வீரமுழக்கங்கள், யாவுமே மாறி, இப்போது ஏன் விலகினோம் என்பதற்கான 'நொண்டிச் சிந்தும்'—வடக்குக்குக் 'காவடிச் சிந்தும்', நேரு பெருமகனாருக்குத் 'திருப்புகழ்' பாடுவதுமாகவா, இவர்கள் மாறிவிடவேண்டும். இதைக் காணும்போது,

வஞ்சனையாளர் வடக்கு என்ற வாயினரே!
வாஞ்சனையும் கொண்டீரோ வடவர் பாலே!
கிடக்கின்றான் காஞ்சியிலே கிழடு தட்டி!
கிளர்ந்தெழுந்து காட்டிடுவீர் உமதுவீரம் வடக்கு நோக்கி!

என்றல்லவா, தம்பி! கேட்டிடத் தோன்றும்.

வெண்பாவா இது! என்று கவிதை கற்றோர் கேட்கக் கூடும். தம்பி! எனக்கு அந்த இலக்கணம் தெரியாது. ஆனால் இதுதான் இவர்தம் போக்குக்கண்டு, பேச்சுக்கேட்டு, நாடு தந்திடும் புதுப் பா!

அண்ணன்,

அண்ணாதுரை

18-6-61

கடிதம் : 138

அழியாச் செல்வம்

சிற்பியும் திறமையும், கருத்துக் கதை—

தி. மு. க. வின் கட்டுக்கோப்பு—

திருப்பரங்குன்ற மாநாடு—

தம்பி!

அவன் சிற்பி அல்ல—ஆனால் மனதை ஈர்க்கும் காட்சிகளைக் காணும்போதெல்லாம், என்றென்றும் காண்போருக்குக் களிப்பூட்டும் விதமாக, இந்தக் காட்சிகளைச் சிற்பி செதுக்கித்தர மாட்டானா! என்று எண்ணுவான்—ஏங்கக்கூடச் செய்வான்.

அகன்ற தாமரைமீது அமர்ந்து துயிலுறும் அன்னப்பெடை, குஞ்சுகளுக்குத் தீனியூட்டும் பறவை, கன்றின் முதுகைத் தன் நாவினால் தடவி மகிழும் பசு, ஏதோ அரவம் கேட்டுக் காதுகளை நிமிர்த்தியபடி, மிரட்சி கொண்ட கண்களுடன் நிற்கும் புரவி, களத்திலே ஏற்பட்ட வடுக்கண்டு நண்பன் விளக்கம் கேட்க, அதனைக் கூறிடும்போது கண்களிலே வீரக்களை சொட்டும் நிலையிலுள்ள போர்வீரன்,—இவை போன்ற காட்சிகளைக் காணும் போதெல்லாம், சிற்பி இவைகளைச் செதுக்கி வடிவம் கொடுத்து, எப்போதும், அந்த அழகு

காண்போருக்கெல்லாம் மகிழ்ச்சி தந்திடச் செய்யவேண்டும் என்று எண்ணுவான்.

சிற்பிகள் இருந்தனர்—அவர்களுக்கு இந்தச் சிந்தனை இல்லை! இவனுக்குச் சிந்தனை இருந்தது—ஆனால் அவன் சிற்பி அல்ல!!

"அன்னப் பெடையா? அலர்ந்த மலரா? அன்னமூட்டும் அன்னையா?—அழகாகத்தான் இருக்கும்—மிக அழகாக! ஆனால், வேலை நிரம்ப இருக்கிறது, ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு வேறு இருக்கிறது!!—என்று கூறுவர் சில சிற்பிகள்—உளியை எடுப்பர், ஏற்றுக்கொண்ட வேலைக்காக.

திறமை அற்றவர்களோ எனில், அங்ஙனம் எவரும் கூறார்! முகத்திலே ஏற்பட்டுவிட்ட சுருக்கங்களை, அப்படியே சிலையில் வடிப்பதுதான், சிற்பிக்கு உள்ள அறம்! ஆனால், பணம் கொடுக்கும் சீமான், அதைக் கண்டால் சீறுவாரே! அவர் என்ன, தன்முகத்திலே காலக்கரம் கோடுகளை இழுத்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறாரா!! அல்லது அவருக்குக் காதலி வேலைபார்க்கும் காரிகை அதனைக் கவனப்படுத்துவாளா!! தன் முகத்திலே ஒரு கெம்பீரம், ஒரு கவர்ச்சி இருப்பதாக அவர் எண்ணுகிறார்—சிற்பி அதனை அறிவானே! எனவே, உள்ளதை உள்ளபடி காட்டினால், உயிரே போனாலும் போய்விடும்; எனவே கலை பிறப்பிக்கும் கட்டளையைக்கூட மீறுகிறான்! சுருக்கமின்றிச் சிலை சமைக்கிறான்! கலைஞன் மீறக்கூடாத அறத்தை மீறுவதை எண்ணுகிறான். கவலை தாக்குகிறது, முகத்தில் சுருக்கம் விழுகிறது.

சீமான்களும் சீமாட்டிகளும் சிலைவடிவ மெடுக்கின்றனர்; சிலையைக் கண்டுவிட்டு, அவர்களைக் காண்பவர் ஏமாற்றமடைகின்றனர்! ஏமாற்றத்தை வெளியே எடுத்துரைக்கவும் இயலாத நிலை! பாராட்டுகிறார்கள், சிற்பியை; சிற்பிக்கோ, வேதனை, வெட்கம்!

இந்த வேதனையும் வெட்கமும் போதாதென்று, காலத்தை வெல்லும் கவின்மிகு காட்சிகளை வடித்தெடுக்கச் சொல்கிறான்—வாழ்வுக்காக என்னென்ன பாடுபடவேண்டி நேரிட்டு விடுகிறது என்பதறியாதான்! அன்னப் பெடையாம்! அழகு மயிலாம்! அலர்ந்த மலராம்!—ஆமாம்! இவைகள் செதுக்கப் படவேண்டியவைகள்தான். தெரியும். முடியும். ஆனால், செதுக்கினால், பலன்? உளி தூக்கும் அளவுக்குக்கூட உடலிலே வலிவு இராதே! பட்டினியல்லவா கிடக்கவேண்டி நேரிடும்!!

பாரே புகழும்! கலை உலகே பாராட்டும்!—என்கிறான். புகழ்! தேன்!! ஆமாம்! ஆனால், முதலில் பசிப்பிணியல்லவா போகவேண்டும்—பிறகல்லவா, தேனென இனிக்கும் புகழ்!!

ஏற்றமிகு எண்ணம் இருக்கிறது இவனுக்கு; நேர்த்திமிகு கலைத்திறன் இருக்கிறது நமக்கு!! ஆனால் வயிறு வேறு இருந்து தொலைக்கிறது!!—என்று எண்ணிக்கொள்வான், சிற்பி.

ஓடோடி வந்தான் இளைஞன் ஓர் நாள்! தைலம் போன கட்டைபோன்ற உடல். கல்லாமையைக் காட்டிடும் கண்கள்—இப்படி உள்ள சீமானைக் கட்டுடலும் கருணை பொழியும் கண்களும் உடையோனாக்கிக் கொண்டிருக்கிறான் சிற்பி! உளிக்கு வாயுண்டா, ஏன் இந்த அக்ரமம் என்று கேட்க!!

"அருமையான காட்சி! அகிலம் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டிய காட்சி!"

"களிநடமிடும் கன்னியைக் கண்டாயோ?"

"இல்லை, சிற்பியாரே! கன்னியை அல்ல! ஒரு காளையைக் கண்டேன்."

"நம் நாட்டு வீரனோ?"

"காளை, சிற்பியாரே! காளை! வீரன் அல்ல!"

"உண்மையான காளையா? அதிலென்ன அருமை கண்டனையோ?"

"சிற்பியாரே! என்னென்று கூறுவேன் அதனை. காளை வலிவுள்ளது! அழகானது! சந்தனமரத்தைத் தழுவிக் கொண்டுள்ள ஒரு பச்சைக் கொடிமீது இச்சை கொண்டு, இடையே படர்ந்திருந்த நச்சுக்கொடிகளைக் காணாமல், பாய்ந்து சென்றது. கொடிகள், காளையின் கால்களை இறுக்கிக் கொண்டன! விடுபடப் பலம் கொண்டமட்டும் முயற்சி! முயற்சிக்க முயற்சிக்கக் கொடிகள் காலிலும் கழுத்திலும் சுற்றிக்கொண்டன. திணறும் நிலை காளைக்கு! அரிமாவோ என்று எண்ணுவர், அதன் அலறல் ஒலி கேட்டு! சுற்றிக் கொண்டுள்ள கொடிகளை அகற்றப் போராடுகிறது, காலால், கொம்பினால், கொடிகளை அறுத்தெறிந்தபடி! கண்களிலேகூட நீர் வடிகிறது, முள் குத்தியதால்! உடலெங்கும், கொடியிலுள்ள முட்கள், கீறியதால் இரத்தத் துளிகள்! காளை, கருப்பு நிறம்! இரத்தத்துளிகள் உடலிலே! சிறிது நேரத்திற்கெல்லாம்

கருப்பும் சிகப்பும் கலந்ததோ என்று எண்ணத்தக்க விதமா யிற்று, உடல்.''

''பொறு! பொறு! சந்தனமரம்! அதிலே பச்சைக்கொடி! பாயும் காளை! அதனைப் பற்றிக் கொண்ட கொடிகள்! விடுபடக் காளை போரிடுகிறது! அற்புதமான காட்சிதான்! சிலைவடிவ மாக்கினால் கலை உலகே புகழும்.''

''ஓடோடி வந்தேன், கூற.''

''போராடும் காளை எனும் சிலை வடிக்கச் சொல்லத் தானே!''

''அல்ல, காளையின் நிலையைப் பார்த்ததும், எனக்கு, வேறோர் நினைவு வந்தது.''

''என்ன நினைவு?''

''அடிமைப்படுத்தப்பட்ட வீரன்! கட்டுண்டு கிடக்கிறான் தளைகளால்! தளைகளை அறுத்தெறிந்து விடுதலைபெறப் போரிடு கிறான்! கட்டுடலைச் சுற்றிக்கொண்டிருக்கும் இரும்புச் சங்கிலிகளை, உடலை வளைத்தும் நெளித்தும் அறுத்தெறிய முயல்கிறான். அப்படியொரு சிலை சமைக்கவேண்டும். கொடுமைப்படுத்துவோர் எங்கு இருப்பினும், அடிமைப்படுத்தப் பட்டோர் எவரெனினும், அந்தச் சிலையைக் கண்டதும், வீரம் கொப்பளிக்கும்—விடுதலை ஆர்வம் பீறிட் டெழும்.''

சிலைகண்டு, சிற்பியே மகிழ்ந்தான்! சிந்தனையாளன், வானத்து நட்சத்திரங்களை எல்லாம் பறித்தெடுத்து மாலை யாகத் தொடுத்து, உமக்கு அணிவிக்கும் திறம் எனக்கு இல்லையே என்றான். உன் புகழுரை அதனினும் மிகுதியானது என்றான் சிற்பி. ஊர் நடுவே சிலையை அமைத்தனர், அனைவரும் காண! கண்டனர்! கண் சிமிட்டினர்! அவரவர் தத்தமது அலுவலைக் கவனிக்கச் சென்றனர்.

கண்டவர், வைத்த கண் வாங்காமல் நிற்பர்! பாராட்டு வர்! உற்றார் உறவினரையும் நண்பர்களையும் அழைத்துவந்து காட்டுவர்! இந்த அருமையான சிலையை வடித்தெடுத்த சிற்பியைக் காணத் துடிப்பர்—அவன் பணிமனையைக் கலைக்கோயில் என்று புகழ்வர்! என்றெல்லாம், சிந்தனையாளன் எண்ணினான்.

கல்லால் ஆன சிலையா இது! உயிருடன் ஓர் வீரன், தளைகளை அறுத்தெறியப் போராடுவது போலவேயன்றோ தெரிகிறது!—என்று பலரும் பேசுவர்! காட்சி கற்பனையா? எங்கேனும் நடைபெற்ற வீரச் செயலா? என்று கேட்பர்! கொடியினை அறுத்தெறியப் போரிட்ட காளையைக் கண்டதால் எழுந்த சிந்தனை, இச்சிலையாயிற்று எனச் செப்பி மகிழலாம், என்று எண்ணினான் சிந்தனையாளன்.

அவரவர்கள், அவரவர் அலுவலைக் கவனிக்கிறார்கள்—சிலையைப் பார்த்துவிட்டு!

புன்னகை செய்கிறார்கள்—சிலர் பெருமூச்செறிவதும் தெரிகிறது! ஆனால், சொக்கிப் போய் நிற்கவில்லை! வியப்புடன் விளக்கம் கேட்கவில்லை! வேலைகளைக் கவனிக்கிறார்கள். வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக்கொண்ட வேலைகள்! வயிறு இருக் கிறதே!!

சிற்பிகூட இதைத்தானே முன்பு சொன்னான். சிந்தனை யாளன், அதை எண்ணிக்கொண்டான்.

கலைக்கூடம் சென்று, கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்தான்.

''கவலை எதற்காக அப்பா?''

''கருத்தற்ற மக்கள்! கலை அறிவு துளியுமற்ற மக்கள்! கண்ணற்ற மக்கள்!''

''கண்ணற்றவர்கள் அல்ல அப்பா! கண் இருக்கிறது காண! ஆனால், வயிறு இருக்கிறதே!''

''வயிறு! வயிறு! வயிறு! கேட்டுக் கேட்டுக் காது குடைகிறது, இந்தப் பேச்சை.''

''காது கேட்காது! கண் பஞ்சடைந்து விடும் வயிறு காய்ந்தால். அதைத் தெரிந்துதான், கண்டுவிட்டு, அவரவர் வயிற்றுப்பாட்டைக் கவனிக்கச் செல்கிறார்கள்.''

''வாயாரப் பாராட்டினால் என்னவாம்? கலை அறிவு இருந் தால்தானே!''

''கலை அறிவு இருக்கிறது, கண் இருப்பதால். ஆனால், பாராட்ட நேரம் இல்லை! வேலை இருக்கிறதே நிரம்ப! ஏற்றுக் கொண்ட வேலை! வயிறு இருக்கிறதே!''

"ஊரே திரண்டு நின்று புகழப் போகிறது என்று எதிர் பார்த்தேன்."

★

சிற்பியும் சிந்தனையாளனும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த உளி ஏந்துவோன், 'களுக்' கெனச் சிரித்தான். இருவரும் திரும்பிப் பார்த்தனர்; சிந்தனையாளன் சீற்றத்துடன்; சிற்பி, ஏதும் புரியாத நிலையில்!

★

"மன்னிக்க வேண்டும்"

"அடக்கம் போதும்! சிரித்த காரணம்?"

"தங்கள் பேச்சுக் கேட்டுச் சிரிப்பு......"

"வயிறு எரிந்து பேசுகிறேன் நான்! உனக்குச் சிரிப்பு வருகிறது. உம்!"

"கோபம் கொள்ளாதீர் ஐயா! சிலையைக் கண்டு ஊரே திரண்டு நின்று கொண்டாடும் என்று எதிர்பார்த்ததாகச் சொன்னீர்கள்..."

"ஆமாம்! எதிர்பார்த்தது தவறு? சிலை, அத்தகைய பாராட்டுதலைப் பெறத்தக்க ஏற்புடையது அல்லவா?"

"என் ஆசானின் திறமையை நான் நன்கு அறிவேன். சிலை, முதல் தரமானது! எவரும் கண்டு பாராட்டத்தக்கது. ஐயம் எவர்க்கும் எழாது! பாராட்டத்தக்க நிலையில் உள்ள சிலையைப் பாராட்டுவது தங்கள் கடமை என்று அறியும் உணர்வு, மக்களில் பெரும்பாலாருக்குக் கிடையாது..."

"பாராட்டத் தெரியாது—அதாவது, நான் சொன்னபடி, மக்களுக்குக் கலை அறிவு இல்லை."

கலை அறிவு எப்படிப்பட்டது என்று எடுத்துரைக்கத் தெரியாது. ஆனால் கலை அறிவே இல்லை என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. மேலும், மிக நேர்த்தியாகத்தான் இருக்கிறது என்று மனதிலே எண்ணிக் கொள்வார்கள்—பேச மாட்டார்கள்!"

"அதுதான் தவறு என்கிறேன்."

"அதுதான் மக்கள் இயல்பு!"

"அழகுச் சிலையைக் காண்பது; வாய்மூடிக் கிடப்பது! இது ஒரு இயல்பா!!

"ஊரே வியப்புற்று ஓடோடி வந்து சிலையைக் கண்டு, அதுபற்றிப் பரபரப்புடன் பேச வேண்டும் என்கிறீர்."

"எதிர்பார்த்தேன்!"

"ஏமாற்றம் அடைந்தீர்! எரிச்சலும் கொண்டுள்ளீர்."

"ஆமாம்! ஊரே இந்தச் சிலைப்பற்றியே பேசவேண்டும்—மற்ற எதனையும் மறந்து! என்று எதிர்பார்த்தேன்."

"பேசச் செய்கிறேன்."

★

உளி ஏந்துவோனின் இந்தப் பேச்சைக் கேட்டுச் சிற்பியும் சிந்தனையாளனும் திடுக்கிட்டுப் போயினர்.

சிற்பி, சிந்தனையாளனுக்கு ஆறுதல் கூறினான்—ஆனால், அவன் மனமும் குமுறிக்கொண்டுதான் இருந்தது. கலைத்திறனுக்கு—ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது சிலை! எனினும், வியப்பை, மகிழ்ச்சியை, புகழுரையைக் கூற எவரும் துடிதுடித்துக்கொண்டு வராதது, சிற்பிக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. இவ்வளவுதான் மக்கள்! என்று எண்ணிக்கொண்டான். சலிப்பு!

கட்டுடல் மட்டுமல்ல, தளைகளை அறுத்திட முனையும் போது, நரம்புகள் எவ்விதம் புடைத்து இருக்குமோ அந்த நுணுக்கம்கூடத் தெரிந்தது சிலையில்! ஒருபுறமுள்ள தளை அறுபடும் நிலை ஏற்படும்போது, புன்னகை! ஆனால், அதே போது வேறோர் புறம்; தளை சதையை மென்று தின்றுவிடுவது போல இறுக்கிக்கொண்டிருப்பதால் வேதனை! இரண்டுமே, சிலையிலே காட்டினான் சிற்பி!

சிலை சமைப்பதிலே, தான் காட்டியுள்ள திறமையை, சிலையின் தரத்தைக் குறித்து எவரும் பேசாதது, சிற்பிக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஊரே திரண்டுவந்து பாராட்டும் என்றுதான், அவனும் எதிர்பார்த்தான்.

வீரன்—கட்டுண்டவன்—தளை அறுத்தவன்—இந் நிலையுள்ள சிலைகளைப் பலரும் சமைத்தனர்—முன்பு.

இந்தச் சிலை, ஒவ்வொரு நிலையிலும் காணக்கிடக்கும் சிறுசிறு குறைகளை நீக்கி, ஒவ்வொன்றிலும் விளங்கிய அழகைக் கூட்டிச் சமைக்கப்பட்டது.

இந்தச் சிறப்பியல்பை எடுத்துக்காட்டுவர் என்று சிற்பி எதிர்பார்த்தான்.

சீமாட்டியின் சிலையாக இருந்தால், பொன்னும் பொருளும் கொடுத்திருப்பார் சீமான்.

இந்தச் சிலை சமைத்தபோது, எவரிடமும் பொன்னும் பொருளும் எதிர்பார்க்கவில்லை.

அரண்மனையோ, மாளிகையோ, இந்தச் சிலை தமக்குரியது என்று உரிமை கொண்டாடப் போவதில்லை.

இது வீரனின் சிலை! விருதுபெற்ற வீரன் அல்ல! வேந்தர் அவையில் உயர்இடம் பெற்ற வீரன் சிலை அல்ல! கட்டுண்ட வீரன்—விடுதலை பெறத் துடிக்கும் காளை—தளைகளை அறுத்திடும் முயற்சியில் தன் முழுவலிவையும் ஈடுபடுத்திய நிலையிலுள்ள வீரன் சிலை! இதை மன்னர் மகனோ, மாளிகை உடையோனோ, பாராட்ட எப்படி முடியும்! வீரர்கள்! விடுதலை விரும்பிகள்! தளைகளின் கொடுமையைக் கண்டவர்கள்! உரிமைக்காகப் போரிடத் துணிந்தவர்கள்! இவர்களுக்கு மட்டுமே, இதன் அருமை தெரியும்! பாராட்டத் தோன்றும்!

மக்களே, இதன் மாண்பு அறியத் தக்கவர்கள்.

மக்கள், மன எழுச்சி பெறவே, இந்தச் சிலை!

இந்தச் சிலை காட்டும் வீரத் திரு உருவமே, மக்களை மாக்களாக நடத்திடும் மமதையாளரை அழித்தொழிக்கும் மாவீரத்தை மக்களுக்கு ஊட்டவல்லது!

சிலை இத்தகைய எழுச்சியூட்டும்; இது கல்லில் எழுதப்பட்டுள்ள காவியம்! என்று மக்கள் கூறுவர் சிலையைகண்டதும். கண்களிலே ஓர் புத்தொளி தோன்றும்! வீரம் கொப்புளிக்கும் நெஞ்சத்திலே! கூனிக் கிடந்தவன் நிமிர்ந்து நிற்பான்! அஞ்சிக் கிடந்தவன், கெஞ்சி நின்றவன், பஞ்சை அல்ல நான்! கோழை அல்ல நான்! கொடுமையை எதிர்ப்பவன்! உரிமைக்காகப் போராடுபவன்!—என்று முழக்கமிடுவான். மனிதன் வீரனாவான்! மமதையாளன் அச்சம் கொள்வான். சிலைமூலம், சிறப்பானதோர் பாடம் தருகிறோம்—என்றெல்லாம் சிற்பி எண்ணுமலில்லை.

ஆனால், மக்கள்? பார்த்தனர், நன்றாகத்தான் இருக்கிறது என்றுரைத்தனர்—மறுகணமோ, ஏருடன் சென்றான் ஒருவன்; எருது தேடிச் சென்றான் இன்னொருவன்; பருகச் சென்றான் ஒருவன்; பணடம் பெறச்சென்றான் மற்றொருவன். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வேலையில் ஈடுபட்டனர்! என்ன செய்வர்? வேலை இருக்கிறதே நிரம்ப. ஏற்றுக்கொண்ட வேலை! வயிறு இருக்கிறது! அது வேறு!

மக்களின் இந்த அக்கரையற்ற போக்குக்கண்டு மனம் கொதித்த சிந்தனையாளனுக்கும், அதை மறைத்திட முயன்ற சிற்பிக்கும், உளியேந்தி திடுக்கிடத்தக்க பேச்சல்லவா, சொன்னான். ஊரே பேசத்தானே வேண்டும் சிலையைப்பற்றி? பேசவைக்கிறேன்!! என்று. எப்படி என்று இருவரும் யோசித்தனர். உளியேந்தி திட்டம் வகுத்துக்கொண்டான்,

'விர்'ரென்று பறந்துவந்து வீழ்ந்தது ஒரு கல்! சிலை'மீது 'கல்'லென்ற ஒலி கேட்டது! வழியே சென்றோர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்! சிலைமீது பட்டுத் தெறித்தது, கல்!!

யார் இந்தக் காரியம் செய்தது?

என்ன ஈனத்தனமான காரியம் இது?

கல்லெறியும் கயவன் யார்?

சிலை, இவனை என்ன செய்தது?

சீற்றத்துக்குக் காரணம் என்ன?

சீற்றமா, புத்தித் தடுமாற்றமா?

ஏமாளியா! அல்லது எவரேனும் ஏவிவிட்டனரா?

இவ்விதமான பேச்சு எழுந்தது! கற்கள், 'விர்விர்''ரெனப் பறந்துவந்து, சிலைமீது விழுந்தவண்ணம் இருந்தன!

கற்கள் சிறியவை—சிலை பெரிது! கற்கள் வீழ்வதால் ஓசை கிளம்பிற்று—சிலைக்குச் சேதம் இல்லை!

மக்கள் பரபரப்பு அடைந்தனர்! இங்குமங்கும் பதறி ஓடினர்! எதிர்ப்பட்டோரிடம் கூறினர்!

சிலைமீது கல்லெறிகிறார்கள்!

சிலையை உடைக்கிறார்கள்!

சிலை உடைகிறது!

சிலையை உடைத்துவிட்டார்கள்!

அடடா! சிலை அழகானது என்று மகிழ்ந்தனரே!

அற்புதப் படைப்பு என்றனர் அறிந்தோர்!

ஊர் நடுவே அழகாக அமைந்திருந்தது!

உடையக்கூடியதல்லவே, அந்தச் சிலை!

அப்படிப்பட்ட சிலைக்கும் ஆபத்து வந்ததே!

ஊரில், இதுபோலப் பேச்சு; பல்வேறுவகையாக. பலரும், சிலையைக் காண ஓடோடி வந்தனர். முன்பு கண்டதைவிட அக்கரையுடன் பார்த்தனர்; அழகு கண்டு வியந்தனர்!

இதை உடைக்கவும் மனம் வந்ததே!

காதகன்! தன்னால் இப்படிப்பட்ட நேர்த்தியான சிலை செய்யமுடியவில்லையே என்ற பொருமை!

சிலை செய்த சிற்பிக்கு நாடு சிறப்பளிக்கும்; தனக்குக் கிடைக்காதே என்ற காய்ச்சல்!

கெடு மதி! சிலை, பொதுச்சொத்து! கலைக் கருவூலம் என்ற பேரறிவு இல்லாதனின் பேய்ச் செயல்!!

கூடி நின்றோர், பேசினர் இதுபோலெல்லாம்.

வீசிய கற்கள் கீழே சிதறிக்கிடந்தன.

"பார்த்தீர்களா! சிலை பொடிப் பொடியாகி விட்டது."

என்றான் ஒருவன்! மற்றொருவன் அவசரமாக முடிவுக்கு வரும் இயல்பினன்.

"ஆமாம்! சிலை உடைந்ததால்தான், இந்தக் கற்கள் சிதறிக் கிடக்கின்றன."

என்றான்,

மூன்றாமவன் சிலையை உற்று நோக்கினான்! சிதையாமல் நின்று கொண்டிருந்தது!

கீழே பார்த்தான்; கற்கள்! சிலையின் கண்ணோ, கையின் துண்டோ! காதோ! காலின் துண்டோ!—எது உடைந்து போயிற்றோ என்று பார்த்தான். அதது அப்படி அப்படியே இருந்திடக் கண்டான்.

"இவை கற்கள்! வீசப்பட்ட கற்கள்! சிலைமீது சீற்றத்தால் சிற்றறிவினனானவன் வீசினானே, அந்தக் கற்கள்! சிலை உடைக்கப்பட்டதால் சிதறி வீழ்ந்த கற்கள் அல்ல! சிலையைப் பாருங்கள், மீண்டும்! சரியாகப் பாருங்கள்! பழுதுபடாமல் இருக்கிறது கலை அழகுடன்!

பிறகு மற்றவர்களும் உற்றுப் பார்த்தனர்—உண்மை புரிந்தது. சிலை கெடவில்லை!

சிலையை உடைத்துவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீயெனப் பரவவே, ஊரே திரண்டது, சிலை எதிரில்!

முன்பு அதே சிலையைப் பார்த்திருக்கிறார்கள்; ஆனால், அதுபற்றி அதிகமாகப் பேசினதில்லை.

இப்போது அதே சிலை! அதே மக்கள் பார்க்கிறார்கள்; பார்த்துவிட்டு நிரம்பப் பேசுகிறார்கள்.

ஊரே திரண்டுவந்து பார்க்கிறது சிலையை! ஊரார் சிலைபற்றியே பேசுகிறார்கள்.

அவசரத்தில், சிலை உடைந்துவிட்டது—பொடிப்பொடியாகிவிட்டது—என்று பேசுகிறார்கள். பிறகோ கூர்ந்து பார்க்கிறார்கள்; வீழ்ந்து கிடப்பவை வீசப்பட்ட கற்களே என்பது புரிகிறது; சிலை உடைபடாமல் இருப்பதைக் காண்கிறார்கள்.

உடைந்துபோய் விட்டது என்று நினைத்தோம், சிலை உடைபடவில்லை!

கற்களைச் சரமாரியாக வீசித்தான் பார்த்தார்கள். சிலைமீது வீழ்ந்தன; ஆனால், சிலை உடைபடவில்லை! வீசப்பட்ட கற்கள், மூலைக்கு மூலை வீழ்ந்து கிடக்கின்றன!

ஊர்மக்கள் இதுபோல் பேசத் தொடங்கிச் சிலை உடைபடாத தன்மைபற்றித் துவக்கிச் சிலையின் அமைப்பு, நேர்த்தி, தரம், சிற்பியின் திறம், சமைத்த நோக்கம், சிலை தரும் எழுச்சி என்பன பற்றியெல்லாம் பேசலாயினர்.

சிற்பியும் சிந்தனையாளனும், ஊரே சிலைபற்றிப் பேசுவது கேட்டு மகிழ்ச்சி அடைத்தனர்.

உளி ஏந்தி, வீசியதுபோக, மீதம் உள்ள கற்களைக் காட்டி, "எப்படி என் வேலை?" என்று கேட்டுச் சிரித்தான்!

"கற்களை வீசியவன் நீதானா?"

"ஆமாம்! வேறு யாருக்குத் தெரியும் அந்தத் தந்திரம்?"

"எந்தத் தந்திரம்?"

"அக்கரையற்றுக் கிடந்த ஊர் மக்களைச் சிலையைப்பற்றி இவ்வளவு பேச வைத்தேன் அல்லவா? கற்களை வீசி!"

"அதற்காகவா இந்த வேலை? அக்ரமக்காரா! சிலைக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டுவிட்டிருந்தால்?"

"ஏற்படுமா? எனக்குத் தெரியாதா, சிலையின் வலிவு; நான் வீசும் சிறு கற்கள் எப்படிப்பட்டவை; என்பது. மேலும் வீசுபவன் யார்? நான்! வேகம் எப்படி இருக்கும் என்பதும் தெரியுமல்லவா?"

"சிலை உடைந்துவிட்டது என்றே நான் பயப் பட்டுப் போனேன்."

"நீங்கள் பயப்பட்டது கிடக்கட்டும். ஊரே பயந்து போயிற்றே"

"ஆமாம்! சிலை நொருங்கிவிட்டது என்று எண்ணிக்கொண்டுதான், ஓடோடி வந்தனர் ஊர் மக்கள், திரள் திரளாக!"

"ஊர் மக்களுக்குப் பீதி ஏற்படும் விதமாக, நான் தானே வதந்தி கிளப்பினேன்! சிலை உடைந்து விட்டது! உடைக்கப்பட்டாகிவிட்டது! சிதறிச் சிறு சிறு கற்களாகக் கீழே வீழ்ந்துவிட்டது என்றெல் லாம்."

"ஊர் மக்கள், சிலையைப்பற்றி அக்கரையற்று இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போதல்லவா தெரிகிறது, ஊராரின் நினைவு, சிலைபற்றியேதான் இருந்து வந்திருக்கிறது என்ற பேருண்மை."

"இதை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்தது."

மூவரும் எழுச்சிகொள்ளும் விதமாக, ஊரார், சிலையின் நேர்த்தி குறித்தும்; சிற்பியின் திறம்பற்றியும்; சிலையைக் காண்போர் பெறும் எழுச்சிபற்றியும் பேசி மகிழ்ந்தனர்.

★

தம்பி! திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட நாடு எனும் திட்டத்தையும், தாக்கித் தகர்த்திட எண்ணிப் பலர் வீசிய இழிமொழியும், பழிச்சொல்லும், இந்தக் கதையில் வரும், உளியேந்தியின் வேலைமுறை போன்றது என்று எண்ணத்தக்க விதத்தில், ஒவ்வொரு தாக்குதலின்போதும், ஊரே திரண்டுவந்து கழகத்தைக் கண்டு, கலகலத்துப் போய்விடவில்லை என்பதை அறிந்து, கழகத்தின் 'தாங்கும் சக்தி' குறித்துப் பேசிடுவதைக் கேட்கிறோம்.

ஒரு மாறுபாடு; அதனை நான் மறந்திடவில்லை.

கதையில் வரும் உளியேந்தி, உள்ளபடி, ஊர்மக்களைத் திரட்டத் தந்திரம் கடைப்பிடித்தான்; அதற்கே கல் வீசினான்.

கழகத்தின்மீது இழிமொழியும் பழிச்சொல்லும் வீசுவோர், அது போன்றார் அல்ல.

ஆனால், தமது முயற்சிகள் முறிந்துபோனதை உணர்ந்த பிறகு, அவர்களிலே சிலரேனும் கழகத்துக்குத் தாங்கும் சக்தி எவ்வளவு இருக்கிறது, ஊரார் கழகத்தைப் பற்றி எந்த அளவுக்கு அக்கரை காட்டுகிறார்கள் என்பதை, நாம் விளங்கிக் கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே, பகை கக்குவதுபோல, எதிர்ப்பு நடத்துவதுபோல, ஏளனம் செய்வதுபோல நடித்தோம், என்று பேசக்கூடும்.

இதிலே, இவர்தம். போக்கிலே, எது நடிப்பு? எது உயிர்த் துடிப்பு? எது கொண்ட கோலம்? எது நிலைத்த தன்மை? என்று

கண்டறிவது கடினம்; எனினும், கழகத்தின் தாங்கும் சக்தி வளரவேண்டும் எனில், சில ஆண்டுகளுக்கு ஒருமுறை, இப்படிப்பட்ட, இழிமொழி, பழிச்சொல், கழகத்தின்மீது வீசப்படவேண்டும்! மாற்றார் வீசுவதைக் காட்டிலும், உற்றாராக இருந்தோர் வீசுவதுதான், கழகத்தின் தாங்கும் சக்தியை நாம் கணக்கெடுக்க மெத்தவும் பயன்படும்.

அந்தக் கட்டம், திடீரென்று முளைத்தது; வேகமாக வளர்ந்தது; இப்போது முடிவடையும் தருவாயிலிருக்கிறது.

சிலைமீது கல் வீசப்படுகிறது என்ற உடன், சிலை உடைந்துவிட்டதாமே என்று பேசியபடி, ஊரே திரண்டுவந்து, சிலைஎதிரே நின்றதுபோல, இப்போது, அரசியல் வட்டாரங்கள் அனைத்தும், ஏடுகளில் பலப்பல, திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து அக்கரை காட்டாது இருந்த கோலம் கலைக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு கணமும் கழகத்தைப்பற்றியே, நினைப்பாக இருப்பது காண்கிறோம்.

> இசைவாணன், சத்தமாகக் கொட்டாவி விட்டால் கூட 'இது ஒரு தனி இராகமோ!' என்று எண்ணி கொள்வார்களாம்!

அதுபோல, இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் பேச்சு, நடவடிக்கை எதுவாக இருப்பினும், அரசியல் வட்டாரங்கள் ஆய்வுக் கூடங்களாகின்றன; செய்தி திரட்டுவோர் துப்பறிவோராகின்றனர்; ஒவ்வொரு அங்க அசைவுக்கும், இறப்பைத் துடிப்புக்கும், பொருள் யாதாக இருக்கமுடியும் என்று பொருள் தேடுகின்றனர்; பொறுப்பு மிக்கவர்கள்!!

> பெரும்பகுதி, பீதி கிளப்பவும், பிளவு மூட்டவும் தான் எனினும், எனக்கு ஒரு மகிழ்ச்சி—உலகிலேயும் சரி, இங்கேயும் சரி, ஓராயிரம் நிகழ்ச்சிகள் உள்ளன. குலுவிலே 'குளு குளு' வாசம் செய்யும் நேரு; வங்க அசாம் வல்லடியால் ஏற்பட்ட கொதிப்பு; பாஞ்சாலத்திலே உருவாகிக் கொண்டுள்ள பரபரப்பு; காஷ்மீர் பற்றி அயூப்கான் காட்டும் கண்டிப்பான போக்கு; என்று எண்ணற்ற நிகழ்ச்சிகள் உள்ளன. எனினும், இவைகளுக்கெல்லாம் இடம் கிடைப்பதே இப்போது கஷ்டமாகிவிட்டது. கழகத்தைப்பற்றிய செய்திகள், செய்திகளுக்கு விளக்கங்கள்; கழகம் குறித்து ஆருடங்கள்; கழகத்தில் இவருடைய சிரிப்புக்கு என்ன பொர்ருள்? அவருடைய சீற்றத்துக்கு என்ன காரணம்? என்ற ஆராய்ச்சியுரைகள், ஆகியவைகளுக்கு அளித்ததுபோக, மிச்சம் இருக்கும் இடத்திலேதான், குருஷேவும் கென்னடியும், நேருவும் மொரார்ஜியும், அணுகுண்டும் வியன்னாவும், சகாராவும் சஞ்சீவரெட்டியும், பக்ராவும் பண்டார நாயகாவும், குடியேற வேண்டி இருக்கிறது;!

நான் அறிந்தவரையில், ஒரு கட்சிக்காகத் தம்மை ஒப்படைத்துள்ள ஏடுகள், வேறோர் கட்சியின் பாதக்குறட்டின் அளவிலிருந்து கூடிப் பேசும் நிகழ்ச்சிவரையில், நேரத்தை, நினைப்பை இத்தனை பெரிய அளவுக்குச் செலவிடுவது இதுதான் முதல்முறை என்று எண்ணுகிறேன். அதிலும், நேற்றுவரை நெறித்த புருவத்துடன், அது ஒரு கட்சியா! அதற்கு எமது இதழிலே இடமா! வேறு வேலையா இல்லை எனக்கு!! என்று மாமேதைகள் போலக் கோலமணிந்து கொண்டிருந்த ஏடுகள், இன்று, பக்கத்துக்குப் பக்கம் கழகத்தைப் பற்றியே வெளியிட வேண்டி வருகிறது!

அது ஒரு கட்சியா! என்று அவ்வளவு ஆணவங்கலந்த அலட்சியம் காட்டிவந்தோமே, இன்று விழுந்தடித்துக்கொண்டு போகிறோமே, என்ன வீசுவார்கள்! யார் ஏசுவார்கள்! என்ன வதந்தியைக் கக்கலாம்! என்ன வசை மொழியைப் பொழியலாம்!—என்று துடியாய்த் துடிக்கிறோமே; அலட்சியப்படுத்தத் தக்கது இந்தக் கழகம் என்று பேசினாயே முன்பு! அது உண்மை என்றால் அந்தக் கழகத்திலே என்ன நேரிட்டால் என்ன? நமக்கு என்ன கவலை! ஊராருக்குத் தெரிவிக்க, எத்தனை எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, எந்தக் கழகத்தை ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம், அதுகுறித்து எதுவும் எமது வாயால் பேச மாட்டோம், பேசுவது தரக்குறைவு. வீணாக அந்தக் கழகத்துக்கு விளம்பரம் நாமாகத் தேடிக் கொடுப்பதாக முடியும் என்றெல்லாம், உச்சாணிக் கிளை அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோமே, அந்தக் கழகம்பற்றி. இன்று உதிர்ந்தது ஏதேனும் கிடைக்காதா, யாராவது இழிமொழி உமிழ மாட்டார்களா, அதைச் சிந்தாமல் ஏந்தி வந்திடலாமே என்ற அளவுக்கு இறங்கிவந்துவிட்டோமே;—இதை அறியும் மக்கள் நம்மைப்பற்றி, நமது தரத்தைப்பற்றி, என்ன கருதுவார்கள் என்பதுபற்றிக்கூட, அந்த ஏடுகள் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை!

நாடுவாரற்று, நாட்டிலே செல்வாக்கற்று, மதிப்பாரற்று உள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம்; இதற்கு ஒரு கொள்கை உண்டா? கோட்பாடு உண்டா? எதிர்காலம் உண்டா? ஆதரவு உண்டா? என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தவர்கள், இன்று!

"கழகம் கலகலத்து வருகிறது!"

"கழகத்தின் கட்டுக்கோப்பு உடைகிறது!"

"கழகத்தில் கலகம் ஏற்பட்டுவிட்டது!"

"கழகத்தில் கொள்கைக் குழப்பம் ஏற்பட்டு விட்டது."

"கழகத்தை இனி நாடு ஆதரிக்காது!"

"கழகத்துக்கு எதிர்காலம் இல்லை!"

என்ற தலைப்புகளிட்டும், தகவல்களைத் தீட்டியும், எழுதுகின்றனவே, இதற்கு என்ன பொருள்! ஏதாகிலும் 'இவர்கள் பேச்சிலே, பொருத்தம், முன்பின் தொடர்பு இருப்பதாக மதியிலியன்றி மற்றவர் கருதுவரா?

இன்று அமாவாசை!—என்று முதல் வரியில் எழுதத் தொடங்கி, ஒளிவிட்டுக்கொண்டிருந்த நிலவு, மங்கிற்று—கருமேகம் நிலவைப் பிடித்துக்கொண்டது என்று எழுதினால், அந்த 'எழுத்தாளரை' பித்தர் பட்டிக்கல்லவா அனுப்பவேண்டி நேரிட்டுவிடும்!

கழகம் கவைக்கு உதவாதது! நாடு, அதனைச் சீந்துவதில்லை!!—இந்த அறிவுசால் தீர்ப்பினை முன்பே அளித்துவிட்ட பேரறிவாளர்கள், இப்போது, கழகத்தின் உயரமும் அகலமும், கனமும் குறைகிறது என்ற கணக்கெடுக்க முன்வருவானேன்! அமாவாசை என்று சொல்லியான பிறகு, நிலவு மேகத்தால் மறைக்கப்பட்டு மங்கிற்று என்று எழுதுவது ஏனோ!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கொள்கை இல்லை!! இது, அண்ட சராசரத்து அறிவைத் திரட்டி உருட்டித் தம் எழுதுகோலில் திணித்துக்கொண்டிருப்பதாகக் கருதிக்கொண்டிருப்போரின் தீர்ப்பு!!

இன்று, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையான திராவிட நாடு திராவிடருக்கே என்பதை, இன்னின்னார் எதிர்க்கிறார்கள் என்று பட்டியல் வெளியிடுவது என்ன பேரறிவோ!!! கைகொட்டிச் சிரிப்பர், இவர்தம் மன அரிப்பையும், அந்த அரிப்பைப் போக்கிக்கொள்ள யார் சொறிந்துவிடுவார்கள் என்று இவர்கள் அலைகிற நிலையையும் காண்பவர்கள்!!

வங்காளியும்—அசாமியனும் வெட்டிக்கொண்டு சாகிறார்கள்!

பஞ்சாபிலே, தாராசிங் உண்ணாவிரதம் இருக்க நேரிட்டால் என்னென்ன பயங்கர விளைவுகளோ கிளம்பக்கூடும் என்ற பீதி படை எடுத்திருக்கிறது.

மராட்டியத்துக்கும் — விதர்ப்பத்துக்கும் மோதுதல் உருவாகிக்கொண்டு வருகிறது.

ஆற்றுநீர் பற்றி அண்டை அண்டை நாடுகளுக்கிடையே அமளிநிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இரண்டில் ஒன்று பார்த்தேவிடுவோம் என்று காஷ்மீர் பற்றி அயூப்கான் முழக்கமெழுப்புகிறார்.

மத்யப்பிரதேசத்திலே கொள்ளைக்காரரின் அட்டகாசம் குறையக் காணோம்.

பீகார் காங்கிரசிலே கோஷ்டிச் சண்டை முற்றுகிறது; முடைநாற்றமெடுகிறது.

ஆந்திரத்தில், பழங்குடி மகனை முதலமைச்சர் ஆக்கிவிட்டதால், 'உயர் வகுப்பினர்' எதிர்ப்பினைப் பல்வேறு முனைகளிலே கிளப்பியபடி உள்ளனர்.

தமிழ்நாட்டில், டில்லியில் இருக்கமுடியாமல் திருப்பி அனுப்பப்பட்ட, டி. டி. கே.யை முதலமைச்சர் ஆக்கும் முயற்சி நடப்பதாகக் கேள்விப்பட்டுக் காங்கிரஸ் வட்டாரமே கிலியும் கசப்பும் கொண்டு, பேசி வருகிறது.

கருநாடகத்திலே காங்கிரஸ் கட்டுப்பாடு என்பது; பதவிப் பிசின் போட்டு ஒட்டவைக்கப் பட்டிருக்கிறது; எந்த நேரத்திலும் பிய்த்துக்கொள்ளக்கூடும் என்கிறார்கள்.

வெற்றிமுரசு கேட்கும் ஒரிசாவிலேயே, முன்னாள் முதலமைச்சர், காங்கிரசுக்குத் துரோகம் செய்தார் என்று

இந்நாள் முதலமைச்சர் குற்ற விசாரணை நடத்த ஏற்பாடு செய்கிறார்!

உடலெல்லாம் சிரங்கு! தலையெல்லாம் ஈரும் பேனும்! அந்த அரிப்பு அடங்க மருந்து தேடாமல், கழகத்தின் காலிலே ஒட்டிக்கொண்டுள்ள கசுமலத்தை வழித்தெடுத்து நாட்டுக்குக் காட்டிடும் காரியத்திலா, ஈடுபடுவது.

பண்டித நேருவுக்கு அடுத்தபடி, யார்? என்பது தலைவலி அளவுக்குள்ள பிரச்சினையாகிவிட்டது! மொரார்ஜியா? ஜெகஜீவன்ராமா? கிருஷ்ணமேனனா, லால்பகதூரா என்று புரியவில்லை? முகாம்கள் அமைக்கப்படுகின்றன! கோவிந்த வல்லப பந்த் மறைந்த உடனே, அவர் இருந்துவந்த அறையிலே நுழைந்து மொரார்ஜி கொலு இருக்கிறாராம்!! இது யாரைக் கேட்டுக்கொண்டு செய்தார் என்று நேரு பெருமகனார் கேட்க, இதற்கு நான் யாரைக் கேட்க வேண்டும்! என்று மொரார்ஜி அலட்சியமாகப் பதில் அளிக்கிறார்.

அடுத்தமுறை, டில்லியில் நான்தான் மந்திரி!—என்று வணிகக கோட்டத்தாருக்கு கோவை சி. சுப்ரமணியம் செப்பிட, ஐயயோ! நான் என்ன கதியாவது? என்று அரியலூரார் அலறுகிறார் என்கிறார்கள்.

எத்தனை காலம், நான் வெறும் மந்திரியாக இருப்பது!! எவ்வளவு நெருக்கடிகளைக் கடந்திருக்கிறேன்! எத்தனை நெளிவு சுளுவுகள் தெரியும் எனக்கு! இருந்தாலும் ஒரு முறையாவது முதல் மந்திரியாக இருக்க அனுமதிக்கக் கூடாதா! மறுபடியும் வெறும் மந்திரி வேலைதான் என்றால், ஏன் எனக்கு அது!!—தேர்தலுக்கே நிற்கப்போவதில்லை!!—என்று மனம் நொந்து பேசுகிறாராம், பக்தவத்சலம்.

''அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை'' என்பார்கள்; அதுபோல் இருக்கிறது அந்த இடத்து விவகாரம்! இந்த இலட்சணத்தில், கழகத்திலே காலையிலே நடப்பது என்ன? மாலையிலே கூடுவது யாது? பிற்பகல் பேசியது என்ன? யாருக்கு யார் மேல்? கீழே என்ன? மேலே என்ன? என்ற இந்த ஆராய்ச்சியிலா, ஈடுபடுவது!! குற்றுயிராகக் கிடக்கும் கணவனுக்கு, மருந்து கலக்கிக் கொடுக்கவேண்டிய மாதரசி, வெள்ளைச் சேலை வாங்கவில்லையாமே வள்ளி, காரணம் என்ன? என்று அண்டை வீட்டுக்காரியுடன் வம்பளப்பு நடத்துவது போலல்லவா, ஆளும் கட்சியிலே உள்ள ஆயிரத்தெட்டுக்

கோணல்களை நிமிர்த்த முயற்சிக்காமல், கழகக் கோட்டத்தை எட்டி எட்டிப் பார்த்துவிட்டுக், கண்ணுக்குத் தெரிவது செக்கா? சிவலிங்மா? என்று ஆராய்ச்சி நடத்துகிறார்கள்!! இதனால் அடையப்போகும் இலாபம் என்ன? இந்த இதழ்கள், நமது சிறப்புகள் பற்றி இதுநாள்வரை, சிந்து பாடிவந்தன என்றாலாவது, ஐயோ! இப்போது தூற்றித் திரிகின்றனவே என்று கவலைப்பட்டிருக்கலாம். எப்போதும் எதிர்ப்பு எழுதிய ஏடுகள்! இப்போதென்ன புதிதாக, இவைகளில் எழுதப்படுவது கண்டு, பதற இருக்கிறது!! பன்னீர் வியாபாரம் செய்தவன் கரம், காடிப்பானையில் பட்டால், அட பாவமே! நறுமணம் போய்விடுமே என்று பரிதாபப்படலாம்!! காடிப் பானையில் விட்டிருந்த கையிலே, கருவாட்டுத் துண்டு எடுத்தால், பரிதாபப்படவா செய்வார்கள்!

காலமெல்லாம், கழகத்தைக் கண்டித்துவந்த ஏடுகள்—இன்று பிறர் உமிழ்வதை எடுத்து வைத்துக்கொண்டு, ஊருக்குக் காட்டுகிறார்கள்! வேறென்ன!!

வீசப்படுபவை வீழ்ந்துபடும்! நிலைத்து நிற்பது, நிமிர்ந்து நிற்கும்!

எதிர் நீச்சலில் ஈடுபட்ட கழகம். எரிச்சலாளர்களின் இருமல், தும்மல், ஏப்பம், கனைப்பு, இவைகளைக் கண்டு கலங்கப் போவதில்லை. எரிச்சலாளரின் இருமல், தும்மல், ஏப்பம், இவைகளை ஊருக்கு எடுத்துக் காட்டிடும், 'மேலான' செயலிலே, ஈடுபடும். ஏடுகளின்மீது எனக்குத் தம்பி! கோபம் கூட இல்லை, பரிதாபம்தான். நிச்சயமாக!!

கற்கள் வீசப்படுவது கேட்டு, சிலைக்கு ஏதேனும் சேதம் நேரிட்டுவிட்டதோ என்று காண ஓடோடி, ஊரார் திரண்டு வந்தது போலத்தான், ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி ஏடுகளின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ள, கழகத்திடம் வியப்புற்றோர், விசாரப்படுவோர், கோபம் கொண்டோர், அச்சப்பட்டோர், விளக்கம் தேடுவோர், எனும் பல்வேறு வகையினரான பொது மக்கள், முன்பு காட்டியதைவிட அதிக அளவு அக்கரை காட்டுகிறார்கள்—ஆதரவு திரட்டித் தருகிறார்கள்!

வண்டுபோல் சுற்றுகிறார்கள் நமது தோழர்கள்—உற்சாகம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகியபடி இருக்கிறது.

தம்பி! கழகத்தைக் குறித்து எவரெவரோ ஏதேதோ பேசுகிறார்களே, கழகத் தோழர்களிடம் ஏதேனும் உற்சாகக்

குறைவு, எழுச்சியிலே விரிசல், சலிப்பு, இருக்கிறதா என்று கண்டறியவே, 'கொள்கை பரப்புவோர்' கூடிப் பேசிட வாரீர் என்று அழைத்திருந்தேன்.

இது மாநாடு அல்ல! இங்கு விவாதங்கள், தீர்மானங்கள், இல்லை! இது பொதுக்குழு அல்ல—செயற்குழு அல்ல! —கொள்கை பரப்புவோர் கூடிக் கலந்துரையாடலாம் வாரீர் என்று அழைத்திருந்தேன்.... நூறிலிருந்து இருநூறு பேர் வரை யில் வரக்கூடும் என்று நினைத்திருந்தேன். வந்தவர் தொகை ஆயிரத்துக்குமேல்! வர இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்திருந்தோர் தொகை அந்த அளவு இருக்கும்.

இரண்டு நாட்கள்! கண்மூடிக் கண்திறப்பதற்குள் கழிந்து விட்டன! எத்தனை உற்சாகம்! எவ்வளவு எழுச்சி!!

தருணமறியும் தங்கவேலர் என்று முன்பு ஒரு முறை 'விடுதலை'யில் நான் தலையங்கமெழுதி இருந்தேன்—காஞ்சி புரத்திலே, 'பிரிவினை மாநாடு' நடத்தியதற்காக. அந்தத் தங்கவேலர்தான், உறுதுணையாக நின்றார்; உணவளித்தார்; உரையாடல் கேட்டு மகிழ்ந்தார்.

அவருடைய தென்னந்தோப்பிலே அமைக்கப்பட்ட விடுதி யில் தோழர்கள் தங்கினர்; கொட்டகையில் கூட்டம் நடந்தது. ஆயிரம் தோழர்கள்; ஐந்தாறு சொற்பொழிவுகளைக் கேட்டு விட்டுக் கலைந்தனரோ? அதுதான் இல்லை!!

அவர்கள் அனைவரும் தத்தமக்குச் சரியென்றுபட்ட கருத்துக்களை, பல பிரச்சினைகளுக்கு ஆய்வுரைகளை, அரிய யோசனைகளை, எடுத்துரைத்தனர்.

கழகம் கலகலத்துப் போய்விட்டது என்பதற்கு அடையாளமா இது!! கண்ணுள்ளோர் கண்டனர்; கருத் துள்ளோருக்கு உண்மை புரிந்தது!!

கழகம் உடைபடுகிறது என்று சில ஏடுகள் எழுதி மகிழ்ந்து கொண்டிருந்த வேளையிலேயே, மெயில் இதழின் தனி ஆய்வாளர், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, அரசியல் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து, விளக்கக் கட்டுரைகள் வெளி யிட்டார்.

அதிலே, அவர், ஒவ்வொரு மாவட்டத்திலும், பிளவு, குழப்பம், பிரிவு, சரிவு, என்று எந்தத் தி. மு. கழகத்தைக்

குறித்து இட்டுக்கட்டிக் கூறப்படுகிறதோ, அந்தக் கழகம், வலிவு குன்றாமல், பொலிவுடன், விளங்கி வருவதையும், காங்கிரஸ் கட்சிக்குச் சரியான அறைகூவல் விடத்தக்க நிலையில் இருப்பதையும், எடுத்துக் காட்டியிருந்தார்.

ஆயிரவர் கூடினர், அதனை மெய்ப்பித்தனர்!!

தத்தமது வட்டாரங்களிலே கழக வளர்ச்சி எந்த அளவு உள்ளது என்பதுபற்றி, மாவட்ட வாரியாக அமர்ந்து, ஆய்வுரை தந்தனர்.

ஆர்வமும், நம்பிக்கையும், எழுச்சியும் எந்த அளவுக்கு இருந்தால், தேர்தலில், தி. மு. கழகம் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்தாகவேண்டும் என்பதில்லை என்ற கருத்தைக் கூறியிருப்பார்கள் என்பதை, அப்படி ஒரு கருத்து வெளியிடப் பட்டது. 'எதிர்ப்பு' என்ற தலைப்பிட்டு எழுதும் இதழ்கள், எண்ணிப் பார்க்கவேண்டும்.

பன்னிப்பன்னிச் சொன்னபிறகும், 'பழிபோட்டுத் தலைவாங்கும்' போக்கினர், பிற கட்சிகளுடன், குறிப்பாகச் சுதந்திரா கட்சியுடன், 'கூட்டு' ஏற்பட்டுவிட்டது போலத் தாமாக இட்டுக்கட்டிக்கொண்டு, பிறகு, அதற்கு 'எதிர்ப்பு' ஏற்பட்டதாகக் கயிறு திரித்து, களிப்பைத் தமக்குத்தாமே ஊட்டிக்கொள்கிறார்கள். எதைச் சுவைத்தோ அவர்கள் இன்புறட்டும், தம்பி! நமது கழகம், எந்தக் கட்சியுடனும் கூட்டுச்சேரவுமில்லை; அதற்கான பேச்சு நடத்தப்படவுமில்லை; எவரும் அதற்காக ஏற்பாடும் செய்யவில்லை; அழைப்பும் இல்லை!

ஆயிரவர் கூடி, அந்தப் பிரச்சினைபற்றி, அரிய கருத்துகளை தெரிவித்தது, அந்தப் பிரச்சினைபற்றி, நீயும் நானும், மேலும் சிந்திக்க.

ஆயிரவர் எதிர்ப்புக் காட்டினர், என்று ஓர் மண் குதிரை தேடிப்பெற்று, மகிழட்டும் இதழினர். என் மகிழ்ச்சிக்குக் காரணம், கழகம் கலகலத்துவிட்டது, 'தேர்தலில் ஈடுபட வேண்டாம்!'' என்று, மனச்சோர்வுடன், திகிலுடன், சலிப்புடன் நமது தோழர்கள் பேசவில்லை. மாறாகத் தேர்தலில் ஈடுபடுவதற்கான நல்வாய்ப்புகள் மிகுந்திருப்பதைத் தான், மெத்த உற்சாகத்துடன் பேசினர்—தன்னம்பிக்கை யுடன்.

கழகத்திலே வலிவு குறைந்துவிட்டது; தூற்றல், தாக்குதல், ஆகியவற்றால் கழகத்தின் வாய்ப்புகள் கெட்டுவிட்டன. என்ற எண்ணம், கவலை, கலக்கம், பீதி, துளியேனும் தோழர்களிடம் இருந்திருக்குமானால், யாருடனாவது கூட்டுச் சேர்ந்து, எந்தெந்தக் கட்சிகளின் துணையையாவது கொண்டு, தேர்தலில் நிற்கவேண்டும்; பல கட்சிகளின் 'கூட்டும்' உதவியும் இருந்தால்தான், இந்தத் தேர்தலை நாம் சமாளிக்க முடியும்; தனியே நின்று தேர்தலில் வெற்றிதேடிக் கொள்ள முடியாது என்ற முறையில் பேசியிருப்பர். மாற்றார் கூறுவதுபோலவும், மனப்பேதப்பட்டோர் விரும்புவதுபோலவும், கழகம் வலிவு குன்றி இல்லை. எனவேதான், தோழர்கள் நமக்குள்ள வலிவு கொண்டு நாம் தேர்தலில் ஈடுபடலாம் என்ற எழுச்சியுடன், நம்பிக்கையுடன் பேசினர்!

ஆயிரவர் கூடிப்பேசி ஆர்வம் கண்ட நிகழ்ச்சிமட்டுமல்ல, தம்பி! அடுத்த திங்கள், இருக்கிறது, நல்விருந்து; பொது மாநாடு! எத்தனை இலட்சம் மக்கள் கூடப்போகிறார்கள் என்பதை எண்ணிப்பார்!!

வெட்டவெளியிலே, கொட்டும் மழையிலே கூடினோம், முன்னேற்றக் கழகம் துவக்க.

மூன்றாவது பொது மாநில மாநாடு கூடுகிறது! இதற்கு, மதுரையம்பதியில் தோழர் முத்துவுடன் சென்று, திடல் தேடினேன்—மதுரை நகருக்குள், நாம் விரும்புகிற அளவு பெரிதான, வசதியான, திடல் இல்லை!

வளர்ச்சியின் வகையும் அளவும் தெரிகிறதல்லவா!!

திருப்பரங்குன்றம் செல்கிறோம், மாநாடு நடத்த!

மதுரையிலிருந்து எத்தனை கல் தொலைவு என்கிறாயா?

அது எங்கே உனக்கும் எனக்கும் தெரியப்போகிறது!! திருப்பரங்குன்றமே புதிய மதுரையாகக் காட்சி தரப்போகிறதே! இலேசான ஆட்களா மதுரைத் தோழர்கள்! திருப்பரங்குன்றத்தைத் திருநகர் ஆக்குகிறார்கள்—திருவிடமாக்குகிறார்கள்!!

எழிலூர்

வெட்ட வெளியிலே, கொட்டும் மழையிலே, கழகம் துவக்கினோம்! இன்று மாநாட்டுக் கொட்டகை அமைக்க ஊர் நடுவே இடமில்லை!! எனவே, திருப்பரங்குன்றம் பெரியதோர் திடலை எழிலூர் ஆக்குகிறார் வரவேற்புக்குழுத்தலைவர் மதுரை முத்து. தோழமைமிக்க தொண்டர்கள், உங்கள் தேவைகளைக் கவனிக்க.

காவியமும் ஓவியமும், இசையும் கூத்தும், எழுச்சியூட்டும் பற்பலவும், உம்மை மகிழ்விக்க!

எந்நாளும் மறக்கொணாத திருநாளாகும், திருபரங்குன்றம் மாநாடு.

தரணியாண்ட நாம் தாழ்ந்திருக்கிறோம், நிலை அறிந்ததால் நிமிர்ந்து நிற்கிறோம்!

பகைவர் சீறிக்கொண்டு பாய்ந்து வருகிறார்; பரணி பாடுவோம்! பகையை வெல்லுவோம்! வாரீர் திருப்பரங்குன்றம்!—என்று கூறு, தம்பி! நாட்டினருக்கு!!

நேரு அறியட்டும்

நேரு வருகிறார் பரிவாரங்களுடன் மதுரைக்கு, திருப்பரங்குன்றம் மாநாடு குறித்து அவர் அறிந்து கொள்ள முற்படுவார்!

அவர் செவியில். மிகப்பெரிய மாநாடு! மகத்தான ஏற்பாடு! ஏற்றமிகு எழுச்சி! வெள்ளம்போல் வீரர்கள் என்ற செய்தி விழவேண்டும்!

திருப்பரங்குன்றம் வருவது திராவிடரின் நீங்காக் கடமை.

வடபுலத்துத் தலைவர் திரு இடத்து மாண்பு அறியத் திருப்பரங்குன்றம் மாநாடு!

இதுவரை எவரும் காணாத அளவுடன், அழகுடன், சுவையுடன், பயனுடன், நடைபெற்றது என்ற நற்பெயர் கிடைத்திட வேண்டும்.

கழகத்தின் மாண்பு காத்திட அனைவரும் வாரீர் திருப்பரங்குன்றம் என்று தோழர்க்கெல்லாம், அழைப்பு அனுப்பு, தம்பி! மறவாமல்.

அறைகூவல்

வண்ணமுகப்பு, வரவேற்பு வளைவுகள் கண்ணைக்கவரும் கவர்ச்சியுடன்!

நிழலது தந்து நம் நிலையினை உணர்த்தும் பெரியதோர் பந்தல், அமர்ந்திருந்து அரிய உரைகள் கேட்டிட!

வரிசை வரிசையாகக் கடைகள்! புதியதோர் அங்காடி!

உலவி மகிழச் சாலைகள்! உண்டு களைப்பாற விடுதிகள்! மகிழ்வூட்டும் கலையரங்கம்! கருத்தூட்டும் கண்காட்சி!

இன்பத்திராவிடம் பெற்றிட வாரீர் என இருவண்ணக் கொடிகள் ஆடி அழைத்திடும் அழகுறும் காட்சி!

விடுதலைப் போருக்கான அழைப்பு வந்திடுங் காலை வீறுகொண்டெழுந்திடப் போகும் வீரர்தம் கூட்டம் உலா வரும் காட்சி!

இவை எலாம் உமக்காக!

உமது உழைப்பு நாட்டுக்காக!

திருப்பரங்குன்றம், மாநாடுமட்டுமல்ல; நமது இன மனமகிழ் மன்றம்!

திருப்பரங்குன்றம், ஆட்டிப்படைக்கும் வடவருக்கு அறை கூவல்!

அடுத்துக் கெடுத்திடும் நினைப்பினர்க்கு, எச்சரிக்கை!

விட்டுச் சென்றவர்கட்கு, அறிவுரை!

வீரர் குழாத்துக்கு அழைப்பு!

திருப்பரங்குன்றம், பொறுப்புணர்ந்தோர்க்கு!

அகமும் முகமும் மலர

பகற்கனவு என்றூர் பண்டிதர்! பாதந்தாங்கிகளும் அதனையே கூறுகின்றனர்! ஏன் கூறினர் அதுபோல்? நாம் எதிர்ப்புக் கண்டு அஞ்சுவோம், ஏளனம் கேட்டுத் துஞ்சுவோம், பழிச்சொல் கேட்டுப் பதறுவோம், பயணம் தடைப்படும் என்று எண்ணியதால்! தி. மு. கழகம், அஞ்சி அஞ்சிச் சாவோரைக் கொண்ட அமைப்பா! அல்லது உயிரிழக்க அஞ்சாத உத்தமரின் உறைவிடமா? பித்து மனம் கொண்டோரா? சித்தம் தடுமாருச் சீலரா?

திருப்பரங்குன்றம் எடுத்துக்காட்டும், எதையும் தாங்கும் இதயம் கொண்டவரின் பண்பகம் தி. மு. க. எனும் உண்மையை.

கண்ணீர்த்துளிகளே! நாட்டின் கண்மணிகளே! கடமை அழைக்கிறது! உலகு கவனிக்கிறது! ஊராள்வோர் உற்று நோக்குகிருர்கள்; உலைவைப்போர் முணுமுணுக்கிருர்கள்!

வாளுக்கும் வேலுக்கும் மட்டும் அல்ல, வஞ்சனைக்கும் அஞ்சிடமாட்டோம் என்று அணியணியாய் வந்து கூடி அறிவிப்பீர், அவனிக்கு.

அகமும் முகமும் மலர! தரமும் திறமும் விளங்க! வீரமும் தீரமும் மிளிர! வெற்றிப் புன்னகை தவழ! வீரர்காள்! விரைந்து வாரீர்! திருப்பரங்குன்றம்!!—தம்பி நாடெங்கும் சென்றிடுவாய், நல் அழைப்புத் தந்திடுவாய்.

துணிவோர் தொகை காட்டிட

பொன் இருந்திட, பொருள் இருந்திட, திருவிடத்திலே. போக்கற்ற நிலையில் மக்கள் இருந்திடுவதேன்?

கண் இருந்தும் ஒளி இருந்தும், கட்டிப் போட்டு விட்டால்,

மலரும் மானும், கனியும் பிறவும், காண முடியுமா? திராவிடம் கட்டுண்டு கிடக்கிறது! திராவிடர் தேம்பித் தவிக்கின்றுர்! திராவிடநாடு திராவிடருக்கே! முழக்கம் இது; வெற்றி எப்போது? வேலுக்கும் வாளுக்கும் அஞ்சா வீரம், சூதுக்கும் சூழ்ச்சிக்கும் சாயாநெஞ்சம், பதவிக்கும் பவுனுக்கும் இளிக்காப் போக்கு, இவைகொண்டவர் தொகை வளர்ந்து விட்டால், கொடிகட்டி நாம் ஆள்வோம் திராவிடத்தை! விடுதலை வரலாறு தரும் பாடம் இது. இன்பத் திராவிடம் பெற்றிடத் துணிவோர் தொகை எவ்வளவு என்பதைக் காட்டிடத் திருப்பரங்குன்றம்.

திராவிட முரசொலிக்க

பரலோகத்துக்கு வழி காட்டவேண்டிய பாதிரியார், அரசு அமைக்கும் காரியத்தில் ஈடுபடலாமா! என்று ஒருவன் கேட்க, பரலோகம் அனுப்பித்தான் வருகிறார் பாதிரியார், அப்பாவிகளை நம்மீது மோதவிட்டு, சாகடித்து, என்று கேலி பேசினன் மற்றொருவன், அன்று! இன்று, சைப்ரஸ் தனிநாடு, தனி அரசு. மகாரியாஸ் பாதிரியார் விடுதலை பெற்றளித்தார்.

சைப்ரஸ் சிறுதீவு! திராவிடம் ஒப்பற்ற நாடு!

சைப்ரஸ் விடுதலை பெற்றது! திராவிடம் இன்றும் அடிமை! ஏன்? திருப்பரங்குன்றம், இதை ஆராயத்தான் ஐயம் கொண்டோர் விளக்கம்பெற, அச்சம்கொண்டோர் வீரம்பெற, அவனிக்கு நமது முயற்சியை அறிவிக்கத் திருப்பரங்குன்றம்.

திருப்பரங்குன்றம், திக்கெட்டும் திராவிட முரசு ஒலித்திட!

திராவிடர் எனில்...

முடியுடை மூவேந்தர் இவர் முன்னோர்; இன்று நமது அடிபணிந்து கிடக்கின்றார் இழிந்து! டில்லி கூறுகிறது—நாம் கேட்கிறோம். உயிரும் இருக்கிறது! உணர்வும் இருக்கிறது! எனினும் மானம் காத்திடுவோர் தாயகம் மீட்டிடுவோம், அரசு அமைத்திடுவோம் என்று ஆர்த்தெழத்தான் வேளை வரவில்லை! அது எப்போது? விடுதலை, எம்முறையில்? அப்பணிபுரிய. எத்துணை வீரர்? இவைகளுக்குப் பதில்காண, திருப்பரங்குன்றம்.

திராவிடர் எனில் வாரீர்! விடுதலை விரும்பிகள் எனில் வந்திடுவீர், திருப்பரங்குன்றம்;—என்று அழைத்திடுவாயன்றோ, இன்பத் திராவிடத்துள்ளோரை எல்லாம். உனக்கா தெரியாது!! தாயகம் விடுபடத். தனி அரசு கண்டிடத் தளராது உழைத்திடத், திரண்டு வாரீர் திருப்பரங்குன்றம் என்று இப்போதே அழைத்துக் கொண்டுதானே இருக்கிறாய்!!

ஆர்த்தெழுவோம்

நாமிருக்கும் நாடு நமது என்றுரைத்திடா நாவும் நாவென்றுரைத்திட நல்லோர் கூசுவர்.

நாமிருக்கும் நாடோ நம்மிடம் இல்லை. நம்மை வடவர் ஆளுகின்றார்; சகிப்பதற்கில்லை!

பொன்னை, பொருளை இழந்திடலாம், உரிமை இழப்பதோ? உரிமையற்ற வாழ்வு கண்டு உலகம் சிரிக்காதோ? இந்த உண்மைதனை உணர்ந்தோரெல்லாம் திரண்டு வருகிறார், உரிமைப் போரின் அணிவகுப்பை அமைக்க வருகிறார்! திருவிடத்தின் விடுதலைக்கு உழைத்திட நாமே திருப்பரங்குன்றம் சென்று ஆர்த்தெழுவோமே!!

எல்லாக் கண்களும் அப்பக்கம்

எழுச்சியின் அளவு, வகை, கண்டு களித்திட ஏற்ற இடம் திருப்பரங்குன்றம். எல்லாக் கண்களும் அப்பக்கம்! எல்லார் எண்ணமும் அதுபற்றி! இன்றே நண்பரைக் கண்டிடுவீர்! மாநாடு காண அழைத்திடுவீர்! குடும்பத்துடன் வந்து காண வேண்டிய குதூகலாபுரி திருப்பங்குன்றம்.

கார்கண்ட உழவன்போல், கதிரவன் கண்ட கமலம்போல, கண்டதும் விழியில் மகிழ்ச்சி பொங்கும். வீரரின் நெஞ்சினில் விடுதலை ஆர்வம் கொந்தளிக்கும், அணிவகுப்பின் திறம் கண்டு. ஆர்வத்தின் அளவு கண்டு. விழிப்புற்ற திராவிடத்தின் வீரரெலாம் கூடுகின்றார், வெற்றிக்கு வழி காண, திருப்பரங்குன்றம்.

மரபு அறிந்தவர், மானம் காப்பவர், இனம் அறிந்தவர், இலட்சியம் மறவார், உழைத்திடுபவர், கழைக் கூத்தரல்ல!! இன்னுயிர் கொடு! இன்பத் திராவிடம் பெற! கட்டளை அஃது எனில், காளையரும் கன்னியரும் போட்டியிடுவர், உயிர்தர, உரிமைபெற; முதியவர் இளைஞரை முந்திக்கொண்டோர் வருவர், எந்தையர் நாடு விடுதலை பெற்றிட ஈந்தேன் இன்னுயிர் என்று கூறியே!

இல்லங்களிலே

தம்பி! இல்லங்களிலே இப்போதே நடைபெறும் இன்ப உரையாடலை, நான் அறிந்துதான் இருக்கிறேன்.

"நேற்றிருந்த கோபம்மாறி, நேர்த்தியானதே! முகம் பார்த்திடும்போதே! கேட்கக் கேட்க மொழியும் பாகாய், இனிக்குது இன்று"

"காரணத்தைக் கூறிடவும் வேண்டுமோ அத்தான்! கண்டிடலாம் மாநாடு, என்றுரைத்திரே!"

இல்லங்களிலே இன்ப உரையாடல், திருப்பரங் குன்றம் சென்றிடலாம், திருவிடத் தீரரைக் கண்டிடலாம். தேன்நிகர் பேச்சினைச் சுவைத்திடலாம். உரிமைக்கோர் வழி கண்டிடலாம், என்பதுபற்றியே! செந்தாமரையின் அழகு, கண்ட போது! மல்லிகையின் மணம் முகர்ந்தபோது! செங்கரும்பின் சுவை உண்டபோது! தாயகவிடுதலைக்கான மாநாடு அளித்திடும் மகிழ்ச்சி, எண்ணிடும் போதெல்லாம் இனிக்கும்! பேசிடும் வாய் மணக்கும்! ஏன்? மாநாடு, மானமும் மரபும் காத்திடும் மறவர், கூடி எழுப்பிடும் இலட்சிய முழக்கம் நெஞ்சினில் பதிந்து, நம்மை வீரராய், தீரராய், திராவிடராய் ஆக்கிடத்தக்க கொள்கைக் கோட்டம், திருப்பரங்குன்றம்! தம்பி! திருப்பரங்குன்றம், திராவிடர்க்காக! அறிவாய், நீ! அறிவிப்பாய், மற்றவர்க்கு!!

குடும்பத்துடன்

வருகிறேன், திருப்பரங்குன்றம்! செல்கிறேன் திருப்பரங் குன்றம்! செல்வோம் திருப்பரங்குன்றம்! இல்லங்களின் இன்றையப் பேச்சு இது. வரவேற்புக் குழுத்தலைவர் மதுரை முத்து, பொட்டல் காட்டைப் பூம்பொழிலாக்கக் காத்திருக்கிறார், களிப்பூட்ட! இசைகேட்டு இன்புறுவோம்! வீரக்காதைகள், விடுதலை வரலாறுகள், இலக்கியச் சுவையுடன்!! ஆட்சி முறை, அறவழி ஆகியவைபற்றிய பேருரைகள். மாநாட்டிலே கெனியாடா, திவேலரா. நாசர், ஹோசிமின், போர்க்யூபா, மகாரியாஸ், என்க்ருமா மற்றும் எண்ணற்ற விடுதலை வீரர்கள், வெற்றிபெற்ற வரலாறு கேட்டு, உணர்ச்சிபெறப் போகிறோம். புதிய நம்பிக்கை பெற இருக்கிறோம். நாடகங்கள் உண்டு, நற்கருத்தளிக்க. கழகக்காவலர் அனைவரும் கூடுமிடம், திருப்பரங்குன்றம்! வாழ்நாளில் மறக்கொணாத அரிய நிகழ்ச்சி! நெஞ்சை அள்ளும் எழில் பல மிஞ்சும் வண்ணக்களஞ்சியம், திருப்பரங்குன்றம்! வீட்டிலே சிலர் விம்மிக்கிடக்க, நீவீர் மட்டும் விருந்துண்ண வருவது அழகல்ல! குடும்பத்துடன் வருக திருப்பரங்குன்றம்!—எனறு கூறிடத் தோன்றுகிறதல்லவா!!

வீரருக்கு அழைப்பு

கண் திறந்தது! கருத்து மலர்ந்தது! கழகம் அழைத்தது! கடமை புரிந்தது! எழுந்தனர்! வீரர் எழுப்பினர் முழக்கம்! இன்பத் திராவிடம் எமக்கே, என்று.

அவரெல்லாம் கூடுமிடம், திருப்பரங்குன்றம்!

அறமறிந்தோர் மாமன்றம் திருப்பரங்குன்றம்!

விடுதலைக்கு வழிகாண, திருப்பரங்குன்றம்.

எண்ணம் வண்ணமாக, திருப்பரங்குன்றம்!

கூனிக் கிடந்திட மாட்டோம், குமுறிச் செத்தி மாட்டோம், கொத்தடிமையாகிடமாட்டோம்! சித்தம் தடுமாறிடவும் மாட்டோம்! இத்தரையில் எத்தனையோ நாடு! எங்கட்கு இல்லை எம்நாடு! பெற்றிடுவோம் திருநாடுதனை, குற்றுயிராகும் வரை போராடியேனும். பண்பாடக் கேட்டிடுவீர்! திண்தோளர் கூடிடுவீர்! எழுவோம், பகைவெல்வோம்! இதற்கான அறிவிப்பு திருப்பரங்குன்றம் மாநாடு. வீரர்க்கு அழைப்பு, விடுதலை அணிவகுப்பு: திருப்பரங்குன்றம்!

தீரர் தோற்றதில்லை

கருப்பர் என்றனர், இன்று வெள்ளையர் முகம் வெளுத்தது பயத்தால். ஏன்? கட்டுண்டுகிடந்தவர்கள், வெட்டுண்டு மடிவதேனும், விடுதலைக்கே உழைப்போம் என்று கூறிவிட்டனர். இடியோசைகேட்க நாகமென வெள்ளையர், விரண்டுவிட்டனர். சுடுகிறார்கள், சாகிறார்கள்; எனினும், செத்தவர்போக மிச்சம் உள்ளவர், விடுதலை, விடுதலை, விடுதலை, என்ற முழக்கமிடுகின்றனர். குண்டுகள் தீர்ந்து விட்டன—சாவுக்கஞ்சா வீரர் தொகை குறையவில்லை. முழக்கமிடுகின்றனர், எமது நாடு, எமது அரசு, எமது உரிமை. திருப்பரங்குன்றம் வாரீர், விடுதலை பெற்றோர் புகழ்பாட, விடுதலைக்கான பாடம்பெற. தீரர் தோற்றதில்லை, திருவிடரும் தோற்கமாட்டார், திருப்பரங்குன்றம் இதை உலகுக்கு உணர்த்த.

பொங்கி எழுகிறது

தலைகனத்தோர் ஆட்சிக்கு முடிவுவைத்து, தனிநாடு சமைத்திடுவோம் வாரீர் என்று, பன்னிரண்டு ஆண்டுகளாய்ப் பேசிவந்தோர், இன்று பகைவர் பரிகசிக்கப் பேசுகின்றார். அவரல்ல கழகம், என்று அறிவிக்க அனைவருமே வந்திடுவீர் மாநாட்டுக்கு. திருப்பரங்குன்றம் தெரிவிக்கட்டும், விடுதலை உணர்ச்சி மறையவில்லை, மங்கவில்லை! மாறாகப், பொங்கி எழுகிறது புதியவேகத்துடன்—மாற்றாரும் அவரை அடுத்துப் பிழைப்போரும் அகலக் கண்திறந்து, ஆச்சரியப்படத்தக்க

அரியதோர் அணிவகுப்பு திருப்பரங்குன்றம், எனும் பேருண்மையை, உழைத்த உத்தமர்களே, உம்மை இகழ்கிறார்கள்—கொள்கைக் குன்றுகளே, உம்மைக் கேலி பேசுகிறார்கள், இனமறிந்த ஏந்தல்களே, உம்மை ஏளனம் செய்கிறார்கள், கழகம் கலகலத்துவிட்டதாம், அணிவகுப்புச் சிதறிவிட்டதாம், நம்பிக்கை நசித்துவிட்டதாம் பதில் என்ன தருகிறீர்கள்? பேசவேண்டாம், ஏசவேண்டாம், திருஇடம் காணவிழைவோர் அனைவரும் திருப்பரங்குன்றம் உலாவருவீர், பேச்சு அடங்கிக் கிடப்பர் மாற்றாரின் கைப்பாவைகள். மகத்தான பொறுப்பு, கழக மாண்புகாப்பது. கழகம் அழைத்தால், அனைவரும் எழுவோம் என்பதை அறிவிக்க, திருப்பரங்குன்றம்.

அறவழி

தோகையில்லை, மயில்தான்; குளிர்ச்சியில்லை, நிலவுதான்; ஒளியில்லை, மணிதான்; சுவை இல்லை, கனிதான்; அணியில்லை, பாட்டுத்தான்; மழலை இல்லை, குழவிதான்; மணம் இல்லை, மலந்தான்; கூறுவரோ எவரேனும்? கேட்டிடின் கைகொட்டிச் சிரிப்பரன்றோ. ஆனால், தனி அரசு இல்லை, திராவிடர்தான், என்றன்றோ இன்றுள்ள நிலை. கேலிக்கூத்தல்லமோ, கேவல நிலைமையன்றோ! பகை முடிப்போம், பழி துடைப்போம், அறவழி நின்று திருவிடம் பெறுவோம். திருப்பரங்குன்றம் வழி காட்டும் கோட்டம்.

வீரக்கோட்டம்

அச்சம், அவனை அடக்கியதில்லை; ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை; அரண்மனை கண்டு அவன் சொக்கினதில்லை; மாளிகை தரும் மதுரவாழ்வு வேண்டினவனல்ல. நிந்தனை தந்தனர்; நிலாச் சோறு என்றான். வேதனை வேண்டுமளவு உண்டான்; எனினும், "திராவிட நாடு திராவிடர்க்கே" எனும் இலட்சியத்தை கடந்தானில்லை, அவனே திராவிடத் தீரன். திராவிடத்துத் தீரரெல்லாம் திரண்டு வருகின்றார் திருப்பரங்குன்றம். தாயகத்தின் தளை நொறுக்கிட, தன்மானத் திறம் பெருக்கிட, தனி அரசுதனைச் சமைத்திட, நான், நான், நானுந்தான், என்று முழக்கமிடும் வீரர் கூட்டம் திரண்டிடும் அரிய கோட்டம் திருப்பரங்குன்றம். இலட்சக் கணக்கான இல்லங்களில் ஏற்பாடுகள்......இப்போதிருந்தே இளைஞருடன் முதியவர் போட்டியிடுகின்றனர். ஆடவரும்

ஆரணங்குகளும் பயணப்படுகின்றனர், தாயக மீட்புக்கான சூளுரை எடுக்க, திருப்பரங்குன்றம்.

தம்பி! உன்னைக்காண, நான் வருகிறேன், திருப்பரங்குன்றம் என்று சொல்லவா வேண்டும். நீதான் என்னைக் கட்டிப் போட்டுவிட்டிருக்கிறாயே, உன் அன்பினால்.

திருப்பரங்குன்றம் மாநாடு எழிலுடன், ஏற்றத்துடன் நடைபெற, உன் சீரிய கருத்துரைகளை எடுத்துரை, தி. மு. கழகம், கூட்டு முயற்சியால் ஈட்டிய கருவூலம் உள்ள பெட்டகம். இங்கு 'எல்லாம் எனக்குத் தெரியும் என்ற பேச்சுக்கு இடம் இல்லை. அந்தப் போக்கு முற்றினால், பொது வாழ்வுக்கு வந்தது பெருந் தொல்லை. துவக்க முதல், நாம் கட்டிக் காத்துவரும் 'தோழமை'...திருப்பரங்குன்றத்தில், கோடையிலே இளைப்பாறிக் கொள்ளக் கிடைத்த குளிர் தருவாய், இதயப் பூங்காவில் உள்ள எழில் மலராய், நமக்கு இனிமை பயக்கட்டும். பயணத்தில் மிக முக்கியமான கட்டம் வந்துள்ளோம், திருப்பரங்குன்றம், மேற்கொண்டும் பயணமாகி வெற்றியூர் சென்றிடும் அறிவாற்றலை நமக்கெல்லாம் அளிக்கட்டும்.

மாற்றார் தம் மனம்போன போக்கிலே ஏசட்டும், பேசட்டும்; செவிபுகவிடாதே. நாம் மேற்கொண்டுள்ள பணி மகத்தானது. தூய்மையுடன் கூடிய தோழமை கலந்த, கூட்டு முயற்சி மட்டுமே, நமக்குள்ள அழியாச் செல்வம். கண்ணீருடன் பிறந்தோம். அந்தக் கண்ணீரும் கேலி செய்யப் படுகிறது. அது கேட்டுக் கண்ணீருக்கிடையிலே ஓர் புன்னகையும் பூத்திடும் முகம் காட்டுகிறோம். நம்மை நிந்திக்கிறார்களே என்று கலக்கமடையாதே; நாராச நடையாலே, நம்மை அழிக்க நினைத்தோர்கள் பலர்; நாம் அழிந்தோமில்லை. காரணம், நம்மை நாட்டுக்குரியதோர் நற்பணியில் ஈடுபடுத்திக் கொண்டுவிட்டோம்.

ககனப்பூ வந்திமகன், கொய்தானும்
அதைக்கண்டு குருடன் அம்பால் எய்தானும்
செகமிசை ஊமையனும் வைதானும்
அதைச் செவிடன் கேட்டு நகை செய்தானும்
கரமில்லான் வாதியைப் பிடித்தானும்
காலில்லான் உதைத்துதைத்து இடித்தானும்
சிரமில்லாதவன் கடித்தடித்தானும்

வேதநாயகம், பொய்யுரைப்போரை, நகைச்சுவையுடன் கூடிய பாடலால், சாடினார். குருடன் குறிபார்த்து அம்பு எய்கிறான்! ஊமை, திட்டுகிறான்! செவிடன் அதைக் கேட்டுச் சிரிக்கிறான்! கரம் இல்லாதவன் ஆளை இழுக்கிறான்! கால் இல்லாதவன் எட்டி உதைக்கிறான்! தலையில்லாதவன். ஆளைக் கடிக்கிறான்!!

நம்புவார்களோ! நம்பமாட்டார்கள்;

கூறுவரோ? இதனையே அல்ல என்றாலும், இது போன்ற பொய்யுரைகளைக் கூறுவர்—எங்கு? எவர்? வழக்குமன்றத்தில்! காசாசையால்!

நம்மைப்பற்றிப் பேசப்படுவன, இவைபோன்றன; நம்ப முடியாதன! எனவே, நாம், பதிலுரை தரத் தேவையில்லை! நாடு, நல்லதீர்ப்பளிக்கும்; நாம் நமது நினைப்பைத் திருப்பரங் குன்றம் பக்கம் திருப்புவோம்; மாநாடு நமக்கு மாண்பளிக்கும்.

அண்ணன்,



25-6-61

கடிதம் : **139**

கதைகள்—கருத்தளிக்க

மரங்கொத்தியும் குருவியும்—கருத்துக்கதை—

அவரைக் கொடியும் குழந்தையும்—

மகிழம்பூவும் சுணைப்பூவும்

தம்பி!

அதற்கு என்னமோ கோபம்—பாவம்!

காரணம் என்ன கோபத்துக்கு என்று கேட்கிறாய்? எளிதாகத் தெரிந்துவிடக் கூடியதா, கோபத்துக்கான காரணம்! கொண்டவர்களுக்கே சில வேளைகளில் தெரிவதில்லை—கண்டவர்களுக்கா தெரிந்துவிடும். மேலும் கோபம், அறிவை மாய்க்கும், ஆத்திரத்தைக் கிளப்பும்—அந்த நிலையில், கோபம் கொண்டதற்கு என்ன காரணம் என்று கேட்டால் சொல்லத்தான் முடியுமா, சொல்லத்தான் செய்வார்களா? இயலாதே!

மெத்தப் படித்தவர்கள் என்று தம்மைப் பிறர் நம்பும்படி செய்பவர்களாலேயே, கோபத்தை அடக்கிக்கொள்ள முடிவதில்லை. இது, பாவம், படித்தவர் பட்டியலில் சேராதது! கோபம் கொண்டதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், சொல்லவா போகிறது. மேலும் சிறிதளவு கோபம் வளரும்.

கீச்சுக் கீச்சென்று கத்தும்! கொத்தும்! ஓ! சொல்லவில்லை யல்லவா, உனக்கு—இது ஒரு குருவியின் கதை!!

மரப்பொந்தில், தாய்! பக்கத்துக் கிளையில் இது. கோப மாகத் தாயை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தால், தன் 'பிகுவு' கெட்டுவிடும் என்ற நினைப்பு—வேறு பக்கமே பார்த்த படி, உட்கார்ந்திருக்கிறது. தாய், "எத்தனை பிகுவு என் கண்ணுக்கு!" என்று எண்ணியபடி பரிவுடன், பார்க்கிறது.

குருவி, மரங்கொத்தி அல்ல! பழமாகக் கிடைத்தால் கொத்தித் தின்னும்—துண்டு துணுக்கு என்றால், விருப்பம் கொள்ளும்—சிரமமின்றித் தின்னலாம் அல்லவா—அதனால்.

மரங்கொத்தியின் மூக்கு, ஒரு துளைக்கருவி அல்லவா—அந்தப் பெருமை அதற்கு. பறந்து செல்லும், துளைக்கும்—வேறு இடம் பறக்கும். இந்தக் குருவிக்கு அதைக் கண்டதால், ஒரே வியப்பு!! எத்தனை பெரிய மரம்—துளைத்தேவிட்டதே! மரம், அசைந்தது ஆடிற்று; இலைகள்தான் உதிர்ந்தனவே யன்றி, மரங்கொத்தி துளைப்பதைத் தடுத்திட முடியவில்லையே, அதனால். செ! இவ்வளவுதானா, இந்த மரம்! இதற்கு இத்தனை பெரிதாக ஓங்கி வளருவானேன்! ஒரு சிறு பறவையின் மூக்குக்குத் தப்ப முடியவில்லை—துளைத்தே விட்டது! உருவம் தான் மிகப்பெரிது; உள்ள வலிவு மிகக்குறைவு!!—என்று நினைத்தது, குருவி.

முதலிலே, இந்த நினைப்பு ஒருவிதமான மகிழ்ச்சிகூடக் கொடுத்தது, குருவிக்கு. மரத்தைத் துளைத்தது ஒரு பறவை—நம் இனம்!!—என்பதால் ஒரு மகிழ்ச்சி.

அதனால், குருவி, மரங்களை அலட்சியமாகக்கூடப் பார்க்க லாயிற்று. மரம் என்றால் என்ன, நான் பயப்பட வேண்டுமா!! என் இனத்தினால், துளைக்கப்படுகிறது—இந்த மரம்!! இதற்கு, நான் ஏன் பெருமை தரவேண்டும். என்னைக் கண்டல்லவா, மரம் பயப்படவேண்டும், நடுங்கவேண்டும்! ஓ! ஓ! மரம் ஆடுவது, நடுக்கத்தால்தான் போலும். ஆமாம், பயத்தால் நடுக்கம் ஏற்படுகிறது, மரத்துக்கு. இதை நாம் இதுநாள் வரையில் தெரிந்து கொள்ளாமலிருந்துவிட்டோமே!!—என்றெல்லாம் எண்ணிக்கொண்டது. குருவிதானே! பாவம்!!

இந்த நினைப்பு எழுந்தது முதலில் தாய்க்குருவிக்குப் புரிய வில்லை—தெரியவில்லை. குருவி, இரையைத் தின்னும்போது வேகமாகக் கொத்தக் கண்டபோதுகூட, தாய்க்குருவிக்குச்

சந்தேகம் வரவில்லை—சரியான முறையிலே, தீனியைக் கொத்தித் தின்னக்கூடத் தெரியவில்லையே, இத்தனை நாளாகி யும்—இது எப்படித்தான் பிழைக்கப் போகிறதோ என்று எண்ணித் தாய்க்குருவி கவலைப்பட்டது.

குருவிக்கு மரங்கொத்திக்கு இருப்பதுபோன்ற 'துளைக் கருவி' தனக்கு இல்லை என்ற நினைப்புக்கூட எழவில்லை. நாமும் பறவைதான் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. பறவை, மரத்தைத் துளைக்கும்—நாமும் பறவை!—இவ்வளவு தான் அதன் எண்ணம். பாவம், குருவிதானே! வண்டி வண்டி யாக ஏடுகளை வைத்திருக்கும் மேதைகளே, இந்த விஷயத்தில் தவறாக எண்ணி நடந்துகொள்ளும்போது, குருவிக்குக் குறை அறிவு இருந்ததில் என்ன ஆச்சரியம்.

'மரங்கொத்தி' வேறோர் மரத்திலே, துளைபோட்டுக் கொண்டிருந்தது. அதற்குக் கர்வம்! பார்! என் திறமையை! இத்தனை பெரிய மரத்தை நான் துளைத்து விடுகிறேன். 'தடியன்' போல ஓங்கி வளர்ந்திருக்கிறதே தவிர, மரத்தினால் ஏதாகிலும் செய்ய முடிகிறதா, பார்!—என்று கேட்பதுபோல, மரங்கொத்தி துளைப்பதும், சுற்றுமுற்றும் பார்த்து, கழுத்தைப் புடைப்பதும், வெற்றியைத் தெரிவிக்கும் போக்கில், கிறீச்சிடு வதும், மீண்டும், துளைப்பதுமாக இருந்தது. குருவிக்குக் கொள்ளை சந்தோஷம், உற்றுப்பார்த்தது பலமுறை! நாமும் பறவை! நமக்கும் மூக்கு இருக்கத்தான் செய்கிறது!!—என்ற நினைப்பு—உடனே, குருவியும் மரத்தைக் கொத்தத் தொடங் கிற்று; துளைக்க முடியவில்லை. குருவிக்கு வெட்கம்! அங்கே பார்த்தால் மரங்கொத்தி துளைக்கிறது! ரோஷம் குருவிக்கு! பலமாகக் கொத்திற்று—மூக்குக்கூடச் சிறிது வலித்தது—மரத்தின் பட்டைகூடப் பெயர்ந்திடவில்லை, பழக்கம் இல்லாத தால். இப்படி இன்னும் ஒரு நாலு கொத்துப் பலமாகக் கொத்தினால், மரத்தைத் துளைத்துவிட முடியும்—ஏன் முடியாது? அதோ, நம் இனம் அங்கு துளைக்கிறதே! நாமும் பறவைதானே—என்று எண்ணிற்று—வேகமாகப் பலமாகக் கொத்தலாயிற்று. துளைக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. கொத்தியதால், மூக்கு வலித்தது. மேற்கொண்டு, கொத்த முடியவுமில்லை. அங்கோ, மரங்கொத்தி வேறோர் கிளை சென்று! துளைக்கிறது. குருவிக்குக் கோபம்!!

கோபம் கொண்ட குருவியைக் கேலி செய்வதுபோல மரங்கொத்தி சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. மரத்தைத் துளைத்துவிட்டேன்! துளைத்துவிட்டேன்!; நானும் பறவை!

நீயும் அதே இனம்! என்னால் முடிந்தது! உன்னால் முடியவில்லை!! —என்று கூவுவதுபோலத் தோன்றிற்று குருவிக்கு.

இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, நான் பறவை இனம் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமா! கூடவே கூடாது! பறவை இனத்திலேயே, நானோர் பாவியோ! பரிதாபத்துக்குரிய பாவியாகவா இருப்பது, கூடாது!!—என்று எண்ணிற்று. கோபம் தலைக்கேறிவிட்டது. துளைத்தேவிடுவது என்று, ஆத்திரத்துடன், வேலையை வேகமாக, கோபத்துடன் தொடங்கிற்று. ஏற்கெனவே, அலுப்பு—வலி—எனவே, மூக்கு உடைந்தது—வலி தாளமாட்டாமல், குருவி, பொந்துக்குள் சென்றது. தாய்க்குருவி, "உனக்கேன் வீண் வேலை! மரங்கொத்தியைப் பார்த்து, உன் மனதிலே வீணான எண்ணத்தை வளர்த்துக்கொண்டது, தவறு அல்லவோ! அதற்கு உள்ள 'மூக்கு' அப்படி—துளைக்கும் கருவியாக இருக்கிறது. உனக்கு ஏது, அந்தக் கருவி! உனக்கு எதற்கு அந்த வேலை?—என்று கேட்பது போலப் பார்த்து, சேர்த்து வைத்திருந்த பழத் துண்டைக் குருவியின் வாயில் கொடுத்துத் தின்னச்செய்தது. குருவிக்குக் கோபம் நீங்கிற்று—விவரமும் புரிந்தது.

எதற்காக அண்ணா! குருவிபற்றிய கதை என்று கேட்கிறாயா, தம்பி! வயதாகிறதல்லவா, அதனால் கதை சொல்லும் போக்கு இருக்கிறது எனக்கு. நானென்ன, கனடா நாட்டு அரசியலைப்பற்றி எழுதப்பட்ட 22-ரூபாய் விலையுள்ள புத்தகத்தில், 777-ம் பக்கத்தில், ஒன்பதிலிருந்து இருபத்து ஏழாவது வரையில் கோடிட்டு, அதைப் படித்துக்காட்டி, 'புத்திபுகட்டும்' ஆசிரியன் போன்றோனாகத் தலைவன் இருக்கவேண்டும்; மக்களோ மாணாக்கர்களாக இருக்கவேண்டும், 'பிரம்படி'க்கும் தயாராக! —என்று கூறுபவனா!'—இல்லையே! உன் அண்ணன்! அவ்வளவு தான்!

ஆனால், தம்பி! கதையைப் படிக்கப் படிக்கக் கருத்துகள் ஊற்றெடுத்தபடி இருக்கும்.

ஒவ்வொரு முறை படிக்கும்போதும், புதுப்புதுக் கருத்துக் கிடைக்கும். பல பிரச்சினைகளை விளங்க வைக்கும்.

இந்தக் கதையிலே வருகிறதே 'குருவி'—இதன் போக்கு, ஒரு மரங்கொத்தி செய்வதைத் தானும் செய்யவேண்டும், அப்போதுதான் தனக்குப் பெருமை என்று எண்ணிக் கொண்டது. பாவம் குருவிதானே!

ஆனால் குருவிகளை மட்டுமல்ல, கொல்லும் புலிகளைக் கூடக் கூண்டிலே அடைத்திடவல்ல வீரமும், குவலயத்துக்கே புத்திபுகட்டும் பேரறிவும் கொண்டிருப்பதாக எண்ணம் கொள்ளும் மனிதர்கள்கூட அல்லவா, குருவி வீணான வேலையில், காரணமின்றி ஈடுபட்டதுபோல் ஈடுபடுகிறார்கள்.

வீணான வேலையில் ஈடுபடுவது கூடாது! துளைக்கும் வேலை செய்யவென்றே, மரங்கொத்தி இருக்கிறது. அதைப் பார்த்து விட்டு, நாமும் அதுபோல் துளைக்க வேண்டும் என்று எண்ணி மூக்கைக் கெடுத்துக்கொண்ட குருவிபோல, மனிதர்களிலும் சிலர் உளர். நாம் அதுபோல் ஆகக்கூடாது என்பதற்காகத் தான், இந்தக் கதை!!

குருவி யாரைக் குறிப்பிட? மரங்கொத்தி, எவரை மனதிலே வைத்துக்கொண்டு? தாய்க்குருவி, யார்?—என்றெல்லாம் கேட்காதே, தம்பி! அப்படி எவரையும் மனதிலே வைத்துக்கொண்டு, கட்டப்பட்ட கதை அல்ல இது. தும்பிகள் பறந்திடும் தோட்டத்திலே, மலர்களைப் பழித்திடும் வண்ணம் கொண்ட வண்டுகளும் பூச்சிகளும் இருந்திடக் கண்டேன்! சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன, சத்தமிட்டபடி! ஒலிக்குக் காரணம் யாதோ? பொருள் என்னவோ? என்று எண்ணியபடி, காட்சியைக் களிப்புடன் கண்ட நிலையில், மரங்கொத்தி கண்டேன்! மரத்தைத் துளைத்தபடி இருந்திடக் கண்டேன்! பிறகு குருவியையும் கண்டேன்! கதையாகக் கூறினேனே, அது அவ்வளவும் கண்டேன்.

மனித இனத்திலும், உள்ளதைக் குலைக்க, நல்லதைக் கெடுக்க, மொத்தத்தைத் துளைத்திடும் செயலிலேயே ஈடுபட்டபடி சிலர் இருப்பது என் நினைவிற்கு வந்தது. மரப்பொந்தில், தாயின் அன்புக் கதகதப்பில் இருந்திடவேண்டிய குஞ்சுக் குருவியும், துளைக்கும் வேலையில் ஈடுபடுவதுபோல, சிலர், வீண் வேலையில், உள்ளதைக் கெடுப்பதில் ஈடுபடுவதை எண்ணிக் கொண்டேன். குருவி, துளைபோட முடியாமல் பொந்துக்குள் சென்று விட்டதைக் கண்டேன்: இந்தக் கதை வடிவம் கொண்டது.

★

இன்னும் ஓர் கதை தம்பி! இதுவும் கருத்துக்காகத்தான், காலம் போக்க அல்ல! இதிலும் குருவி! ஆனால், குருவியுடன், குமரி, குமரன், குழவி!!

தோட்டத்தில் முளைவிட்ட 'அவரை' கண்டு, அவன், இன்பம் சுமந்து, குங்குமநிறக் குழவி பெற்ற தாய்போல் குதூகலித்தான்.

கொடி வளரும்; பூ பூக்கும்; கொத்துக் கொத்தாய்க்
காய்க்கும், காண்போம் என்று, அவன்
எண்ணி அகமகிழ்ந்தான்; என் மகவும்
ஈராண்டு ஆனதுமே, கைவீசி நடை
நடந்து மெய்சிலிர்க்க வைத்திடுவான்
என்றே தாயும், மை பூசி
பொட்டிட்டு' மதலை தன்னை மார்போடு
அணைத்துச் செல்லும் பான்மை போலே.

இவனுக்குத்தானென்ன இத்தனை களிப்பு! ஏதோ எங்கும் இல்லாத செல்வத்தை இவன் பெற்றவன் போலே, நித்த நித்தம், பார்த்துப் பார்த்து நின்று பல பேசி மகிழ்கின்றான்— பைத்தியமேதானோ இவனுக்கு என்று அண்டைப் பக்கம் உள்ளோர் பேசினர் கேலி மொழி. அதுவும் கேட்டு, மூக்கோ சப்பை இதற்கு, வாயும் பொக்கை, வண்ணம் சிகப்பல்ல, வரும் கருப்பை அறிவிக்கும் வகைதான் ஈது என்று தன் குழந்தையினை எதிர்வீட்டுப் பாட்டி ஏளனம் செய்கையிலே, கண் கெட்டதாலே பாட்டி! என் கரம் இருப்பது கட்டித் தங்கம் என்பது உனக்குத் தெரியவில்லை; உன்னைப் போல் இருக்குமென எண்ணிக்கொண்டாய்; என் செல்வம் 'ராஜாக்குட்டி', எந்தன் கலி தீர்க்க வந்தான், என்று பேசுகின்றாள் எழில் மாது? இல்லை! இல்லை! தன் மகவை உச்சி மோந்து 'இச்'சளித்து இருக்கின்றாள்; காண்கின்றோம். அஃதே போலத் தன் தோட்டக் கொடியைக் கண்டு எவர் என்ன கூறினாலும், இவர்க்கென்ன தெரியும், போ! போ! என்றெண்ணித் தோட்டம் சென்று, இலைகளை எண்ணிப் பார்ப்பான். இன்னும் எத்தனை நாட்கள் போனபின், பூ காண்போம் என்று கணக்கெடுத்துக் களித்திடுவான், குதித்திடுவான்.

கொடி படர்ந்தது; மலர் பூத்தது; பிஞ்சுகள் இங்கும் அங்கும்!!

பேசாத கொடி ஏதேதோ சேதிகள் சொல்வது போன்று அருகே நின்று, அந்த அசைவிலே அகமகிழ்வான்.

கொத்துக் கொத்தாகக் காய்க்கும்; மெத்த ருசியாயிருக்கும்; பொரித்தாலும் கூட்டு வைத்துத் தின்றாலும் வாய் மணக்கும்; குழம்புக்கும் ஆகும் நன்றாய், என்றெல்லாம் எண்ணி நின்றான்.

பக்கத்து வீட்டில்தான் அந்தப் பாவை பெற்றாள் பைங்கிளி, பசும்பொன், குலக்கொடி என்றெல்லாம் கொஞ்சிடும் குழவிஒன்று, ஆண்டு நாலைந்துக்கு முன்னம்.

அந்த அழகுச் சிலைக்கு உயிர் உண்டு. ஆதலாலே, தாய் காண ஓடி ஆடி, தளிர்க்கரம் தன்னால் கன்னத்தைக் கிள்ளும், சுண்ணத்தைக் குழப்பி அழுகுரலெழுப்பும். அது, என்னத்தைச் செய்தாலும் அவளோ, என் ராஜா! வாடா! வேண்டாம்! இதோ பார், உனக்கு நான், ஆனையொடு குதிரைப்பொம்மை அழகழகாய் வாங்கி வந்தேன்! ஆடி மகிழ வாடா, நான் வாழவந்த கோவே! என்றெல்லாம் கொஞ்சுகின்றாள். அவளுக்கு, 'அவரை' அல்ல; 'அஷ்ட ஐஸ்வரியமும் அவனே!!

பக்கத்துப்பக்கம் வீடு! பாங்கான நேசம் உண்டு! அண்ணன் அவளுக்கு அவனும்—உள்ளத்தால் அவனுக்கு அந்த 'அவரை' மீதுள்ள அன்பு கண்டு 'களுக்' கெனச் சிரிப்பாள், குறும்பாய்.

'ராஜா' வாளாக இருத்தல் உண்டோ? வாளெடுத்துமே சென்று வழி நிற்கும் பகையை வென்று, புதிய நாடு பெற்று, புதுப்பெருமை தேடானோ! இவனும் புறப்பட்டான், தோட்டப் பக்கம், குடைக்கம்பு தூக்கிக் கொண்டு.

சிட்டுக்குருவி கண்டான்—சினமிகக் கொண்டான்— நானிங்கு இருக்கையிலே நடமாட்டமா உனக்கு? என்று கேட்டான், கைகளாட்டி; குருவியும் கீச்சுக் கீச்சென்று கெக்கலி செய்துவிட்டு, ஒருசெடி தன்னை விட்டு வேறொன்றுக்குத் தாவ, என்னிடம் சண்டைபோடப் பயந்துமே குருவி, பார்! பார்! ஓடுது, கூடுதேடி என்று கூற எண்ணிச், சுற்றும் முற்றும் பார்த்தான்; யாருமில்லை. இதற்குள் குருவி, பக்கத்துத் தோட்டம் உள்ள அவரைக் கொடியினில் ஊஞ்சலாடி மகிழ்ந்தது; கண்டான்; சென்று கம்பினை வீசினான்; குருவி பறந்தது; கொடி அறுந்தது!

அறுந்த கொடியைச் செல்வன் பார்க்கவில்லை; அவன் பறவையின் சிறகு அறுக்கப் பாய்கின்றான் கோபத்தோடே. குருவியும், விளையாட்டுச் சிறுவன் காண, கொடி முழுதும் மாறி மாறி, குந்துவதும் பறப்பதுமாய்க் கோலம் காட்டிற்று. கோல் கரத்தில் இருக்கும்போது, கொற்றவனுக்கு என்ன குறை! வீசினான் நாலா பக்கம்! ஒவ்வோர் வீச்சும், 'விர்'ரென்று பறந்திட்ட குருவிமீது வீழவில்லை, கொடிமீதேதான்—ஒவ்வொன்றாய் அறுந்து வீழ்ந்தது; பூவும் பிஞ்சும் வீழ்ந்தன தரைமீதெல்லாம்.

என்னவோ வேலையாக வந்தவன், கண்டான் இதனை. சொல்லவா வேண்டும் அவனுக்கு. 'சுரீல்' என்று வந்தது கோபம்? என்ன காரியம் செய்திட்டான், இந்தப் போக்கிரிச் சிறுவன்! செல்லமாய் வளர்த்து வந்தேன், கொடிதனைப் பல நாளாக; எத்தனை அழகாய்ப் பிஞ்சுவிட்டது எனை மகிழ்விக்க, அத்தனையையும் இந்த அறிவிலி அழித்திட்டானே! ஐயய்யோ, கொடிகள் எல்லாம் துண்டு துண்டாகக் கீழே அறுந்தன்றோ விழச்செய்தான். கோல் ஒன்று வேண்டுமோடா, குரங்கே; வாலும் எங்கே? யார் உன்னை வரச்சொன்னார்கள், இழுத்துப் போய் அறைகின்றேன் பார்! என்றவன் கூறி நின்றான்; கோவென அழுதவண்ணம் குழந்தை வீடு சென்றான்.

கொடிகளை மீண்டும் ஏதோ ஒருவகையாக அமைத்து, கொண்ட கோபம் மாறிச் சோகமாய்ப் போனதாலே, இல்லத்துக்குள்ளே வந்தான்—இருமியபடியே தாயும், என்னடா கூச்சல் என்றாள். குழந்தையாம், குழந்தை! அது கொடிகளை அறுத்துப்போட்டு அழித்தது, என்றான். அடித்தாயோ? என்று கேட்டாள்; இல்லை. அடிக்கா முன்பே, அழுதது என்றான்; உற்றுக் கேட்டான், ஓயவில்லை அழுகை; தெரிந்தது.

இடுப்பினில் குழந்தையோடு வந்தனள் தாயும் அங்கு.

"என்னண்ணா! இப்படியா என் குழந்தையை இரக்கமேயின்றி அடித்துத துன்புறுத்துவது? 'அவரை'தான் ஆணிப் பொன்னால் ஆனதோ? போனால் என்ன? இதோ உமக்கு, 'அவரை' அரைத் தூக்குக்கு மேலிருக்கும், கொண்டு மகிழ்ச்சி கொள்ளும். குழந்தையைக் கொடுமை செய்யவேண்டாம்" என்று கூறி, மடியினில் கொண்டு வந்த, 'அவரை'ப் பிஞ்சை அவன் எதிர்கொட்டி நின்றாள்.

வெட்கம்தான் அவனுக்கு—அதனை ஓரக்கண் பார்வை காட்டிற்று.

கொடி எலாம் அறுத்துவிட்டான்......என்று கூறினான், கோபமின்றி.

"எப்படி விக்கிவிக்கி அழுகின்றான், பார் அண்ணா! இவன் எப்போதும் இதுபோல, அழுததைக் கண்டதில்லை. என் மனம் என்ன பாடுபடும் சொல்லு" என்று கேட்டு, அவளும் கண்ணில் நீரை அழைத்திடுவாள்போல நின்றாள்—அன்றாடம் அழுதழுது குழந்தை அமர்க்களம் செய்வதுண்டு—எந்நாளும் இதுபோல் அழுததே இல்லை என்று தாய் கூறுகின்றாள்—பொய்யா?—இல்லை! அன்பு பெய்திட்ட அபத்தப் பேச்சு!! அந்தப் பொல்லாத குழந்தையும் இவனையே பார்த்துப் பார்த்து அழுதது விக்கி விக்கி.

"மாமன் அடித்தானென்று ரோஷமடி, மகனுக்கு. அவனே மார்பினில் சாத்திக்கொண்டு மன்னிப்புக் கேட்டாலன்றி ஓயவே போவதில்லை, உனக்கென்ன தெரியும்!" என்று, தொட்டில் தொல்காப்பியமெல்லாம் தொடர் தொடராகக் கற்ற மூதாட்டி கூறுகின்றாள்.

இங்குவா! என்றழைத்து, குழந்தையைக் கரத்தில் ஏந்தி, 'அவரை'தானே உனக்கு வேண்டும், அள்ளிக்கொள் அவ்வளவும் என்று, கீழே கிடந்ததைக் கொடுத்தான் எடுத்து; குழந்தை வீசிற்று மீண்டும் கீழே.

அழுகை ஓயவுமில்லை; இவன் செய்வித்தை எதுவுமே பலிக்கவில்லை; பார் உனக்குப் பழம் தருவேன், பசுவினைக் காட்டுவேன் வா, என்று கூறித்தோட்டம், ஏகினான், குழந்தையோடு.

"என்னடி காசு ரொம்பக் கொட்டியோ கிடக்குது உன் வீட்டில்—ஏனடி இந்த ரோஷம்—எடுத்துச்செல் இதனை" என்று பாட்டி பரிவுடன் சொன்னாள். பாவையோ, அதைக் கேட்டல்ல, தோட்டத்தில் சிரிப்புச் சத்தம் எழக்கேட்டு மகிழ்கின்றாள்.

கிளிகொஞ்சும் காட்சி காண, தாய்சென்றாள் தோட்டப் பக்கம். அங்கு, கொடியினைப் பற்றி இழுத்து, குழந்தையின் கரம்கொடுத்து, அதை அறுத்ததுமே குழந்தை, கைகொட்டிச் சிரித்திடவும், அதன் கன்னத்துக்குழியை, அவரைப் பூவினால் நீவி, அவனும், அகமகிழ்ந்திடவே கண்டாள்.

அரைநொடி நின்றாள் கண்டு; "அண்ணா!" என்றழைத்த வண்ணம், அவனருகே சென்று, "போக்கிரி அண்ணா, இவன்; இவன் போக்குக்கு ஏற்றவண்ணம் ஆடி நீர், கொடியை எல்லாம் அறுத்திடலாமோ?" என்று கூறிக் குழந்தையை வாங்கிக்கொண்டு, முத்தமிட்டாள்; அவனோ, வையகம் தன்னை வாழ்விக்கும், அன்பின் அருமை அறிந்து அகமகிழ்ந்து நின்றான்.

அங்கெங்கோ ஓர் இல்லத்தில், அவனுக்கென்றே உள்ள மங்கை, தெரிகின்றாள், குழந்தையோடு, செடிகளின் மறைவில். நன்றாய்!!

★

குழந்தைக்குக் கொடியின்—அருமை தெரிவதில்லை; விளையாட்டாகக் கொடியினை அறுத்துவிடுகிறது. பாசம் காரணமாகத், தாயோ, கோபிக்க முடிவதில்லை. கொடியினைப் பாங்காக வளர்த்தவனோ, அது பாழ்படுத்தப்படுவது கண்டு பதறத்தான் செய்கிறான்; எனினும், அன்பின் அருமை அவனை யும் தன் வயப்படுத்தவே, அவனும் கொடி அறுத்தேனும் குழந்தை குதூகலம் அடையட்டும்; காண்போம்; கொடியினில் கொத்துக் கொத்தாக 'அவரை' இருந்திடக் காணும்போது ஏற்படும் களிப்பை மிஞ்சும் களிப்பன்றோ காண்கின்றோம், இந்தக் குழந்தை கன்னத்தில் குழியும் விழ, 'களுக்'கெனச் சிரிக்கும்போது, என்று எண்ணுகிறான்.

கள்ளம் கபடமற்ற நிலை குழந்தைக்கு; எனவே கொடியினை அறுத்திட்டாலும், மூண்டிடும் கோபம் தன்னை அடக்கிக் கொள்ள முடிகிறது. ஆனால், வேண்டுமென்றே ஒருவன் கொடியினை அறுத்தால், மனம் எத்தனை வேதனைப்படும்!!

விவரமறியாமல், விளைவு தெரியாமல், சிலர் நல்ல காரியத்தைக் கெடுத்துவிடுகிறார்கள். அவர்தம் குறையறிவு கண்டு இரங்குகிறோம். வேறு சிலரோ, வேண்டுமென்றே, நாசம் உண்டாக்கும் நோக்குடனேயே, கொடியினை அறுத் திடுவதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். கொடிகளை அழித்துவிட்டேன். துண்டுதுண்டாக்கி விட்டேன் என்று அவர்கள் கைகொட்டிச் சிரிப்பர்! அவர் செயலுக்குப் பரிவு காட்டிப் பாராட்டவும் சிலர் முன் வருவர். ஆனால், கொடி படரக் கண்டு மகிழ்ந்தவன் மனம் என்ன பாடுபடும்! அவனல்லவா, படர்ந்துள்ள கொடியின் அருமை அறிந்தவன்,

அவன் மனமன்றோ அனலிடைப் புழுவெனத் துடிக்கும், அழிவு வேலை செய்திடுவோனைக் காணின்.

ஆக்கத் தெரியாவிட்டாலும், அழிக்காமலாவது இருக்க வேண்டும்—என்பதைப் பாடமாக்கவே, இதனைச் சொன்னேன்.

விபரமறியாதாரின் செயலால்கூட, அழிவு நேரிடுவது உண்டு—குழந்தை கொடி அறுத்ததுபோல!

அதுகண்டு, கோபம் எழும்; ஆயினும் அடங்கும், கெடுமதி யுடையோர் கொடி அறுத்திடுவது போன்ற தீய செயலில் ஈடு பட்டால், உலகம் மன்னிக்காது!!

விவரமறியாதார், கொடி அறுத்திடுவதுபோன்ற அழிவு வேலையில் எவரேனும் ஈடுபட்டால், கதையில் வரும் குழந்தையைக் கொடிக்கு உரிமையாளன், முதலில் கோபித்துக் கொண்டான் எனினும், பிறகு, பரிவு காட்டினான் அன்றோ, மன்னித்து; அது போன்றே; அருமை அறியாமல், விவரம் தெரியாதார் கேடுடைச் செயலே புரியினும், அது கண்டு, நமக்குக் கோபமே எழினும், அதனை அடக்கிக்கொள்வதும், நீக்கிக் கொள்வதுமே முறை என்பதை விளக்கத்தான், இந்தக் கதை!

எது கொடி? எது குழந்தை? என்றெல்லாம் கண்டு பிடிக்கும் காரியத்திலே வீணாக ஈடுபட வேண்டாம், தம்பி பொதுவாகச் சொல்கிறேன், எந்தத் தனிப்பட்டவர்களையோ. எண்ணிக்கொண்டு அல்ல.

சிலருக்குத் தாம் செய்யும் காரியம், இப்படிப்பட்டது என்று உணர்வு ஏற்பட்டு, வெட்கம் பிறந்தால் நல்லதுதான். ஆனால், ஆசை வெட்கமறியாது என்று அன்றே சொல்லியிருக் கிறார்களே!!

★

நாம் வாழ்ந்த கதை; இன்று வீழ்ந்துகிடக்கும் வேதனை; இதனை மாற்ற நாளை நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை, இவைபற்றி எல்லாம் கூறிடுவாய், கேட்டிடலாம், கருத்துப் பெற்றிடலாமென்று நான் நினைத்தால், நீ என்னண்ணா! குருவிக் கதையும், கொடி அறுத்த குழவி கதையும் சொல்கிறாயே: நமை அழிக்க எண்ணி, ஆளும் கட்சியிலுள்ளோர், இலட்ச இலட்ச மாக 'நிதி' திரட்டிக் குவித்தபடி உள்ளனர்; நீயும் கொண்டு

வருகிறாய், 101 காசு, 501 காசு, 2001 காசு என்று!—என்று தானே, தம்பி! கோபம். கோபம் கொள்ளாதே!! இன்னொரு கதை கூறுகிறேன், கேள்.

வயலிலே படர்ந்திருந்தது பூசுணைக்கொடி! பெரிய, பளபளப்பான, பூக்கள், கொடியினில் பொன் நிறம்! கண்கவர் வனப்பு!!

வயலின் ஓரத்தில், வரப்பைத் தன்னிடமாக்கிக் கொண்டு, வளர்ந்திருந்தது ஒரு மகிழ மரம். சின்னஞ்சிறு பூக்கள். அதிலே!! உற்றுப் பார்த்தாலொழியக் கண்ணுக்குத் தெரியாது அவ்வளவு சிறுசு!!

கீழே 'பூசுணை'ப் பூ! மகிழம் பூவைப் பார்த்து கேலி செய்வதுபோல, மலர்ந்து இருக்கிறது. காற்றடிக்கிறது! பூசுணைப் பூவின் இதழ்கள் அசைகின்றன! வா! வா! சின்னஞ் சிறு மகிழம்பூவே! என்னைப் பார்! என் அழகைப் பார்! நீயும் இருக்கிறாயே பூவென்ற பேருடனே பூனைக்கண் அளவுக்கு— என்று கேலி செய்வதுபோல, அசைந்து ஆடுகின்றது.

மகிழம் பூக்கள், காற்றடித்ததும், உதிருகின்றன, கீழே!

கொடியிலிருந்து பூசுணைப்பூ அறுந்துபோகவில்லை காற்றால். மகிழம் பூக்களோ, குவியல் குவியலாக. உதிர்கின்றன, மரத் தடியில்.

இவ்வளவு தான் உன் வாழ்வு! இவ்வளவுதான் உன் வலிவு! ஒரு காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லையே என்று, கேலி பேசுகிறது, பூசுணைப்பூ.

இது காலையில் தோன்றிய காட்சி! கொடியிலே கொலு விருக்கும் பூசுணைப்பூ! குப்பையுடன் குப்பையாகக் கிடக்கும் மகிழம்பூ!!

மாலை! வயலை ஒட்டியுள்ள வீட்டில் வாழும் 'வண்ணக்கிளி' வீதியிலே இருந்த, சாணி உருண்டையை வழித்தெடுத்து, வறட்டியாகத் தட்டுகிறாள், சுவரினிலே!! தம்பி! சாணியுடன் என்ன என்கிறாய்? காலையிலே; களிநடமாடிற்றே, அதே பூசுணைப் பூதான்! ஆமாம். மார்கழி மாதம், வீட்டெதிரே. சாணி உருண்டைமீது பூசுணைப் பூவை அழுத்தி வைப்பர், கண்டதுண்டு அல்லவா?

கர்வம் கொண்ட நிலையில், என்னைப் பார்! என் அழகைப் பார்! காற்றும் பிய்த்திட முடியாத என் வலிவைப் பார்? பளபளப்பைப் பார்! அளவு பார்! நீயும் இருக்கிறாயே பூனைக் கண் அளவு, என்று கேலி பேசும் நிலையில் இருந்ததல்லவா பூசுணைப்பூ! அதற்கு நேரிட்ட கதியைக் கண்டனையோ? அதைப் பறித்தெடுத்த பாவை, சூட்டிக்கொண்டனளோ, கார்குழலில்! இல்லை! கோயிலுக்கு உகந்ததெனக் கருதி, அங்கு அனுப்பி னாளோ? அதுவும் இல்லை! வேறு எங்கு சென்றது, பூசுணைப்பூ? சாணி உருண்டைமீது!

அளவு பெரிது! பளபளப்பு மிகுதி! பொன் நிறம்! எல்லாம், எதற்குப் பயன்பட்டது? சாணி உருண்டைக்குச் 'சால்வை' யாக!!! இந்த இடம் போய்ச்சேரத்தான், இத்தனை 'வாயாடி'த் தனமும், பயன்பட்டது. காலைமுதல் சாணி உருண்டைமீது இருந்தது; மாலையோ, சுவரிலே, தட்டப்பட்டுக், காய்கிறது 'வறட்டியாக'

பூசுணைப் பூவைப் பறித்தெடுத்துச், சாணி உருண்டைக்குப் போர்வையாக்கி, பிறகு, வறட்டி தட்டிடும், பெண்ணின் தலையிலே, என்ன தெரியுமா? மகிழம்பூ மாலை!! ஆமாம், தம்பி! கீழே உதிர்ந்துகிடந்த மகிழம் பூவேதான்! அளவு, சிறியது! பளபளப்பும் இல்லை! உதிர்ந்துதான் கிடந்தது, மரத்தடியில், மண்பரப்பில்! பூசுணையால், கேலிப் பொருளாகக் கருதப்பட்ட பூனைக்கண் அளவுள்ள, மகிழம்பூ! அதற்கு எது இடம்? சாணி உருண்டை அல்ல! மாதின் கூந்தல்!!

பூசுணை, அளவு பெரிது, பளபளப்பு மிகுதி—ஆனால் மணம் ஏது?

மணமற்றது, சாணி உருண்டைக்குத்தான் ஏற்றதாயிற்று!

மகிழம்பூவோ, மணம் உள்ளது; அளவு கிடக்கட்டும்; வண்ணம்கிடக்கட்டும்; எனவேதான், அது மாதின் கூந்தலிடம் சென்று, அணியாயிற்று!!

அதுபோலத்தான், தம்பி, காங்கிரசிடம் சேரும் பணம். பெரிய அளவுள்ள பூசுணைப்பூ! பளபளப்பு உண்டு, மணம் இல்லை! அளவு பெரிது, ஆயின் அணிவார் இல்லை. சாணிக் கென்று பூசுணைப்பூவைப் பயன்படுத்துவதுபோல், காங்கிரசிடம் குவியும் நிதியும், அசங்கியமான காரியத்துக்குத்தான் பயன் படப்போகிறது! நல்ல காரியத்துக்கு அல்ல. மணம்தர அல்ல.

நம்மிடம் வந்திடும் 101, 1001, 2001 இவைகள், உதிர்ந்து கிடக்கும் மகிழம்பூக்கள், சாணிக்கு அல்ல; மணம் அளிக்க!

இப்படித்தானா, அண்ணா, மனதுக்குச் சமாதானம் தேடிக் கொள்வது!!—என்று கேட்பாய்; தெரியும் எனக்கு.

காங்கிரஸ் பெருந்தலைவர்கள், கேட்ட உடனே, ஆயிரம் பத்தாயிரம் என்று அள்ளித் தருகிறார்கள், சுளை சுளையாக!!

பெறுபவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு! தருபவர்களுக்கு அத்துணை அன்பு! தெரியவில்லையா?—என்று கேட்கிறாய், சரி! கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளையின் கருப்பு ஆடு, கதை தெரியுமா உனக்கு? தெரிந்திருந்தால், காங்கிரசுக்கு ஆயிரம், பத்தாயிரம் என்று பணம் குவிவதுபற்றி வியந்து பாராட்டமாட்டாய். கேளேன் அந்தக் கதையையும்.

மாரியம்மன் திருவிழா தடபுடலாக! ஊர்வலம் முடிந்து, அம்மனை, உள்ளே கொண்டுபோகும், நேரம். "ஓஹோ!" என்று ஓங்காரக் கூச்சலிட்டான், அருணாசலம்! வந்துவிட்டாள் அம்மன்!!—என்றுகூறி வணங்கி நின்றனர் பக்தர்கள். ஆவேசம் வந்துவிட்டது அருணாசலத்தின்மீது! அதுவரை ஊரார் பார்த்ததில்லை அவ்வளவு 'உக்கிரமான' ஆவேசத்தை.

"அம்மா! தாயே! அங்காள பரமேஸ்வரி! அடியாரை இரட்சிக்க வேண்டுமம்மா!"—'சிலம்புப் பாட்டு' பாடுகிறான் பூஜாரி! ஆவேசமாடிடும் அருணாசலமோ, குதிக்கிறான், உடலை நெளிக்கிறான், கண்களை உருட்டுகிறான், புருவத்தை நெரிக்கிறான், பற்களை நறநறவெனக் கடிக்கிறான். சிறுவர்கள் அலறி அடித்துக்கொண்டு ஓடுகிறார்கள். பெண்களுக்குப் பெரும் பீதி. முதியவர்கள் முணுமுணுக்கிறார்கள்.

"எள்ளளவு கோபமும் எங்கள்மேல், வேண்டா
மம்மா! என்ன நீ, கேட்டிட்டாலும் இப்போதே
தருவோம் அம்மா; எல்லையைக் காத்து நிற்கும்,
எங்கள் குலதேவி அல்லோ!"

பாடலை பூஜாரி, உருக்கமாகப் பாடிவிட்டு, அம்மனைக் கேட்கிறான், 'என்ன குறை, கூறம்மா?' என்று.

"போட்டயாடா பூஜை! போட்டயாடா! போடு
கிறேன், என்று முன்னம் சொன்னபடியே."

அம்மன் என்ன! பூஜாரிக்குச் சளைக்குமா? பாடுகிறது!!

"என்ன பூஜையம்மா! எங்களிடம் கூறுமம்மா! கோழிகொண்டுவந்து, குடலெடுத்து மாலையாக்கிக் கொண்டாடச் சித்தமம்மா! கோபம் வேண்டாம் தாயே!"

"வேண்டாண்டா, கோழி"

"ஆடு அறுக்க வேண்டுமென்றால், ஆகாது என்று சொல்வோம், அம்மா உன் ஆசை என்ன? அறியச் சொல்லுமம்மா!"

"ஆடு தாண்டா வேணும்"

"ஆகட்டும், தாயே! ஆடு, 'காவு' கொடுக்கிறோம்!"

"சாதாரண ஆடு அல்லடா! வெள்ளாடு வேணும்—வெள்ளாடு"

"வெள்ளாடு கொண்டுவந்து, வேண பூஜை செய்வோம், தாயே!"

"வெள்ளாடு வேண்டும்டா—கறுப்பு நிறத்திலே. காலரா நோயைக் கொண்டுவர, காத்திருக்கிறா, மொள்ளைமாரி! உயிர் பிழைக்க வேணுமென்றா, உடனே வேணும் கறுப்பாடு."

"கறுப்பாடு வாங்கிவர கணநேரம் தாருமம்மா."

"வேணும்! சந்தையிலே இருக்கற ஆடு வேண்டாம்டா, சண்டாளப் பசங்களா! கோடி வீட்டுக் கோபாலப் பிள்ளையிடம் இருக்கிறதே, கறுப்பு வெள்ளாடு, அதுதான் 'காவு' கொடுக்கணும். இல்லையானா, காலரா நோய் வந்து, ஊரே சுடுகாடாகும். மொள்ளைமாரி, என்னைத் தகிக்கறா! இப்பவே கோபாலப் பிள்ளை வீட்டு ஆட்டை அறுத்து, அந்த இரத்தத்தைக் கொண்டு எனக்கு அபிஷேகம் செய்யணும். மறந்திங்க, தொலைஞ்சிங்க. மலை ஏறிப் போறேண்டா. மாரியம்மா, நானேதான்."

அம்மன் 'பழம்' சாப்பிட்டுவிட்டு மலையேறிவிட்டது.

ஊர்ப் பெரியவர்கள் சென்று, 'அம்மன்' சொன்னதைக் கூறி, எவ்வளவோ தடுத்தும் கேட்காமல், கோடிவீட்டுக்

கோபாலப் பிள்ளையுடைய கறுப்பு வெள்ளாட்டை இழுத்து வந்து, குளிப்பாட்டி, 'காவு' கொடுத்தார்கள்.

இந்தக் கதைக்கும் காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கு, ஆயிரம் பத்தாயிரம் என்று பணம் பலர் கொடுப்பதற்கும், என்ன சம்பந்தம்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது விளங்க, பழைய சம்பவம் ஒன்று கேள், தம்பி!

ஆவேசமாடிய அருணாசலம், கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளையிடம், ஆட்டுப் பால், கேட்டான் ஒருநாள் மருந்துக்காக ஆழாக்கு. இல்லை போ! என்று விரட்டிவிட்டார். கோபம், அருணாசலத்துக்கு; "பார்த்துக் கொள்கிறேன், உன்னை; ஒரு ஆழாக்குப் பால் தர முடியாதுன்னு சொன்னேயல்லோ, இரு! இரு! நீ, பதறப் பதற, உன்னுடை கறுப்பு ஆட்டை, 'காவு' கொடுத்துவிட்டு, மறுவேலை பார்க்கிறேன்"—என்று கருவிக் கொண்டான்.

மாரியம்மன் திருவிழா வந்தது; ஆவேசம் ஆடும் வாய்ப்பைத் தேடிக்கொண்டான்; காரியத்தை முடித்து விட்டான்.

சாதாரண அருணாசலம் ஆழாக்குப் பால் கேட்டபோது கிடைக்கவில்லை.

ஆவேசம் ஆடினான். ஆடே வெட்டப்பட்டது, 'காவு' கொடுக்கப்பட்டது.

தம்பி! பதவி ஆவேசமாடிக்கொண்டல்லவா, பணக்காரர்களிடம் போகிறார்கள், காங்கிரஸ் பெரிய தலைவர்கள்—ஆவேசம் ஆடிய அருணாசலம்போல! அதனால் கிடைக்கிறது ஆயிரம், பத்தாயிரம்! அன்புக் காணிக்கை அல்ல!! அச்சத்தைப் போக்கிக்கொள்ள, ஆபத்தைத் தடுத்துக்கொள்ள, ஆகின்ற "செலவு".

சிரிக்கிறாயே, தம்பி! சிந்தித்துப் பாரேன், நான் சொல்வதிலே உள்ள பொருள் விளங்கும்.

மரங்கொத்த நினைக்கும் குருவி, கொடி அறுக்கும் குழந்தை, மாலையாகும் மகிழம்பூ, கோடிவீட்டுக் கறுப்பு ஆடு, எனும் இவையாவும், தரும் கருத்தினை எண்ணிப்பார், தம்பி! சுவை கருதி மட்டுமல்ல, பயன் கருதி!!

இதிலென்ன இருக்கிறது! மதுரைக்குத்தான் வரப் போகிறாயே, சுவையும் பயனும் பெற, தர.

அதற்கான ஏற்பாட்டிலே ஈடுபட்டிருக்கும் வேளை இது. அதிகம் எழுதி, அதற்குக் குந்தகம் ஏற்படுத்தலாமா? திருப்பரங்குன்றத்தில் சந்திப்போம்.

அண்ணன்,

அண்ணாதுரை

2-7-61

கடிதம் : 141

முதல் பந்தி!

விடுதலைக் குற்றம்—

நேரு பண்டிதரின் பேராற்றல்—

கொள்கையில் உறுதி—

நீண்டகாலச் சிறை—

தம்பி!

மேளதாளம் முழங்க, வாழ்த்தொலிகள் பீறிட்டுக் கிளம்ப, கோலோச்சுவோருக்குப் பாராட்டுப்பண் பாடியபடி கொடி ஏந்திகள் நடைபோட, கோலாகலமாக, 'சுதந்திர தின' ஊர்வலம், எங்கள் தெருவில் போய்க்கொண்டிருந்த போது, அவர்கள் நம்புவார்களோ இல்லையோ, என் வார்த்தையை—நான், பண்டித ஜவஹர்லால் நேருவின் சொற்பொழிவுகள் கொண்ட தொகுப்பு நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். ஊர்வலத்திலே கலந்துகொண்டவர்களிலே, எத்துணை பேர், அந்த நூலைப் படித்தவர்களோ, நான் அறியேன்! பலர், நாடாளும் நிலையைக் காங்கிரஸ்கட்சி பெற்ற பிறகு கதர் அணிய ஆரம்பித்தவர்கள் என்பதை நானும் அறிவேன் — ஊர் அறியும். எனவே, அவர்கள், பண்டிதரின் சொற்பொழிவுப் புத்தகத்தை, ஏன் தொட்டிருக்கப்

போகிறார்கள், பாபம்! அதிலும், நான் குறிப்பிடுவது, இந்திய துரைத்தனத் தலைவராக நேருபண்டிதர் அமர்ந்தபிறகு ஆற்றிய உரைகள் அல்ல! அன்றோர் நாள்! விடுதலை இயக்கத்தின் முன்னணி நின்று, இலட்சிய முழக்கமிட்ட நாட்களில்! "கனவு காண்கிறான் இந்தச் சீமான் மகன்! கற்றதைக் கதைக்கிறான்! கவைக்குதவாதன் பேசுகிறான்! பரந்த சாம்ராஜ்யத்துக்கு அதிபனாக உள்ள வெள்ளையனைப் 'பயமறியாப் பருவம்' காரணமாக எதிர்க்கிறான்—நடக்கிற காரியமா இது?"—என்று கண் சிமிட்டியபடி, கேலிப் புன்னகை தவழ, 'மேதைகளும்', 'அனுபவக் களஞ்சியங்களும்', பேசிக்கொண்டிருந்த நாட்கள்! அந்த நாட்களில், பண்டிதர் பேசிய வற்றினைப் படித்துக்கொண்டிருந்தேன்—இன்று கிடைத்த அரசியல் செல்வாக்கைச் சுவைத்தபடி, தேசியத் தோழர்கள், உரத்த குரலிலே முழக்கம் எழுப்பிக்கொண்டு, ஊர்வலம் வந்தபோது. எப்படிப்பட்ட நேரு தெரிந்தார் என்கிறாய், தம்பி! எழுச்சியூட்டும் நேரு! தளைகளைப் பொடிப் பொடியாக்கி விடவேண்டும் என்ற துடிப்பினை எவரும் கொள்ளத்தக்க வீரம் ஊட்டும் பேச்சாளர்! அச்சம், தயை, தாட்சணியம், அருகே நெருங்கமுடியாத நிலையினர்! மாற்றானிடம் மண்டியிடுபவன், மாபெரும் துரோகி! பேரம் பேசுபவன் கோழை! குழைபவன், கோமாளி! திகைத்துக் கிடப்பவன், உருவில் மட்டுமே மனிதன்! —என்று, பண்டிதர் நாடெங்கும் இடிமுழக்கமெனக் குரல் கொடுத்துச், சோர்ந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பிப், படை திரட்டிக்கொண்டு வந்த நாட்களிலே, அவர் பேசியவை, இன்றும், என்றென்றும், விடுதலைக் கிளர்ச்சியிலே, தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள, எவருக்கும் வீர உணர்ச்சியை ஊட்ட வல்லவை!!

"ஆனாலும்"—"என்ன செய்வது" "இப்போதைக்கு இதுதான்"—இயன்ற அளவு தானே''—படிப்படியாக''—என்ற சொற்கள் பேச்சிலே இடம் பெறாத நாட்களைக் குறிப்பிடுகிறேன். உலைக்களத்திலிருந்து பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலையில் வெளியே எடுக்கப்படும் இரும்புக் கம்பியைப் பார்த்திருப்பாயே, தம்பி! அந்த நேரு!! ஆமாம்! இப்போது உள்ள பட்டுக் குஞ்சம் கட்டப்பட்டுப் பளபளப்பான உறையில் இடப்பட்டுள்ள உடைவாள் போன்ற நேரு அல்ல! சந்தனப் பொதிகையில் சிந்துபாடி விந்தைகள் செய்திடும் பூங்காற்று! மின்சார விசிறிதரும் காற்று அல்ல!! மரத்திலே பழுத்து, காற்றுக்கு ஆடிடும் கனி! கீழே விழுந்து, ஒரு பக்கம் கறுத்துப் போன நிலையிலே உள்ள பழம் அல்ல! 'பாரதத்தை'க் கட்டிக்

காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப், பலரும் பரிவு காட்டிப் பக்கம் நின்று துணை புரியவேண்டும் என்ற முறையைத் துணைகொண்டு, இலட்சியத்தைக் குறைத்தும், மறைத்தும், தேய்த்தும் உருக்குலையச் செய்துவிட்ட நிலைக்குத் தம்மைத் தாமே துரத்திக்கொண்ட துரைத்தனத் தலைவரின் பேச்சு, அல்ல—அதிலே தயக்கம், தடுமாற்றம், முரண்பாடு, முணு முணுப்பு, மிரட்டல் என்பவைகள் கலந்துவிட்டன!

தொடுத்த கணை 'விர்'ரெனப் பாய்கிறதல்லவா! பாயும் அம்பு! நான் குறிப்பிடும் நேரு!!

குறி தவறிக் கீழே வீழ்ந்து கிடக்கும் அம்பு போன்றுள்ள நிலையினராகிவிட்ட நேரு அல்ல!!

ஊர்வலத்தினர், உலக நாடுகளிடம் கடன் வாங்கவல்ல, உள்நாட்டிலே தேர்தல் வெற்றி பெற்றுத் தரத்தக்க, எதிர்க் கட்சிகளை அழித்தொழித்திடும் ஆற்றலைக் காட்டி நிற்கும், நேருவின் புகழ் பாடிக்கொண்டு சென்றனர். நானோ 'பழுதுபடாத இரத்தினமாக' இருந்த நாட்களில் அவர் பேசிய வற்றைப் படித்துக்கொண்டிருந்தேன். அவர்களோ அடுத்து வரஇருக்கும் தேர்தலை எண்ணிக்கொண்டு, நேருவை வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

வழக்குமன்றத்திலே முழக்கம், வாலிபர் மாநாட்டிலே பேச்சு, காங்கிரஸ் மாநாடுகளிலே பேருரை, பத்திரிகை நிருபர் களிடம் விளக்கம். இவ்வண்ணம் வடிவங்கள் பல உள; ஆனால் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பது, வீரஉணர்ச்சி, செயலாற்ற வேண்டுமென்ற துடிப்பு, இலட்சியம் வெற்றிபெற்றே தீரும் என்ற திடமான நம்பிக்கை, மக்கள் திரண்டெழுந்துவிட்டனர் என்பதைக் கண்டதால் ஏற்பட்ட களிப்பு!

வாதாடுவதற்காக, நான் வழக்குமன்றத்திலே நிற்கவில்லை! என் நாடு விடுதலை பெறவேண்டும் என்பதற்கு நான் வாதாடவா வேண்டும்!! பொருள் இல்லை அதற்கு.

ஏதேதோ. செக்ஷன்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் செய்த குற்றங்கள் என்பதாக; நான் ஒரே ஒரு குற்றம்தான் செய்திருக்கிறேன்—தொடர்ந்து செய்து கொண்டு வருவதாகவும் இருக்கிறேன்; என் நாட்டை அந்நியன் பிடியிலிருந்து மீட்பதற்காகப் போராடுவது. அது குற்றம் என்றால், நான் குற்றவாளி! சந்தேகமின்றி!!

உங்கள் சட்டப்படி!! ஆனால் அதனை நான் செய்யா திருந்தால், நான், என் நாட்டுக்கு, மக்களுக்கு, மாபெருந் துரோகியாவேன்! அதனை அறிந்தே அடிமைத்தனத்தை எதிர்க்கும் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறேன்! சட்டம் அதைக் குற்றம் என்று கூறுகிறதா? கூறட்டும்! நீங்கள் காட்டும் சட்டத்தைவிட, மேலான சட்டம் ஒன்றுக்கு நான் கட்டுப்பட்டவன்! அது, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டாகவேண்டிய கடமை!

இங்கு, சட்டங்களை அலசுவார்கள்; ஆராய்வார்கள், மறுப்புகள், குறுக்குக் கேள்விகள் கிளம்பும். அறிவேன். ஆனால், நியாயம் பெற இது அல்ல இடம் என்பதை அறிந்திருக்கிறேன். வழக்கு மன்றத் தலைவரிடம் மதிப்புக் குறைவு அல்ல—இந்த வழக்குமன்றம், சட்டம் இவை யாவும், என் நாட்டை அடிமைப்படுத்திவிட்டுள்ள அந்நியனின் கைப்பாவைகள்! எடுபிடிகள்! ஏவலர்கள்! இங்கு, நியாயம் எப்படிக் கிடைக்கும்? எதிர்பார்க்கத்தான் முடியுமா?

தண்டனை தாருங்கள்! தாராளமாக! நீண்டகாலத் தண்டனையாக!! விடுதலைப் போரில் ஈடுபடுபவனுக்கு அதனினும் மேலான பேறு இல்லை; அதனினும் மேலான மகிழ்ச்சி தரவல்லது—ஒரு சமயம், விடுதலைப் போரிலே மடிவது, அல்லது விடுதலை பெறுவது என்பதன்றி—வேறு எதுவாகவும் இருக்க முடியதல்லவா?

சிறையில் தள்ளுங்கள் என்னை! என் ஆருயிர்த் தோழர்கள், பெருமதிப்புக்குரியோர், சிறையில் உள்ளனர்; நான் வெளியில் இருக்கிறேன்; இதுதான் தாங்கமுடியாத வேதனை! என்னை, என் தோழர்கள் உள்ள இடத்துக்கு அனுப்புங்கள்!!

இந்த நாடே பெரிய சிறைக்கூடம்! இதிலே உள்ளே சென்றால்தான சிறை! அளவுதான், பெரிது, சிறிது! நிலைமையில் வித்தியாசம் இல்லை! தண்டனை தரக் கூடியுள்ள இடத்தில், வாதாடிக் காலங் கழிப்பானேன்! கொடுப்ப தைச் சற்றுக் கடினமானதாகக் கொடுங்கள்!!

தம்பி! வழக்கறிஞர்களிலேயே மிகக் கீர்த்தி வாய்ந்தவர், நிரம்ப வருமானம் உடையவர், வாழ்க்கையில் இன்பம் காண்பவர்; அரண்மனை போன்ற வீட்டை உடையவர்; ஆள்

அம்பு ஏராளம்; நிலபுலம் நிறைய; ஊரிலே செல்வாக்கு; இவ்வளவும் பெற்றுத் திகழ்ந்த மோதிலால் நேருவின் திருக்குமாரர், பல ஆண்டுகள் இங்கிலாந்திலே படித்துப் பட்டம் பெற்றவர், இதுபோல, வழக்குமன்றம் நின்று முழக்க மிடக் கேட்பவர்கள், எழுச்சிப் பிழம்பாகிவிடுவரன்றோ! ஆமாம்! அதற்குத்தானே அவரும் அவ்விதம் பேசினார்—வழக்குமன்றத்தினருக்காகவா அந்தப் பேச்சு—நாட்டு விடுதலை வீரர்களுக்காக!!

நேருபண்டிதர், உலகிலே பல நாடுகள் விடுதலை பெற நடத்திய, வீரக்காதைகளை, காப்பியங்களை நன்கு கற்றுணர்ந் தவர்—விடுதலைப்போர் நடத்தியவர்களில் சிலரைக்கண்டும் பேசியவர்— விடுதலைப் போரிலே வீழ்ந்துபட்டவர்களின் கல்லறையின்மீது, விடுதலை பெற்ற மக்கள், கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தும், உள்ளமுருக்கும் காட்சிகளைக் கண்டவர் —எனவே, அவருக்கு, வழக்குமன்றத்திலே நிற்கும்போது, தம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள், சட்டப்புத்தகத்திலே, அவைகளுக்காகத் தரப்பட்டுள்ள விளக்கங்கள், எனும் இவை அல்ல, நிச்சயமாக. விடுதலைக்காகப் பாடுபட்டவர்களின் அணிவகுப்புத்தான் தெரிந்திருக்கும். நான் கண்டேனே, கோலாகலமாகக் கொடி ஏந்திச் சென்றவர்கள், அந்த அணிவகுப்பிலே, மருந்துக்குக்கூட அப்படிப்பட்ட, விடுதலைப் போர்புரிந்த மாண்பினர், கிடையாது! ஆகவேதான், மிக உரத்த குரலிலே முழக்க மெழுப்பினர்! தம்பி! குயிலுக்கு முடிகிறதா, காக்கை போலக் கரைய!! இனிமை என்று எண்ணிக்கொண்டு, வலிவற்ற குரலெழுப்புகிறது! காக்கை அப்படியா! காதைக் குடைந்தெடுத்து விடுகிறதல்லவா? உள்ளபடி, விடுதலைப் போரிலே ஈடுபட்டுக் களம் நின்று, தாக்குதலுக்கு ஆளாகித் தழும்பேறப் பெற்றவர்கள், அன்று பேசக்கூட இயலாதபடி, கண்கள் களிப்புக் கவிதை பாடிடும் நிலையில் இருப்பர். கட்டித் தங்கம், பூமிக்கடியில்தானே தூங்கிக்கொண்டிருக்கிறது! சிறு தகரத் துண்டுகள், கண்களைப் பறித்துவிடும் விதமான, ஒளி கிளப்பிக் கொண்டல்லவா உள்ளன—வெயில் வேளையில்! கடலுக்கு அடியில் அல்லவா முத்து உறங்குகிறது! கடலோர மணலில், குவியல் குவியலாக உள்ளவை? வெறும் கிளிஞ்சல்கள்!!

"விடுதலை பெற்றோம், விழி பெற்றோம்" என்றார் ஓர் பேரறிவாளர்! ஒரு நாட்டின் எழில், ஏற்றம், வளம், வாழ்வு, யாவும், வேற்று நாட்டானிடம் நாடு சிக்கிக் கிடக்கும்போது,

மங்கிப்போகிறது. நமது நாடு ஏழை நாடு; வளமற்றது, வாழவைக்கும் வல்லமை பெற்றது அல்ல, என்று நாமே எண்ணும்விதமான, புத்தித் தடுமாற்றத்தைக் கொடுத்து விடுகிறது, அடிமைத்தனம்; நாட்டிலே செல்வம் இருக்கும், நாட்டவர் கண்களுக்குத் தெரியாது! வயலில் வளம் இருக்கும்! பெற்றிட வழி தெரியாது! நாட்டுக்குப் புகழ்மிக்க வரலாறு இருக்கும், படித்திட வாய்ப்பு இருக்காது! கண்ணுக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்! நம்மை நாமே ஆண்டுகொள்ள முடியாதவர்கள்—நம்மை ஆள நம்மைவிட வலிவுமிக்கவர்கள், அறிவுமிக்கவர்கள், அனுபவமிக்கவர்கள் வந்திருக்கிறார்கள். எப்படி ஆள்வது என்பது அவர்கட்குத் தெரியும்! ஆளும் பொறுப்பை நாம் அவர்களிடம் விட்டு விட்டு, ஆடுமாடுகளை மேய்த்திடலாம், காடுமேடு திருத்திடலாம், கைகட்டிப் பிழைத்திடலாம், கடைகண்ணி வைத்திடலாம், கால் வயிற்றுக்குக் கிடைத்தாலும், கந்தா! முருகா! என்று பஜனை செய்தபடி இருந்து, மாயாபந்தம் விடுபட்டு, மகேசன் அடி சேர்ந்துவிடலாம். அது வரையில் இந்தக் 'கட்டை' நடமாடும் இடம், இந்த உலகம்—நாடு—வீடு!—என்று வேதாந்தம் பேசிடுவர் ம்க்கள்—அடிமைப் பிடியில் இருக்கும் காலை! அவர் கட்கு, விழி இல்லை—நாட்டைக்காண, நல்வழிகாண! அதனால் தான் பேரறிவாளர் சொன்னார், "விடுதலை பெற்றோர், விழி பெற்றோர்!" என்று.

ஊர்வலத்திலே சென்றவர்கள், அந்தவிதமான விழி பெற்றவர்கள் அல்ல! விடுதலை பெற்றுத் தந்தவர்களின் முகாமிலே நமக்கு இடம் கிடைத்துவிட்டது! அவர்கள் ஈட்டியுள்ள செல்வாக்கு, நமக்குப் பயன்பட வழி கிடைத்து விட்டது! அவர்கள் பெற்றுள்ள வடுக்களைக் காணும் மக்கள், நெஞ்சம் நெக்குருக நிற்கிறார்கள்! உமது கட்டளைப் படி நடந்து கொள்கிறோம் என்று உள்ளம் உருகிக் கூறுகிறார்கள்! நாடு, மீட்டுத் தந்தவர்களுக்கு, நன்றிகாட்டுவதும், அன்புக் காணிக்கை செலுத்துவதும், நமது தலையாய கடமை என்ற உணர்வு கொண்டவர்களாக மக்கள் இருப்பது அறிந்து, இந்தப் பொன்னான வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள் வோம் என்ற நோக்குடன், விடுதலைப்போர் நடாத்தியவர்களின் முகாமுக்கு, தங்கக் கூடாரம் அமைத்துத் தருகிறோம், தர்பார் மண்டபம் கட்டிக்கொடுக்கிறோம், வெற்றிவிழா நடத்து கிறோம், விருந்துவைபவம் ஏற்பாடு செய்கிறோம், இசை நிகழ்ச்சியும் நாட்டியங்களும் களிப்பூட்டும் விதமானவைகளாக இருப்பது எமது பொறுப்பு, நீவிர் நடமாடும் பாதையில்

நறுமண மலர் தூவுகிறோம்; குளித்திடப் பன்னீர்வேண்டுமா? உடுத்திடப் பட்டுப் பட்டாடை தேவையா? பூண்டிட, அணிகள் வேண்டுமா? கொடுக்கக் காத்துக்கொண்டிருக் கிறோம்! கோலாகலமாக விழா நடத்திக் காட்டுகிறோம்! கண்டு களியுங்கள்—காதுகுளிர வாழ்த்துகிறோம், கேட்டு இன்புறுங்கள்!—என்றெல்லாம் பேசிப், பாசம்காட்டி, நேசம் பெற்றால், கிடைக்கக்கூடிய, 'பசையும் ருசியும்' விழியில் படுகிறது—மனதிலே ஆசை அலைமோதுகிறது! அந்தக் கொந்தளிப்புத்தான், உரத்தகுரல் முழக்கமாகிறது! கள்தானே தம்பி! பொங்கி வழிகிறது! இளநீர்? அப்படி இல்லையல்லவா? உற்றுப்பார்த்தால் தெரியும், வெண்ணெயைவிடச் சுண்ணும்பு, பளபளப்பான வெண்மை நிறம் காட்டுகிறது!

நான் படித்துக்கொண்டிருந்த ஏடு, பிழைக்கத் தெரிந்த வர்கள் கட்டித்தழுவி, உச்சிமோந்து முத்தமிட்டுக், கண்ணே! கற்பகமே! கலிதீர்க்கவந்தவனே! என்று கொஞ்சிடும் நிலையைக் காங்கிரஸ் பெற்ற நாட்களிலே, பேசப்பட்டவைகள் அல்ல; இது என்ன வீண் வேலை! தலைகீழாக நின்றாலும் இவர்களின் எண்ணம் ஈடேறாதே! உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? வீணாக உதைபட்டுச் சாகிறார்கள்! பிடிபட்டு வதைபடுகிறார்கள்! ஆற்றல் இல்லாமலா, அவ்வளவு தொலைவிலிருந்து, இங்குவந்து, நம்மை அடக்கி ஆளமுடிகிறது வெள்ளையரால்! படைகொண்ட முடிமன்னர்களெல்லாம், அவனைப் பகைத்துக்கொண்டு, பொடிப் பொடியாகிப் போயினர்! கோட்டைகளெல்லாம் தரை மட்டமாகிவிட்டன; புல்முளைத்துவிட்டன! தோள்வலியும் வாள்வலியும் கொண் டோர் யாம்! தொடுத்திடுவோம் கணைகள் பல, எதிரிகள் சிரம் கொய்திட! என்று வீரம் பேசியோரெல்லாம், வீழ்ந்தடித்து ஓடினார்கள், அவன் 'வேட்டு'க் கிளப்பியதும். கொச்சி திருவிதாங்கூரும், கோலமிகு மைசூரும், ஹைதராபாத்தோடு, அழகுமிகு ஜெய்ப்பூரும், போபாலும், பிகானிரும், போர்ப் புலிகள் நிரம்பிய பேரரசாம் மராட்டியமும், விருதுப் பெயர் களையே விண்முட்டும் அளவுபெற்ற எத்தனையோ அரசுகளும், எதைக்காட்டி வருவனவாம்? எதிர்த்தார் பிழைத்ததில்லை, தொழுதார் வாழ்ந்திடலாம், எனும் நிலையை யன்றோ! களம் நின்று கடும்போரிட்டு, வெற்றி பல பெற்று, வீரமரபினர் என விருதுபெற்றவர்கள் வீழ்ந்துபட்டனர்; இவர்கள் மேடை அதிரப்பேசிக் காணப்போவது என்ன? சிறை! சித்திரவதை! தூக்குமேடை! இவைதாமே! இஃது அறியாமல், சுயராஜ்யம் எமது பிறப்புரிமை என்று சுலோகம் பாடுகிறார்களே!!

பாய்ந்துவரும் வெள்ளத்தில் படகேறிச் செல்வதோ? சீறிவரும் வேங்கையைச் சிறுகோலால் தாக்குவதோ? விரண்டோர் வேழம்வந்தால், தடம்படுத்துத் தடுப்பதோ? கடற்போரில் வல்லவர்கள்—தரைப்படையில் மிக்கவர்கள்—தந்திரம் அறிந்த வர்கள்—போர் யந்திரம் வைத்துள்ளவர்கள்! இவர்களை எதிர்த்து நிற்க இயலுமோ எவராலும்?—என்றெல்லாம், பரிதாபம் காட்டியும், பரிகாசம் பேசியும், பாமரர் மட்டுமல்ல, படித்தோரும், துச்சமெனக் காங்கிரசைக் கருதிய நாட்களில், அதன் சார்பில் நின்று, பண்டிதர் பேசிய பேருரைகள் கொண்ட ஏடு நான் படித்தது.

இன்று பண்டித நேருவின் ஒரு சொல், சிலரைக் கோடிக் கணக்கான பணம் பெறவைக்கும் ஆற்றல் படைத்தது. எடுத்துக்காட்டுக்கு, இனி எவரும் அரிசிச் சாதம் சாப்பிடக் கூடாது என்று அவர் கட்டளையிட்டால், கோதுமை மண்டலத்து வணிகக் கோட்டம் கோடீஸ்வரர்கள் கொலுவிருக்கும் இடமாகிவிடும்.

அன்று பண்டிதரின் பேச்சு, எத்தனையோ இளைஞர்களை இன்ப வாழ்வை இழந்துவிடச் செய்தது.

அந்த நாள் நேரு, அடிமைத்தனத்தைப் போக்கிக் கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும் என்பதற்காக எடுத்துக் காட்டிய காரணங்களை, அவர் வீர உணர்ச்சி பொங்கிடத் தக்க விதத்தில் விளக்கிய வகையைப் படித்துக்கொண்டிருந்த போது—காங்கிரஸ் நண்பர்கள் திடுக்கிடக் கூடாது—நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே எனக்கு முன்னிலும் பன்மடங்கு ஆர்வம் வளர்ந்தது!

"எவ்வளவு பெரிய தலைவர் எமது நேரு! எத்துணை வீர உரைகள் ஆற்றியவர்! அணி வகுப்புகள் நடாத்தியவர்! ஆங்கில ஏகாதிபத்தியத்தை அதிர அடித்தவர்! சிறைக்கஞ்சாச் சிங்கம்! என்பதை அவர் பற்றிய ஏடு படித்துத் தெளிவாக அறிந்துகொண்ட பிறகுமா. உனக்கு, அவரை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தத் தோன்றுகிறது! பித்தமோ உனக்கு! உலக வல்லரசுகளிலே முன்னணி உள்ளது பிரிட்டன். அந்தப் பேரரசே, எமது நேருவின் வீரத்தின் முன்பு தலைகாட்ட முடியாமல் ஓடோடிச் சென்றுவிட்டது. பேதையே, அதை எல்லாம் படித்தேன் என்றும் பேசுகிறாய். வீரம் கொந்தளிக்கும் பேச்சு என்கிறாய்! சொல்லிவிட்டு, நீ கிளம்புகிறாய் முனைபோன கத்தியும், மூளியான கேடயமும் தூக்கிக்கொண்டு, புண்ணான

உடல் கொண்டோன், கண்போன குதிரை ஏறிக் களம் செல்லும் கதைபோல; நீ எதிர்க்கிறாய், எமது நேரு அரசை! அதைப் படித்தேன் இதைப் படித்தேன் என்று கூறுகிறாய்; அறிவு பெறாமல், எதைப் படித்துத்தான் என்ன பலன்? நேரு பண்டிதரின் அருமை பெருமை அறியாமல், அவராற்றிய அருஞ்செயல்கள் தெரியாமல், அவரை எதிர்க்கக் கிளம்பினால், அப்படிப்பட்டவனை, 'அவன் அறியமாட்டான், அந்த அஞ்சா நெஞ்சுடை ஆற்றலரசின் வீரத்தை,' என்று எண்ணிப், பரிதாபப்படலாம். நீயோ, அதை நான் அறிந்திருக்கிறேன் என்கிறாய்—அறிந்தும் எதிர்க்கத் துணிகிறாயே! இது ஏமாளித் தனம் மட்டுமல்லவே—முழுக்க முழுக்க முட்டாள்தனமல்லவா? —என்று காங்கிரசாருக்குக் கேட்கத் தோன்றும். சிலர் இதுபோலப் பேசவும் செய்கிறார்கள். பாடக்கூடச் செய்கிறார்கள்.

பாவம், அவர்கள், பண்டித நேருவின் வல்லமைக்கு நான் அறைகூவல் விடுவதாக எண்ணிக்கொண்டு, அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

அவர்கள், பண்டித நேருவின் வலிவை மட்டுமே நம்பிப் பிழைத்துத் தீரவேண்டியவர்களாக இருப்பதால், அவருடைய வல்லமையை எவரேனும் மதிக்காவிட்டால், மருளுகிறார்கள்—எதிர்க்கத் துணிந்தால், திகைக்கிறார்கள்.

தம்பி! மிகப் பழங்காலத்தில் அல்ல, இரண்டொரு நூற்றாண்டுக்கு முன்பு வரையில்கூட, ஐரோப்பாக் கண்டத்து நாடுகளில், காதல் விவகாரச் சண்டையிலிருந்து, நாட்டுப் பிரச்சினைபற்றி எழும் சச்சரவு வரையில், ஒருவருக்கொருவர், வாட்போர் புரிந்துகொள்வதன்மூலம் தீர்த்துக்கொள்வார்கள். அது மிகவும் போற்றப்பட்டு வந்த முறையாகவும் கொள்ளப் பட்டது சில நாடுகளில். அந்த முறையைச் சில நாடுகளில் தடுக்கச் சட்டம் இயற்றினர்; இயற்றியும் அந்த முறையைச் சிலர் துணிந்து மேற் கொண்டனர்.

அதுபோன்றது அல்ல, இன்று, நடைபெறும் விடுதலைப் போராட்டங்கள்.

எனவே, இதிலே, தனி மனிதர்களின் தாக்கும் சக்தி, தாங்கும் சக்தி, போர்த் திறமை, போர்க் கருவிகள், என்பவைகளுக்கு இடமில்லை.

எவர் கருத்துக்கு மக்களிடம் ஆதரவு திரண்டு வருகிறது; மக்கள் எவர் பக்கம் தீர்ப்பளிக்கிறார்கள் என்பதுதான், இதிலுள்ள பிரச்சினை.

இதனை அறியாமல், சில காங்கிரசார், எமது நேருவையா எதிர்க்கிறாய்? என்று எக்காளமிட்டுத் தமது குறை அறிவைக் கொட்டிக் காட்டுகிறார்கள். என் ஆழ்ந்த அனுதாபம் அவர்கட்கு.

நமது போராட்டம், ஒரு முறையை எதிர்த்து; நேரு பண்டிதரை எதிர்த்து அல்ல.

நேரு பண்டிதர் தமது ஆற்றலை, எந்த முறைக்குப் பக்க பலமாக்கிக் காப்பாற்றி வருகிறாரோ, அந்த முறைமீது நமக்கு வெறுப்பு; அதைக் கண்டிக்கிறோம்; எதிர்க்கிறோம்; கிளர்ச்சி நடாத்துகிறோம்; நேரு பண்டிதரெனும் தனி மனிதரிடம், மதிப்புக் குறைவுமில்லை; அவரை மட்டமாக மதிப்பிட நாம் மதியிலியும் அல்ல. மாறாக, நேரு பண்டிதரின், விடுதலை ஆர்வம், நமக்கு அவரிடம் பெருமதிப்பை ஏற்படுத்துகிறது; ஆனால், அதனினும் அதிக அளவு மதிப்பு, விடுதலை ஆர்வத்தின்மீது ஏற்படுகிறது!

அவர் காட்டிய ஆர்வம், கொண்ட உறுதி, ஊட்டிய வீரம், பட்ட கஷ்ட நஷ்டம், ஏற்றுக்கொண்ட தியாகம், ஈடுகொடுத்த இன்னல்கள், எதிர்நீச்சலிட்டது, எதிர்ப்புக் கஞ்சாமை, சிறையில் வாடியது, சித்திரவதைக்கும் அஞ்சாமல் நின்றது. அணி திரட்டியது, பாசறை அமைத்தது, படை நடாத்தியது,—இவைகளை, நான் தொகுப்பு நூலில் படித்த போது, இப்படிப்பட்ட நேரு அல்லவா, திராவிடத்தை அடக்கி வைத்திருக்கிறார், என்ற திகைப்பு அல்ல; இப்படி அல்லவா, விடுதலைக்குப் பாடுபடவேண்டும்! இவர்போலல்லவா ஓய்வின்றி உழைக்கவேண்டும்! இவர் பேச்சிலல்லவா, விடுதலையின் ஆர்வம் மேலும் விளக்கமாகிறது! இவரே இவ்வளவு இன்னலை ஏற்றுக் கொண்டாரென்றால், நாம் காணும் இன்னல், மிகச் சாதாரண மன்றோ! இவரே இத்துணை காலம், பலப்பல பாடுபட்டுச், சோர்வு சில வேளை, துயரம் பல நேரம், தோல்வி துளைத்திடும் நிலை சில சமயம், எனும் பல்வேறு நிலைகளைக் கண்டு, மனம் உடையாமல் நின்று, தொடர்ந்து பணியாற்றித்தான், வெற்றி கண்டாரென்றால், நாம், இதனைவிட அதிகமான அளவல்லவா பாடுபட்டாக வேண்டும்—என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது.

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டதாம்! கான மயிலாடக் கண்ட வான்கோழியும் சிறகு விரித்ததாம் ஆட! அதுபோல இந்த அண்ணாத்துரை, நேருவின் பேராற்றலையும், வீரதீரச்செயலையும் ஏட்டிலே படித்தானும், உடனே தானும் அதுபோலச் செய்யப் போவதாகப் பிதற்றுகிறான்! என்னே இவன் பேதைமை! — என்று பேசுவர், காங்கிரசார். எளிதாகப் பேச இயலும்; பேசும்போது, சுவையாகவும் இருக்கும்,' தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா, அதனால், பயனும் கிடைக்கும். பெற்று இன்புறட்டும். எனக்கு நட்டமில்லை.

ஆனால், இன்று நம்மைப்பற்றி இவர்கள் இதுபோல ஏளனம் பேசுகிறார்களே, தம்பி! இதேபோலத்தான், நேரு உள்ளிட்ட காங்கிரசார் விடுதலைக் கிளர்ச்சி நடாத்தியபோது, பிரிட்டனில் இருந்த ஆணவக்காரர்கள், அயர்லாந்து நாட்டிலே, திவேலரா கட்சியினர் நடத்திய போராட்ட முறைகளை ஏடுகளிலே படித்துவிட்டு, இந்தக் 'கைராட்டைகள், ஆட்டம் போடுகின்றன! பட்டினி கிடத்தலிலேயிருந்து கோர்ட்டை அவமதிப்பது வரையில், ஐயர்லாந்து முறையின் மறுபதிப்பு! சொந்தப் புத்தி துளியும் கிடையாது. இவர்களுக்கென ஒரு தனி முறையும் இல்லை! எல்லாம் இரவல் சரக்கு! எளிய வாழ்க்கை; ஏழையுடன் ஏழையாக இருப்பது, தன் துணியைத் தானே துவைத்துக் கொள்வது எனும் காந்தி முறைகூட, ரஷிய நாட்டு டால்ஸ்டாய் தத்துவம்; அவர் சொல்லிக் கொடுத்த பாடம்!'' என்று பேசினர்; ஏளனம் செய்தனர்.

முன் ஏர் போனபடி பின் ஏர் போகிறது—என்பார்கள் அல்லவா? அதுபோல, முன்பு, வெள்ளை வெறியர் பேசியதை இன்று காங்கிரஸ் கண்ணியவான்கள் பேசுகின்றனர். இதைப் புரிந்துகொண்டால், தம்பி! நமக்குக் காங்கிரசாரிடம் கோபம் எழாது; மாறாக, அவர்களே உணரும் வண்ணம், நாம் நமது இலட்சியத்துக்காகப் பாடுபடவேண்டும், இன்னல்கள் அடுக்கடுக்காக வந்தாலும், தளரக்கூடாது; இன்னுயிர் போவதேனும், இலட்சியத்தை இழக்கக் கூடாது என்ற உறுதியை, எழுச்சியைப் பெறவேண்டும் என்று தோன்றும். தரவேண்டிய விலைகொடுத்துப், பெறவேண்டிய விடுதலையைப் பெற்றுக் காட்டினால், இன்று ஏசுவோரின் கண்ணீர் நம்மை வாழ்த்தும் நிலையில், வழியும்!

ஊர்வலம் போகிறார்கள், பாவம், பெரும்பாலானவர்கள், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடாதவர்கள்.

உடன் வரும் போலீஸ் அதிகாரிகளைக் காணும்போதே, அவர்களுக்குப் பெருமை, பூரிப்பு! மார்பை நிமிர்த்தி நடக்கிறார்கள்!

முன்பு? ஓடஓட அடித்து விரட்டினார்களே போலீசார்— அந்த நாட்களில், இதோ இன்று ஊர்வலத்திலே கலந்து கொள்ளும் 'பிரமுகர்கள்'—வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தோட்டக் கச்சேரி நடத்திக்கொண்டும், "வேலை வெட்டி இல்லாததுகள்! விவரமறியாததுகள்! நத்தம் புறம்போக்கு! நாலணா எட்டணா!'' என்றெல்லாம், காங்கிரஸ் தொண்டர்களை ஏசிக்கொண்டு இருந்தவர்கள். இவர்கள், 'விடுதலை விழா' கொண்டாடும் குழுவினராகிவிட்டனர்! இவர்களைக் கொண்டு 'விடுதலை விழா' நாடத்திக்கொள்வதிலே, உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள் வேதனைப்படுவர், வெட்கப்படுவர்! ஆனால், அத்தகைய உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள், பலபேர், இன்று இல்லை; மறைந்து போயினர்; பலர் வேறு வேறு கட்சியினராயினர்; இன்னும் சிலர், இந்தத் தலைகீழ் மாற்றம் கண்டு, திகைத்துப்போயுள்ளனர்; பேசவும் இயலாதவராக!

பர்தோலி வரிகொடா இயக்கம்! சபர்மதி ஆசிரமம்! நவகாளி யாத்திரை! சௌரி சௌரா! சம்பரான்!—இவைகளுடன் பின்னிக் கிடக்கும் எழுச்சி மிகு நிகழ்ச்சிகளை அறியாதவர் தொகையே ஏராளம் —நான் கண்ட ஊர்வலத்தில் மட்டுமல்ல—தம்பி! ஒவ்வோர் இடத்து ஊர்வலத்திலும்—மொத்தத்திலே இன்றுள்ள காங்கிரசிலே!

காளிங்கமர்த்தனம்! கம்சவதம்! சிசுபால சம்ஹாரம்! கோவர்த்தனத்தைக் குடைபிடித்தது!— என்பவைகளைக் 'கிருஷ்ண லீலா' காலட்சேபத்திலோ, கூத்திலோ மட்டுமே தெரிந்து கொள்கிறார்களல்லவா, மக்கள். ஆனால், அதற்காகக், கிருஷ்ணன், கண்ணன், கோபாலன் எனும் பெயருடையார்களை அழைத்து, வெண்ணெய் தருவார்களா!! அதுபோலத்தான், பர்தோலி, சபர்மதி, சம்பரான், நவகாளி என்பவைகளைப் பற்றி, நான் குத்திக் காட்டுவதால் மானம் பொத்துக்கொண்டு வருகிற நிலையில் சிலர் பேசினாலும், அதற்காக, இன்றுள்ள காங்கிரசாருக்கு ஆதரவு காட்டமாட்டார்கள்—அந்தக் காரணத்துக்காக!

பர்மிட் பெறத் துணை நின்றார்! பஸ் ரூட் வாங்கிக் கொடுத்தார்! பஞ்ச நிவாரணக் கடை கிடைக்கச் செய்தார்! ஏரி மராமத்து காண்ட்ராக்ட் எடுத்துக் கொடுத்தார்! பால் பவுடர் தந்தார்! மந்திரி பக்கத்தில் உட்கார வைத்தார்! பெரியப்பாவிடம் உயிர்! பெரியதனக்காரருக்கு நண்பர்! சத்திரம் ஆறு! சமாராதனை வருடா வருடம்! ஜாதியில் பெரியவர்! ஊரில் பாதி அவருடையது! கடன் கொடுப்பவர் அவரேதான்! கலெக்டர் மகனுக்குப் பெண் தந்தார்!—எனும் இப்படி ஏதாகிலும் காரணங்களுக்காகப், பெரும்பாலான காங்கிரசாருக்கு, ஆதரவு—தேர்தல் காலத்தில்—தரப்படுகிறதே யன்றி, இவர்கள், விடுதலை வாங்கித் தந்தவர்கள்! வீரதீரச் செயலாற்றியவர்கள்! என்று எண்ணி அல்ல. மக்கள் இத்தனை விவரமாகப் பேசமாட்டார்களே தவிர, அவர்கள் விவரம் அறியாதவர்கள் அல்ல!!

ஊர்வலம் செல்வோர், தவறான எண்ணம் கொண்டுள்ளனர்—இவர்களை விடுதலைப்போர் நடாத்திய வெற்றி வீரர்கள் என்று நாம் எண்ணி ஏமாறுவோம் என்று எதிர்பார்க்கிறார்கள்! அத்துடன், இத்தகைய வெற்றி வீரர்களை எதிர்த்து நின்று, நாம் நமது இலட்சியத்தை அடையமுடியாது என்ற அச்சம், நம்மைப் பிடித்து உலுக்கும் என்றும் எண்ணுகிறார்கள்.

இவர்களை, நாம், விடுதலை பெற்றுத்தந்த வீரர்கள் என்று எண்ணி ஏமாறமாட்டோம்—விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாம், காங்கிரஸ் நடத்திய விடுதலைக் கிளர்ச்சிபற்றிய வரலாற்றினைக், காங்கிரசில் ஒட்டிக் கொண்டுவிட்ட இவர்களைப்போல் அல்லாமல், தெளிவாகப் படித்துப் பாடம் பெற்றிருக்கிறோம். மாட்டின் கழுத்திலே கட்டப்பட்ட மணியைக் கொண்டு மாட்டின்விலையை மதிக்கமாட்டார்கள்; அங்கிலையில் மாட்டின் கழுத்து மடிப்பில் ஒட்டிக்கொண்டு கிடக்கும் உணியைக் காட்டி பத்து ரூபாய் சேர்த்துக் கொடு என்று மாட்டுக் குடையான் கேட்டால் கைகொட்டியல்லவா நகைப்பார்கள்! அது போலக் காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவியைக் கண்டே, மயங்க மறுக்கும்போது, ஒட்டிக்கொண்டுள்ள உணி போல, ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறின பிறகு, அதிலே குடிபுகுந்த குணாளர்களைக் கண்டா, மருளப்போகிறோம்? அவர்களுக்குப் பாபம், அப்படி ஒரு நினைப்பு!

இவர்களின் நினைப்பு இதுவென்றால், விடுதலைக் கிளர்ச்சி நடாத்திய அனுபவம் பெற்ற காங்கிரஸ் தலைவர்களோ, தங்களோடு, வீரர் வரிசையே தீர்ந்து போய்விட்டது!

ஆற்றலின் கடைசிச் சொட்டும் தீர்ந்துபோய் விட்டது. விடுதலைக் கிளர்ச்சி என இனி ஒன்று தலைதூக்காது! தலைதூக்க வேண்டிய அவசியமே இல்லை! எவராலும் முடியாது! எவருக்கும் இல்லை அந்த ஆற்றல்!—என்று திடமாக—மிகத்திடமாக நம்புகிறார்கள்.

அவ்வளவு நல்லவர்கள், இவ்வளவு பொல்லாங்கான எண்ணம் கொண்டிருப்பதைக் காணும்போதுதான், நமக்குக் கோபத்துடன் வருத்தமும் பிணைந்து வாட்டுகிறது.

காங்கிரசின் தொண்டர்கள், துணைநாடி வந்துற்ற பிணி போன்றோர், எப்படி, "எமது நேரு பண்டிதரையா எதிர்க்கத் துணிகிறாய்?" என்று கடுங்கோபம் கொண்டு கேட்கிறார்களோ, அதுபோன்றே, விடுதலைக்குப் பாடுபட்டவர்கள், விடுதலையின் அருமை அறிந்தவர்கள், விடுதலை உணர்ச்சி பெற்றுவிட்டவர்கள், எங்ஙனம் எதற்கும் துணிந்தவராவர் என்பதனைத் தெரிந்தவர்கள் எனும் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர்களும், "இதுகளா! நம்மையா! விடுதலையா! போரா!"—என்று கேலி பேசுகிறார்கள். அதைக் காணும்போதுதாம், தம்பி! உள்ளபடி இவர்கள், தமது தத்துவங்களைத் தாமே இகழ்கிறார்களே! இன்றைய நடவடிக்கையால், முன்னாள் செயலால் கிடைக்கும் பெருமைகளுக்கும் இழுக்குத் தேடிக் கொள்கிறார்களே! என்று பரிதாபமாக இருக்கிறது.

வெள்ளையரை, நேரு போன்றோர் எதிர்த்தபோது, அவர்களிடம் இருந்துவந்த, ஆயுதம் என்ன? திடமான நம்பிக்கை! அசைக்கமுடியாத ஆர்வம்! எதையும் தாங்கும் உள்ளம்! வேறு உண்டா? சொத்து நிரம்ப இருந்தது அவர்களிடம்—நம்மைப் போல நடுத்தெரு நாராயணர்கள் அல்ல, அந்த நாள் காங்கிரசார். இன்று காங்கிரசார் ஆகிவிட்டவர்கள்போல, ஊரை அடித்து உலையிலே போடவேண்டிய நிலையினரும் அல்ல. பூர்வீகச் சொத்து! நல்ல வருவாய்! சமூகத்திலே மேலிடம்! படிப்பு! பதவி!—எல்லாம் இருந்தது.

தம்பி! என்றாவது ஒரு நாள், முதன்முதல் காங்கிரசை நடத்த முன்வந்தவர்கள் எவரெவர், அவர்களின் செல்வநிலை, சமூகநிலை என்ன என்பதோடு, வெட்ட வெளியில் கொட்டும் மழையில் கூடி தி. மு. கழகம் துவக்கினோமே, அவர்களுடைய நிலையுடன், ஒப்பிட்டுப் பார். உனக்கே வியப்பாக இருக்கும்,

நாமா, இப்படி ஒரு இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றிவர முடிகிறது, என்று.

செல்வமும் செல்வாக்கும், படிப்பும் பதவியும், சமுகத்தில் உயர்நிலையும் இருந்தன என்றாலும், வெள்ளையரிடம் இருந்து வந்த அதிகார பலம்—ஆள் பலம்—ஆகியவைகளோடு ஒப்பிட்டு பார்க்கும்போது, இவை மிக வலிவற்றவை! எனினும் துணிந்து எதிர்த்து நின்றார்கள்—திட நம்பிக்கையுடன்—வெற்றி நாடி வந்தது.

இந்தப் பாடம், அந்த விடுதலை வரலாறு படிக்கும்போது மிகத் தெளிவாக நமக்குப் புரிகிறது; ஆனால், அந்த வரலாற்றுக்கு உரியவர்களென்று தம்மைக் கூறிக்கொள்பவர்களோ, நாம் ஈடுபட்டுள்ள விடுதலைக் கிளர்ச்சியைத் துச்சமென்று எண்ணுகிறார்கள். ஏன், தம்பி, இது? சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டாயே? அவர்கள், நமது உறுதியைச் சந்தேகிக்கிறார்கள்!! ஆமாம்! முழக்கமெழுப்புகிறாய், திராவிடநாடு திராவிடருக்கே, என்று; ஆனால் கொள்கையிலே உறுதி இருக்கும், கொள்கைக்காக எதையும் இழக்கச் சம்மதிப்பர் எத்துணை இன்னல்களையும் ஏற்றுக்கொள்வர், என்று நான் சொல்வதை, அவர்கள், நம்ப மறுக்கிறார்கள்! விளைவு தெரியாமல் வீம்பு பேசுகிறார்கள்! கனவு காண்கிறார்கள்! கவைக்குதவாதன பேசுகிறார்கள்! பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்! எதிர்ப்புக் கண்டால் இருக்குமிடம் தெரியாமல் ஓடிவிடுவார்கள்! பிடி! அடி! சுடு! என்று உத்தரவு பிறப்பித்தால் போதும், காலடி வீழ்ந்து கதறுவார்கள்! அவர்கள் சுகவாழ்வு விரும்புபவர்கள்! தாமுண்டு, தம் குடும்பம் உண்டு என்று இருப்பவர்கள்! தொழில் செய்யவேண்டும், நிம்மதியாக வாழவேண்டும் என்று எண்ணுபவர்கள்! பொழுதுபோக்கு அரசியல் நடத்துகிறார்கள்! வீரமோ தீரமோ அற்றவர்கள்! வெஞ்சமர் காண அஞ்சுவர்; கொடுஞ் சிறை எனின் ஒளிவர்! கோலோச்சுவோரின் கோபப் பார்வை பட்டால் கருகிச் சாம்பலாவர்!—என்று எண்ணுகிறார்கள்.

உன்னை இகழ்கிறார்கள்; உன் வீரத்தைப் பழிக்கிறார்கள்; உறுதியைச் சந்தேகிக்கிறார்கள்.

என்மீது கோபித்துக்கொள்ளாதே, தம்பி! எனக்கு இல்லை, அவ்விதமான சந்தேகம். நான் நம்புகிறேன்—பரிபூரணமாக நம்புகிறேன். நான் நம்பிக்கை கொள்ள வேறு என்ன இருக்கிறது! என் எண்ணமல்ல, மேலே சொன்னது.

உன்னையும் என்னையும் சேர்த்து, முன்பு விடுதலைக் கிளர்ச்சி நடத்திய காங்கிரசார், சந்தேகிக்கிறார்கள். இவர்களுக்கு, ஒரு விடுதலை இயக்கத்தை நடத்தத் தக்க வீரம் கிடையாது; அதற்கேற்ற தியாகம் புரியும் ஆற்றல் கிடையாது; இலட்சியத்திலேயே அசைக்க முடியாத நம்பிக்கை கிடையாது—என்று எண்ணுகிறார்கள்.

நம்முடைய முயற்சிகளை அவர்கள் கேவலமாகக் கருதி ஏளனம் பேசுவதற்குக் காரணம் இதுதான். நான் உள்ளதை உள்ளபடி உரைத்துவிட்டேன்.

மற்றொன்று, தம்பி! நாம் கொள்கையிலே உறுதி கொண்டவர்கள்தானா, எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள் தானா, எதிர்ப்புக்கு அஞ்சாதவர்கள்தானா, என்பதுபற்றிய சந்தேகம் அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது, தெரிகிறதா? அதையும், நான் மறைக்க விரும்பவில்லை. இரண்டு நிலைமைகள் இதற்குக் காரணம்.

ஒன்று, நம்மிலே மிக முக்கியமானவர்கள் என்றநிலையினர், நம்மைக் காட்டிலும் அடித்துப்பேசிக் கொள்கை பரப்பியோர், அமைச்சர்களை அறைகூவி அழைத்தும், எதிர்ப்பாளர்களை ஏசிப் பாடியும், இழிமொழியால் தாக்கியும் வந்தவர்கள், திடீரெனத் 'திராவிடநாடு கிடைக்காது; விட்டுவிட்டோம்; விட்டு விடுக! இல்லையேல் கெட்டுவிடுவீர்கள்! நீங்களாகக் கெடாவிட்டால், நாங்கள் எதிர்த்துக் கெடுத்துவிடுவோம்' என்றெல்லாம் பேசிடும் கோலம் கண்டதால், காங்கிரஸ் தலைவர்களிலே சிலருக்கு ஒரு நம்பிக்கை—இதுபோலத்தான் மற்றவர்களும், திராவிடநாடு கொள்கையை விட்டுவிடுவார்கள்; இவர்களுக்கு என்றைக்குமே அந்தக் கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்ததில்லை! எந்தக் கொள்கையிலும் நம்பிக்கை கொள்ளக்கூடியவர்களே அல்ல, இவர்கள், என்று எண்ணுகிறார்கள்.

மற்றொன்று, நமது தோழர்களுக்கிடையே, அலுவலர்களாகப் பணியாற்றும் வகையிலே எழும் கசப்புகள், பேதங்கள், இவைகளைக் காணும்போது, காங்கிரஸ் தலைவர்கள் களிப்புடன், பேசிக்கொள்கிறார்கள், "பயல்கள் அடித்துக் கொண்டு மடியப்போகிறதுகள். கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்தால், அதற்காக உயிரையும் கொடுக்க வேண்டுமென்ற உறுதி இருந்தால், இப்படியா, சில்லறை விஷயங்களுக்கெல்லாம் சிண்டுபிடி சண்டை நடக்கும்.

கொள்கையாவது மண்ணுவது! காட்டுக் கூச்சலோடு சரி! காரியமாற்றும் திறம் ஏது! கொள்கையிலே நம்பிக்கை இருந்தால்தானே!" என்று பேசிக்கொள்கிறார்கள்.

தம்பி! இந்த நிலைமை வளரும், பேதமும் பிளவும் அதிகமாகும், கழகம் கலகலத்துப்போகும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நம்புகிறார்கள்.

நம்மிடையே தோன்றிவிடும் சிலபல செயல்கள், அந்தத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையை வளரச் செய்கிறது!

என்ன செய்வான் இந்த அண்ணாத்துரை! தடுத்துப் பார்க்கிறான்—மறுத்துப்பார்க்கிறான்—நிலைமை சீர்படாவிட்டால், என்ன செய்வான்? விட்டுவிட்டு ஓடிவிடுவான்! பார்! பார்! நடக்கப்போவதை!!—என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பேசுவதுகூட எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொள்கையை விட்டுவிட்டுச் சிலர் போய்விட்டதும், கொள்கைக்காகக் கழகமே தவிர, நமது உரிமைகளுக்காக, பெருமைகளுக்காக, இலாபத்துக்காக, அல்லது, அதை யாரோ பெற்றுவிடுகிறார்களோ என்று மோப்பம்பிடித்து முணுமுணுப்பதற்காக அல்ல, என்பதை முற்றிலும் உணராததால் மூண்டுவிடும் சச்சரவுகளும், காங்கிரஸ் தலைவர்களை, மொத்தத்தில் நமது கழகத்தவருக்கே கொள்கையிலே நம்பிக்கை இல்லை, என்ற எண்ணம்கொண்டு பேசச் செய்கிறது.

நான், தம்பி! அவர்களின் தீர்ப்பும் வாதமும் சரியென்று கூறவில்லை.

அவர்கள் அவ்விதம் எண்ணவும், பேசவும், நம்முடைய, நடவடிக்கைகள் சில இடம்கொடுத்துவிடுகின்றன என்பதைத்தான் கூறுகிறேன்.

எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும், ஊரறியும் உலகறியும், காங்கிரஸ் கட்சிக்குள்ளே முளைத்து, வெடித்து, முடைநாற்றம் வீசிக்கொண்டிருக்கும் சச்சரவுகள்.

அமைச்சரவை அமைக்கப்பட்ட ஏழுதிங்களுக்குள், இரண்டாவது முறையாக. குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்! பண்டித நேருவின் சொந்த இராஜ்யத்தில்!

குப்தா அமைத்திருப்பது காங்கிரஸ் மந்திரி சபை.

அதற்கு எதிர்ப்புக் கிளம்புவது, முன்னாள் முதலமைச்சர் சம்பூரணானந்தாவின் ஆதரவாளர்களாக உள்ள காங்கிரஸ் எம். எல். ஏ.க்களிடமிருந்து!

அதனை அவர்கள் திரைமறைவில்கூடச் செய்யவில்லை. சம்பூரணானந்தாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கமலபதி திருபாதி என்பவர் இல்லத்தில் கூடியே பேசுகிறார்கள்—பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

அந்த மாநிலத்திலேயே வெளிவரும், இந்தி—உருது—பத்திரிகைகளிலே, பார்த்தால்தான் தெரியும், குப்தா கோஷ்டியின் குட்டுகளை உடைக்கிறேன் என்று ஒரு பத்திரிகையும், சம்பூர்ணானந்தாவின் செல்வாக்குக்குச் சமாதிகட்டுகிறேன் என்று மற்றோர் பத்திரிகையும், நாராச நடையில் எழுதித் தீர்த்துக்கொள்ளும் விந்தை!

இங்கு நமக்கு வருகிற சேதி, குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிறது, என்ற அளவுதான். அங்கு உள்ள நிலைமையிலே, இது நூற்றில் ஒரு பகுதி.

ஒவ்வொரு நாளும், இரு பிரிவுக் காங்கிரசாரும் முகாம்களில் கூடிப்பேசுவதும், கலகமூட்டுவோர், கலாம் விளைவிப்போர், கைக்கூலி பெறுவோர், கபட நாடகமாடுவோர், கூடிக் குடிகெடுப்போர், மிரட்டிச் சலுகை பெறுவோர், என்பவர்கள் மும்முரமாக வேலை செய்வதும், இவரைப்பற்றிய ஒரு இரகசியம் என் உள்ளங்கையிலே இருக்கிறது என்று ஒருவரும்; அவர் விஷயமாக எனக்குத் தெரிந்ததை அவிழ்த்துவிட்டால், ஊர் நாறும் என்று இன்னொருவர் பேசுவதும்; இதை நீங்களே பேசிக்கொண்டு இருக்கக்கூடாது; ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள்; ஆகையினால், மாற்றுக் கட்சிக்காரரிடம் 'தகவலை'க் கொடுங்கள், அவர்கள் அம்பலப்படுத்தட்டும், ஆசாமி அகப்பட்டுக்கொண்டு விழிக்கட்டும்; நாம், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற பாவனையில் இருந்துவிடலாம் என்று, யூகம் தெரிந்தவர் சொல்லிக்கொடுப்பதுமாக நிலைமை இருக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் மட்டுமல்ல, தம்பி! பல இடங்களிலும்.

ஆனால், அவை குறித்துப் பேச்சு, வெளியே அதிகம் எழாது; மூடி மறைப்பார்கள்; கமிட்டிச் சண்டை என்பார்கள்; இதனால் காங்கிரசுக்கு ஒரு கெடுதியும் வராது என்பார்கள்,

நம்முடைய கழகத்தில் ஒரு சிறு சம்பவம் ஏற்பட்டாலும், பெரிதாக்கிக் காட்டி, ஊர் கூட்டி, குழப்பி, நமது கழகத்தைக் குலைக்க முயற்சி எடுப்பார்கள்; எடுக்கிருர்கள்.

இப்போது, தம்பி! விளக்கமாகிறதல்லவா, ஏன், நம்முடைய விடுதலைக் கிளர்ச்சியை, அந்த விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட கழகத்தை, காங்கிரஸ் தலைவர்கள் துச்சமாக மதிக்கிருர்கள், ஏளனம் செய்கிருர்கள் என்பதற்கான காரணம்.

சொல்லிவிட்டேன். நீ சோகமடைய அல்ல, ஒவ்வொரு வரும் தத்தமது பங்காகக், கழகத்தின் கண்ணியம் நம் ஒவ்வொருவரின் உரிமையைவிடப் பெரிது என்ற போக்கில், நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காக.

ஆனல், இதனல் நமது கழகம் ஒழிந்துபோகும் என்று நம்புவது மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்துப் பல்வேறு இராஜ்ய முதல் மந்திரிகளெல்லாம் கூடிய மாநாட்டில், கனம் காமராஜர், இதனை வெளிப்படையாகவே பேசியிருக்கிருர்— அறிவாய்.

நாட்டைப் பிரிவினை செய்யவேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தி. மு. கழகத்தை, ஒழித்தாக வேண்டும்! அதற்காகக், கழகத்தையே தடுத்துவிடலாமா? அல்லது தனித்தனியாகக் கழகத் தோழர்களைப் பிடித்திழுத்துக் கூண்டிலேற்றிக் கடுமையாகத் தண்டித்து அழிக்கலாமா? என்ன செய்து இந்தப் பிரிவினைச் சக்தியை ஒடுக்குவது என்பதுபற்றிக் கூடிக் கலந்துரையாடினர், முதலமைச்சர்கள்.

அப்போது காமராஜர், தி. மு. கழகத்தின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை; அது தன்னலே அழிந்துவிடும்; இப்போதே, அதிலே ஏகப்பட்ட பிளவு, சண்டை, சச்சரவு! எலக்‌ஷனுக்குப் பிறகு, இருக்கவே இருக்காது. அதைப்பற்றிக் கவனிக்காமலிருந்துவிட்டால், அது, தன்னலே செத்துவிடும் என்று பேசியிருக்கிருர்.

புரிகிறதா, தம்பி! காமராஜர், எதை நம்பிக்கொண்டிருக்கிருர், என்பது. நம்மிடையே பிளவு! நம்மிடையே சண்டை சச்சரவு!?...இதனைத்தான் மலைபோல நம்பிக் கொண்டிருக்கிருர். இதை அறியாமல், குத்திக் கிளறி விடுவதுதான், யாராலுமே முடியாத, அபாரமான ஆற்றல் என்ற எண்ணத்தில் நடந்துகொள்பவர் எவராயினும், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ, காமராஜரின் கரத்தை, கருத்தை வலிவுள்ள தாக்குகிருர்கள் என்றுதான் பொருள்படும்.

தம்பி! காட்டிலே உள்ள புலி, தன் இரையை வேட்டையாடித்தான் பிடித்துத் தின்னும். பலப்பல மைல்கள் வேட்டைக்காக ஓடுமாம், களைப்பு மேலிடுகிற முறையில்! அந்தவிதத்தில், அடித்துத் தின்ருல்தான், அதற்குத் திருப்தி.

பெருஞ் சிறகடித்துப்பறக்கும் கழுகு, இருக்கிறதே அது வேட்டை ஆடாது—துரத்தித் தாக்காது—துளைத்துக் கொல்லாது—ஆடோ மாடோ, கொல்லப்பட்டோ செத்தோ, பிணமாகி, அழுகி, நாற்றம் அடிக்கும் நிலையிலே கிடக்கும்போதுதான், கீழே இறங்கிவந்து, குத்திக் கிளறித் தின்று, பசி தீர்த்துக் கொள்ளும்.

சில முதலமைச்சர்கள் நம்மை வேட்டையாடிக் கொல்லவேண்டும் என்று திட்டம் தருகிருர்கள்.

காமராஜரோ. கழுகு முறையைப் பின்பற்றலாம் என்கிருர்.

வேட்டையாட நினைக்கும் திட்டத்தினர், கழகத்தைத் தடைபோட்டு, ஒழித்துக் கட்டலாம் என்று நினைப்பதும் பேதமை, கழுகாகலாம் என்று கூறும் காமராஜரின் யோசனையும் பலிக்கப் போவதில்லை.

விடுதலை இயக்கம், தடையால், படையால், அழிவதில்லை!

விடுதலை இயக்கம் அழிந்துவிட்டது, அழித்து விட்டோம், என்று எண்ணி எதேச்சாதிகாரிகள் எக்காளமிடலாம். ஆனல், அது புதைகுழியைப் பிளந்துகொண்டு, மீண்டும் மீண்டும் எழும்!

சில ஆறுகள் ஓடிக்கொண்டே வருமாம்; இடையிலே காணுமலே போய்விடுமாம்! பிறகோ நெடுந் தொலைவில் வேருேர் இடத்திலே அதே ஆறு கிளம்பி ஓடிவருமாம்! தம்பி! காணுமற் போய்விட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கும் போது, என்ன நடக்கிறது என்ருல், ஆறு ஒரு பிலத்தின் வழியாகப் பூமிக்கடியில் சென்றுவிடுகிறது! மறைந்துவிடுகிறது! பிறகு? நெடுந்தூரம் அடிவாரத்திலே ஓடி, மீண்டும் 'குபுகுபு'

வென மேல்பக்கம் கிளம்பி, மற்றோர் வெடிப்பு வழியாக வெளியே வந்து, பழையபடி ஆறாகி ஓடுகிறது! விடுதலை இயக்கமும் அப்படித்தான். வெளியே நடமாடவிடாதபடி தடைபோட்டு விடுவதாலே, உணர்ச்சி அழிந்து போய்விடாது! இடம் பார்த்து, காலம் பார்த்து, வழிபார்த்து, பெருக்கெடுத்து ஓடிவரும். எத்தனை முறை, வெள்ளைக்காரக் கவர்னர்கள் சீமைக்குச் சேதி அனுப்பினார்கள்—"காங்கிரஸ் தலைகாட்டுவதில்லை! கல்லறையில் கிடக்கிறது!" என்று. பார்த்தவர்களும் இருக்கிறார்கள், அதுபற்றிப் படிப்பவர்களும் புரிந்துகொள்வார்கள்!

சச்சரவுகளால் கழகம் அழிந்துபடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார், காமராஜர்.

அவர் போன்றாரின் வெளிப்படையான பேச்சைக் கேட்ட பிறகும், கொள்கையில் உறுதிபடைத்த தோழர்கள், கழகத்திலே பேத உணர்ச்சியை மூட்டிவிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை. அவ்விதம் நடந்து கொள்பவர்களால், ஏற்படும் சிதைவுகளையும் சரிப்படுத்திக்கொண்டு, கழகத்தின் கட்டுக்கோப்பைக் காத்து நிற்கும் கர்மவீரர்களின் எண்ணிக்கை மிகப் பெரிது!

எனவே புலித் திட்டமாயினும் கழுகுத் திட்டமாயினும் கழகத்தை ஏதும் செய்துவிடாது.

தம்பி! உனக்கு எப்போதாகிலும், நீர்கோர்த்துக் கொண்டதுண்டா? சளி பிடிக்கிறது என்பார்களே, அது? எனக்கு அந்தத் தொல்லை அடிக்கடி!

காய்ச்சல், கைகால் பிடிப்பு, வயிற்றுவலி என்று பலவிதமான நோய்கள் ஏற்பட்டால் ஒருவகையிலே நிம்மதிகூட என்று சொல்லலாம்—ஏனெனில், ஏதும் செய்ய முடியாத நிலையில் படுத்துவிடுவோம். இந்தச் சளிபிடிப்பது இருக்கிறதே இது மிகமிகத் தொல்லை! படுக்க வைக்காது—வேலை செய்யும் நினைப்பைக் கெடுக்காது. ஆனால் வேலையிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கும்போது, தும்மலாகி, மூக்கைத் துளைத்து, குடைந்து, ஆளைப் படாதபாடு படுத்திவிடும்! சாதாரணச் சளிதானே, என்பர் எவரும். மருத்துவரிடம் சொல்லக்கூடத் தோன்றாது! என்ன உடம்புக்கு என்றுகூட எவரும் அக்கரையுடன் விசாரிக்கமாட்டார்கள். நாமாகக் கூறினாலும்கூட, "சளிதானே! இதற்கா இந்தப் பாடுபடுத்துகிறாய்!" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுச் செல்வார்கள்.

ஆனால், அந்தச் சளியின் தொல்லை, படுபவர்களுக்குத்தான் தெரியும்.

ஒரு வேடிக்கையான கதை சொல்வார்கள்:

விகடகவியான தெனாலிராமன், ஒருநாள், காளியைத் 'தரிசனம்' கண்டானாம்! கவிகளைக் காளி நேரடியாகக் காணக் கூடிய காலத்துக் கதை!

அந்தக் காளி, ஆயிரமுக மாகாளி!

முகம் மட்டும்தான் ஆயிரம்! கரங்கள் அவ்வளவு இல்லை!

கண்ட உடன் தெனாலிராமன், கடகடவெனச் சிரித்தானாம்.

அவன் அப்படிச் சிரித்தது கண்டு, எப்படி இருந்திருக்கும் மாகாளிக்கு!

என்னமோ கவிபாடுகிறானே, அழைத்தானே, 'பிரசன்னமாகி, ஏதாகிலும் வரம் கேட்பான், கொடுக்கலாம்; ஆசாமி பிழைத்துப் போகட்டும் என்று பார்த்தால், கண்டதும் விழுந்து கும்பிடாமல், கடகடவெனச் சிரிக்கிறானே! எவ்வளவு மண்டைக் கர்வம் இவனுக்கு! சூலாயுதத்தை வீசி இவனைத் தொலைத்துவிடலாம் என்று மாகாளிக்குத் தோன்றிற்று. மறுகணம் கோபம் குறைந்துவிட்டது; "பாவம்! இவனோ கவி! எது மனதில் படுகிறதோ, அதை மிகைபடக் கூறிப் பழக்கப்பட்டவன்! 'உள்ளத்திலே கள்ளமில்லை! இவன்மீது கோபம் கொள்ளக்கூடாது! என்று எண்ணி, "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டாள்.

"தாயே! தயாபரி! எனக்கு இருப்பது ஒரே மூக்கு! அந்தச் சனியனில் சளி பிடித்துக்கொண்டால், இந்த இரண்டு கைகளும் போதவில்லையே! அம்மா! உனக்கோ ஆயிரம் மூக்குகள்! உனக்குச் சளி பிடித்துக்கொண்டால் என்ன பாடுபடுவாயோ என்று எண்ணினேன், சிரிப்பு வந்துவிட்டது" என்று தெனாலிராமன் பதிலளித்தானாம்.

மாகாளியும் விழுந்து விழுந்து சிரித்ததாகக் கதை!

தம்பி! நான் மாகாளியையும் கண்டதில்லை! தெனாலிராமனையும் கண்டனவல்ல. ஆனால், சளியின் தொல்லை நன்றாகத் தெரியும். அதுபற்றித் தெனாலிராமன் சொன்னதைக்

காளி மறுத்தால்கூட, நான் மறுக்கமாட்டேன்; அவ்வளவு தொல்லை தருவது சளி.

நமது கழகத்திலே காய்ச்சல், குன்மம், கைகால் பிடிப்பு, போன்ற கடுமையான நோய் எதுவும் இல்லை! ஆனால், சளி பிடித்துக்கொள்கிறது, அடிக்கடி! தொல்லையான நோய்!

ஆனால், எனக்கே இயல்பாக, அடிக்கடி சளி பிடித்துக் கொள்வதால், இந்தச் 'சளி'த் தொல்லையையும், நான் கூடுமான வரையில் தாங்கிக்கொள்கிறேன். அது நிமோனியா காய்ச்சல் ஆகிவிடாதபடி பார்த்துக்கொள்கிறேன். ஆனால், அதனால், எத்தனையோ மிக முக்கியமான வேலைகள் கெடுகின்றன! தடைபடுகின்றன.

காமராஜரோ, இந்தச் சளியே கழகத்தைக் கொன்றுவிடும் என்கிறார்.

மருத்துவர்கள் மறுத்து உரைப்பார்கள்; கழகத்தின் நடவடிக்கைகளிலே பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நான், தம்பி! உன் ஒத்துழைப்பால், நிலைமைகளைத் திருத்திவிட இயலும் என்று நம்புகிறேன். என்றாலும், எனக்குத் தெரியும், மற்ற வியாதிகள் ஆபத்தானவை, சளி அசிங்கமானது! எனவே, அதற்காக, அது பிடிக்காதபடி பார்த்துக்கொண்டாக வேண்டும்.

விவரமறிந்த எவரும், ஒரு விடுதலை இயக்கத்திலே, சரிவு சச்சரவு, சோர்வு தோல்வி, கலக்கம் மயக்கம், போட்டி பொறாமை சிற்சில வேளைகளிலே மூண்டுவிடுவதால், அந்த விடுதலை இயக்கமும், விடுதலை உணர்ச்சியும் அடியோடு அழிந்து போய்விடும் என்று கூறமாட்டார்கள்; எண்ணிக்கொள்ளவும் மாட்டார்கள்.

சூரத் காங்கிரஸ் மகாநாட்டிலே ஏற்பட்ட செருப்பு வீச்சுகளைவிடக் கேவலமாகவா, வேறொன்று இருக்கமுடியும்.

அப்போது இருந்த காங்கிரஸ் தலைவர்களெல்லாம், சாதாரணமானவர்களா!!

திலகர் நடத்திச் சென்ற காங்கிரசில், 'சூரத்' நடந்தது! அதனால் காங்கிரசார், காவி உடுத்திக் கமண்டல மேந்திக் கடும்தவம் செய்யக் காசிக்கா போய்விட்டார்கள்! அல்லது காமராஜர் நமது கழகத்தைபற்றிக் கூறுகிறாரே, அதுபோலக் காங்கிரஸ் அழிந்தா போய்விட்டது? ஆத்திரத்தில் அறிவிழந்

தனர். கடமை மறந்தனர். உரிமைக்காக ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். இலட்சியம் பெரிது, கட்சியிலே நமக்குத் தரப்படும் இடம் பெரிதா அல்லவா என்ற எண்ணம் எழக்கூடாது என்பது மறந்தனர், சச்சரவில் ஈடுபட்டனர். பிறகு, ஊரே கூடிப் புத்தி சொல்லிற்று! வெட்கப்பட்டனர்! தமக்குள்ளே ஏற்பட்டுவிட்ட பிளவு கண்டு ஏகாதிபத்தியம் எள்ளி நகையாடக் கண்டனர், நிலைமை புரிந்தது; மனம் திருந்திற்று; காங்கிரசில் மீண்டும் கண்ணியமும் கட்டுப்பாடும் நிலைத்தது! வெற்றி கிடைத்தது.

சூரத் காங்கிரசில், தலைவர்களே ஒருவர்மீது ஒருவர் மிதியடிகளை வீசிக்கொண்டு, கலாம் விளைவித்துக் கொண்ட சம்பவம் குறித்து, வைசிராய், கவர்னர்கள் மாநாடு கூட்டிப் பேசி இருந்தால், பம்பாய் மாகாணக் கவர்னர் என்ன சொல்லியிருப்பார். "காங்கிரசைப் பற்றித் துளியும் கவலைப்படத் தேவையில்லை. அதிலே பிளவு, பேதம், சண்டை சச்சரவு! சூரத் சம்பவம் தெரியுமல்லவா? நாம் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அது தன்னாலே அழிந்துவிடும்." என்றுதானே கூறியிருப்பார்.

அதேதான், காமராஜர் இப்போது பேசியிருப்பது.

பேச்சு, இயல்பினால்கூட, அமைந்ததல்ல, இடத்தால் அமைகிற பேச்சு!

அத்தனை முதலமைச்சர்கள் கூடிப் பேசுமிடத்தில், தி. மு. கழகம் பற்றிய பிரச்சினை வரும்போது, "ஆமாம்! ஆமாம்! தி. மு. கழகம் வளர்ந்துவிட்டது! நாட்டுப்பிரிவினை பற்றிய பேச்சு எங்கும் பரவிவிட்டது! நாங்கள் செய்யும் எதிர்ப் பிரசாரம் பலன் அளிக்கவில்லை. எம்மால் அந்தக் கழகத்தை ஏதும் செய்யமுடியவில்லை-" என்றா ஒரு முதலமைச்சர் பேசமுடியும்! எதிர்பார்க்கத்தான் செய்யலாமா, அவ்விதம் பேசுவார் என்று! கொஞ்சம் மீசையை முறுக்கிக் கொண்டு, கனைத்துவிட்டு, ஒரு அலட்சியப் புன்னகையுடன், "தி. மு. கழகம் ஒன்றும் இல்லை. அது தன்னாலே சாகும்!" என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆகவே, தம்பி! காமராஜர் அங்கு அவ்விதம் பேசியது கேட்டு, யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை! கவனிக்கத் தேவையுமில்லை. ஆனால், மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்தியப் பேரரசு நமது கழகத்தின்மீது குறி வைத்துவிட்டது என்பதுதான்!

சந்தைச் சதுக்கத்துப்பேச்சு, சட்டசபைவரையில் போய்ச் சேர்ந்தது என்று இருந்தோம்.

மற்றோர் கட்டம் இது! இந்தியப் பேரரசு முதலமைச்சர்கள் மாநாடு கூட்டி, தி. மு. கழகத்தை ஒழித்தாகவேண்டும் என்ற துடிப்பை வெளிப்படுத்தி, விதவிதமான திட்டம் தீட்டியது.

"தலையைக் கொண்டுவருபவர்களுக்கு இனம் தரப்படும்!" என்ற அளவுமட்டும் எழுதிக் தொகைபற்றி ஒருமித்த முடிவு ஏற்படாததால், அதனைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டதுபோல, என்று வைத்துக்கொள்ளேன்.

தி. மு. கழகத்தின் வளர்ச்சியும், திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்குச் செல்வாக்கும், எந்த அளவுக்கு என்றால்,' முதலமைச்சர்கள் மாநாட்டிலே, கூடிப் பேசவேண்டிய நிலைமைக்கு இந்தியப் பேரரசைக் கொண்டு வந்து விட்டுவிட்டது.

"அதெல்லாம் வீண்புரளி; வேண்டாம்! உங்கள் கழகத்தைப்பற்றி ஒன்றும் முதலமைச்சர்கள் கூடிப்பேசவில்லை. 'அசாம்' பஞ்சாப் ஆகிய இடங்கள்பற்றிப் பேசினார்கள்; அந்தப் பேச்சோடு பேச்சாக, தமிழ்நாடு பற்றிய பேச்சும், தி. மு. க. பற்றியும், எழுந்தது; அவ்வளவுதான்."—என்று பேசுவர், காங்கிரஸ் பேச்சாளர்.

தம்பி! முதலமைச்சர்கள் மாநாட்டிலே, அசாம், பஞ்சாப் பற்றிப் பேசினது உண்மை; பேசவேண்டிய விதமான நிலைமைகள், நெருக்கடிகள் அங்கே! வங்காளியும் அசாமியனும் ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு மடிகிறார்கள். 'ஜெய்ஹிந்த்' முழக்கமிட்டபடி!! பாஞ்சாலத்தில், எந்தவிநாடி என்ன நடக்குமோ என்று பீதி கொள்ளத்தக்க நிலைமை. எனவே, சட்டம் சமாதானம் காத்திட, அவைபற்றிப் பேச எண்ணம் எழும்.

தமிழ்நாடு நிலைமை அதுவல்ல. இங்கு தி. மு. கழகம் எந்தவிதமான கிளர்ச்சியிலும் இப்போது ஈடுபட்டிருக்கவில்லை. அமைதியான பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பஞ்சாபில் கிளர்ச்சி, அசாமில் அமளி! அவைபற்றிப் பேசும்போது, தி. மு. க. குறித்து, ஏன் எண்ணம் பாய வேண்டும்?

அந்தக் கிளர்ச்சி—அமளி ஆகியவைகளைவிட, தி. மு. கழகம் நடத்திவரும் திராவிடநாடுபற்றிய பிரசாரம், தொடர்ந்து, கட்டுப்பாடாக, பட்டிதொட்டிகளிலும், வேகமாகவும் வெற்றிகரமாகவும், கேட்போர் உள்ளத்தைத் தொடத் தக்கவிதத்திலும் நடைபெற்றுக்கொண்டு வருவதுதான், உண்மையில், இந்தியப் பேரரசு எனும் ஆதிக்கத்தின் சல்லி வேரினை அரித்துக்கொண்டு வருகிறது என்பது, அவர்களுக்குப் புரிகிறது; எனவே கவலை குடைகிறது.

கழகத்திலே அவ்வப்போது ஏற்பட்டுவிடும் 'நலிவுகள்'— கழகத்தின் 'தேர்தல்' வேலையை வேண்டுமானால் ஓர் அளவுக்குப் பாதிக்குமேயன்றி, கழகம் மேற்கொண்டுள்ள, நாட்டு விடுதலைக்கு மக்களைப் பக்குவப்படுத்தும், காரியத்தைக் கெடுக்காது, தடுக்காது என்பதை, யூகமுள்ள காங்கிரஸ் தலைவர்கள் அறிந்து கொண்டுள்ளனர். இதனை நம்மிலே 'பிளவு' ஏற்பட்டபோது, ஊர் கூட்டிக் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்த ஏடுகளே உணர்ந்து, "எதிர்பார்த்தபடி, தி. மு. கழகம் வலிவு இழக்கவில்லை; வேலை நிற்கவில்லை; விறுவிறுப்பாகத்தான் பணியாற்றுகிறது" என்று இப்போது எழுதி விட்டன.

இந்தக் கழகத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? இதனுடைய வறட்டுக் கூச்சலுக்கு எவர் செவிகொடுப்பார்கள்? என்றெல்லாம் பேசிய நிலை போயேவிட்டது! என்ன செய்து, இதை ஒழிப்பது என்று கலந்துபேசும் கட்டம் வந்து விட்டது.

இந்தக் கழகத்தை இனி யார் சீந்துவார்கள்! இதிலிருந்த வீரரும் தீரரும் விவேகியும் போய்விட்டார்கள், வெளியே! இனி இது இளைத்து ஈளைகட்டி இருமிச் சாகப்போகிறது என்று மேடைகளிலே காங்கிரசார் பேசிக்கொண்டிருக்கும் நிலை கண்டோம். ஆனால், முதலமைச்சர்கள் முகாம் அமைத்துத் திட்டம் தீட்டுகிறார்கள், தி. மு. கழகத்தை ஒழிக்க!

> அடுத்து வர இருக்கும் தேர்தலில் வெற்றி பெரிய அளவு கிடைத்து ஏற்படும் மகிழ்ச்சியைவிட, தம்பி! எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை இந்தச் சேதி தருகிறது!

நாம் கவனிக்கப்பட்டாகிவிட்டோம்! குறி வைத்துவிட்டார்கள்! பட்டபாடு வீண்போகவில்லை! பாரெல்லாம், நமது கழகம்

பற்றியும் இலட்சியம் குறித்தும் அறிந்துகொள்ளத்தக்க நிலேயை நோக்கி நடைபோடுகிறேம்!—என்ற எண்ணம், என்னேத் தம்பி! என்னென்னவோ இன்ப நினைவுகளேக் கொள்ளச் செய்தது. பாதி இராத்திரி வேளேயில், தடதடவெனத் தெருக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்பது போலவும், திறந்த உடனே கரங்களேப் போலீஸ் அதிகாரி பற்றி இழுப்பதுபோலவும், வெளியே தயாராக நிற்கும் வண்டியில் ஏற்றுவதுபோலவும், வழி நெடுக இதுபோன்ற வண்டிகள் நடமாடுவதுபோலவும், திராவிடரில் ஒரு பகுதியினர் சிறையில் என்னேடு இருப்பது போலவும், இப்படி எல்லாம், காட்சிகள்!!

முதலமைச்சர்கள் மாநாட்டைத் தொடர்ந்து நடவடிக்கைகளேத் துரிதப்படுத்துவார்களானல், தம்பி! என்னென்ன நடைபெறக்கூடும், என்று எண்ணிப் பார்த்தனேயா? பொலிவு மிக்க முகத்தினராய், வலிவு மிக்க குரலில், திராவிடநாடு திராவிடருக்கே என்று முழக்கம் எழுப்புகிறர்களே நமது தோழர்கள், பட்டி தொட்டிகளிலும், மும்மூன்றண்டு உள்ளே தள்ளலாம், அதற்கே!!

ஆமாமடா, தம்பி! காட்டுக் கூச்சல்! வறட்டுக் கூச்சல்! என்றர்களே! அது, புதியதோர் குற்றம்!! மூன்று ஆண்டுகள் உள்ளே!! கொடிக்குத் தடை! கூட்டத்துக்குத் தடை! ஏடுகளுக் குத்தடை! இலட்சியத்துக்குத் தடை!! உம்! மளமளவென்று வரக் கூடும் எல்லாம். தேர்தலுக்கு முன்பா, பிறகா, என்பதுதான் பிரச்சினே!

திராவிடநாடு திராவிடருக்கே என்று கேட்பது, பிரிவினேப் போக்கு, அது, சட்டப்படி குற்றம்—மூன்றண்டு உள்ளே!—என்று நிலேமை ஏற்பட்டால், நாட்டிலே, அந்த முழக்கமே எழாது, இயக்கமே இருக்காது என்று, ‘வந்தே மாதரம்’ கூறுவது குற்றம் என்று கூறப்பட்டதை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட, காங்கிரசார் நம்புகின்றனர். ஏன், தம்பி? நம்மைக் கோழைகள், கொள்கையிலே வலிவற்றவர்! குடும்பம் பெரிது குவலயம் சிறிது என்று கொள்பவர்கள் என்று எண்ணு கிறர்கள்.

“ஏன் வீணகச் சிக்கிக் கொள்கிறீர்கள்? இன்னின்னர் இப்படி வரும் என்று அறிந்து, முன்னதாகவே எங்களுக்குத் திராவிடநாடு வேண்டமே என்று சொல்லி, தப்பித்துக் கெண்டார்களே, அதுபோல, நீங்களும் ஓடிவிடுங்கள்;

இல்லேயேல், உள்ளே தள்ளிவிடுவோம்!—என்று டில்லி தெரிவித்துவிட்டது.

தம்பி என்ன சொல்கிருய்?

“என்ன சொன்னர் நேரு பண்டிதர், வெள்ளே ஏகாதி பத்தியம், அவரை மிரட்டியபோது”—என்பதைப் படித்து விட்டுத்தான் இதனே எழுதுகிறேன்.

என்ன செய்தார்கள் விடுதலேகேட்ட, ஜோமோ கெனியாடாவை? எட்டு ஆண்டுகள் சிறை! பிறகு? அந்த எஃகு உள்ளம் என்றும்போல் இருக்கக்கண்டு, நேற்று, விடுதலே! நெய்ரோபி நகரில், பதினயிரக்கணக்கான ஆப்பிரிக்கர் கூடி, ஆடிப்பாடி வரவேற்றனர், கெனியாடாவை! அதைப் படித்து விட்டு அந்த மகிழ்ச்சியிலே இதனே எழுதினேனில்லே.

ஐயர்லாந்து நாட்டு விடுதலேக்காகப் போராடிய மாவீரன் மடிந்தான்; அவனுடைய புதைகுழிக்கருகே நின்று, மற்ற விடுதலே வீரர் பேசினர். அந்தப் பேச்சைப் படித்துவிட்டு, இதனே எழுதுகிறேன்.

வாய்ச் சொல்லில் வீரரா? கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, வருவது ஏற்கத் தயாராக இருக்கும், விடுதலே விரும்பிகளா? என்று நாடு கேட் கிறது! காலம் கேட்கிறது தம்பி! என்ன சொல்கிருய்?

விடுதலேக் கிளர்ச்சியில் எதிர்பார்க்கவேண்டிய, அடக்கு முறை அவிழ்த்துவிடப்படும் வேளே நெருங்கிக்கொண்டிருக்கிறது. தம்பி! என்ன சொல் கிருய்? முதல் பந்தியா! பிறகா! வேண்டவே வேண்டாமா! பதில் சொல்லிடு! மணி அடித்து விட்டார்கள்!!

தேர்தல் முடிந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம், என்று பேசுகிறர் கமாராஜர்.

தம்பி தேர்தலின் முடிவு, பார்த்து இலட்சியத்தைப்பற்றிய கருத்தினைக் கொண்டவர்களல்ல, நாம்! தேர்தல், நமக்கு ஏற்பட்டுவிடும் பல வேலேகளிலே ஒன்று!! அது முடியட்டும் என்கிறர் காமராஜர்—என்னேப் பொறுத்தவரையில், தேர்தலுக்கு இரண்டாவது இடம்தான்—முதல் இடம் இலட்சியம் என்ன ஆவது என்பதுதான்! அதனேக் காத்திட, கொடிய அடக்கு முறையையும் தாங்கி நிற்கும் தோழரின்

தொகை எவ்வளவு என்பதுதான், எனக்குத் தேவை! மன்னித்து விடு, தம்பி! எனக்கு, என்று எக்களிப்பில் கூறிவிட்டேன்— நாட்டுக்குத் தேவை.

விடுதலை கேட்கும் எம்மை சிறைக்கு இழுத்துச் செல்லும்போது, அந்தச் சிறையில்—எத்தனைM. P.க்கள் எத்தனை M. L. A.க்கள் இருக்கவேண்டும் என்று உங்களுக்கு ஆசை இருக்கிறதோ, அந்த அளவுக்கு தேர்தலிலே வெற்றி தேடிக் கொடுங்கள். பொட்டிட்டு ஆர்த்தி எடுத்தி, போய்வருவாய் களம் நோக்கி! என்று வழி அனுப்பி வைப்பதுபோல, நாட்டு மக்களே! நல்லோர்களே! நீண்டகாலச் சிறை அழைக்கிறது! அங்கிருந்து தூக்கு மேடைக்கும் இழுத்தேகலாம்! உங்கள் ஆதரவைத் தந்து, வழியனுப்பி வையுங்கள்; தேர்தலிலே நீங்கள் தேடித்தரும் வெற்றி, களம் செல்லும் வீரருக்குத் திலகம் இட்டு அனுப்புவது போன்றது என்பதைத், தம்பி! இன்றே கூறவிடு, எதற்கும் தயாராகிவிடு!!

அண்ணன்

அண்ணாதுரை

20-8-61

கடிதம் : 142

பட்டப் பகலில்...! (1)

பட்டப் பகலில் கண்ட கனவு—

காளையும் கன்னியும்—

தம்பி!

இதய மலரே!

இன்பப் பெருக்கே!

முத்தே! முழுநிலவே!

செந்தேனே! என் மானே!

இதுபோலெல்லாம் பண்பாடிடத் தெரியாப் பாவை—கண் உறக்கம் கொண்ட நிலையில் கவிதை தீட்டப்பட்ட மடலெனத் திகழ்கிறாள். தொட்டிலின் ஓரத்தில் ஒரு கரம்—மற்றொன்று தரையில்! அவள் ஏழை! இல்லம் இல்லாமையின் இருப்பிடம்; செல்வம் தொட்டிலில்! அந்தச் செல்வத்தைப் பெற்றுப் பெருமாட்டியாகிட வைத்தவன், கழனி அருகே, காவல் காத்து நிற்கிறான்—களஞ்சியம் போய்ச் சேரவேண்டிய நெல்லை எவரும் களவாடாதிருக்க. அவன் கண்களிலே அறுவடைக்குத் தயாராகி நிற்கும், பயிரா தெரிகிறது! இல்லையே! கதிரின் கனம் தாளமாட்டாமல், சிறிது கீழே தாழ்ந்தபடி பயிர் இருக்கிறது.

"இன்னும் இரண்டே மாதம்! பிறகு பாரேன்!" என்று கனிவு வழிந்திடச் சொன்னபோது, அவன் தோள்மீது துவண்டு வீழ்ந்து, "உங்களுக்கு எப்போதும் கேலிதான்!" என்று பேசியபடி, ஒரு பார்வையைச் செலுத்தினாளே, அந்தப் பாவை அல்லவா, தெரிகிறாள்.

அவளோ அயர்ந்து துயிலுகிறாள். ஓடி ஆடி வேலை செய்த அலுப்பு! அலுப்பைக் கவனித்தால், அங்கம் வளர்க்க வேண்டாமா? அதோ தங்கம்! அதற்காக உழைப்பு—உழைப்பினால் களைப்பு; அயர்ந்து தூங்குகிறாள்; கலாபத்தை மடக்கிக்கொண்டு துயிலும் மயிலனையாள்.

அவன், கழனிப்பக்கம்! தவளைச் சத்தம் காதைக் குடைகிறது. பாம்புகள் சீறுவது போன்ற ஒலியும் கேட்கிறது. காற்றினால் அசைந்தாடும் பயிர், கதிர்முற்றிய நிலையில் இருப்பதால், கொஞ்சும் சதங்கை அணிந்தவள் கோலம் காட்டி நடக்கையிலே எழும் ஓசைபோல, இசை எழுப்புகிறது.

ஆயிரம் வேலிக்கு அதிபனும்! மூன்றடுக்கு மாடிவாழ் மன்னனும்! இருந்தும் என்ன? தானாகச் சென்று, அவரவரைக் கண்டு, நான்தான் நாலூர் மிட்டாதாரன்! என்று கூறிக் கொள்ளத்தானே வேண்டிவரும்—அவனை உலகறியச் செய்திட வல்ல மகவு இல்லையெனில்.

தொட்டிலிலே படுத்துத் துயிலும் தும்பைக்கு இந்த எண்ணம்போலும். என்னைக் காணுங்கள்—என் எழிலைக் காணுங்கள்—என் தந்தை தெரிகிறாரல்லவா! என அன்னையும் தெரிகிறாரல்லவா!! உலகம் மெச்சும் அவர்கள் வாழ்வது எவரால்? என்னால்! ஆமாம், சின்னஞ்சிறு சிட்டு, என்று மட்டுமே எண்ணிக்கொள்ளாதீர்கள். நான் எந்தைக்கு ஏற்றம் கிடைத்திடச் செய்யும், செந்தாமரை! தெரிகிறதா? —என்று பேசிடும் பருவமல்ல! முகப்பொலிவு அதுபோன்றே விளங்குகிறது.

உன்னோடு உறவாட எண்ணியே, ஓங்கி வளர்ந்து வருகிறேன்! தொட்டால் மெய் சிலிர்க்கும் - ஆகவேதான், என் கரங்களை நீட்டியபடி நிற்கிறேன்! வா! வா! என்றும் அழைக்கிறேன்—என்று தென்னை, நிலவை நோக்கிப் பேசிட இயலுமா! கீற்றுகள் ஆடுவதும் அசைவதும் அதனைத்தான் காட்டுகின்றன.

தொழுவத்தில், தன் கன்றின் முதுகை, நாவினால் நீவியபடி நிற்கிறது பசு! அதன் கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியின் ஓசைதான் இசை! அந்தக் கன்றுக்குத்தான் எத்துணை பெருமை! நான் வேண்டுமென்றே ஒருமுறை என் காதை அசைத்தாலும் போதும்; கண்களால் கனிவுகாட்டி, என்ன? என்ன? என்று கேட்டாள் என் தாய்; கழுத்தை அசைத்து அசைத்து!—என்று கூறுவதுபோலக் குதித்தாடுகிறது கன்று.

தொட்டிலிலே அரசு செலுத்தும் மகவின் முகத்திலே வந்து வந்து போகும் களையும் விந்தை விந்தையான சேதிகள் எதனை எதனையோ கூறுவதுதான் போலும்!

அந்த அணங்கின் முகத்திலேயும் அகத்தின் பொலிவு ஒளிவிடுகிறது. புன்னகை இதழிலே! பல்வேறு வகையான புன்னகை! பெருமிதம் காட்டும் வகை! குறும்புணர்ச்சி காட்டும் வகை! கூச்சத்தைக் காட்டும் வகை! இங்ஙனம் பலப்பல! ஆனால், எல்லாவற்றிலும் ஓர் இனிய எழில்!!

எண்ணம் பலப்பலவும், கனவு வடிவம் கொண்டு, காரிகைக்கு துயிலில் விருந்தாகிவிடும் நிலைபோலும்!

அதோ! அதோ! அந்தப் புன்னகைக்கு என்ன பொருளோ? எழுப்பிக் கேட்டிடலாம்! எழுந்ததும், இன்பக் கனவினை ஏன் கலைத்தாய்? முழுதும் நான் கண்டு மகிழ இருந்தேனே! பாதியிலே எனை எழுப்பிப் பாழடித்து விட்டாயே! தின்னப் பழம் எடுத்துத் தோல் நீக்கி நிற்கையிலே, மந்தி பாய்ந்துவந்து பறித்தோடிச் சென்றிட்ட பழங்கதைபோல்!! என்றெல்லாம் கேட்டு மிக எரிச்சலும் காட்டுவளோ! ஏன் எழுப்பி அவள் மகிழ்வைப் போக்குவது; வேண்டாம்! என்று தோன்றும்.

இதழோரம் எழில் கூட்டும் அந்தப் புன்னகையில், ஏதோ ஒரு நினைவால் வந்துற்ற கூச்சமது நிச்சயமாய்த் தெரிகிறது. உண்மை, கூச்சம் எதன் பொருட்டு? குடத்தை இடுப்பேற்றி, குளிர்மதியைக் கண்ணேற்றி, மலருக்கு மணமூட்ட, கூந்தலிலே தானேற்றி, மையுண்ட கண்ணாள், மையலூட்டும் பருவத்தாள், வானகத்தினும் வையகமே சிறந்ததென வாயால் மொழியாமல், கண் வழியாய்க் காட்டிடும் காளையர் நெஞ்சினிலே கனலேற்றி நடக்கின்றாள்; புனல்கொண்டு வருவாளாம்! புன்னை பூத்திருக்கும் பொன்னில் மணமிருக்கும் என்றே புலவோர் கூறிடவே, மலர்க்குவியல் ஆங்கிருக்கும்! அன்னம் தவழ்ந்தாடும்! அணிகள் குதித்தோடும்! வண்ணம் பல

கொண்ட வண்டுகள் இசை பயிலும்! கோலேந்தும் மன்னனது கூடம்தனில் வீரர் வந்தமர்ந்து வாழ்த்தொலிக்கும் வேளையிலே, வந்து நின்று! அவையோரின் அஞ்சலிதனை ஏற்கும் அரசகுலம் இவள் காணீர் எனும் விதமாய் வருகின்றாள்.

நாளைக்கு இருவேளை காளையைக் குளிப்பாட்டிப் பாதுகாத்திடச் சொன்னார் பரிவுமிகு என் தந்தை! அதற்கே நான் வந்தேன்! என்று கூறுகின்றான்; இவனை யார் கேட்டார்கள்? மலர்நாடி வந்திடும் வண்டினை எவர் கேட்பர்? கூறுகின்றான் குமரன், வேறேதும் அறியானும்! வேல் விழியைக் காணானும்! கழுத்தைக் காலென்றும், காதினை கண்ணென்றும் தவறாக எண்ணியன்றோ, தன் வேலை செய்கின்றான்! காளையும் வாய்விட்டுச் சிரித்துக் கேலி செய்யும் இவன் போக்கை அறிந்ததனால்!

நெற்றியிலே!பூத்திட்ட முத்துக்களைத் தரைமீது, தையல் வீசுகிறாள். இவனுக்குத்தான் அதனால் எத்தனை தவிப்பு!! கல்லோ அவர் மனமும், கன்னிக்குக் கடினமிகு வேலை பல தந்திட்டார்! மலருக்கு அனல் காற்று! ஆகுமோ? கருகாதோ! மானை ஏர்தனில் பூட்டி, மதியிலியும் உழுதிடானே! மங்கை இவள் வியர்வை மண்ணில் விழும் அளவு, பாடுபடச் செய்கின்றார்; பாவிகள்; பெற்றோராம்!!—என்றெல்லாம் கேட்டிடத்தான் துடிக்கின்றான்; அவன் நினைப்பை, கண்ணோரம் தன்னால் கண்ட அவள், 'களுக்'கெனச் சிரித்திடாமல், அடக்கிக் கொண்டதுதான் விந்தை!

"மாடோட்டி வந்தவனே! மன்னாரின் மகன்தானே! சின்னான், உன் பேர்!—ஆமாம் சிலம்பத்தில் வல்லவனாம்; சொன்னார்கள் பலபேர்கள்! வயலூர் தோப்பினிலே, வகையான பலனாமே! ஆயிரத்துக்கு மேலே இலாபமாம் இவ்வாண்டு; உண்மைதானே! கால்காசும் செலவழிக்காக் கஞ்சன் மகன் என்றாலும், பசியோடு வந்தவர்க்கு பரிந்து உணவளிப்பாயாம்! பாமாலை தொடுப்பாயாம். பன்னிருகையன் சொன்னான்! ஆமாம் உனக்கு இன்னும், ஆகவில்லையே, மணமும்! அத்தைக்கோ மகள் இல்லை! சொத்தைப் பல்லாம், சொக்கிக்கு! உன் அக்கா மகள்! எவள் வந்து உன் மனையில் எழில்கூட்டி நிற்பாளோ! இனியா பிறக்க வேண்டும்! இருப்பாள் பருவமங்கை! ஏடா! குறுநகையோ? பல்போன கிழவனுக்குப் பாவை கதை தெரிவதுண்டோ என்றெண்ணிப் பரிகாசம் செய்குவாயோ!! பழுத்துள்ள நானும் முன்னம் 'பிஞ்சாக' இருந்தவனே! ஆனால், இதனைக் கேள்: அங்கும் இங்கும்

அலைந்து அலர் கிளப்பி வாழ்ந்ததில்லை! ஆரணங்கே வேண்டாம், நான் அடவி செல்வேன் என்று அகடவிகடம்.பேசி அடம் செய்தும் இருக்கவில்லை. அவளா? இவளா? என்று எடைபோட்டுப் பார்த்ததுண்டு! மனதில் இடம் பிடித்த மங்கையிடம் பணிந்துவிட்டேன்! மலர்த்தோட்டமாகியது மண்குடிசை, அவள் கால்பட்டு! இருக்கும் நாற்பதாண்டுக்கும் மேலாக! இலுப்பைத் தோப்பாக இருந்தது, இன்றுள்ள மணிக் கூண்டு! ஏலப்பப் பிள்ளை வீட்டில் ஏது மோட்டாரெல்லாம் அப்போது! சின்ன மாடி வீடு! சத்திரம் கட்டியதில், சரியாகத் தட்டிவிட்டார்! பழைய கதை அதெல்லாம்! ஆமாம்! ஆனால், அன்றுபோலத்தான் இன்றும், ஊரணியில் வருகிறார்கள், உறவு முறை பெறுகிறார்கள்! உன்மத்தனடா நீ! ஒரு நாழிகைப் பொழுது ஓயாமல் நான் பேசி நிற்க, பதிலேதும் கூறாமல், காளை உடலை, கல்லென்று எண்ணிக்கொண்டு, தேய்த்தபடி இருக்கிறாயே! வாய்விட்டா அது சொல்லும். போதுமய்யா தேய்ப்பு என்று! வாயுள்ளதுகளெல்லாம், கண்ணால் பேசிடும் காலமல்லவோ இதுவும்! வருகிறேன், உன் வீடு! இரவு, எட்டுக்கு மேலாக! பார்! பார்! மன்னார், நான் கூறப்போவது கேட்டு, உனைப் படுத்தப்போகும் பாடு! ஊர்கூட்டி உனை நிறுத்தி; வாழத்தெரியாதான், வகையில்லான் என் மகனும்! வழிகாட்டும் விளக்கு வேண்டும், இல்லையேல் வழுக்கிடுவான்! திருவிளக்கு இது காணீர்! திருவினரே! வாழ்த்துவீரே! என்று மன்றமுள்ளோர் எல்லோர்க்கும் மகிழ்ச்சிபொங்கப் பொங்கக் கூறி, உனை மனையறம் பயிலும் வேலை ஏற்றிடச் சொல்வான், பார்! பார்!—என்றெல்லாம் முதியவர் மொழிகிறார், அவளும் கேட்க! ஆயிரத்தெட்டுப்பேர்க்கு, அவர் மணம் முடித்ததுண்டு! ஏடெடுத்தால், பார்வை மங்கியது விளங்கும் அவர்க்கு! மடுவும் மாந்தோப்பும், ஊருணிக் கரையும் உச்சி மாகாளிக் கோயிலும், 'சந்திப்பு' இடமாகும், சேதி காதில் வீழ்ந்திட்டால் போதும்; செல்வார்; கண்ணொளி நிரம்பி நிற்கும்; காட்சியும் காண்பார்; மனதில் உள்ள கருத்தையும் காண்பார் இந்தப் பொல்லாத புலவன்! அவர்தான், இந்தப் புறநானூற்றுக்கேற்ற புனலோரம் காணுகின்றார் அகநானூற்றிலொன்று; மகிழ்கின்றார்.

கேட்டது போதும், இஃதே இன்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடத்தக்கது. ஆமாம்! தாயும், என்னவோ ஏதோ வென்று ஏங்குவாள் நேரம் சென்றால்! இவர்கட்கு என்னவேலை! திருக்குறள்தனையே வள்ளுவர் செய்துமே அளிக்காவிட்டால்; ஒவ்வொரு குறளில் காணும் ஒவ்வொரு கருத்திற்கும், பாரதம் பாடிக் காலம் பாழ்படச் செய்வார், ஓயாப் பேச்சிலே

வல்லவர்கள்! செல்வோம் வீடு! புன்னைக்கு அருகிலேயே புது வீடு கட்டிக்கொண்டு, இருந்துவிடுவதுதானே, ஏனம்மா இங்கு வந்தாய்? என்றெல்லாம், அம்மா பேசி, எனைத் தலைகுனிய வைப்பாள்! என்னவோ எண்ணிவிட்டாள், என்னைக் குறித்துமேதான்! இவர் என்ன எனைக் காணத்தானா, இங்கு வந்தார்? எவர் சொன்னார்? எவரெவர் வருகிறார்கள் என்பதை அறிந்திடவோ நான் உள்ளேன்! ஏன் வீண்வேலை! "ஏனய்யா எனையே நோக்கி நிற்கிறீர்?" என்று கேட்டேன்; பார்த்திடுவாரை எல்லாம் காரணம் கேட்க நானும், பைத்யமா! காளையைக் காண்பேன், சிலவேளை! தொழுவத்தில் கட்டும் போதும், முட்டுமோ அவரை என்று எண்ணுவதுண்டு! துளியும் அவர் மீது நினைவு அல்ல; காளைமீதே! இதனைக் கண்ட எவரோ சென்று, எதையோகூறி என் அன்னை மனதில் ஐயம் ஏற்றிவிட்டார்; தெரிந்துகொண்டேன். இனி என்ன இங்கு வேலை! எதிர்வீட்டுப் பாட்டி வந்தால், "என்னடி குட்டி, எமக்கும் இருக்கட்டும் கொஞ்சம் தண்ணீர்! எல்லாவற்றையும் நீயே எடுத்துச் சென்றிடாதே! போதும்; வீடு, போ! போ!" என்று பேசிப் பொக்கை வாயால் பொய்க்கோபம் காட்டுவாளே! அவள், இவர் மண்பிசையும் குழவியாக இருந்தபோது, இடுப்பினில் தூக்கிவைத்து, "என் அரசே, தங்கக்கட்டி! எவர் நிகரே. சிங்கக் குட்டி!" என்றெல்லாம் பாட்டுப்பாடிக் கொஞ்சுவது உண்டாம்! சொன்னார்! சின்ன வயதிலே செக்கச் செவேலென இருப்பாராம், பாவம் வேலை; மேனி செப்பாகிப் போனநிலை! அதுசரி! நமக்கென்ன அதுபற்றிய கவலை! யாருக்கு அவர் சொந்தம் ஆவாரோ, யார் கண்டார்கள்!—என்றெல்லாம் மனதிலெண்ணி மங்கை நடக்கின்றாள், குடம் குலுங்க; பாதிதான் நீர்—முழுவதும் நீர் நிரப்ப மறந்தனள்; அதற்கா வந்தாள்?

"பேரென்ன"—"அழகி" "பேரழகி" "மயிலேதான்" "அடக்கம்" "அன்னை?" "சொர்ணம்" "அப்படிச் சொல்லு! தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!"

போவோர் வருவோரெல்லாம் பேசுகின்றார், இம்முறையில், இவளைக் கண்டு.

"தாயேதான் மகள்! தங்கத்தாலான சிலை!"—என்ற பேச்சுக் கேட்டுத்தான், இதழோரம் புன்னகை கொண்டாள், இளமங்கை, துயிலுகையில். பதினெட்டு ஆண்டுகட்குப் பிறகு பாவையாகிப் பெற்ற பெருமாட்டியினை, மகிழவைப்பாள், இதுபோது மகவாக உள்ள செல்வி! இதற்குள் அன்னைக்கு,

புன்னைமரம், காளையின் கனவு, முதியவர் பேச்சு, எல்லாம்; கனவில்!! தாயைப்போல மகள்! தங்கத்தாலான சிலை! என்று ஊரார் பேசுவது, உதட்டோரம் சிரிப்பளித்து, இனிப்பளித்து நிற்கிறது. கரும்பறியாச் சுவைதானும், கலந்திருப்பதுபோல, நினைப்பில் இனிப்பேற்றும் நிலைபெறப் போவதனை அறியாது, குழந்தை, அழகு துயில்கொள்கிறது.

பதினெட்டு ஆண்டுகளைக் கடக்கவேண்டும், செல்வி பாவையாகிக், குறுநகைக் குமரனின் மனமதை வென்று, அவன், பைந்தமிழ்ப் பாடலின் பொருட்சுவை யூட்டிடும் புலவரின் பேச்சிலே கிடைத்திடும் இனிமையை நுகர்ந்திருந்த நிலைமாறி, 'கண்டுபோல் மொழி! வண்டுசேர் குழல்! கண்களோ சேல்! மதி, முகம்! வேய், தோள்! என்றெல்லாம் அவளைப்பற்றி நெஞ்சு நெகிழப் பேசவும், அவன் ஆடல் பாடல் கூடம் மறந்து, அடலேறன்ன தோழர்கள் போர்முறை பயிலும் இடத்தை மறந்து, பழமுதிர் சோலை நோக்கிப் பறந்திடும் புள்ளே போன்றும், நீர்நிலை நாடிச்செல்லும் புள்ளி மானினமே போன்றும், சேல்விழி மாது செல்லும் ஊருணிப்பக்கம் சென்று, உலவிடும் போக்குக் கண்டோர், மலரணிக் கொண்டைச் சொருக்கிலே, மதுநிறை அவள்மொழிச் செருக்கிலே, நிலவெறி அங்கக் குலுக்கிலே, மனமது அழிந்த நிலையிலே மையல் கொண்டு அலைகிறான் வீணிலே, தொழிலையும் இழப்பன் சின்னாளிலே', என்று கடிந்துரைத்திடக் கேட்டு, 'காதலின் மேன்மைதன்னை உணர்ந்திடா மனத்தினார், கடுமொழி பேசுகின்றார்! விழிவலை வீழ்ந்தேனென்று வீணுக்கு ஏசுகின்றார்! இவர் எனை அறியமாட்டார்; என்நிலை காண மாட்டார்! கதிரொளி பட்டதாலே தாமரை இதழ் விரித்திடும், அந்த இயல்பினைக் கரையும் காக்கை அறியுமோ, கூறீர் ஐயா! புள்ளினம் இசையைத் தானே எழுப்பிடும் போதில், ஆங்கு செவிப்புலன் கெட்டோன், என்ன செப்புவான், அறியோமா, நாம்! பறை ஒலி மிகுந்தபோது, பண்ணொலி படுமோ காதில்! அடுப்பினில் ஏற்றியுள்ள பானையில் கொதியும் ஏறித், தளதள வென்றே சத்தம் கேட்டிடும்போது பித்தன், பானைக்கு என்ன நோயோ? பாவம் அழுகிறதே என்பான்; பானையுள் பாற்சோறு தானும் காணான்! அதுபோல, நீர்கொண்டு செல்லவந்தாள், என் நெஞ்சமே கொண்டு சென்றாள்! குளித்திட நானும் வந்தேன், நீரிலே நெருப்பே கண்டேன்! மறுப்பவர், உண்டு, ஆமாம்; மனதைப் பறிகொடுத்திடாதே என்று மதியுரைப்போரும் உண்டு. அன்னார் மறக்கின்றார் ஓர் உண்மைதன்னை! கண்ணொடு கண்ணுமேதான் கலந்திட்டதாலே, காதல் அரும்

பிற்று, மலராயிற்று; அறிந்திட இயலாதார்கள், அறிவுரை என்று எண்ணி அனல்வாரி வீசுகின்றார்; சுடுவது நெருப்பு, ஆமாம், எனினும் மனமது உலையே ஆகி தழலிங்கு ஓங்கும் போது, இவர் தரும் சுடுசொல்தானும் என் செய்யும்; ஏன் இதை அறியவில்லை; ஊருணிக்கரையோ, அன்றி ஊர்க்கோடித் தோப்போ, எங்கோ முன்னம் எப்போதேனும் ஓர்நாள், இவர்கள் முறுவல் காட்டி நின்றவரல்லரோ? அவர்க்கு அன்று இருந்ததேபோல், எனக்கின்று இல்லையே என்று ஏன் இவர் எண்ணிடாமல், ஏதேதோ பேசுகின்றார்! இங்கு இவர்க்குப் பதிலைத் தேடி, வீசிடுவதற்கோ, நேரம்? என் மனம் கொள்ளை கொண்ட ஏந்திழை நடக்கும் பாதை இப்படி முள்ளும் கல்லும் நிரம்பி இருந்திடலாமோ? என்பதை எண்ணி எண்ணி ஏக்கமே கொண்டேன், நானும் என்ன நலமா? என்று கேட்கிறார், கேலியாக!! துளையில்லாக் கம்புதானும், குழலது ஆகாதன்றோ? நாணிலா வில்லால், என்ன காரியம் ஆகும், கூறீர்! திரியிலா விளக்கேபோலும், திருஇலா உருவம்போலும், பொன்னிலாப் பேழைபோலும் இருக்கின்றார்; வாழ்கின்றாராம்!! உண்பதும் உறங்குவதும், உற்றதோர் வேலைகள் தாம்! ஆயினும், வேறு இன்றி, இதனையே தொடர்ந்து செய்யும் பேதையர் தம்மைப் பெருமைக்குரியவர் என்று சொல்வர்; பாவையைப் பெற்ற பின்னர், கடுகாகும் மலைகள் தாமும்! பட்டது விட்டுத்தள்ளு! என்றிவர் கூறிடக் கேட்டேன் நானும். பட்டது துளிர்த்த தென்று பேசுவர், புதுப்பாங்கு கண்டு, தொழிலிலே வெற்றி காண்பேன், தோகையாள் துணையைக் கொண்டு—என்றவன் எண்ணமிட்டபடி, 'புன்னை மரமிருக்கும் ஊருணிப் பக்கமதில் உலவுவான்! பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு!

இளமாதோ, இப்போதே காண்கின்றாள், அந்த இன்பச் சூழ்நிலையை; விழியும் திறந்தில்லை; விந்தை இஃதன்றோ!

விந்தை அல்ல! மனதிலே கொள்ளை ஆசை, மாதாகிப் போனவட்கு! மதலை மங்கையாவாள், மங்கையின் செங்கை களுக்கு, வளைகளையிட்டும் வாரியே அணைத்துக்கொண்டும், வாழ்வினை அளிக்கவல்லான், வருவான் உரியபோதில்; எங்கு இவர் சந்திப்பார்கள்? என்னென்ன பேசுவார்கள்? என்றெல் லாம் எண்ணும் உள்ளம்; இயற்கைதான், வியப்பென்ன இதிலே!

மதலைகள் குதலைபேசி, மாமனை மாடு ஆக்கி, மனைகளில் ஆடிப்பாடி, பின்னர் மங்கையராகி, மணவாளர் தம்மைக் கொண்டு, மலர்ந்திடும் முல்லைதானும், மணம் பரப்பிடுதல்

போல, இல்லறம் தன்னில் நறுமணம் கமழ வாழ்ந்திடும் நிலையைக் கண்டாள்; தன் மகவு படுத்துறங்கும், தொட்டிலின் பக்கம் கீழே படுத்துறங்கிடும் போதினிலே. கண்ட காட்சியால் கொண்ட எண்ணங்கள், கனவெனும் உருவம் தன்னில், உறவாடக் காணுகின்றாள்; வியப்பென்ன? வினாக்கள் ஏன்? அன்னைக்கு உண்டன்றோ, ஆசை மகவு என்னென்னவிதமான ஏற்றம் பெறவேண்டுமென்ற நெஞ்சைத் தித்திக்க வைக்கும் நினைப்புகள் பற்பலவும்.

கனவென்று அதனைத் தள்ளிக், கருத்தறியாது போயின், கனிமீது தோல்கண்டு, சுவை ஏது என்றெண்ணிச், சுவை காணும் வாய்ப்பிழக்கும் போக்கினர் போலாவர்.

அன்னை காணும் கனவு, தன் மகவுக்கான எதிர்காலம் எங்ஙனம் இருத்தல் வேண்டுமென்று திட்டமிடுவதின், விளைவு!

கனவு கனவாகவே இருந்துவிடும் என்றெண்ணும் போக்கினர், பேதையர்! பேரறிவாளர் கண்ட கனவெல்லாம் நனவாகி, மாநிலத்தவர்க்கு இன்று மகிழ்வளிக்கக் காண் கின்றோம். எண்ணெய் திரியிட்டு ஏற்றிவைத்த விளக்கிருக்க, இந்த விளக்கைவிட ஒளிமிகுந்த நிலைபெற்று, எண்ணெய் திரியுமன்றி, எரியாதோ ஓர் விளக்கு, என்றெண்ணிக் கிடந்தவனை, இளித்தவாயன் என்றார், ஏனிந்தக் கனிவு என்றார் —ஆயினும் அதுபோன்ற கனவுகளால், அகிலம் பெற்ற பேறு அளவிட்டுக் கூறப்போமோ!

பெற்றோம் ஒரு மகவு—கிடத்தினோம் தொட்டிலிலே! யாருக்கு யார் உறவு? எத்தனை நாள் இவ்வுறவு! தூங்கி விழிக்கையிலே, துவண்டிடலாம். இச் சிசுவும் தொட்டில் கயிறறுந்து, பொத்தென்று கீழே விழுந்து, ஆவி பிரிந்திடலாம், படுத்துறங்கும் குழவிக்கு மாந்தம் கண்டிடலாம், மார்ச்சளி பிடித்திடலாம்; தத்தி நடக்கையிலே கொத்திடலாம் ஓர் பாம்பு! யார் கண்டார், என்னென்ன ஆபத்து வருமென்று! சின்னஞ்சிறு விழிகள், வண்டுகளாய் உள்ளன! நன்று நன்றென்று நாலுபேர் கூறுகின்றார். அம்மை நோய் வந்தால், அழகான இக் கண்கள், 'பூ' விழுந்துபோனாலும் போய் விடலாம்; யார் கண்டார்! மாடு முட்டிடலாம், வெறிநாய் கடித்திடலாம்; அப்பன் வெறிபிடித்து அடித்து உடலை வாட்டிடலாம்! அத்தனைக்கும் தப்பி, ஆரணங்காய் வளர்ந் தாலும், உற்ற துணை கிடைக்காமல், உதைப்போனுக்கு வாழ்க்கைப்பட்டுக் அழுது கிடப்பாளோ, கிணற்றில் வீழ்வா

ளோ, என்னென்ன விபத்துகளில் இவள் சிக்கிக் கொள் வாளோ? என்னுகுமோ, இவளின் எதிர்காலம்! யாரறிவார்!— என்றெல்லாம் தாய் எண்ண, பேயுள்ளம் இருக்கவேண்டும்.

தாயுள்ளம் இருந்திடுமோர் பாங்கினேயே, கூறிவந்தேன்; தாய் வயிற்றிலுதித்தோர், எவருமே மறுத்திடார்கள்!

ஈன்றெடுத்த மகவினுக்கு எதிர்காலம் இருந்திடவேண்டும் விதம், யாது, என்று எண்ணமிட்டாள், அஃதே கனவு; அஃது கனவாகிப் போய்விடாது; காண்பாள், பெற்ற மகளின் பருவம் வளர்ந்த நிலே!

"வண்ணக் கிளியே வா! வா! கன்னல் தமிழே வா! வா! முல்லேமொட்டே வா! வா! அல்லி மலரே வா! வா! அந்தி அழகும் நிலவழகும், அணி அழகுள்ள தமிழழகும் ஒன்ருய்த் திரண்டு வந்துள்ள உயிரே, வா! வா! என்றெல்லாம் கனிவுடன் கூறிடவும், எதிர்காலம் குறித்துத் திட்டமிடவும், தாய் உள்ளத்தால் முடியும்.

தான் ஈன்றெடுத்த குழந்தைக்கு, பொன்னும் மணியும் பூட்டிப் புது ஆடைகள் அணிவித்துப் பொட்டிட்டுப் பூமுடித்து, போகவரப் பார்த்துப் பூரித்துப் பெருமைப்படுவது தாய் இயல்பு. தொட்டிலிலே துயிலுகின்ற மயில், தோகை விரித்தாடும் நாளே நினேவிலிருத்திக், கருத்தைக் கரும்பாக்கி மகிழ்வதுவும் தாய் இயல்பு. கனவுகள் காண்பதுவும், நினேவாக மாற்றிடும் மனதுடன்தான்; அதனே மறந்திடுதல் கூடாது.

கழனி காத்திடும் கணவன்—தொட்டிலில் துயிலும் குழவி —படுத்துறங்கும் பெருமாட்டி—இவைகளே, இந்த நேரத்தில், உருவாக, உண்மையாக, உள்ளன. அந்த உண்மை நிலேயுடன், தாயன்பு (பற்று பாசம்) இணேந்து பிணேந்து, இழைந்து குழைந்து, எண்ணம் பல சுரந்து, இன்பக் கனவாகி, எதிர் காலம் உருவாகிறது.

கழனியில் காவலிருக்கும் கணவனுக்குப் பதில், ஒரு சோளக்கொல்லேப் பொம்மை!

தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தைக்குப் பதிலாக' கூரைமீது வீழ்ந்துகிடக்கும் ஒரு மரப்பாச்சி!

தரையில் படுத்துறங்கும் தையலுக்குப் பதிலாக, ஒரு ஓவியம்!

தம்பி! இந்த நிலேயிருப்பின், எண்ணமும் இல்லே; எண்ணத்துடன் இணேந்து பிறக்கும் இன்பக் கனவும் இல்லே; அதன் தொடர்பாகவும், விளேவாகவும் ஏற்படும் எதிர்காலத் திட்டங்களும் இல்லே.

நடைபெறக்கூடியது; நடைபெற இயலும் என்பதை உறுதிப்படுத்தும் விதமான, அடிப்படை நிலே; இந்த அடிப்படை நிலேயை வைத்து, என்னென்ன விதமான, ஏற்றமிகு செயல்களே, செம்மைகளே, சீர்களேப் பெறமுடியும் என்பதற்கான எண்ணம்—இவை இருப்பின், எண்ணம் ஈடேற வழி கிடைக்கும்; எத்தனே பேர், ஏளனம் பேசிடினும்.

பருத்திச் செடி கண்டு, துணிபற்றி எண்ணிடலாம்; துணி கிடைக்கும் வழி உண்டு, பருத்திமூலப் பொருளாக இருப்ப தனுல்.

வில்வக்காய் கண்டு, நூலாக்கித் தரி அமைத்து நெய்து ஆடைதனேப் பெற்றிடலாம் என்று எண்ணிடுவது, பேதைமை.

உண்மை நிலேயுடன் உயர்வளிக்கும் கற்பனே கலந்து விட்டால், இன்பக் கனவுகளே, விழித்த நிலேயிலும் காண்பர், வித்தகர்கள்.

பட்டப்பகலிலே

பாவலர்க்குத் தோன்றுவதாம்

நெட்டைக் கனவின்

நிகழ்ச்சி

என்ருர் பாரதியார்.

தம்பி! புன்னேமரம் நிற்கும் புனலிடம் சென்ற பூவை, கடிமணம் செய்யும் நோக்குக்கொண்ட காளேயைக் கண்டாள் என்று தாய் மனம் கொண்ட எண்ணம், கனவினில் உருவம் பெற்றதுபற்றிக் கூறினேன். அவள் அதனேயே, கழனியி னின்றும் திரும்பிய தன் கணவனிடம் கூறுவளேல், என்ன சொல்வான்?

காவல் காத்திருந்த அலுப்பின் மிகுதியால், அவன் வாடிக் கிடப்பானேல், "சரி! சரி! இதுமட்டுமா, கனவு காண்பாய்! எட்டடுக்கு மாடியிலே, உன் செல்வி இருப்பது போலவும், பத்துப் பதினெட்டுத் தோழியர்கள் அவளேப் புடைசூழ நிற்பது

போலவும், தங்கத்தாலான பல்லக்குதனில் ஏறி, நீ அவளைக் காணச் செல்வது போலவும்கூடக் கனவு காண்பாய்! கனவுதானே!! காலால் வைரத்தை உதைக்கலாம், கண்ணால் 'கைலாய'த்தைக் காணலாம், விதைக்காமலே அறுத்தெடுக்கலாம், விண்ணிலவு வீட்டு விளக்காகக் காணலாம்!"—என்று கேலி செய்திடக்கூடும்.

அவன் மனமும் உடலும் களைப்பினால் தாக்கப்படாமலிருந்தால், "என்ன? என்ன? சொல்லு? சொல்லு! இன்னொரு முறை சொல்லு! புன்னை மரமா? பெரிய மரமா! நிறையப் பூவா! நமது செல்வி அங்கு சென்றாளா? குடமெடுத்தா? தங்கக் குடமா! அவ்வளவு தூரமா நடந்து சென்றாள்! கால் என்ன வலித்திருக்கும்......" என்று கேட்பான், களிப்புப்பெறுவான், களிப்பூட்டுவான்.

இருவருக்குமே, பிறிதோர் நாள், மனநிலை சரியாக இல்லையெனில்,

கனவுகான வேண்டியதுதான்! வேறு; என்று சலித்துக் கொள்ளக்கூடும்.

கனவு கண்ட கன்னிபோல, ஒரு இல்லத்துப் பெண் தன்னைச் சிற்றரசன் சிறை எடுத்து, வாயுவேக மனோவேகமான குதிரைமீது அமர்த்திக்கொண்டு, தடுத்திட வந்தவர்களின் தலைகளைக் கொய்துவிட்டுக், கடுகிச் சென்றான் என்று கனவு கண்டு, அப்படிப்பட்ட சிற்றரசன் வரவு நோக்கிக் காத்துக்கிடக்கலாமா? என்று கேட்பார், உளர்.

எனவேதான்! தம்பி! தாய், தன் மகவுபற்றிக் கொண்டிடும் எண்ணம், கனவு வடிவமெடுத்தால், எங்ஙனமிருக்கும் என்பதுபற்றிக் கூறினேன்.

தமது எதிர்காலம், தமது குடும்ப எதிர்காலம், தாம் நடத்தும் தொழிலின் மேம்பாடான எதிர்கால்ம், இவை பற்றித் தோன்றிடும் ஆசைகள் கனவு வடிவமாகினால், வடிவமாகியதுடன், அது நடைமுறையில் பலித்தும்விட்டால் அதனால் பலன், அந்தக் குடும்பத்துக்கு மட்டுந்தான்.

நாடுபற்றி, சமுதாயத்தைப்பற்றி, நல்லோர்கள் கொள்ளும் எண்ணம், அவர்கள் நாட்டினிடம் சமுதாயத்தினரிடம் கொண்டுள்ள பற்று எத்தகையது என்பதைத்தான் முக்கியமாகக் காட்டிடும்,

நாட்டிலேயும் சமுதாயத்திலேயும், காணக்கிடக்கும், மூண்டுகிடக்கும், சீர்கேடுகள் நலிவுகள் ஆகியவற்றினைக் கண்டு, மனம் உளையும் நிலைபெற்ற சீலர்கள், அந்தச் சீர்கேடுகள் ஒழிக்கப்பட்டுச், செம்மை ஏற்பட்டு, நாடோ, சமுதாயமோ, நல்ல நிலைமைபெற வேண்டும்; அதற்கு வழிவகை என்ன என்று எண்ணுவர்—பட்டப்பகலிலே தோன்றும் கனவு அது.

அத்தகைய கனவு, பலித்துவிடுகிறது.

கனவு காண்கிறான், கருத்தற்றவன்!—என்று கூறிடுவர், தம்மை நிறை அறிவு பெற்றவரெனக் கருதிக்கொள்ளும், மண்டைக்கனம் பிடித்தோர்.

கனவு காண்கின்றான்—! என்று பலருடைய எண்ணத்தைக் கேலி பேசினர்—நாடு இன்று அத்தகைய கனவு கண்டவர்களின் கனவு நனவாகி நிற்பதைக் கண்ணுற்று!!

கனவுகளின் தன்மையைவிட, எத்தகைய விதமாகவெல்லாம் கனவு காண்கின்றனர்; காண இயலும், என்பது குறித்தும், அதனால் கிடைத்த பலன்பற்றியும், அடுத்த கிழமை எழுதுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

3-9-61

கடிதம் : 143

பட்டப் பகலில்...! (2)

நினைவு மறத்தல்—

இட்லரின் போர்முறை—

கனவு நனவாதல்

தம்பி!

சென்ற கிழமை, தொட்டிலில் படுத்துத் துயிலும் தன் மகவு குறித்துத் தாய் காணும் கனவுபற்றி எழுதியிருந்தேன்; மேலும் எழுதுவதாகவும் வாக்களித்திருந்தேன்.

உனக்குக் கடிதம் எழுதி முடித்த பிறகு தொடங்கிய சுற்றுப்பயணம், சற்றுக் கடுமையானது, தம்பி! ஆனால், தவிர்க்கவே முடியாத, தவிர்க்கக்கூடாத நிகழ்ச்சிகள்; எனவே, இந்தக் கிழமை உனக்குக் கடிதம் எழுதத் தொடங்கும்போது உள்ளபடி அலுப்புத்தான்—ஆயினும், அதைப் போக்கிக் கொள்ளக்கூட உன்னுடன் உரையாடுவது மெத்தப் பயன்படும் மாமருந்தல்லவா!!

ஒவ்வொருவருக்கு, அவ்வப்போது ஏற்படும் நினைவுகளே கூடச் சிறிது போதில் கலைந்தும், சிதறியும், சிதைந்தும், குறைந்தும் போய்விடுகிறது, அறிவாய்.

என்னமோ நினைத்தேன் — மறந்துவிட்டேன்......என்று பேசுவது கேட்டிருப்பாய். நன்றாகக் கவனப்படுத்திச் சொல்லு—ஒன்றுக்கு மற்றொன்று சொல்லிவிடாதே! நினைவு படுத்திக்கொண்டு சொல்லு—என்று மற்றவர்கள் கூறுவதும் கேட்டிருப்பாய்.

நேற்று நடந்தது, இன்று அவனுக்கு நினைவிலிருக்காதே! அவ்வளவு தெளிவு!!—என்றும்,

அவனுக்கு அதெல்லாமா நினைவிலே இருக்கும்—பெரிய ஆள் அல்லவா—எத்தனையோ வேலை—இந்தச் சாதாரண விஷயமா நினைவிலே இருக்கும்—என்றும்.

உனக்கு எங்கே அப்பா, இதெல்லாம் இப்போது நினைவிலே இருக்கப் போகிறது—காலம் மாறிவிட்டதல்லவா, உன் நிலையும் மாறிவிட்டது, நினைப்பும் மாறிவிட்டது—என்றும்,

கேலியாகவும், கோபத்துடனும், இடித்துரைக்கும் போக்கிலும் ஒருவரைப்பற்றி அவருடன் தொடர்புகொண்ட மற்றவர் பேசுவது, கேட்டிருப்பாய்.

நினைவு என்பதே பல்வேறு காரணங்களாலே கலைந்தும், குலைந்தும், சிதைந்தும் சிதறியும் போவதுண்டு.

அப்பாவித்தனம், அகம்பாவம், தொல்லைகள், நிலைமையில் மாற்றம், இவைபோன்ற காரணங்களால் நினைவு மாறிவிடுவதுண்டு.

சிலர், வேண்டுமென்றே, நினைவு இல்லாததுபோல, நடிப்பதுண்டு—தமது வசதிக்காக!

சிலர், எதிலேயும், தாம் பற்றற்றவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளவேண்டியேகூட, எதுவும் தமது நினைவிலே தங்குவது இல்லை, என்று கூறி, அப்படிக் கூறிக் கொள்வதிலேயும் பெருமை இருப்பதாக எண்ணிக் கொள்வதுண்டு.

தலையைச் சொரிந்துகொள்வது—நெற்றியைத் தடவிக் கொள்வது — புருவத்தை நெரித்துக்கொள்வது — இப்படி எல்லாம், செய்வர், நினைவிலே இருந்து கலைந்து விட்ட எண்ணத்தை மீண்டும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவர!

ஒருநாள், மரப்பொந்து ஒன்றிலே குடியிருந்து வந்த சிறு பறவையின் குஞ்சு, கீழே, தவறி வீழ்ந்துவிட்டது; பல ஆண்டு

களுக்கு முன்பு என் கரத்தில் சிக்கிற்று. கொள்ளை ஆசை எனக்கு, அதனை வளர்க்கவேண்டும் என்று என்னதான் ஆசையுடன் நான் இருப்பினும், அதன் தாயன்பு அதற்கு என்னிடம் கிடைக்குமா? கிடைக்காது! கிடைக்காது! உன்னால் முடியாது! நீ, பழம்தருவாய், பால் ஊற்றித் தருவாய்! வேளையறியாமல், என் விருப்பம் தெரியாமல்! ஆனால், என் தாயின் அரவணைப்பிலே எனக்குக் கிடைக்கும் 'கதகதப்பு' இருக்கிறதே, அது அல்லவா, எனக்குப் பேரின்பம் ஊட்டி வளர்க்கிறது! உன்னிடம் ஏது, அந்தக் 'கதகதப்பு' அளிக்கும் வல்லமை! நீயோ, மனித இனம்—வேட்டைக்கார ஜாதி! நானோ, பறவை இனம்—உன் பிடியில் சிக்காமல், தயவு நாடாமல், வானத்தில் வட்டமிடும், வானம்பாடி! என்னை விட்டுவிடு! என் இச்சையாக நான் சிறகடித்துப் பறந்திடுவேன்—சிந்துகளும் பாடிடுவேன்! தொலைவிலே இருந்து கேட்டு இன்பம் பெறு—அதற்காக எனக்கொன்றும் தரவேண்டாம்!! தாயன்பு பெறுவதைத் தடுத்திடாதே, விட்டுவிடு!—என்றெல்லாம், பேசுவதுபோலக் குருவிக்குஞ்சு கிறீச்சிடுகிறது—அதனாலேயே அலுத்தும் போகிறது; தன் வலிவற்ற மூக்கினால் என் விரலைக் கொத்துகிறது; வலிதாள மாட்டாமல் துவண்டுபோகிறது!

தம்பி! இந்த நிலையில், வேறு மரம் சென்றிருந்த தாய்ப் பறவை வந்தது; சரேலெனப் பொந்து நுழைந்தது; அடுத்த கணம், கிறீச்சிட்டபடி வெளியே வந்தது, கிளையின் அருகே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது; இங்கும் அங்கும் தேடுகிறது, பாடும் பறவை! மீண்டும் கூட்டுக்குள் போய்ப் பார்க்கிறது, வெளியே வருகிறது, வேதனையும் கோபமும் கலந்த குரலில் கூவுகிறது.

நாடகம் தீட்டுவோர், சேயினைக் காணாது தவிக்கும் தாய், என்னென்ன விதமாகத் தத்தளிப்பாள், ஏதேது கூறிக் கதறுவாள், என்னென்ன விதமாகக் கூவி அழைப்பாள், எங்கெங்கு தேடிடுவாள், எவரெவரைக் கேட்டிடுவாள், என்பதுபற்றி அழகுறத் தீட்டுவர்—பார்த்திருக்கிறோம்—இந்தப் பாடும் பறவையின் பரதவிப்பினை, எத்துணை திறம் படைத்த நூலாசிரியராலும் அப்படியே சித்தரித்தளிக்க முடியாது. கண்டால் மட்டுமே விளங்கும். கூறக் கேட்கும் போது, மிகைப்படச் சொல்வதாகக்கூடத் தோன்றும்.

தம்பி! எனக்குச் சிறிதளவு அச்சமேகூட ஏற்பட்டு விட்டது போயேன்! அந்தக் குருவி, என் உள்ளங் கையில், தன் இன்பம்,

சிறைபட்டு இருப்பது அறிந்து, எங்கே, என் கண்களைக் கொத்திவிடுகிறதோ என்று பயந்தேன்.

மற்றொன்று கேள், தம்பி! பறக்கக்கூடத் தெரியாத அந்தக் குஞ்சு, என் பரிவு, பச்சாதாப உணர்ச்சியினைப் பெற்ற அந்தக் குருவிக்குஞ்சு, தாய்க்குருவியின் குரல் கேட்டு, அச்சத்தையும் அலுப்பினையும் மறந்து குரல்கொடுக்கிறது!! ஆமாம், தம்பி! தன்னைத் தாய் தேடுகிறாள் என்பதறிந்து, "இதோ! இதோ இருக்கிறேன்! இவனிடம் சிறைபட்டுக் கிடக்கிறேன்!" என்று தெரிவிக்கிறது.

விட்டுவிட்டு, மாறிமாறி இரு குரல்கள்! பாசத்துடன் தேடும் பாடும் பறவையின் அழைப்புக்குரல்!! பரிவுடன், பதில் அளிக்கும் குரல்!!

கோபந்தான் எனக்கு—ஒரு சின்னஞ்சிறு குருவி, மரப்பொந்து வாழும் தாய்க் குருவிக்காக, இத்தனை கத்துக் கத்துவதா!! நம்மை அவ்வளவு துச்சமாக மதிக்கிறது!—என்று எண்ணினேன். உள்ளங்கையிலிருந்து அதனை விடுத்தேன்—தத்தித்தத்தி நடந்தது—தாய்க் குருவி கண்டுவிட்டது—தம்பி! நல்ல இசை நிகழ்ச்சியின் போது, பக்க வாத்யக்காரர்களின் 'வாசிப்பை'க் கேட்டிருக்கிறாயல்லவா? இவரா? அவரா? மிருதங்கமா? கஞ்சிராவா? எவருடைய வாசிப்பிலே, நயமும் லயமும், மிடுக்கும் எடுப்பும், மிகுந்து காணப்படுகிறது என்று மன்றத்துள்ளோர், வியந்து எண்ணியபடி இருப்பர்! இறுதிக் கட்டத்தில், இருவரும் ஒன்றாக இணைந்து விடுவர். ஒலிகள் இழைந்துவிடும், இனிமை மிகுந்து விடும்! அதேபோல, இங்கு, தாய்க் குருவியின் குரல், குஞ்சு எழுப்பும் குரலோசை, நிந்தி நிந்தி நிந்நின்னி, தத்ததத்த இந்த ஒலிகளின் இனிமைபோல, இரு குரலிசை, மாறிமாறி, விட்டுவிட்டுப் பிறகு இணைந்து, இழைந்து ஒரே இனிமையாகிவிட்ட நிலை; அழைத்துக் கொண்டே போய்விட்டது தாய்க் குருவி, குஞ்சினை! பொந்துக் குள்ளே, தாயும் சேயும்! கதகதப்பும்! மகிழ்ச்சி மிக்க கிறீச்சொலி! எனக்கே, கோபம் மாறி, மகிழ்ச்சி பிறந்தது!! இயற்கையாக இருக்கவேண்டிய நிலை இது!!—என்று எண்ணினேன்—இந்த நிலை கெட்டல்லவா போயிருக்கும், அந்தக் குருவிக் குஞ்சினை நாம் கூண்டிலிட்டு வளர்த்தால், என்று கூடத் தோன்றிற்று.

தம்பி! பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி; இப்போது, ஏன் என் நினைவிற்கு வந்தது? நினைவு எப்படி

யெப்படிச் சிதையும், கலையும், மீண்டும் அதனைத் தேடிப்பெற என்னென்ன செயல் வேண்டும் என்று எண்ணியபோது, பொந்திலிருந்து தவறிப்போன குஞ்சுதனைத் தேடித் தாய்ப் பறவை தத்தளித்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது.

நமது நினைவு, சிதறிப்போய், மீண்டும் அதனைத் தேடிப் பெறுவதுகூட, இதுபோலத்தான். தத்தளிப்பு! தவிப்பு! அழைப்பு! கண்டுபிடிப்பு! களிப்பு! திரும்பப் பெறுவது! முழு மகிழ்ச்சி!!

“அப்பாடா! இப்போதுதான் நினைவிற்கு வந்தது!!”—என்று வெற்றிக் களிப்புப் பொங்கிடும் நிலையில் பேசுகிறோமல்லவா சில வேளைகளில்—இதுதான் தம்பி! தாய்க்குருவியும் அதன் குஞ்சும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டன!!—என்று பொருள்.

பேழைக்குள் போட்டு வைத்திருக்கும் பல பொருள்களுக் கிடையிலே, சிக்கிக்கொள்ளும் ஏதேனும் ஒரு பொருளைத் தேடும்போது, எப்படி இருக்கிறது நிலைமை! அதேதான்!! பல விஷயங்கள் நினைவிலே இருக்கும்,— ஏதோ ஒன்று மட்டும் நினைவிலிருக்காது—அடே அப்பா!—அதை மீண்டும் நினைவிலே கொண்டுவர, என்ன பாடு படவேண்டியிருக்கும் தெரியுமா? ஆனால், தம்பி! சிதறியதும் கிடைத்துவிட்டால், நினைவிலிருந்து விலகியது மீண்டும் நினைவிற்கு வந்துவிட்டால், எத்துணை களிப்பு, என்கிறாய்!! ஏதேனும் ஒரு அலுவலிலே, பொருளிலே, எண்ணத்திலே, நாம் நம்மை மிகுதியும் ஈடுபடுத்திக்கொண்டு விடுவோமானால், அதிலேயே, நமது நினைவு முழுவதும் இணைந்துபோய் விடுமானால், வேறுபல விஷயங்களிலே நமக்கு நினைவுக் குறைவு மிகுதியாக ஏற்பட்டுவிடும்.

ஏதோ நினைப்பிலே, இதனை மறந்துவிட்டேன்!—என்று பலர் பேசக் கேட்டிருக்கிறாய், அல்லவா?

நீண்ட நாட்களாகத், தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற கணவன், வீடு திரும்பும் சேதி கேட்டால், துணைவிக்கு அந்த ஒரு நினைப்பே மிகுதியாகிவிடும்—வேறு எதுவும் நினைவிலே இராது, என்பர் புலவர். கழுத்தணியைத் தலையிலிட்டும், சூட வேண்டியதைச் சொருகியும், சொருகவேண்டியதைச் சூடியும், அஞ்சனத்தைப் புருவத்துக்கிட மறந்தும் போவராம் மாதர்.

காதலால் கட்டுண்டு கிடப்போர் அப்படித்தான்—நினைவு தடுமாறியிருப்பர், என்று எண்ணிவிடாதே, தம்பி! எந்த ஒரு

உணர்ச்சி மேலிட்டு, நாம் அதன் வயப்பட்டுப் போய்விட்டா லும், இதே நிலைதான்!

பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர்—உடற்கூறு பற்றிய நுண்ணறிவு மிக்கவர், ஒருநாள், மாணவர்கட்கு, தவளையின் உடற்கூறு எவ்விதம் உளது என்பதுபற்றிய பாடம் நடத்த எண்ணிப் பெரிய தவளையொன்றினைக் காகிதத்தில் சுற்றித் தம் சட்டைப்பையில் திணித்துக்கொண்டார். உணவு உட்கொள்ளக் கூட நேரமில்லை. போகிற வழியிலேயே தின்றுகொள்ளலாம் என்று, ரொட்டித்துண்டு ஒன்றினை வேறோர் காகிதத்தில் வைத்து எடுத்துக்கொண்டார். வழிநடந்தார்.

தவளையின் உடலைக் கீறிக்காட்டி, அமைப்பு உள்ள விதம் பற்றி விளக்கம் அளித்து, மாணவர்க்கு நல்லறிவு புகட்ட வேண்டுமென்பது பற்றிய எண்ணமே மேலிட்டிருந்தது; அந்த எண்ணம் அவரை ஆட்கொண்டுவிட்டது.

வகுப்பறை சென்றார்; மாணவர்களை அழைத்து, “மாணவர்களே! இன்று, தவளையின் உடற்கூறுபற்றிய பாடம்; தவளையின் உடலமைப்பு எப்படி இருக்கிறது என்பதைக் காட்ட, இதோ ஒரு தவளை கொண்டுவந்திருக்கிறேன்” என்று கூறியபடி, பொட்டலத்தை எடுத்து மேஜைமீதுவைத்துப் பிரித்தார்; ரொட்டித்துண்டு இருந்தது; திகைத்தார்; சட்டை யின் மற்றப் பையைத் துழாவினார்—ஏதும் இல்லை!!

“நன்றாக நினைவிருக்கிறதே! தவளையைக் காகிதத்தில் சுற்றிச் சட்டைப்பையிலே, வைத்த நினைவு தெளிவாக இருக் கிறதே! காணோமே!” என்று கூறித் திகைக்கிறார்.

தவளையைக் காகிதத்திலே சுற்றிச் சட்டைப் பையிலே வைத்த நினைவு பழுதுபடவில்லை; நினைவு, சரியாகவே இருக் கிறது.

அந்த நினைவுமட்டுமே அவரிடம்!

தவளையை இப்படி இப்படிக் கீறிக்காட்டவேண்டும்; அதன் உடலமைப்புப்பற்றி இன்னின்ன விளக்கம் அளிக்கவேண்டும் என்ற எண்ணமே, அவர் மனதில்; வேறு நினைவு இல்லை! என்ன செய்கிறோம் என்ற நினைவுகூட இல்லை!! அவ்வளவு இரண்டறக் கலந்துவிட்டார், தவளைபற்றிய பாடத்தை மாணவர்க்குக் கூற வேண்டும் என்ற நினைப்பில். அதனால், வருகிறவழியில், என்ன செய்கிறோம் என்ற நினைவுகொள்ளாமல், பொட்டலத்தைப்

பிரித்து, ரொட்டித்துண்டு என்று எண்ணிக்கொண்டு, பாவம், தவளையையே மென்று தின்றுவிட்டார்!!

தம்பி! நல்லவர்! எனினும் இப்பேராசிரியர், ஏதோ ஒரு நினைப்புக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட்டுக், கவனிக்கப்படவேண்டிய வேறு விஷயங்களைப் பற்றிய நினைப்பே இல்லாது போனர்; இந்த விபரீதம் ஏற்பட்டது.

ஒரு பொருளில் அல்லது எண்ணத்திலே, நம்மைப் பிணைத்துக்கொள்வதிலேகூட ஏற்பட்டுவிடக்கூடிய, கெடுதல் குறித்து விளக்கத், தவளை தின்ற பேராசிரியர் கதையைக் கூறுவர்.

நினைவிலே நிற்பது, எத்துணை வலிவுமிக்க ஆதிக்கம் செலுத்துகிறது, என்ற பாடமும் இதிலிருந்து பெற இயலும்!

ஒன்றில் மனம் ஈடுபட்டுவிட்டால், மற்றதெல்லாம் நினைவிலே தங்காது என்பதற்கும், இஃது ஓர் எடுத்துக்காட்டு.

ஒன்றுகூட நினைவிலிருந்து தவறிவிடவே செய்யாது! ஒவ்வொரு விஷயமும், தகவலும், விவரமும், இவருக்கு நினைவிலிருக்கும், என்று சிலர்பற்றிச் சொல்வார்கள். அவ்வளவு நினைவுத் திறமை கொண்டவர், என்பர்.

சிலர், உள்ளபடி, நினைவுத்திறமை மிகுதியும் உடையவர்களாகவும், அந்தத் திறமையை வளமாக வைத்திருப்போராகவும், இருக்கிறர்கள்.

அந்தத் திறமையினைச் செம்மையாக வைத்துக்கொள்வதை ஒரு கலையாகவே கொள்கின்றனர்.

தம்பி! வேறு சிலர் உளர்; எதையும் மறவாமல் நினைவிலே பதியவைத்துக்கொள்ளும் திறமை தம்மிடம் இருப்பதனுல், தாம் மற்ற எல்லாத் துறைகளிலுமே திறமைமிக்கவர், என்று கூறுபவர்; மற்றவர்களையும் அதனை ஏற்றுக்கொள்ளச் செய்பவர்.

எதனையும் நினைவிலே கொள்பவர்; நினைவு தவருதவர்; என்ற அந்த ஒரு திறமையினைக்கொண்டே மற்றவர்களை மிரட்ட முனைபவர்களும் உண்டு.

ஜெர்மன் நாட்டு அதிபராகி உலகை உருட்டி மிரட்டிய ஹிட்லர் அப்படிப்பட்டவரென ஒரு நூலாசிரியர் கூறுகிறர்.

எல்லாம் தமக்குத் தெரியும்!

எல்லாம் தமக்கு மட்டுமே தெரியும்!!

என்று கூறுபவர், ஹிடலர்; பிறரும் அதனை நம்பும்படி அவருடைய பல நடவடிக்கைகள் இருக்குமாம்.

ஹிட்லரைக் காட்டிலும் போர்த்திறன் மிக்கவர்கள், போர் முறை கற்றறிந்தவர்கள், போர்ப் பயிற்சி பெற்றவர்கள், பலர் இருந்தனர், அவரைச் சூழ்ந்தபடி.

அவர்களே வியந்து பாராட்டும்படி, அச்சப்படும்படி, அவர்களின் துறைகள் பற்றிய நுணுக்கங்களை, அவர்கள் கேட்டு வெட்கும்படி, ஹிட்லர், மளமளவென்று பேசுவார்; கேள்விகள் கேட்பார்; திருத்தங்கள் தருவார், திகைக்கவைப்பார்!! எடுத்துக் காட்டுக்கு இது :

> இன்ன நாட்டின் பேரில் இந்த மாதம் இத்தனையாம் நாள் படையெடுத்துச் செல்லவேண்டும்—டாங்கிப் படைகளை அனுப்பவேண்டும்.

என்று ஹிட்லர் உத்தரவு பிறப்பிப்பார். டாங்குப்படைப் பிரிவின் தலைவன், அந்த நேரம் படை எடுப்புக்கு ஏற்றது அல்ல என்ற எண்ணம் கொண்டவர்.

அவர் போர் பல நடாத்தியவர்! களம் பல கண்டவர்!!

ஹிட்லரைக் கண்டு தமது கருத்தை அறிவிக்க வருகிறர்.

ஹிட்லரிடம் முறையிடுகிறர்; படை எடுப்புக்கு இது ஏற்ற நேரம் அல்ல, என்பதற்கான காரணங்களைக் கூற, மனதிலே அவைகளைத் தொகுத்துத் தம்மைத் தயாரித்துக்கொள்கிறர்.

ஹிட்லர், அந்தப் படைப்பிரிவின் தலைவனிடம், முடுக்காகப் பேச்சைத் துவக்குகிறன்.

டாங்கிப் படைப் பிரிவின் தலைவன், நீ?

ஆம்! வழிபாட்டுக்குரிய தலைவரே!

இப்போது உன் வசம் உள்ள டாங்கிகள், எத்தனை?

ஆயிரத்து நானூறு!

பழுதானவை?

சில, டாங்கிகள்.........

அதாவது, உனக்கு அந்தக் கணக்குத் தெரியாது?

கவனிக்கவில்லை, குறிப்பு எடுத்துக்கொண்டு வரவில்லை......

சரி! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது?

போதுமான அளவு......

போதுமான அளவு என்றால்? எதற்குப் போதுமான அளவு! உம்! பெட்ரோல், எவ்வளவு இருக்கிறது என்பது, உனக்குத் திட்டவட்டமாகத் தெரியாது.........

மன்னிக்க வேண்டுகிறேன்......

டாங்கிப் படையினரில், இப்போது நோய்வாய்ப் பட்டிருப்போர் எத்தனை பேர், என்று தெரியுமா?

மருத்துவப் பிரிவினருக்குத்தான், அந்தத் தகவல் தெரியும்......

உனக்குத் தெரியாது?

ஆம்! அதிபரே!

உன்னிடம் உள்ள டாங்கியின் உருளை, எத்தனை டன்? எடை? தெரியாது!

தெரியாது!!

டாங்கி ஓட்டுபவர்களின் சட்டையில், எத்தனை பொத்தான்கள்?

சட்டை என்ன நிறம்?

பழுப்பு நிறமாக......

முன்பு! இப்போது, நிறம் மாற்றப்பட்டது...உத்தரவு பிறந்திருக்கிறது. உனக்குத் தெரியவில்லை. சட்டையிலே உள்ள பொத்தான்கள் 13. உனக்குத் தெரியவில்லை. டாங்கியின் உருளை, மூன்று டன்! உனக்குத் தெரியாது! நோய்வாய்ப்பட்டுள்ள டாங்கி ஓட்டுபவர்கள் 77! உனக்குத் தெரியாது. பெட்ரோல் மூன்று இலட்சம் காலன் இருக்கிறது! உனக்குத் தெரியாது! பழுதாகியுள்ள டாங்கி

கள் பதினாறு. உனக்குத் தெரியாது! நீ, டாங்கிப் படைப் பிரிவின் தலைவன்—உனக்கு, நீ தொடர்பு கொண்டுள்ள துறையிலே தெரிந்திருக்கவேண்டிய இவ்வளவு தகவல்கள் தெரியவில்லை!, அப்படிப்பட்ட நீ, உனக்குத் தெரியாததை எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டுள்ள எனக்குப் புத்தி கூற வருகிறாய், துணிவாக! படை எடுப்புக்கு இது ஏற்ற சமயம் அல்ல, என்று!! உன் மேற்பார்வையிலே இருப்பது பற்றியே உனக்குத் தெரியவில்லை! நான் கூறவேண்டி இருக்கிறது! நீ, போர்முறை பற்றி எனக்குப் புத்திமதி கூறத் துணிவு கொண்டுவிட்டாய்......

மன்னிக்க வேண்டும்; முற்று முணர்ந்த மூலவனே! எங்கும் இருப்பதும், நடப்பதும், இருந்த இடமிருந்தே, அறிந்துகொள்ளும் ஆற்றலரசே! என் அகந்தையை அழித்தீர்! அறிவு புகட்டினீர்! வாழ்க அதிபர்! வாழ்க அரசு! வருகிறேன், தலைவா!

சென்றுவா! எதிரியைக் கொன்று குவித்துவிட்டுவா!!

தம்பி! டாங்கிப்படைப் பிரிவுத் தலைவனே, கேட்டு மலைத்துப் போகும்படியான 'தகவல்களை' ஹிட்லர், அறிந்திருந்தது எப்படி, தெரியுமா?

டாங்கிப் படைத் பிரிவுத் தலைவன் தன்னைக் காண வருகிறான் என்று தெரிந்ததும், தன்னிடம் உள்ள தகவல் சேகரிப்புத் துறையினனைக் கொண்டு, ஒரு படைத்தலைவன், சாதாரணமாகக் கவனிக்கத்தக்கவை அல்ல என்று ஒதுக்கி விட்டிருக்கக்கூடிய விவரங்களைக் கொண்டுவரச் செய்து, அவைகளைக் கொட்டிக் காட்டி, படைத்தலைவனைத் திணற அடிப்பது, ஹிட்லர் முறை!!

இந்த விவரங்கள், படைத்தலைவனுடைய நினைவிலே இருக்கத் தேவைகூட இல்லை! இருக்காது. இந்த விவரங்களைப் பற்றிய நினைப்பிலே அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு விட்டால், மிக முக்கியமான, முடிவெடுக்கத்தக்க நுண்ணறிவு பெற நேரம்கூடக் கிடைக்காது. எனவேதான், பழுதான டாங்குகளின் எண்ணிக்கை, சட்டையில் உள்ள பொத்தான் களின் எண்ணிக்கை, உள்ள பெட்ரோலின் அளவு போன்றவை கள் அவன் நினைவில் இல்லை. ஹிட்லர். இவைகளைப்பற்றிக் கேட்கக்கூடும் என்று அவன் எதிர்பார்த்திருக்கக்கூடமாட்டான். வேறு முக்கியமான பிரச்சினைகள் குறித்துப் பேசுவார்; எதிரி

நாட்டிலே உள்ள ஏற்பாடுகளின் தன்மைபற்றி எடுத்துரைக்கலாம்; போர் செய்திடப் பொன்னான வாய்ப்பு, மூன்று திங்களிலே ஏற்படும் என்பதற்கான காரணங்களை விளக்கலாம்; என்று அவன் சொன்னான். ஹிட்லரோ, சட்டையிலுள்ள பொத்தான்கள் எத்தனை என்று கேட்டுவிட்டார்; தெரியவில்லை கூற; திணறுகிறான்; ஆனால் உலகை ஒரு குடைக்கீழ் ஆளும் வல்லமை மிக்கோன், தந்தையர் நாட்டுக்குப் புதியநிலை ஏற்படுத்திக் கொடுத்த தலைவன், இந்தப் பொத்தான் கணக்கினைக்கூட அறிந்துவைத்திருக்கிறானே! நாம் இதனை அலட்சியப்படுத்தினோம்—நம் அதிபனோ, இதனையும் அறிந்து வைத்திருக்கிறான்! இல்லாமலா, அதிபர் என்ற நிலைக்கு, ஆண்டவன் இவரை உயர்த்தியிருக்கிறார். இத்துணை அறிவாற்றல் மிக்கவர், படை எடுப்புக்கு நாள் குறித்தால், எல்லாம் அறிந்துதான் குறித்திருப்பார்! நாம், யார், அதைக் குறைகூற; ஐயப்பாடு; எழுப்ப! அதிபர் அறிவார் அனைத்தும்!! —என்றுதான், படைப்பிரிவுத் தலைவனே எண்ணுவான், பேசுவான், பாராட்டுதலுடன்.

ஆனால் உண்மையில் ஹிட்லர், போர்த்துறைப் பிரச்சினைகளிலே வல்லவன் அல்ல, என்பது, அவன் ஒரேநேரத்தில், பலமுனைகளில் களங்களை உண்டாக்கிக்கொண்டு கெட்டொழிந்ததால், விளக்கமாகிறது.

அந்த முடிவு எழுகிற வரையில், ஹிட்லர் கொட்டிக் காட்டிய, 'தகவல்கள்'—எதுவும் தன் நினைவிலே பதிந்து இருக்கும் என்று எடுத்துக்காட்டியது, ஆகியவற்றைப் பார்த்து உடனிருந்தோர் மட்டுமா, உலகினரே, மலைத்துக் கிடந்தனர்.

தம்பி! இதுபோலவே, மிகச்சாதாரணமான, அடிப்படையல்லாத தகவல்களைச் சேகரித்து நினைவிலே வைத்துக் கொண்டு, உடனிருப்போரைத் திணற அடிக்கும் கருத்துக் கழைக்கூத்தர் நிரம்ப இருக்கிறார்கள்; பார்த்திருப்பாய்.

அவர்கள் தம்மை, ஆதாரமளிக்கும் ஆற்றல் மிக்கோர் என்றும், புள்ளிவிவரப் புலிகளென்றும், பிறர் எண்ணிக் கொள்ளும்படி நடந்துகொள்வர்.

உழவர்களுக்குப் பொறுக்கு விதைகளின் அருமை பற்றிய தகவல் அளிப்பர்; ஏர் பூட்டி ஓட்டி அறியார்! வணிகர்களுக்கு, ஜாவா சர்க்கரையால் கிடைக்கக்கூடிய இலாபம் பற்றி எடுத்துரைப்பார்கள்; ஒரு தொழிலிலும் ஈடுபட்டு இலாபம்

பெற்றவர்களாக இருக்கவே மாட்டார்கள். இசைவாணர்களின் இல்லத்தின் அளவிலிருந்து அவர்கள் பூசிக்கொள்ளும் கலவை விலை வரையில் தகவல் தருவார்கள்; பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் உள்ள தொடர்புகூடத் தெரிந்திருக்காது. மூன்றடுக்கு மாடிவீடு எவ்வளவு சிக்கனமாகக் கட்டி முடிக்கமுடியும் என்ற திட்டம் தருவார்கள்; தாம் இருக்கும் வீட்டிலே கூரையில் ஒழுக்கல் இருக்கும்.

தம்பி! இப்படிப்பட்டவர்கள், நிரம்ப இருக்கிறார்கள்!

இவர்கள், பல தகவல்களை நினைவிலே வைத்துக்கொள்வர்; கேட்பவர்களை மலைக்கச்செய்ய; வேறு கவைக்குதவும் விதமாக அல்ல.

நான், குறிப்பிட்ட 'நினைவு', இவை போன்றது அல்ல.

ஆய்ந்தறிந்துகொண்ட நினைவுகள்!

அந்த நினைவுகளேகூடச் சில வேளைகளிலே, கலைந்தும் குலைந்தும் போகின்றன; சிதைந்தும் சிதறியும் போய்விடுகின்றன என்றால், 'கனவு', கண்டது கண்டபடியேவா, நினைவிற்கு வரும்? வாராது! ஆனால், கனவுகள் கண்டனரே, பலர்!! தாம் கண்ட கனவுகளைப் பிறருக்கும் எடுத்துக் கூறியுள்ளனரே! அம்மட்டோ! கனவுகள் நனவாகக் கண்டும் உள்ளனரே? அஃது எங்ஙனம் எனின், அவர்கள் கண்ட கனவுகள், பட்டப்பகலில்! கண்விழித்த நிலையில்!! அவர்களின் கனவு என்பது அவர்கள், தமது எண்ணத்தை வண்ணக்குழம்பாக்கி, அது கொண்டு தீட்டிய ஓவியம்—தமது நெஞ்சத் திரையிலே தீட்டிவைத்த ஓவியம்! அதனைக் காணவேண்டின் அவர்தம் நெஞ்சத்தை அறிதல் வேண்டும்.

ஊமை கண்ட கனவு ஊருக்குத் தெரியாது!

உலுத்தன் காணும் கனவை, ஊருக்கு உரைக்க மாட்டான்.

உத்தமரின் கனவுகள், நனவாகிவிடுகின்றன; உருப்படாதாரின் நனவுகள் கனவாகிப் போகின்றன.

எல்லாம் வெறும் கனவு!

என்று ஏளனம் கிளப்பக் கேட்டிருக்கிறோம்.

கனவில்தானே! எல்லாம் காணலாம்!!

என்ற கேலிப்பேச்சுக் கேட்டுள்ளோம்.

கனவு காண்கிறான்!

என்று ஆதிக்கக் குரலிற் பேசக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், தம்பி! கனவுகள் நனவாகியுள்ளன!

விடுதலை வரலாறுகள், விஞ்ஞான வெற்றிகள், கனவுகள் நனவானதன், விளைவுகள்— அறியோமா!!

ஆற்றோரம்! அந்தி சாயும் நேரம்! ஊர்ந்து செல்லும் நிலையிலுள்ளான், உடலெங்கும் புண்பட்டான்!! போர் வீரன்— வாளிழந்தான், உடல் வலிவிழந்தான், உயிர் இழக்குமுன், வெற்றி பெற்றாகவேண்டும் என்ற எண்ணத்தான். இக்கரையில் படுத்தபடி, எதிர்ப்புறம் நெடுந்தொலைவில், தெரியும் எதிரிகளின் நடமாட்டத்தைக் காண்கிறான்; கோபம் கொப்பளிக்கிறது! கண்களிலே ஓர் ஒளி—வெறிகொண்டவனோ என்று எண்ணுவர், அதனைக் காண்போர்! கண் எதிரே, மாற்றார்! கட்கமேந்த இயலவில்லை!! நெஞ்சம் நெருப்புடை உலையாகிறது! ஏதேதோ எண்ணுகின்றான்!! தம்பி! முகத்திலே ஓர் மகிழ்ச்சிக் குறி தெரிகிறது! ஏன்? எதையோ காண்கிறான்—எதிர்காலத்தில் ஒரு சிறு பகுதியை!! கனவு காண்கிறான், தம்பி! கனவு. கேட்போமா! அவனை, வீரனே! நீ காணும் கனவு என்ன என்று? பாவம், களைப்பு மேலிடுகிறது, அவனுக்கு; பிறகு கேட்போம்!

அண்ணன்,

10-9-61.

கடிதம் : 144

பட்டப்பகலில்...! (3)

கனவின் தன்மை—

மேனாட்டார் கனவுகள்—

தம்பி!

களத்தில் கடும் போரிட்டுக் களைத்துப்போன வீரன், ஆற்றோரத்தில், அந்திசாயும் நேரத்தில், படுத்தபடி, எதிர்ப்புறம் நடமாடிக்கொண்டிருந்த எதிரிநாட்டுப் படையினரைக் கண்டு, கலங்கினான்; மனம் பாடுபட்டது; ஏதேதோ எண்ணிக் கொண்டான்; விழித்த நிலையிலேயே கனவு காண்கிறான்— என்று குறிப்பிட்டிருந்தேன். அவன் எண்ணம் என்ன என்று அறிய ஆவலாக இருந்திருப்பாய் என்பது தெரியும்; தெரிந்து? என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? சென்ற கிழமை ஒய்வே இல்லை! தரப்படவில்லை!! இப்போது மட்டும் என்னவாம்! உனக்கு மடல் தீட்டிக்கொண்டிருக்கிறேன்—துவக்குகிறேன்— கீழே சித்தாத்தூர், தூசி, உக்கல், வெங்களத்தூர் என்று ஊர்ப் பெயர்களையும், அங்கு செல்லவேண்டிய நேரம் பற்றியும், வடாற்காடு வட்டத் தோழர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். திருமண வீட்டிலே சாப்பாட்டுக்கு எப்போது அழைப்பார்கள்— சாப்பிடாமல் போய்விட்டால் சங்கடப்படுவார்கள்—நேரமோ அதிகமாகிறது—எப்போது அழைப்பார்களோ—என்று

எண்ணியபடி, எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடி, கலியாண வீட்டையே பார்த்தபடி இருப்பது உண்டல்லவா? அடிகள், அப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறார், எதிர்த் திண்ணையில். எனக்கு உள்ள கஷ்டம் தெரியும்; எனவே வற்புறுத்த மனம் இடம் தரவில்லை; ஆனால் தம்பிக்குக் கடிதம் இல்லை என்றால், தவிப்பு ஏற்படுகிறது, அதனையும் கவனித்தாக வேண்டும், அந்த நிலையில் அடிகள்!

ஆனால், இந்த நிலை இன்னல் நிரம்பியதாகுமா? கன்னலைத் தின்னும்போதுகூடத்தான், இரத்தம் கசியும்படியான குத்தல் ஏற்பட்டுவிடுகிறது.

ஆற்றோரம் இருக்கிறானே, ஆற்றல் மறவன், அவன் நிலை, இன்னல் நிரம்பியது.

தாயகம் தாக்கப்படுகிறது; துடித்து எழுகிறான்! போரிடுகிறான்; எதிரியிடம் படைபலம் மிகுதி; பலர் மடிந்தனர்; சிலர் சிதறியோடினர்; சிலர் இவன்போல், பதுங்கிக் கொண்டுள்ளனர், நல்ல வாய்ப்பை எதிர்பார்த்தபடி.

என்னென்ன எண்ணம் தோன்றும் அந்நிலையில், வீரனுக்கு?

"நமக்கேன் இந்த வீண்வேலை! எவன் இந்த நாட்டை ஆண்டால் நமக்கு என்ன? அவனவன் பிழைப்பு அவனவனுடைய உழைப்பைப் பொறுத்து இருக்கிறது! கொடிமரத்திலே, எந்தக் கொடி பறந்தால்தான் நமக்கென்ன? கொலுமண்டபத்திலே எவன் கோலாகலமாகக் கொலுவிருந்தால்தான் நமக்கென்ன? நாமுண்டு, நமது உழைப்பு உண்டு! நாம் பணிந்துவிடுவதுதான் நல்லது. காட்டு மிருகம்போல், பதுங்கிப் பதுங்கி, பயந்து பயந்து, இருப்பதைவிட, தோல்வியை ஒப்புக்கொண்டு, வென்றவன் நாடாளட்டும் என்று இருந்துவிட வேண்டியதுதான்!" என்று எண்ணுவான். அவ்விதம் எண்ணுபவன், வீரனா? வீரமரபினன் ஆவானா? ஒருக்காலும் இல்லை.

உறங்கவில்லை! விழித்தபடி கனவு காண்கின்றான். ஒரு கனவு அல்ல; பல; மாறி மாறி!!

ஒரு அடவி! அடர்ந்த காடு. எதிரிப்படைப் பிரிவின் தலைவன் முகம் ஒருபுறம்! அதற்குச் சற்றுத் தொலைவிலேயே படைவீரர் தங்க, இருக்க, அமைக்கப்பட்டுள்ள பாசறைகள்—சிறுசிறு அளவில்;

தலைவன் முகாமுக்குள் இருந்து சிரிப்பொலி! இசையொலி! கையொலி! வளையொலி!

இவன், முகம் சிவக்கிறது! வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதையில் மதுவும் மங்கையும் தேடி, மகிழ்ச்சி வெறி கொள்கிறான், இந்த, மடையன்!! ஆடிப்பாடிப் பிழைக்கும் எவளையோ இழுத்துவந்து, பொழுது போக்குகிறான்! நம் நாட்டில்!! நமது நாட்டுப் பெண்ணொருத்தி! நமது நாட்டை வீழ்த்தியவனுக்கு...செ! எப்படித் தாங்கிக்கொள்வது?

"ஆடு என்பான்; அவள் ஆடுவாள்! மறுக்கவா முடியும்! கத்தி கடாரி கரம் கொண்டிருந்த என் போன்றோர்களே, காடுமேடு பதுங்கி இருக்கும் நிலை! அவள் என்ன செய்வாள், பாவம்!! ஆடுவாள்!! இவன் பாடுவான்!

"ஆடாதே! நிறுத்து! நமது நாட்டை நாசமாக்கியவன் முன்பு, ஏ! பெண்ணே! ஆடிடுவது தகுமா!! நாட்டுப் பற்றற்றவளே! நமது கோட்டையை அழித்தான். கொலு மண்டபத்தைக் குலைத்தான்! மன்னனைச் சிறையிட்டான்! வீரர்களைக் கொன்று குவித்தான்! அடி, விவரம் கெட்டவளே! அவன் அமர்ந்திருக்கிறானே, வேலைப்பாடு மிகுந்த பட்டு விரிப்பு, அது நம்முடைய அரசியாரின் பொற்கரங்களால் ஆக்கப்பட்டது!! அதன்மீது, அவன்! மாற்றான்! மதிகெட்ட மாதே! மதுக்குடம், அதன்மீது அரசியாரின் அருமைக் குமாரர் இருவரும், ஒருவரோடு ஒருவர் மற்போர் நடத்தி, இந்தப் பட்டு விரிப்பு மீதுதான், உருளுவார்கள்—அரசியார், கைக்கொட்டிச் சிரிப்பார்கள்! அந்தப் பட்டு விரிப்புமீது எங்கிருந்தோ வந்தவன், இறுமாப்புடன் இருக்கிறான். இளித்தபடி, அவன் எதிரே நின்று, ஆடுகிறாய்! ஆடாதே! நாட்டின் மானம் போக்காதே! ஆடற்கலை பயின்றாய், இந்த அக்ரமனுக்காக அல்ல!! ஆடாதே! ஓடு! களம் நோக்கிக் கடுகி ஓடு! நமக்காக, நமது நாடு காக்க, மரபு காத்திட, மானம் காத்திட, போரிட்டு மடிந்தனர் உடன்பிறந்த உத்தமர்கள்! பிடிசாம்பலாகிப் போயினர்!! அந்தச் சாம்பற் குவியலின்மீது நின்று ஆடு; நாடு அழிந்ததுபற்றி அழுதுகொண்டே ஆடு! எதிரியின் தலைகளைக் கொய்து, கீழே போட்டுக் காலால் துவைப்பதுபோல ஆடு! கால்கள் ஓயும்வரை ஆடு! களைத்துக் கீழே விழும் வரையில் ஆடு! ஆடிக்கொண்டே கிட! ஆவி போகும் வரையில், ஆடியபடி கிட! அங்கு! இடுகாட்டில்! கழுகுகளும் நரிகளும் வட்டமிடும் இடத்தில்! உடலைக்

கொத்தும். கழுகு; இவன் நமது உரிமையைக் கோத்தி அழித்து விட்டவன்! உதிரம் குடிக்கும், நரி; இவன், மது குடிக்கிறான்; நமது நாட்டு மானத்தைக் குடித்துவிட்டோம் என்ற மண்டைக் கனம் கொண்ட நிலையில்! இவன்முன் ஆடாதே! ஆடாதே!

ஆமாம்! ஆடமாட்டேன்! வெட்டிச் சாய்க்கட்டும். துண்டான கால்கள் துடிக்கட்டும், கரங்கள் துடிக்கட்டும், அந்த நாட்டியத்தைக் காணட்டும்! உயிரோடு இருக்கும் நான், ஆடமாட்டேன்!! இந்த நாடு, என் நாடு! இந்த மண், இந்த நாட்டு மக்களுடைய இரத்தம், வியர்வை, கண்ணீர் பட்டுப்பட்டு மணம் பெற்றுவிட்டது! புனிதமாகிவிட்டது! இதிலே, குழந்தையாகத் தவழ்ந்தேன்; குமரியாக நடந்தேன்; இன்று கூலிக்காரியாக ஆட முனைந்தேன்! நல்ல நேரத்திலே வந்தீர்கள், எனைத் தடுக்க. நான் ஆட போவதில்லை! நாட்டைப் பிடித்துவிட்டோம் என்று இறுமாந்து கிடக்கிறான்; இவன். இடிபாடுகளையும், பிணங்களையும்தான் காணவேண்டும்; மாளிகைகளையும், அங்கு அடிமை நிலையில்' உலவும் ஆடவரையும் பெண்டிரையும் அல்ல. நம்முடையதாக இருக்கும் வரையில்தான், நாடு! மாற்றானிடம் சிக்கினால், நாடாகுமா? காடு! சுடுகாடு!!

அங்கம், தங்கம்!—என்றனர்; அழைத்து வா, என்றேன்! இழுத்துவந்து நிறுத்தினார்கள்! என் மடியில் இருக்கத் தக்கவள்தான், என்று எண்ணினேன்! அடி, ஆடிப்பிழைப்பவளே! வலுவிழந்ததால், நாடிழந்தான்! திறமைமிகுதியால் வெற்றி வீரனானேன்! அவன் ஏதோ உளறுகிறான்; அவன் உரைகேட்டு, ஆடுவதை நிறுத்தி விட்டாயே! ஆகுமா இந்த அகந்தை!! மாற்றானின் மண்டையைப் பிளந்த கரங்கள் இவை! மலரணையில், உன் கால்களை வருடத் தயாராக உள்ளன!! பொறிபறக்கும் கண்ணினளாய்ப் போர்க்களத்திலே சுற்றினேன்; வெற்றி பெற்றேன்; காலமெல்லாமா, கரியுடன் கரி போரிடுவதை, கால்கை இழந்தவர்கள் துடிதுடிப்பதைக் கண்டபடி இருப்பது; கண்களுக்குக் கனிவு வேண்டாமா! உன்னைக் கண்டேன்! பாலைவனம் நடந்துசென்று, நெடுந்தொலைவில், பனி நீரோடையைக் கண்டவன் போலானேன்! அள்ளிப் பருகப்போகும்போதே அது கானல் நீராகிடவா வேண்டும்!! அவன் அனுபவமற்றவன். பிழைக்கத்தெரியாத அப்பாவி! நாடகம்! பற்றாம்! மரபாம்! மாண்பாம்! பொருளற்ற வார்த்தைகள்! இவன் நாட்டின் இலட்சணம் தெரியாதா, எனக்கு எங்கு பார்த்தாலும் பொட்டல் காடுகள்! எவரும், கடினமாக உழைத்தாக வேண்டும். பொன்விளையும் பூமியோ இது!! அது, எங்கள் நாடு! பொன்! முத்து! பவழம்! வீரம்! வெற்றி! செல்வபுரி!! அங்கு, கொடிபிடிக்கும் வேலையில் அமர்ந்தாலும் நிம்மதியாக வாழலாம். அதை அறியாமல், அவன் உழல்கிறான்; அவன் உளறுவதுகேட்டு, நீ ஆடலை நிறுத்தி விட்டாய்!! ஆபத்தைத் தேடிக்கொள்ளாதே! அழிவைக் கூவி அழைக்காதே! உயிரோடு இருக்கிறவரையிலேதான், அழகு, இளமை, துடிப்பு, எல்லாம்! பிறகு, பிணம்! காக்கைக்கும் கழுகுக்கும்! மண்ணுக்கும் நரிக்கும்! நான், காக்கை கழுகு, நரி ஆகியவைகளைவிடக் கேவலமா!! உன் எழிலை நான் ரசிப்பேன்—கழுகும், நரியும், உன் சதையைப் பிய்த்துத் தின்னும். எனக்கு உன் இன்மொழி போதும், சுவைதர! அவை உன் இரத்தத்தை அல்லவா குடிக்கும்!! எனக்கு விருந்தானால், எந்நாளும் உனக்குத் திருநாள்! அவைகளுக்கு விருந்தானால் பிறகு மறுநாள் என்பது உனக்கு ஏது? வாடி. வடிவழகி! வட்டநிலா முகத்தழகி! தொட்டால் போதுமென்று எட்டிநின்று ஏங்கிடும் ஏந்திழையார், எத்தனையோ பேர்களுண்டு. எதனையும் அறியாமல், எனைவிட்டு விலகுகிறாய்!! குறி தவறிப் போகாது களத்திலே மட்டுமல்ல!!

ஐயோ!! அடப்பாவி!! இதயத்திலே பாய்ந்து...

வீரன் வீசிய கட்டாரி மார்பிலே பாய்ந்துவிட்டது; படைத்தலைவன் மார்பிலிருந்து, இரத்தம் குபுகுபுவெனக் கிளம்புகிறது! கீழே சாய்கிறான்!

ஆடலழகி ஓடோடி வருகிறாள், வீரனிடம்.

வீரர்கள், இருவரையும் பிரிக்கிறார்கள்.

சிறை! தூக்குத்தண்டனை! பலமான பாதுகாப்பு ஏற்பாடு!!

தூக்குக் கயிற்றினை எடுத்து முத்தமிட முனைகிறான், மாற்றானை வீழ்த்திய பெருமையுடன் மடிவது மாவீரனுக்குப் பெரும் புகழ் என்ற எண்ணத்துடன்.

கண்களை ஒருகணம் மூடுகிறான்; அவளைக்காண; மனக் கண்ணால்!

திறக்கிறான்! அவளே எதிரே நிற்கிறாள்; முத்தமிடத் துடித்திடும் அதரம் தெரிகிறது!! கனவு—பட்டப் பகலில்!

இளைஞன்! எனவே, நாட்டின் நிலை குறித்து உள்ளத்து எழுந்த வேதனையினூடேயும், அவன் ஆடலழகியைக் காண்

கிறான். ஆனால், அவளும், ஆதிக்கக்காரனை எதிர்த்து நிற்கும் துணிவுபெற்றவளாகிறாள்—இளைஞனின் நினைப்பு அப்படி!

இளைஞன் அல்லாமல் ஒரு முதியவர், நாட்டுக்கு வந்துற்ற கேடுபற்றி உள்ளத்தில் எழும் வேதனை கொண்ட நிலைபெற்றார் என்றால், அவருடைய நினைப்பு—பட்டப்பகலில் அவர் காணும் 'கனவு' ஆடலழகி பற்றியதாக இராது—நாட்டுப் பெருமையுடன் தொடர்புகொண்டதாக இருக்கும்.

தம்பி! நேற்றுமாலை மடல் எழுதிக்கொண்டிருக்கும் போதே குறிப்பிட்டிருந்தேனல்லவா—வடாற்காடு மாவட்டத் தோழர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று. சென்றுவந்து, பிறகுதான் எழுதுகிறேன். சென்ற ஊர்களிலே ஒரு சிற்றூரின் பெயர் ஐம்படையூர்—இப்போது பெயர், மருவி, கொச்சையாகி விட்டிருக்கிறது: உச்சரிப்பில் சிற்றூர்! அங்கு நான் நமது கழகக் கொடியினை ஏற்றிவைக்கும்போது இரவு மணி பதினொன்று. சிற்றூர் என்றேன், தம்பி! சிறப்பான வரலாறு இருக்கிறது அந்தச் சீரூருக்கு.

வடபுலத்து மன்னன் புலிகேசி என்பானை, இங்கிருந்து படை எடுத்துச்சென்று தோற்கடித்து, வாதாபி எனும் நகரை அழித்து, வெற்றிவாகை சூடிய, பல்லவப் பெரும்படைகள் ஐந்து, திரும்புகாலையில், இந்தச் சிற்றூரில் தங்கி இருந்தனவாம்! கூத்தனூர் என்பவர், ஐந்து படைகட்கும் இங்கு, தங்கியிருக்க வசதிகளைச் செய்தளித்தாராம்.

நள்ளிரவில், திராவிடநாடு திராவிடருக்கே! என்ற முழக்கமெழுப்பியபடி, அந்தச் சிற்றூரில், நமது கழகத் தோழர்கள் அணிவகுத்துச் சென்றனர். அந்தச் சிற்றூருடன் இணைந்துள்ள வரலாறுபற்றி அறிந்திருந்த எனக்கு, என்ன நினைப்பு எழுந்திருந்திருக்கும் என்பதை விளக்கவா வேண்டும்.

சிறுசிறு குடில்கள்! செல்வம் கொழிக்கும் இடமல்ல! சேறும் சகதியும் நிரம்பிய வழிகள்! ஈச்சை, பனை, முட்செடிகள் புஞ்சைக்காடு, வயல், இவை உள்ள நிலை! அங்கு முன்னே இருவர் வழிகாட்ட, பின் இருந்து பதின்மர் தள்ளிவிட, உளைச் சேற்றில் புதைந்திடாமல் உருண்டுசெல்லும், மோட்டாரில், நாங்கள் செல்கிறோம்.

இந்த வழியிலே, ஐந்துபடைகள், வாகை சூடிய படைகள், வாதாபியை வென்ற படைகள், பவனி வந்தனவாமே!—என்று

எண்ணினேன்—என் மனக்கண்முன், கரியும் பரியும், தேரும் திருவும், கட்கமேந்தியோரும் கட்டியம் கூறுவோரும், முரசு கொட்டுவோரும் கவிதை புனைவோரும், கொடிகளும் தோரணங்களும், வடுக்களைக் கொண்ட வீரர்களும் அவர்கள் கொண்டுவந்த பொருட்களும், தெரியவில்லை என்றா எண்ணுகிறாய். மிக நன்றாகத் தெரிந்தன! வெற்றிபெற்ற படைகளை, மக்கள் வரவேற்கும் ஆரவாரம், வாழ்த்தொலி கூடத்தான், செவியிலே வீழ்ந்தது! செல்வதோ, சேறு நிரம்பிய பாதையில், பழையதோர் மோட்டாரில்! நினைப்போ, வெற்றி ஈட்டிய வேற்படையினர் விழாக்கோலம்பூண்டு, அவ்வழி நடந்த வரலாறுமீது!!

> இடமும் நேரமும், இயல்பும் தொழிலும், பருவமும் மனப்பக்குவமும், நோக்கமும், எங்ஙனம் உளதோ, அதனைப் பொறுத்து, பாரதியார் குறிப்பிட்ட, பட்டப் பகலில் காணும் கனவு இருக்கிறது.

அந்தக் கனவும், காண்பவரின் களிப்பு சிறப்பு, வாய்ப்பு வல்லமை என்பதுபற்றியதாக இல்லாமல், பொதுநலனுக்கு உகந்ததாக, நாட்டு நிலையினை உயர்த்துவதாக, மக்களுக்கு மாண்பளிப்பதாக இருப்பின் மட்டுமே, அது பாராட்டப்பட வேண்டியதாகிறது. அப்படிப்பட்ட 'கனவுகள்' உலகு திருத்தப்படத்தக்க உணர்வுகளை, வேகத்தை, திறமையைத் தந்தன.

கனவுதானே! கண்ணாடிக் கடைக்காரன் கனவு தெரியுமல்லவா, என்று கூறிக் கெக்கலிசெய்திடத் தோன்றும், நுனிப்புல் மேய்ந்திடும் போக்கினருக்கு. ஆமாம் தம்பி! அப்படி ஒரு கதை உண்டு, அறிந்திருப்பாய். அல்நாஷர் எனும் பெயரினன்; அங்காடியில் கண்ணாடிக்கடை நடத்திவந்தான்; பகற்போதினிலே, உறங்கினான்; கனவு கண்டான். கண்ணாடிக் கடையில் இலாபம் குவிகிறது—குன்றுபோல்! பெரிய இடம்! பெரியகடை! மலைபோல இலாபம்! மாடமாளிகை! எடுபிடி! பட்டுப் பட்டாடை! வாகனாதிகள்! ஊரே, ஏவலுக்குக் காத்து நிற்கிறது! அரசன் அறிகிறான்! அவன் மகளையே தருகிறான்! அரண்மனையில் வாசம்! அந்தப்புரம்! அம்ச தூளிகா மஞ்சம்! கால்வருடுகிறாள் மன்னன் மகள்! காலை உதறுகிறான், அல்நாஷர் கண்ணாடிச் சாமான்கள், உடைபடுகின்றன! கனவு கலைகிறது! பெருநட்டம் ஏற்பட்டது கண்டு, கனவுகண்ட அல்நாஷர் கதறுகிறான். இது கதை! இதைக்காட்டிப் பகற்கனவு வீண் நட்டம் கொடுக்கும் என்ற பாடம் புகட்ட முனைகிறார்கள்.

தம்பி! இந்தக் கனவுக்கும், பாரதியார் குறிப்பிட்டா ரென்று சொன்னேனே அந்தக் கனவினுக்கும், அடிப்படையில் உள்ள மாறுபாடு, கவனித்தனையா? அல்நாஷர் கண்ட கனவு அவன் உயர்வுபற்றி!! நான் விளக்கிக் கொண்டுவருகிற வகைக் கனவுகள், காண்போருக்குக் களிப்பும் உயர்வும், இலாபமும் சுவையும் தருவன அல்ல; மக்களுக்கு, நாட்டுக்கு, நிலைமை திருந்துதற்கு! மாண்பு, இதிலேதான் இருக்கிறது. இத்தகைய கனவு காண்போர், புத்தம் புதிய உணர்வுகளை மற்றவர் பெறச் செய்கின்றனர்.

பல்வேறு நாடுகளிலே, பல்வேறு காலங்களிலே, இத்தகு கனவுகள் கண்டனர் பலர்; சிலர் கவிதைகளாக்கினர்; சிலர் கருத்துமிக்க ஏடுகள் தீட்டினர், எதிர்காலம்பற்றி! அப்போ தெல்லாம், அவைகளின் உட்திறம் அறிய இயலாதார், எள்ளிநகையாடினர். "கனவு காண்கிறான்! பகற்கனவு!" என்று கேலி செய்தனர்.

பாலைவனம் சோலைவனமாக வேண்டும்! அங்கு பசுங்கிளி கள் கொஞ்சி விளையாடவேண்டும்! கோலமிகு மயில்கள் ஆடிடவேண்டும்! கோதையுடன் கூடி இசை பயின்றிடவும் வேண்டும்!!—என்று கனவு கண்டோர்கள் பலர்.

வேதனை தரும் நிலையில், நாடு இருக்கும்போது விம்மிடுவர் சிலர்; சிலர் கொதித்தெழுவர்; சிலர் இந்நிலை மாறி நல்லதோர் நிலை எழாதா என்று ஏக்கமுற்று, எண்ணிப்பார்ப்பர்; அந்த எண்ணத்திலே ஓர், 'எழிலுடை எதிர்காலம்' தெரியும்; அகமும் முகமும் மலரும்; அருங்கவிதையோ, உணர்ச்சியூட்டும் உரை நடையோ உருவெடுக்கும்; உலகுக்கு ஒரு புதிய உணர்வு கிடைக்கும்.

மக்கள் குறித்தும், நாட்டு ஆட்சிமுறை குறித்தும், இத்தகைய கனவு கண்டவர்கள், எழுதியுள்ள ஏடுகள் பல மேனாடுகளிலே காணக்கிடக்கின்றன!

சர் தாமஸ் மூர் என்பவர் யுடோபியா—Utopia என்றோர் நூல் எழுதினார். ஒரு நாடு எங்ஙனம் அரசாளப்படவேண்டும், மக்கள் எவ்விதம் இருக்கவேண்டும், தொழில் முறைகள் எவ்வண்ணம் இருக்கவேண்டும், என்பனபற்றி எல்லாம்' அவர் மனதிலே உருவாகிய கருத்துக்களை உள்ளடக்கிய ஏடு, அது.

யுடோபியா எனப் பெயரிட்டார், அவர் காணவிரும்பிய முறைகள் திகழ்ந்ததாக ஒரு தீவினைக் கற்பனை செய்து.

யுடோபியா என்று மூர், தமது கற்பனைத் தீவுக்குப் பெயரிட்டார்—பெயரிலேயே பொருளும் இழைந்திருந்தது.

யுடோபியா—Utopia எனும், அந்த ஆங்கிலச்சொல்லுக்கு மூலம், இரண்டு லத்தீன் மொழிச் சொற்கள். Ou என்றோர் சொல்; அதற்குப் பொருள், இல்லாத என்பதாகும். tobos என்பது மற்றோர் சொல்; அதற்குப் பொருள், இடம் என்ப தாகும். இந்த இரு லத்தீன் சொற்களையும், ஒரு ஆங்கிலக் கூட்டுச் சொல்லாக்கி, இல்லாத இடம் என்று பொருள் கொண்ட யுடோபியா, Utopia என்று, தமது கற்பனைத் தீவுக்குப் பெயரிட்டார், சர். தாமஸ் மூர்.

இம் முறையினைத் தொடர்ந்து வேறு பலரும், பல்வேறு கற்பனை நாடுகளை, கற்பனை அரசுகளை, ஏட்டிலிட்டுக் காட்டினர்.

இவைகள் யாவும், அவர்கள் பட்டப் பகலில் கண்ட கனவுகள்! அவை பலிக்குமா பலிக்காதா, என்பது, அவைகளுக் காகப் பாடுபட, எத்துணைபேர் முன்வருவர், அவர்தம் தாங்கும் திறமை எத்தகையது என்பதைப் பொறுத்து, இருக் கிறது.

ஒருவன் தன் சுகத்துக்காக, தன் இலாபத்துக்காக, தன் உயர்வுக்காகக் காணும் கனவுகள்—அல்நாஷர் கனவுகள்—மற்றவர்களை, முயற்சி எடுத்துக்கொள்ள வைக்காது. கனவு கண்டவர்களே, எண்ணி எண்ணி ஏங்கவேண்டும்; அல்லது முயற்சி செய்து பார்க்க வேண்டும்; அவர்கள் கண்ட கனவு பலித்திட, மற்றவர்கள் பாடுபட முன்வருவர் என்று எதிர் பார்ப்பது பேதமை. பொது நோக்கத்துக்காக, மக்கள் வாழ்வு செம்மை அடைவதற்காகத் தூயநோக்குடன் சிலர் பட்டப் பகலிலே காணும் கனவுகள், பலித்திட, கனவு கண்டவர்கள் மட்டுமல்ல, கூறக் கேட்டவர்கள் முயற்சிக்கலாம்; முயற்சிக்க வேண்டும்; முயற்சித்துள்ளனர்!

ஒருவன், தன் நலனுக்காகக் காணும் கனவுபற்றி அல்நாஷர் கண்டானுமே அஃதுபோல—வெளியே எடுத் துரைக்கக்கூடக் கூச்சப்படுவான்! கூச்சத்தை அடக்கிக் கொண்டு கூறினாலும், கேட்போர் கைகொட்டிச் சிரிப்பர், கேலியாக!!

பொது நோக்குக்காக, மக்கள் நலனுக்காக, நாட்டு உயர்வுக்காக, கனவு காண்போர், எழுச்சியுடன் அதனை எடுத்துரைப்பர்; மற்றவர்களும் அதனை மகிழ்ச்சியுடன் கேட்பர்.

கேட்போருக்கு முதலிலே வியப்பும், பிறகு சுவையும் கிடைக்கும்; மெள்ள மெள்ள, அதனைப் பெறவேண்டும் என்ற எண்ணம் எழும்—முயற்சியில் ஈடுபட ஆவல் தோன்றும்—ஈடுபட்ட பிறகு, உறுதி வளரும்.

எனவேதான், தூய பொதுநோக்குடன் பட்டப்பகலில் கனவு காண்பவர்கள், பிறரைச் சிந்திக்கவும் செயலாற்றவும் செய்துவிடுகிறார்கள்.

தம்பி! ஆற்றோரத்தில் களைத்துப் படுத்திருந்த வீரன் கண்ட 'கனவு' அவனைத் தூக்குமரம் அழைத்துச் சென்றது, அல்லவா? அதனால், என்ன பலன்? அவனுக்காகட்டும், அவன் தன் கனவினை உரைக்கக் கேட்டிடும் மற்றவர்களுக்காகட்டும்? —என்று கேட்பாயேல், கூறுகிறேன். அயலான் நாட்டைப் பிடித்துக்கொண்டான் என்றால், அடங்கிக்கிடப்பது, அடிமையாகிவிடுவது என்பதல்ல, ஒவ்வொருவரும், ஆடிப்பிழைப்பவனானாலும், வாட்போர் வீரனானாலும், ஒவ்வொருவரும், தத்தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்குத் தக்கபடி, வல்லமைக்கு ஏற்றவண்ணம், ஆதிக்கக்காரனை எதிர்த்து ஒழித்திட முனைய வேண்டும்—அந்த முயற்சியிலே, உயிர் போவதாயினும்! இந்த அரிய பாடம் இருக்கிறதல்லவா, வீரன் கண்ட கனவில்! அதனை அறிவோர், எத்துணை வீர உணர்ச்சிபெற இயலும் என்பதை எண்ணிப்பார், தம்பி! அப்போதுதான், அத்தகைய கனவுகள் காண்பதால், கிடைத்திடத்தக்க பலன்கள், விளங்கும்.

அடிமையாக்கப்பட்ட ஒவ்வொரு நாட்டிலேயும், விடுதலை பற்றிய கனவுகளைக் கண்டவர்கள், வீரத்தை, தியாக உணர்வை, அவை மூலம், நாட்டு மக்கள் பெற வைத்தனர்—அதனால், அவர்கள் கண்ட கனவுகள் நனவுகளாயின! நிறைவேறின! பலித்தன!

எண்ணிடச் சுவை தருகிறது என்பதற்காக மட்டுமே, நினைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதும், கேட்போருக்கு இனிப்பு அளிக்கிறது என்பதற்காகவே, சுவைபடக் கூறிடுவதும் பலன் தருவதாக அமையாது. சுவை இருக்கவேண்டும், அதே போது, பெற இயலும் என்ற எண்ணத்தைத் தரவல்லதாகவும், பெற்றாகவேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகவும்,

பெறுவதற்காக எந்த இழப்பையும் பொருட்படுத்தக்கூடாது என்ற உறுதியையும் தரவல்லதாக, அந்தக் கனவு இருத்தல் வேண்டும்.

வானவில்லைக் கண்டவன், வியந்து மகிழ்ந்திடுவது, முழுப் பயன் பெறும் செயலாகாது. வானவில்லிலே கண்ட வண்ணங்களை, நினைவிலே கொண்டு, அத்தகைய வண்ணங்களை மற்றப் பொருட்களிலே ஏற்றிடத்தக்க கலவை முறையினை அறிந்திட முயற்சித்து வெற்றிபெற்றால் மட்டுமே, வானவில்லைக் கண்டதால் ஏற்பட்ட வியப்பும், மகிழ்ச்சியும் முழுப் பயன் அளித்தது என்று கூறமுடியும்.

வீரவரலாற்றுச் சுவடிகளைச் சொல்லழகுக்காக மட்டுமே படிப்போர் வானவில்லைக் கண்டு வியப்போர் போன்றார்!

வரலாற்றுச் சுவடிகளிலே கிடைக்கும் வீர உணர்ச்சியை, அடிமைத் தளைகளை உடைத்தெறியும் செயலுக்காகப் பயன்படுத்துவோர், வானவில்லிலே காணப்படும் வண்ணங்களை, கலவை முறையால், ஆடைகளிலும், பிற பொருள்களிலும், ஏற்றி பயன் காண்போர் போன்றார்!

ஆகவே, தம்பி! உள்ள நிலைமைகளால் உளம் வெதும்பிச் செயலாற்றவும் சிந்திக்கவும் இயலா நிலை பெற்றுவிடாமல், தன்னலமற்று, பொதுநோக்குடன், நல்ல நிலைமை காண விரும்பி, தூய்மையாளர் கொள்ளும், சுவையும் பயனும் தரத்தக்க கற்பனைதான், பட்டப்பகலிலே காணப்படும் கனவு!

கொடுமைக்கு ஆளானோர், குமுறிக் கிடப்போர், அனைவருமே இத்தகைய கனவுகள் கண்டுவிட முடியும் என்று கூறமுடியாது.

கொடுமைகளைக் கண்டும் மனம் குலையாமல், நிலைமையைச் செம்மைப்படுத்தி ஆகவேண்டும் என்ற துடிப்புக்கொண்டோர் மட்டுமே, எதிர்காலம்பற்றிய, செம்மைபற்றிய, கனவு காண முடியும்; கண்டனர்; அந்தக் கனவுகள் யாவும் பலித்துமுள்ளன. அதனாலேயே, யார் என்ன செய்யமுடியும்? இவன் நடமாடும் அழிவு அல்லவோ? என்று மக்கள் கண்கசிந்து கரம் பிசைந்து குமுறத்தக்க நிலையினை உண்டாக்கிய கொடுங்கோலர்கள். இறுதியிலே அழிந்தொழிந்து போயினர். அடிமைப் படுகுழியில் வீழ்ந்துவிட்டது நாடு; இனி அது தலைநிமிர்ந்து, தன்மானம் பெற்று, தன்னரசு பெற்று வாழ முடியாது என்று

மிகப் பெரும்பாலான மக்கள் எண்ணி மனம் உடைந்துபோன நிலையை உண்டாக்கி வைத்த ஆதிக்க அரசுகள், கடைசியிலே, அடியற்ற நெடும்பனையாயின? சிட்டுகள் வல்லூறை எதிர்த்தன! சீமான்களைப் பராரிகள் விரட்டினர்! மாளிகைகள் மண்மேடு களாயின! குப்பைமேட்டுக்காரன் கோலேந்தியைக் குப்புறத் தள்ளினன்! தம்பி! இவைகளெல்லாம், எங்ஙனம் நடை பெற்றன? யாரோ சிலர் கண்ட கனவுகள், இவர்களை உணர்ச்சிப் பிழம்புகளாக்கிவிட்டன!

இறுதி வெற்றி கிட்டும் வரையில், நடைபெறப் போவது குறித்து நாலாறு பேர், கூறி வந்ததைக் கற்பனை என்றும், கவைக்குதவாதது என்றும், காட்டுக் கூச்சலென்றும், பகற் கனவு என்றும்தான், மிகப் பலர் கூறினர்.

அங்ஙனம் கூறிடுவோர், எவரெவர் என்பது குறித்து எண்ணிப் பார், தம்பி! சுவைமிகு உண்மைகள் பல தெரியும்.

அசைக்கவே முடியாது! என்று இறுமாந்து கிடக்கும் ஆதிக்கக்காரன், விடுதலைக்கான முயற்சிகள் உருவாகிக் கொண்டு வருவதாக எவரேனும் கூறினால், கண் சிமிட்டுவான், கரம் அசைப்பான், கேலிச் சிரிப்பொலியுடன் பேசுவான்; மனப்பிராந்தி என்பான்! மமதை மதியை மாய்த்துவிட்ட நிலை அது.

கற்பனைகள்—கனவுகள் என்பவைகள், பலித்திருக்கின்றன என்ற வரலாறு அறியாதவர்கள், விடுதலை உணர்வு எழுப்பி விடும் கற்பனையைக் கவைக்குதவாத பேச்சு என்று கருதித் துச்சமென்று தள்ளிவிடுவர்.

விடுதலைக்காகப் பாடுபடுவது நெருப்பாற்றில் நீந்திச் செல்வது போன்றதாகும், என்பது தெரிந்து பீதி கொள்வோர், இழப்புகளுக்குத் தயாராக இல்லாதவர்கள், வெல்வெட்டு மெத்தையினர், அல்லது அத்தரத்தினருக்கு வட்டில் ஏந்தி நிற்போர், வெள்ளை வேட்டிகள், அல்லது அதுபோல வெளிச்சம் போட்டுக் கிடப்போர், இவர்களும், விடுதலை உணர்வு எழுப்பிவிடும் கற்பனையைக், கனவு என்று கதைப்பர்! கோழைத்தனத்தை மறைத்திட, மேதாவித்தனம் என்று எழுத்துப் பொறிக்கப்பட்ட சல்லாத் துணியால், தம்மை அலங் கரித்துக் கொள்வார்கள்.

ஒவ்வொரு நாட்டிலேயும், விடுதலைக் கிளர்ச்சிக் கட்டத் திலே, இத்தகைய வீணர்கள் இருந்தனர், விடுதலை வீரர்களை

இகழ்ந்துகொண்டு, அவர்தம் இலட்சியங்களைப் பழித்துக் கொண்டு; எழிலுடைய எதிர்காலம் குறித்து அவர்கள் கூறுவனவற்றை, வெட்டிப் பேச்சு என்று பேசிக்கொண்டு, கட்டி வைத்த குக்கல் கண்டவரைப் பார்த்துக் குலைத்திடும் வாடிக்கைபோல இருப்பர்.

தம்பி! ஆதிக்கக்காரனின் கூர்வாள், அடக்குமுறையின் கொடிய கூரிய பற்கள் என்பவைகள் மட்டுமல்ல, இத்தகை யோரின் இழிமொழிகளையும், விடுதலை விரும்பிகள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டி வருகிறது! ஏற்றுக்கொண்டுள்ளனர். நஞ்சல்லவா கொடுத்தனர், சாக்ரடிசுக்கு! கல்லால் அடித் தல்லவா துரத்தினர், நபிகள் நாயகத்தை! முள்முடி அல்லவா சூட்டினர், ஏசுவுக்கு!

அவர்களுக்கே அக்கதி என்றால், தம்பி! மிகச் சாமான்ய மானவர்கள், மிகப் பெரிய இலட்சியத்துக்காகப் பாடுபட முன் வந்தால், ஏசவா ஆட்கள் இருக்கமாட்டார்கள்!! தாங்கிக் கொண்டனர்! தாங்கிக் கொள்வோம்!! கனவுகள் பலிக்கும்; ஏனெனில் அந்தக் கனவுகள், நமக்கு ஒரு மாளிகை, நம்மைச் சுற்றிலும் ஆலமேற்ற விழியினர், நம் எதிரில் பேழைகள், அவைகளிலே அணிபணிகள், என்ற இம்முறையில் அல்ல!

நம்மை நோக்கி வாட்கள்! நமது பிடரியில் ஆதிக்கக் காரனின் கரம்! கரமா? பார், தம்பி! எனக்கு ஏற்படும் எண்ணத்தை, கரம் என்கிறேன்—கரத்தாலாவது நெட்டித் தள்ளட்டும் என்று; கரமல்ல, தம்பி! கரம் அல்ல! ஆதிக்கக் காரனின் கால்! நமது உடலில் புண்—கசையடியால் ஏற்பட்டவை! நமது இருப்பிடம், சிறை எனும் இருட்டறை! நமக்குப் படுக்கை, வைக்கோல் தூவப்பட்ட, அல்லது அதுவு மற்ற கட்டாந்தரை! நமக்குக் கலயம், மண்ணாலானது! அதிலே உள்ளது புழுத்தது புளித்தது; அழுகல், நாற்றம் நிரப்பியது!! —இவைபோன்ற இன்னல்கள் நம்மை எதிர்நோக்கி இருப்பது தெரிந்தும், நாடு தன்மானம் தழைக்கும் இடமாக, தன்னாட்சிக் கூடமாகத் திகழவேண்டும் என்றல்லவா எண்ணுகிறோம். எத்துணை ஆத்திரம் பிறக்கும், ஆதிக்கக்காரர்களுக்கு. உறுமு கின்றனர்! அந்த உறுமலைக் கேட்டுக் குலைநடுக்கம் கொள்பவர் கள், நம்முடன் எங்ஙனம் இணைந்து இருக்க இயலும். நாடு மீட்டிடும் நற்பணியிலே ஈடுபட்டிருக்கும் நம்முடன் இருக்க, கூடிப் பணியாற்ற இயலாதார், தமது இயலாமையையா வெளியே எடுத்துரைப்பர்!! கூச்சமாக இருக்குமல்லவா?

எனவே அவர்கள், நமது எண்ணம் ஈடேறாது, திட்டம் வெற்றி பெறாது, கற்பனை கவைக்குதவாது, கனவு பலிக்காது என்று பேசித் திரிகின்றனர். வேறென்ன செய்வர்!

தம்பி! அரவம் கேட்டதும் அச்சம் கொண்டு, தலையை ஓட்டுக்குள் இழுத்துக்கொள்வது ஆமை மட்டுமல்ல, சில ஆடவரும் உளர்!!

ஆமையாவது, தன்னடக்கத்துடன், தன் நிலைமை பற்றி வாதிடுவதில்லை. வாய்மூடிக் கிடக்கிறது. இவர்கள் ஆமையா! ஆடவர்களல்லரோ! ஆர்ப்பரிக்க வாயும் இருக்கிறதே; ஆர்ப்பரிக்கக்கூட முன்வருகின்றனர்; வாய்! பேசத்தானே!! இதைத்தான் பேசவேண்டும், இப்படித்தான் பேசவேண்டும், பேசுவதிலே பொருத்தம் இருக்கவேண்டும், பொருள் இருக்கவேண்டும் என்று கவனிக்க முடியும்!! பேச, வாய்! எனவே பேசுகின்றனர்!!

தம்பி! இயலாமை காரணமாக, சிலர், இலட்சியத்தை, தூய்மையாளர்களின் எண்ணங்களை, கற்பனைகளை இகழ்ந்திடுவர்; பொருட்படுத்தாதே! இதனை உனக்குக் கூறவே, பட்டப் பகலில் காணும் கனவுபற்றிப், பாட்டுக்கொரு புலவன் பாரதியடா! என்று நாட்டுக்குரியர் கூறிப் பாராட்டிடும் பாரதியாரின் பாடலை நினைவுபடுத்தினேன். மற்றோர் முறை அந்தப் பாடலைப் படித்துப்பார்.

அண்ணன்,



24-9-61

குன்றம் பல சென்றிருந்தேன்

சிலர் பிரிந்தபின் கழகத்தின் நிலை—

காங்கிரசின் போக்கு—

தி. மு. க. தேர்தல்—

தம்பி!

சொல்லும்போதே சுவைதரும், 'தம்பி' என்ற இந்தச் சொல்லை ஒரு திங்களாகச் சொல்ல இயலாமற் போய் விட்டதை எண்ணி எண்ணி, இனிப்பூட்டும் அந்தச் சொல்லை, மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிச் சுவை பெறலாமா என்று தோன்றுகிறது. ஆனால், தம்பி! தவறு என்னுடையது அல்ல. துரைத்தனத்தின் போக்கு, நம்மை ஒரு திங்கள் பிரித்துவைத்தது. ஆண்டுக்கணக்கிலே பிரித்துவைக்கத்தக்க போக்கினைத் துரைத்தனம் மேற்கொண்டிடத் திட்டமிட்டும் இருக்கிறது; அறிவாய். இந்தப் பிரிவு, கடுமையான சட்டம் காரணமாக ஏற்பட்டதல்ல; பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் காரணமாக ஏற்பட்டுவிட்டது; இதழுக்கான தாள் கிடைக்கவில்லை, உரிய நேரத்தில்; பலமுறை வேண்டுகோள் விடுத்தும்! பிறகு, நமது நண்பர் தருமலிங்கம் எம். பி அவர்கள், இதற்கென்றே, டில்லிப் பட்டணம் பறந்துசென்று முறையிட்டு, நெருக்கடி நிலைமையை

விளக்கிக்கூறித் தாள் கிடைத்திடச் செய்தார்; இதோ, உன்னிடம் பேசிட முடிகிறது, தம்பி!

ஆனால், மடல் தீட்டி மகிழும் வாய்ப்பினைத்தான், நான் ஒரு திங்கள் இழந்து தவித்தேனேயன்றித், தம்பிகளை நித்த நித்தம் காணத் தவறினேனில்லை; தித்திப்பளிக்கும் உரையாடி மகிழ்ச்சிப் பெறாமற் போகவில்லை; காலை மாலை நடுப்பகல் நள்ளிரவு எனும் கால அளவும் தன்மையும் குறுக்கிடவில்லை, தம்பிகளைக் கண்டு மகிழும் திட்டத்தில். எங்கும் எழில் நிறை முகங்கள்! அன்பொழுகும் பார்வை! புன்னகை! உறுதி! இலட்சியப் பற்று! கொள்கை முழக்கம்! சீரிய பணி!

தம்பி! எங்கு சென்றாலும் ஓர் புதிய துடிதுடிப்புத் தென்படுகிறது; புத்தம் புதியதோர் ஆர்வம்! ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலைப் பெரும் அளவு மட்டுமல்ல, முழு அளவு காட்டியாக வேண்டும் என்ற நிலையிலே, சுறுசுறுப்புடன் பணியாற்றுகின்றனர். தொட்டுப் பார்ப்பதிலும், கைதட்டி வரவேற்பதிலும், கட்டிப்பிடித்துக் கொள்வதிலும், மாலையிட்டுக் காண்பதிலும், தழதழத்த குரலொலி எழுப்புவதிலும், தங்கநிறக் குழவிகளை என்னிடம் கொண்டுவந்து கொடுத்து இருக்கச் செய்வதிலும், தேர்தல் நிதி அளிப்பதிலும், சேதிகளைத் திரட்டித் தருவதிலும், எத்துணை ஆர்வம், மகிழ்ச்சி, பெருமை கொள்கின்றனர். உடன் பிறந்தார்! இதைக் காணக்காண, மாற்றார் கொள்ளும் மருட்சியும், வேற்றார் காட்டிடும் வியப்புணர்ச்சியும், வளருகிறது, வேக வேகமாக. தாயகத்தின் தன்மானம் காத்திட, மாற்றாரின் முயற்சிகளை முறியடித்திட, களம்புகக் கிளம்பிடும் படையொன்று, வீரநடை போட்டுச் செல்லுங்காலை, வீதிகளின் இருமருங்கிலும், பெண்டிரும் முதியவரும் சிறுமியரும் சிறாரும் கூடி நின்று, கையொலி கிளப்பியும், வாழ்த்தொலி முழங்கியும், பூச்சொரிந்தும் புன்னகை சொரிந்தும், படையினருக்கு வழி அனுப்பு நடத்துவது, கண்டிருக்கிறேன், கண்டிருப்பாய், காட்சிகளாக. பூச்சொரியும்போதே, கண்ணீர் கசியும்! கண்ணீரை விரட்டியபடி களிப்பொளி தோன்றும்! வாழ்த்தொலி எழுப்பும்போதே, வந்திடக் கூடுமே பேராபத்து களத்தில், என்று எண்ணம் எழும். அச்சம் குடையும்; மறுகணமோ, நாடு வாழ்ந்திடும் என்ற உறுதி அச்சந்தனை விரட்டி அடிக்கும். மணமாகித் திங்கள் சிலவே ஆகின்றன! மலர்ச்சோலை உலாவிடவும், மயிலே என்று அவன் அழைக்கக்கேட்டு மகிழ்ந்திடவும், மடியா மலரணையா? விழியா சுடர் ஒளியா? இதழா

கனிச்சுளையா? இடையா படர்கொடியா? உடலா பொன் உருவா? என்றெல்லாம் அவன் பேச, விழியால் பதிலளித்து மகிழலாம் என்ற எண்ணம் கொண்ட எழிலரசி, மன்னன் களம் நோக்கிச் செல்லும் காட்சி கண்டு, கையொலியும் எழுப்புகிறாள், கண்ணொளியும் பொழிகிறாள். காதலின்பம் இழக்கிறோம் என்பதையும் உணருகிறாள், பெற்ற இன்பத்தை எண்ணுகிறாள், வெட்கி முகம் சிவக்கிறாள். களத்திலே 'அவருக்கு' ஏதேனும் ஏற்பட்டுவிட்டால்? என்று எண்ணுகிறாள், அச்சத்தால் முகம் வெளுக்கிறது. மறு கணமோ, நாடு வாழ்ந்திடக் கூடி நடந்திடும் தானையினர் எழுப்பிடும் வீர முழக்கம் கேட்கிறாள், எழுச்சி கொள்கிறாள், நாடு மீட்டிடச் செல்கிறான் என் மணவாளன்! என்று பெருமை கொள்கிறாள்.

தம்பி! எனக்கென்னவோ இப்போதெல்லாம், நமது கூட்டங்களில், ஊர்வலங்களில், காணப்படும் எழுச்சியும் மகிழ்ச்சியும், உணர்ச்சியும், எழுப்பப்படும் முழக்கமும், களம் நோக்கிச் செல்லும் படையினை வாழ்த்தி வழியனுப்பிவைக்கும் காட்சியைத்தான் நினைவிற்குக் கொண்டுவருகிறது! நமது 'உடன்பிறந்தார்' என்பதனால் மட்டும் ஏற்படும் மகிழ்ச்சி அல்ல! நமது 'உடன்பிறந்தார்' உயிரைத் துரும்பென மதித்து, எதையும் இழக்கத் துணிந்து, இழக்கொணாத உரிமை காத்திடச் செல்கிறார் களம் நோக்கி; கரமோ காலோ, உடலிற் சில பாகமோ வெட்டுண்டு போகலாம்! உயிரே பட்டுப் போகலாம்! செல்கிறார் செருமுனை நோக்கி! திருப்புங்காலை வெற்றிக்கொடி பறக்கும்! ஆயின், வீரர்பலர் உயிரிழந்திடுவர்—என்றெல்லாம் எண்ணங்கள் பலப்பல எழும்பித்தான், இந்த உணர்ச்சியைக் கிளப்பிவிட்டுவிட்டிருக்கிறது. ஒளிப்பானேன், மறைப்பானேன், தம்பி! எனக்கே அப்படிப்பட்ட உணர்ச்சிதான் முழுக்க முழுக்க. ஒவ்வொரு நாள் காணும்போதும், ஆசைதீரப் பார்த்திடுவோம், நாளையதினம் துரைத்தனத்தார், பார்க்கவிடுகிறார்களா இல்லையோ!—என்ற எண்ணம். ஒவ்வொரு முறை பேசும்போதும், சொல்லவேண்டியதனைத்தையும் சொல்லிவிட வேண்டும், ஏனெனில், மீண்டும் பேசிடும் வாய்ப்பு எந்த விநாடியும் பறிக்கப்பட்டுவிடலாம்—என்ற எண்ணம். தம்பி! நம்மில் அனைவருமே இந்த நிலையை மிக நன்றாக உணர்ந்துவிட்டிருப்பதனால்தான், கரை புரண்டோடும் எழுச்சிமட்டுமல்ல, இதுவரை காணாத புத்துணர்ச்சி, மன நெகிழ்ச்சி காணுகிறோம். களம் நோக்கி நடக்கிறோம், தம்பி!, வாழ்த்தி வழியனுப்புகிறது நாடு! கண்துடைத்துக், கட்டிப்பிடித்து, கன்னம் தொட்டு,

சென்றுவா, மகனே! வென்று வா! என்று வீடும் வாழ்த்தி அனுப்புகிறது.

நம்மிலே சிலர் பிரிந்ததனால் நாட்டுநிலை அறியாதார் சிலர், நமது முயற்சி முறிந்துவிட்டது, இயக்கம் உடைந்துவிட்டது, உருக்குலைந்த நிலையில் இந்த விடுதலை இயக்கம் ஏதும் செய்ய இயலாததாகி, எடுப்பார் கைப்பிள்ளையாகிவிடும், அல்லது மாற்றார்முன் மண்டியிடும் என்றெல்லாம் எண்ணி மனப்பால் குடித்தனர். நிலைமையோ அஃதன்று. 'களைபோயிற்று, பயிர் தழைத்தது!' என்று கூறிடுவார் உளர்! அவர்களைக் கடுமையாகக் கண்டித்துத்தான் அடக்கிவருகிறேன்—சொல்வதைத் தான் நான் தடுத்திட முடிகிறதேயன்றி, எண்ணத்தை எங்ஙனம் இல்லாது போக்கிட இயலும். உள்ளபடி அவ்விதம் எண்ணுவோர் பலர் உளர். ஆனால் மிகப் பலரோ, சிலர் நம்மைவிட்டுப் பிரிந்தனர், எனவே அவர்கள் செய்துவந்த பணிகளுக்கு ஈடுசெய்திடும் வண்ணம் நாம் மிகுதியாகப் பணியாற்ற வேண்டும்; அதுமட்டுமல்ல, அவர்களின் இன்றையப் போக்கினால் ஏற்படும்இழப்புகளையும் ஈடுகட்டியாக வேண்டும் என்ற எண்ணத்துடன், மிகத்திறம்படப் பணியாற்றுகிறார்கள்.

மாற்றுக் கட்சியினர் இதை உணருகிறார்களோ இல்லையோ; எல்லாக் கட்சிகளுமே தேர்தல் நோக்குடன் சுறுசுறுப்பாகத் தான் பணியாற்றி வருகின்றன; நம்மைப் போலவே! ஆனால், மற்ற எவர் நடத்தும் இயக்கத்திலும், நமது இயக்க நிகழ்ச்சிகளில் காணப்படும் இந்தப் 'பாச உணர்ச்சி இருப்பதாகத் தெரிவதில்லை—தெரியக்காணோம்—இருப்பதற்கான அறிகுறியும் இல்லை.

எடை போடுவது—எவரெவரிடம் என்னென்ன முறையில் பேசுவது—என்னென்ன வாக்களிப்பது—எவரைச் சிக்க வைக்க என்ன வலை, எவருக்கு என்ன விலை—என்ற இவைபற்றிய எண்ணம்தான் அங்கெல்லாம். கண்டதும் ஓர் முகமலர்ச்சி! பேச்சிலே ஓர் கனிவு! பார்வையிலேயே ஓர் பாசம்!—இவை இங்கன்றி வேறோர் இடத்தில் இல்லை.

தம்பி! உணவு விடுதியிலும் சாப்பிடுகிறார்கள்; வீட்டிலேயும் சாப்பிடுகிறோம். வீட்டில் செய்யும் கறி வகைகளைக் காட்டிலும், அதிகமாகவே உணவு விடுதியில் செய்கிறார்கள். வீட்டிலே. இலை போடுவார்கள்—மறதியால், பொத்தல் உள்ளதாகக்கூடப் போட்டுவிடுவார்கள். தெளித்துச் சுத்தம்

செய்யத் தண்ணீர் வைக்க மறந்துவிடுவார்கள். செய்த கறி வகையிலே ஒன்றை இலையிட மறந்து போவதுமுண்டு. இவை யாவும் வீட்டில். உணவு விடுதியில் ஒழுங்காக, வைக்க வேண்டியதை வைத்திட வேண்டிய முறைப்படி வைக்கிறார்கள். கறிவகை பலப்பல! எனினும், தம்பி! நீ, கவனித்ததுண்டோ இல்லையோ—விடுதியிலே, கறியும் சோறும் படைத்திடும் போதும், கலந்து நாமதனை உண்டிடும்போதும், உணவு விடுதிக்காரர் காண்பார், கனிவு இருக்காது; கேட்பார் இன்னும் வேண்டுமா என்று; ஆனால் பேச்சில், எழுத்து மிகுதியாக இருக்கும், எண்ணம் இருக்காது; விழி திறந்திருக்கும் வெறிச்சிட்ட பார்வை இருக்கும்; இது முதல்தரமான உணவு விடுதியில். மட்டமான விடுதி எனில், தம்பி! நாம் சாப்பிடச் சாப்பிட, அவன் முகம் கருத்திடும்; நாம் கேட்போம், அவன் படைக்குமுன் நம்மை உற்றுப் பார்ப்பான்; அந்தப் பார்வையிலே பகை இருக்கும், கேள்வியும் இருக்கும்; நாம் உண்டிடுவோம், இவன் தூரநின்று கவளம் அதிகமாக உள்ளே செல்லச் செல்ல, ஐயோ! நமக்குக் கிடைக்கக்கூடிய இலாபம், குறைந்து கொண்டே வருகிறதே என்று எண்ணி ஏக்கங் கொள்வான். உணவு படைத்திடும் பணியாளன் ஒருமுறைக்கு இருமுறை, நமது இலை நோக்கி வந்து நின்று, என்ன தேவை என்று கேட்டிடக் கண்டால், விடுதிக்கு உரிமையாளன், சதி ஏதோ நடக்கிறது! பயல் நம்மைப் பாழாக்குகிறான்! என்றெண்ணி, அந்தப் பணியாளனை முறைத்துப் பார்ப்பான்; கடுமொழியும் புகல்வான்.

தம்பி! விடுதியில் உணவளிப்பது இலாப நோக்குடன்; நம்மிடம் கொண்ட அக்கறையாலா!!

விடுதியில் உண்பவர், அளவு குறைத்துச் சாப்பிடச் சாப்பிட விடுதிக்காரருக்கு மகிழ்ச்சி. அளவும் வகையும் அதிகம் கேட்போரைக் கண்டால் வெறுப்பு.

எவரிடமும் கனிவு இருக்கக் காரணமில்லை; ஏனெனில், உண்டுவிட்டுப் போகும் ஓராயிரவரில் இவர் ஒருவர்; ஊர்பேர் தெரிவானேன்; உபசாரங்கள் செய்வானேன்; உள்ளம் மகிழ வைப்பானேன்!

இதற்கு முற்றிலும் வேறு அல்லவா, இல்லத்துச் சோறிடும் முறை.

நான் கூறியதுபோலத் தம்பி! சோறிடும் முறையிலே குறைபாடுகளும் இருக்கும். சோறுக்கேற்ற அளவு சாறு ஊற்றி

யிருக்கமாட்டார்கள்! கலந்து பார்த்ததில் மேலும் கொஞ்சம் சாறு வேண்டும் என்று நமக்குத் தோன்றும்; அதை அறியாது அணங்கு நம் எதிர் நின்று, வளையைச் சரிப்படுத்திக்கொண் டிருக்கக் கூடும். அல்லது வந்து நிற்கும் பிள்ளைக்கு ஊட்டி மகிழ்ந்தபடி மெய்மறந்து இருக்கக்கூடும்; துவக்கத்திலே தம்பி! கோபம்கூட நமக்கு எழக்கூடும்—துளியும் முறைவகை அறியாத மதியிலியாக உள்ளாளே என்று எண்ணத் தோன்றும்; முறைத்துப் பார்ப்போம்; அவள் சிரித்தபடி நிற்பாள்; மகவு சிதறியதனை வழித்தெடுத்து, சுவைமிகு பண்டம் என்று இலையில் இடவும் வருவாள்; தான் சோறிட்ட முறையில் குறை வந்துளது என்பதை அறியாமலேயே. ஆத்திரமா பீறிட்டுக் கிளம்புகிறது? அவள் வீசும் பார்வை, சாறு போதுமானதாக இல்லை என்ற எண்ணத்தையே மாற்றிவிடுமே!! உணவு விடுதி யிலென்றால் நிலைமை இதுவா?

"நாலு நாழியாகக் காவு காவு என்று, சாம்பார்! சாம்பார் என்று கத்துகிறேன்; மரமாக நிற்கிறாயே."

"மரம், மாடு என்று மரியாதை இல்லாமல் பேசாதே ஐயா! உமக்குச் சேறுபோலச் சாம்பார் வேண்டும் என்று நான் கண்டேனா? சாதத்துக்குச் சாம்பார், என்று நான் எண்ணிக்கொண்டேன்; உனக்குச் சாம்பாருக்குச் சாதம் என்று முறை இருப்பது எனக்குத் தெரியுமா?"

"உளறாதே, தெரியுமா?"

"பெரிய சூரப்புலி! சும்மா இரய்யா. நான் ஒன்றும் நீ வைத்த வேலையாள் அல்ல."

இந்த, அளவோடு, நான் நிறுத்திக்கொள்கிறேன்—நிலைமை பொதுவாக இந்த அளவோடு நிற்பதில்லை.

தம்பி! நான் சுவைத்துச் சாப்பிட, வீட்டிலே மகிழ்ச்சி யுடன், கனிவுடன், பெருமையுடன், காண்பர்! விடுதியில்? மருட்சி! அருவருப்பு! வெறுப்பு!! ஏன்? வீட்டில் உள்ளவர்கள், நம்மிடம் பாசம் கொண்டவர்கள்; விடுதிக்காரர் நம்மிடம் இலாபம் பெறுபவர்; இல்லம் அன்பின் இருப்பிடம்; விடுதி? இலாபம் பெறும் இடம்! வீட்டிலே கனிவும், விடுதியிலே கணக்கும் இருப்பதுதானே, எதிர்பார்க்கவேண்டிய முறை.

தம்பி! மற்ற மற்றக்கட்சி நிகழ்ச்சிகளுக்கும் நமது கழக நிகழ்ச்சிக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எனக்கு, வீட்டுச்

சாப்பாட்டுக்கும் உணவு விடுதிச் சாப்பாட்டுக்கும் இருக்கிற மாறுபாடுதான் நினைவிற்கு வருகிறது.

அமைச்சர்களைக் காண வருகிறார்கள்— ஊராரும். யார்? இவர்களெல்லாம் அமைச்சர்களாகிவிட்டார்களே! இப்படியும் காலம் கெட்டுவிட்டதே!!— என்று எண்ணி உள்ளூரக் குமுறிக் கிடக்கும் கனதனவான்! அருவருப்பை அடக்கிக்கொண்டு அதிர்ஷ்ட வசந்தால் அமைச்சரானார், அவரைப்பிடித்து மருமகனுக்கு ஒரு பெரிய வேலையைத் தேடிக்கொண்டால் போதும் என்ற நினைப்பினர்!! ஏழை எளியவரும் வருகிறார்கள், தவறு தம்பி! தவறு! அழைத்து வரப்படுகிறார்கள்; அமைச்சர் வருவதற்கு ஐந்தாறு மணிக்கு முன்பே அந்த இடத்திலே, அதிகாரிகள் நடத்திடும் அமுலையும், சீமான்கள் மோடாரில் வந்திறங்கி இடம் பிடிப்பதையும், பார்த்தபடி நிற்கிறார்கள். அமைச்சர்கள் பலப்பலர் வந்தார்கள், அவரவர், தெரிந்ததைச் சொன்னார்கள். ஒருவரும் நம் குறை போக்கவில்லை, ஓட்டாண்டி யாகிறோம் நாளுக்குநாள், என்று நினைத்தபடி. அமைச்சர் வந்துகொண்டே இருக்கிறார் என்பது அறிவிக்கப்படுகிறது, முன்னோடியாக வரும் அதிகாரியால். மோட்டார் மன்னர்கள், உடையைச் சரிப்படுத்திக்கொள்கிறார்கள், அணிபணியை ஒழுங்குபடுத்திக்கொள்கிறார்கள், அதிகாரியை நோக்கிப் பல்லிளிக்கிறார்கள். அதன் பொருள் அவர் அறிவார், யாதெனின், அமைச்சர் அருகே அழைத்துச் செல்வீர், ஐநூறு ரூபாய் தந்தவன் நான், என்பதாகும்; அதிகாரியோ, வரிசை யாக நிற்கும் கனதனவான்களைப் பார்க்கிறார், பெருமூச்செறி கிறார். ஏனெனில், அவர் அறிவார் எவரெவர் எந்தெந்த விதமான கேடுகள், குற்றங்கள் செய்த பின்னர், சீமான்கள் ஆகினர் எனும் மர்மம்; எனினும் சட்டம் அவர்களைச் சாடவிடாமல் சாமர்த்தியமாகத் தப்பினவர் என்பது புரிந்த அதிகாரி, என்செய்வது என்றெண்ணி ஏங்குகிறார். அவரும் சிரிக்கிறார், இவர்களும் அப்படியே—எவர் சிரிப்புக்கும் காரணம் மகிழ்ச்சி அல்ல; எல்லாம் இடத்துக்கு ஏற்றமுறை. ஏழைக்கு இதுவொன்றும் விளங்கவில்லை. உதடு அசைகிறது யாவருக்கும்; ஒருவருக்கும் உள்ளம் அசைவதாகத் தெரியவில்லை.

அமைச்சர் வருகிறார், கும்பிடுகிறார்; குறிப்பாக யாரையும் பார்த்தல்ல: மொத்தமாக; மெத்த அலட்சியத்துடன்.

அனைவரும் வாயடைத்து நிற்கின்றனர்; அதிகாரிகள் பரபரப்புக் காட்டுகின்றனர்.

உம்! உம்!—என்று கூறுகிருர் அதிகாரி!

மனுக்களைத் தருகின்றனர் ஏழை மக்கள். வாங்குகிருர் அமைச்சர்! அதை வாங்கிக்கொள்கிருர் மற்ருேர் அதிகாரி!

கோயிலிலே பூவால் அர்ச்சனை செய்ததும், அந்த மலர்கள் தேவருலகு சென்று தேவ தேவன்மீது வீழ்வதாக அல்லவா எண்ணிக் கொள்கிருர்கள்; அது பக்தியினுல். இங்கு பாடுபடுவோர், 'மனு'வை மந்திரி தொட்ட உடன், குறைகள் தீர்ந்து விட்டது என்று எண்ணிக் கொள்கிருர்கள்; எண்ணிக் கொள்ளும்படி, அதிகாரியும் சீமானும் போட்டியிட்டுக் கொண்டு சொல்லி வைக்கிருர்கள்.

அமைச்சர் பேசுகிருர்! செ! என்ன துடுக்குத்தனம், பார், தம்பி! எனக்கு—பேசுகிருர் என்று சொல்கிறேன். அமைச்சர் பேசுவாரா? சொற்பொழிவாற்றுகிருர். தாக்குகிருர்! தகர்க்கிருர்! முகமூடியைக் கிழிக்கிருர்! எச்சரிகை விடுக்கிருர்! எதிர்க் கட்சிகளை!!

கேட்டிடும் சீமான், எந்த இடத்திலே மட்டும் கைகொட்ட வேண்டும் என்பதை அறிந்து அதன்படி நடக்க, எத்தனை பாடுபடுகிருர் தெரியுமா தம்பி!

ஏழைக்கு வியப்பாக இருக்கிறது. நாம்தான், அகவிலையால் வரிச்சுமையால், வறுமையால் பிணியால், அவதிப்படுகிருேம்; கோபம்கூட வரத்தான் செய்கிறது; இவருக்குப் பாபம் எதற்காக இத்தனை ஆத்திரம்! இவரே சொல்கிருர், எதிர்ப்பாளர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள், மிகச் சிலர் என்று; அது உண்மையாளுல், இவர் எதற்காக, யாரோ உச்சியைப் பிடித்துக் குலுக்கிடுவதுபோல ஆத்திரப்படுகிருர்—என்றெண்ணி வியப்படைகிருன். ஏழைகள் ஈடேற வழி சொல்லுவார் என்று எதிர்பார்க்கிருன்! சொற்பொழிவின் இறுதியில், எதிர்க் கட்சிகளை எல்லாம் கொன்று குவித்துத் தம் காலடியில் குவியலாகப் போட்டுக்கொண்டான் பிறகு, அமைச்சர், ஏழை எளியவர்கட்கும், ஈடேற வழி சொல்கிருர்.

வயிற்றை இறுக்கிக் கட்டுங்கள்

வரி கட்டத் தயங்காதீர்கள்.

கஷ்டம் கஷ்டம் என்று கதறி, காலம் கடத்திட வேண்டாம்.

பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாய் இருங்கள்; பொழுது விடியும்.

திட்டம் இரண்டு மூன்று நிறைவேற வேண்டும்; பிறகே கஷ்டம் போகும்.

காங்கிரசை ஆதரியுங்கள்; கண்டது கேட்டுக் கெட்டுப் போகாதீர்கள்.

காந்தியின் கட்சி எங்கள் கட்சி; உங்களைக் காப்பாற்றுவது இந்தக் கட்சி!

எதிர்த்தால் சும்மா விடமாட்டோம்; எம்மிடம் படைபலம் மிக அதிகம்.

ஏழை பணக்காரன் என்று பேதம் பேசிப் பாழ் ஆகாதீர்.

இருப்பவனிடம் இருந்தால்தான், இல்லாதவனுக்குத் தருவான். இதுதான் எங்கள் சமதர்மம்! இதை எங்கும் நீங்கள் காணவில்லை.

வந்தேமாதரம்; ஜேஇந்து! வருகுது தேர்தல்; ஓட்டுக் கொடு!

'வந்தே'—என்று அமைச்சர் துவக்கும்போதே, அதிகாரி, அமைச்சருக்கு வழி அமைக்கும் அலுவலில் ஈடுபடுகிருர்; சீமான்கள் அமைச்சரை நெருங்குகிருர்கள்; இரண்டொருவரிடம் பேசுகிருர் அமைச்சர், பொருளற்றதை; அமைச்சரின் பேச்சுக்குப் பொருள் கண்டுபிடித்துப் பூரிப்படைகிருர் சீமான்; தொழுவத்திலுள்ளதைப் பார்ப்பதுபோல, தொலைவிலுள்ள ஏழைகளை அமைச்சர் பார்க்கிருர்: தலையைக் கணக்கெடுக்கிருர். அவர்கள் வயிறு காய்வதைக் கவனிக்க மறுக்கிருர்.

மருமகன் விஷயம்?

கவன மிருக்குது!

மாட்டுச் சந்தை?

கேட்டுப் பார்க்கிறேன்!

இங்கா? அங்கா? எங்கு நான் நிற்க?

சொல்கிறேன் சீக்கிரம், நல்லபடி அமையும்.

கழகக்காரர் கொட்டம் அடக்க.........

கையாலாக வில்லையோ உம்மால்!

கூட்டம் சேருது அமர்க்களமாக.........

ஓட்டுச் சேர்க்கும் வழியைப் பாரும்.

விதைப்பண்ணைக்கு விட்ட நிலத்தின் விலையைக் கொஞ்சம் கூட்டித் தரச் சொல்லி.........

உத்தரவு விரைவிலே வரும். உம்முடைய பங்கு, தேர்தல் நிதிக்கு உடனே அனுப்பி வைத்திடும், ஆமாம்.

இப்படிப்பட்ட உரையாடல்கள்! நடந்தபடி! மோட்டாரில் உட்கார்ந்தபடி! மோட்டார் புறப்படுகிறது! ஜே போடப்படுகிறது! தூசி கிளம்புகிறது! சீமான்கள் உடையை உதறிக் கொள்கிறார்கள். ஏழைகள் அதுவும் செய்யவில்லை. கூட்டம் கலைகிறது! பத்திரிகையில் பக்கம் பிறகு நிரம்பி வருகிறது, நிகழ்ச்சி குறித்து.

தம்பி! இந்த முறையன்றி, வேறு எந்த முறையிலே நடக்கிறது அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்! இதிலே பற்றும் பாசமும் காணமுடியாது; பயமும் நபமும் காணப்படும்; ஒட்டும் உறவும் இருக்காது, உசாவல் உராய்தல் இருக்கும்; கண்களில் கனிவு இருக்காது; பார்வையில் பசி நிறைந்திருக்கும். பளபளப்பு மிகுந்திருக்கும்; பரிவு மிகவும் குறைந்திருக்கும். அதிகம் சொல்வானேன், தம்பி! இது உணவு விடுதிச் சாப்பாடு! வீட்டுச் சாப்பாடு அல்ல! உண்டவரும் தந்தவரும் கொடுத்ததையும் கொண்டவையும் கணக்கெடுக்கும் போக்கினரே—உள்ளம் உள்ளத்துடன் உறவாடும் நிலையினர் அல்லர். எனவேதான், அந்த நிகழ்ச்சிகளிலே, ஒரு கலகலப்பு இருப்பதில்லை; களிப்பு மலர்வதில்லை! காகிதப் பூவாக, கல்லுருவமாக இருக்கிறது! தம்பி! நம்முடைய கழக நிகழ்ச்சிகள் அவ்விதமல்லவே! கடல் கடந்து சென்று திரும்பி வந்த தலைமகனை, குடும்பம் வரவேற்றுக் குதூகலித்து உரையாடி, இல்லம்தனில் உள்ள எழிலை எல்லாம் எடுத்துரைத்து, இன்பம் ததும்பும்படி எதை எதையோதான் பேசி மகிழ்ந்து உறவாடும் முறையன்றோ காண்கின்றோம், நம் கழக நிகழ்ச்சிகளில். பொருளற்றதா இந்தப் போக்கு? பயனற்றதா இந்த நிலைமை? கருத்தற்றவரன்றி வேறெவரும் இதனை உணராதிருக்க முடியாது.

களிறும் காட்டெருமையும், கடுவனும் கரடியும், கொல்லும் புலியும் பிறவும் உலவும். காடு சூழ் குன்று பல சென்று வந்தேன்—பத்து நாட்களுக்கு முன்பு.

வளைந்த பாதைகள்! வழுக்கல் பாறைகள்! அடர்ந்த புதர், ஆபத்தான அடவிகள்! இங்கெல்லாம் சென்றிருந்தேன். எழில்காண அல்ல, தம்பி! காடுசூழ் இடமாம் பருகூர் மலையினில் கொடியும் கண்டேன். கன்னடம் பேசும் படுகர் கழகம் நடத்தக் கண்டேன். குளிர்மிகு 'குந்தா' தன்னில் கூடிய தோழர்மாட்டு, கொள்கையின் ஆர்வம் கண்டேன், கொள்ளை இன்பம் உண்டேன். கோத்தகிரிக்குச் சென்றேன்; கூடினர் பெரியோர், இளைஞர்; அனைவரும் பேசும் மொழி, அருமைக் கன்னடம்தான், தம்பி! அங்கெலாம் கழகம், ஆமாம்! அவரெலாம் அண்ணா என்றே அன்புடன் அழைக்கக் கேட்டு, அவன் எனக்கு எப்படி அண்ணனாவான்! ஒட்டென்ன உறவு என்ன? ஒரு தாய் வயிற்றிலா உதித்தோம்? என்று கற்றதுபேசிக் காழ்ப்பைக் கக்கிடும் போக்கினர்போல், காடுடை இடத்திலுள்ளார் இல்லை. அவரெல்லாம், அன்பினைச் சொரிகின்றார்கள், ஆதரவளிக்கின்றார்கள். நாளையோ மறுநாளோதான் நமது விடுதலைக்கான போரினைத் தொடுக்க வேண்டி நேரிடும் என்ற நெஞ்சினராக உள்ளனர்! கொஞ்சமா, அவர்கள் அன்பு!! கொடுத்தது என்ன அவர்கட்கு, நான்? பெற்றதோ பாசம், நேசம்! இதனை நான் பெற்ற பின்னர், எது இழப்பினுந்தான் என்ன? சுரங்கம் நிரம்பி உளது; பாளங்கள் பறி போனாலும்! களஞ்சியம் புகுந்து நெல்லைக் களவாடிச் சென்றிட்டாலும்; வளமிகு வயலும் இங்கே வகையாக உளது தம்பி! அல்லியைப் பறித்துச் சென்றார்; அழகு நீரோடை, அரும்புடன் இருக்குதப்பா!! அதனை நாம் இழந்தோமில்லை. கழகத்தின் கொள்கை இன்று காடு சூழ் இடங்கள்கூட நுழைந்துளது, தம்பி! உழைப்பு வெற்றி தந்துள்ளது!!

கொட்டுதே மாற்றார் நாக்கு! கொடுவாளாகி வெட்டுதே பிரிந்தோர் போக்கு! என்றெலாம் எண்ணமிட்டு, ஏக்கம் நான் கொண்டிட்டாலும், எங்கும் நான் காணும் காட்சி மாமருந்தாகி, என்னை, களிப்பூரில் கொண்டு சேர்த்து, காண் என்று கூறக்கேட்டேன்.

சுற்றுலா வந்தபோது, சிற்றூர்கள், பலவும் கண்டேன்—சிரித்த முல்லை கொல்லையில் காணும் மங்கை, விடுவளோ! பறித்திடாமல்; அதுபோல், போனது சரிதான் அண்ணா.

பொருள் என்ன கொண்டுவந்தாய் என்று பொருள்நிறைச் சிரிப்பைக் காட்டிக் கேட்டிடத் தம்பி உண்டே! பொருளாளர்! எனவே பொருளும் சிறிதளவு பெற்றுப் பெரிதும் நான் மகிழ்ச்சியுற்றேன். எங்கும் நான் கண்ட காட்சி, எவர் உள்ளமும் மகிழும் வகையே! கோவை மாவட்டந்தனில், கோபமோ இவர்க்கு என்று எவரும் எண்ணிடும் வகையிலே காணப்படுவர், கொள்கை காப்போர். உடுமலை நாராயணனுடன், பொருள் பெறத்தக்க நல்ல புன்னகை முகத்தில் காட்டிப், பொறுமையை அணியாய்ப் பூட்டித், தொண்டாற்றிடும் இளைஞர் தேவசகாயம் கூடி, எனை அழைத்துச் சென்ற ஊர்களின் எண்ணிக்கை மறந்து போனேன்—எங்கும் நான் கண்ட ஆர்வம் என்றுமே மறப்பேன் அல்லேன். ஆங்கொரு சிற்றூர், தம்பி! உடுமலைப் பகுதி! ஆமாம்! பகலிலே ஊர்வலம்! பரிவு நிழலளிக்க, பாசம் உடனிருக்க, பல்லோர்கள் வந்தார்கள், மேடைநோக்கி. நானிருந்த வண்டி நகர்ந்தது, ஓடவில்லை. ஓடோடி வந்தார் தோழர்! ஒருகணம் அண்ணா! என்றார்! நான் இந்த ஊர்க்கழகத்தின் பொறுப்பாளன், இதனைக் கேளும், "அண்ணனைக் காண ஓடிவருகிறாள் என் துணைவி, அண்ணா! நின்று ஓர்கணம், அன்னாளின் அஞ்சலி ஏற்றுக்கொள்ளும். என்னுடைய துணைவி யாரோ என்று எண்ணிட வேண்டாமண்ணா! சென்னையம்பதியிலுள்ள செல்வி அனந்தநாயகியின் தங்கையே எந்தன் தாரம்!" என்று கூறுகின்றார். வந்த மங்கையும் வணக்கம்கூறி, செண்டுகைக் கொடுத்துவிட்டுச் சென்றிடக் கண்டேன்—என்ன இவ்வன்பு வெள்ளம், இத்துணை வேகமாக, எங்கெங்கும் கொழிக்கின்றதே என்று எண்ணிப், பெருமிதம் கொண்டேன், தம்பி!

இவ்விதமாகவெல்லாம் இணையில்லா இன்பம், அன்பு, ஈட்டி என்முன்னம் கொட்டி, எடுத்தேகு அண்ணா என்று எண்ணற்றோர் கூறும்போது, பண்டிதர் பதைபதைக்கப் படுகளம் ஆவதெனினும் பார்க்கிறேன் ஒருகை என்று பண்பற்றுப் பேசும் பேச்சு, எனக்கென்ன கலக்கந்தனையா, ஏற்படுத்திட இயலும்? வெறும் கேலிக் கூத்து! பாரெலாம் பஞ்சசீலம் பரவிட வேண்டுமென்று நாநலமிக்க பேச்சுப் பேசிடும் பண்டிதர் நேரு போரில்லை பொறுப்பற்றதோர் போக்கோ செயலோ இல்லை, போற்றிடுகின்றோம் நாட்டை, மீட்டிட உறுதிகொண்டோம், அறநெறி நின்று கூறிடும் நம்மை நோக்கி, உள்நாட்டுப் போரும்கூட மூண்டிடுவதாயின், நான், உமக்கொரு நாடு தாரேன், உறுதி, இது அறிவீர் என்று

உரத்தக் குரலெழுப்புகின்றார்—உள்ளத்தில் குழப்பம் மூண்டதாலே! இதனை நான், அன்பு சொரிந்திடும் குழாத்திடை இருந்தகாலை எண்ணிக்கொண்டேன்—மிரட்டிடும் பேச்சைக் கேட்டு மிரண்டிடுவாரோ சிலர் என்று—தம்பி! அதுதான் இல்லை! தம்பிகள் சிலர் போனார்கள். கழகத்தகுதியும் உடனே போச்சு! இங்கு இனிக் கழகம் தன்னைச் சீந்துவார் எவரோ என்று ஏளனம் பேசினாரே, ஏமாளிகளானோர் சில்லோர், பார் நமது திருவிடம் காட்டும் கோலம் புரிந்தது பண்டிதர்க்கு, பகற்கனவு என்றார் பழுக்காப் பான்மையினர் சிலரும். பண்டிதர் உணருகின்றார், பரணியாகித் தரணியெங்கும் பரவிடும், திராவிட நாடு திராவிடருக்கே என்னும் கொள்கை வளர்ந்துள்ள வகையும் அளவும். ஆகவேதான், அவரும் அச்சம் மிகவும் கொண்டு அச்சுறுத்துகின்றார்; அழித்திடுவேன் படையால், அமளிக்கும் தயார் என்கின்றார். காட்டுவது எதனை, இந்தக் காட்டுப் பேச்சு? கண்மூடி இருந்து விட்டோம்; இயக்கம் இறந்துபடும் தானாக என்றெண்ணி ஏமாந்துபோனோம்; இல்லை! இல்லை! இவ்வியக்கம் எங்கெங்கும் பரவும் போக்கு ஏதேனும் ஆபத்துண்டாக்கும்; எனவே, இதனைப் பலமாகத் தாக்க வேண்டும் என்று எண்ணுகின்றார் பண்டிதர் என்பதன்றோ பொருளாகின்றது, தம்பி! பட்டபாடு வீண்போயிற்றா! இதோ, பண்டிதர் பதைத்து எழுகிறாரே! பகற்கனவு என்றா அவரும் பரிகாசம் பேசிவிட்டு, பாடிக்கொண்டே பழகுவோம்; பருகிக் கொண்டே பாடுவோம் என்று ஆகிவிட்டார்! இல்லை; தம்பி! நான் காடும் மேடும் சுற்றிப் பட்டிதொட்டியில் பேசி, கண்டிடும் காட்சிகள், மொத்தமாய்த் தந்திடும் நிலைமை விளக்கமது நேருபண்டிதர்க்குத் தெரிந்துவிட்டது; புரிந்துவிட்டது! இனி, இரண்டில் ஒன்றுதான்—நம்மை அடியோடு அழிப்பது, அல்லது நமது கொள்கைக்கு மதிப்பளிப்பது!

இத்துணை வீரமுழக்கமிட்டவரா, இறங்கிவருவார் என்று கேட்பது புரிகிறது. தம்பி! ஆனால் இதனைக் கேள், ஏறினோர் இறங்கவேண்டும், மேலும் ஏறிட இடமில்லாதபோது! பண்டிதர் போக்கு, பழைமை அறிந்தோர்க்கு பயமூட்டாது! வேகப்பேச்சு, அவருக்கு வெல்லக்கட்டி; கரைந்துபோகும்!! ஆகாதென்பார்! ஆர்ப்பரிப்பார்! அரிமாபோலக் குரல் எழுப்பிடுவார்! எல்லாம், கட்டம் ஒன்று, முடிவல்ல!! கதையை அறிந்திட வழி சொல்லிடுவேன். பாகிஸ்தானை ஜின்னா கேட்டபோது, பதைபதைத்தது கொஞ்சமா? பகை கக்கியது சாமான்யமா? கட்டம் ஒன்று!! கண்டோமே! இறுதியில் நடந்தது என்ன, தம்பி! கராச்சி தலைநகர் ஆயிற்று, காயிதே

ஆஜம் வெற்றியுடன் கண்டார். பாகிஸ்தான் கண்டோம்!! உள் நாட்டுப்போர் மூண்டிடட்டும் ஒருபோதும் பாகிஸ்தானுக் கிணங்கேன்; உறுதி! காந்திமேல் ஆணை! என்று கூறினர், அறிவாயா! என்று கேட்டுச் சிரித்தார் ஜின்னுவும்.

அந்தப் போக்கு இம்மிகூட மாறிடக் காணோம்; அனுபவம் பாடம் தருமாம்; அது இங்கு தென்படக் காணோம்.

அணுகுண்டு யுகத்தினிலே ஆகுமா பாகிஸ்தான், தனிநாடு? என்று ஆர்ப்பரித்தார் பண்டிதர். கொண்ட கொள்கையை மாற்றிடவோ, கோணல் பாதை புகுந்திடவோ, கோல்கொண்டோர் முன் குதித்தாடிப் பண்டமும் பழமும் பெற்றிடவோ, சிற்றறிவினரா ஜின்னுவும்? சீரழிக்கவா அவர் வந்தார்? பாகிஸ்தான் எம் பிறப்புரிமை; அதனைப் பெற இயலாதேல், கபுர்ஸ்தான் எம் இருப்பிடமாய், ஆகட்டும்; கவலை இல்லை, எனக் கர்ஜித்தார்! காங்கிரஸ் குரலை மாற்றிற்று.

இந்தியா என்றென்றும் ஒரு நாடாய் இருந்திடச் செய்வதே காங்கிரஸ் திட்டம். எனினும் ஏதோ ஓர் பகுதி, இருந்திட மாட்டேன் இந்தியாவில், எனக்கோர் அரசு தனியாக இருக்கவேண்டும் எனப் பிடிவாதம் பிடிக்குமானுல், என் செய்வோம்! தடுத்திட மாட்டோம், உமதிஷ்டம்! தனி நாடாகப் பிரிந்திடு, போ! எனத் தயக்கமின்றி ஒப்புக் கொள்வோம்; தத்துவம் இதுவே அறிவீர் என்ருர், தலையே போவதானுலும் தரவேமாட்டேன் பாகிஸ்தான், எனத் தர்பார் பேச்சுப் பேசிய பண்டிதர், நேரு.

தம்பி! அது வேறு காலம், என்று கூறுவார் உளர். பிறிதோர் சமயம் அதுபற்றி என் கருத்தைத் தெரிவிக்கிறேன். இப்போது, இது விளக்கமாகிவிட்டதல்லவவா!

கழக வளர்ச்சி வேகமுடன்,

காணுமிடம் எங்கும் எழுச்சி,

எழுச்சியின் அடிப்படை நெஞ்சநெகிழ்ச்சி,

நெகிழ்ச்சிக்குக் காரணம், பாசம், பற்று,

பாசம் பற்று இல்லை வேறு எவ்விடமும்.

அவ்விடமெல்லாம் வெறும் வியாபாரம்,

கணக்கர் போனுல் கடை போகும் என்று கருதிய நிலை இன்றில்லை,

காடுசூழ் சிற்றூர் எல்லாம், கழகம் கண்டனர் நம் தோழர்,

கழக நிலையை அறிந்ததால் கலக்கமடைந்த பண்டிதர், கலக்கப் பார்க்கிருர் நம் மனதை, உள் நாட்டுப் போர் வருமென்று கூறி.

ஆனுல், தம்பி! உள்நாட்டுப் போர் என்பதெல்லாம் உதட்டுப் போர்தான்! வேறென்றுமில்லை. எங்கும் பூத்திருக்கும் வண்ண மலர்களை, காம்பு உடையாமல். இதழ் கெடாமல், பக்குவமாகப் பறித்தெடுத்து மாலையாகத் தொடுத்திடுவதுபோல, எங்கணும் காணப்படும் எழுச்சியினைப் பக்குவமாகக் கூட்டுச்சக்தியாக்கி, வருகிற பொதுத்தேர்தலிலே, நம் கழகம் வெற்றிபெற முனைந்து நின்று பணியாற்று. முறிந்து போகும் பண்டிதர் முடுக்கு.

தேர்தல் குறுத்துத் திட்டமிட்டு, திரட்டிடு பேராதரவு. தெருத்தெருவாகச் சென்றிடலாம், தெரிவித்திடலாம், காங்கிரசாட்சியிலே, விளைந்துவிட்ட கேடுபாடுகளை. ஒன்ரு இரண்டா அவை, தம்பி! அடுக்கடுக்காக உள்ளனவே! ஒன்றை எடுத்துக்கொண்டாலே, நன்ருய் விளக்க நாள் ஆகும். உள்ள நாட்கள் மிகக் குறைவு, கொள்ளை வேலை இருக்குதப்பா! வேறு நினைப்புகள் வேண்டாம் இனி, வெற்றிகாண வழி தேடு! உதயசூரியன், நம் சின்னம். ஊரெங்கும் அறிவித்திட, முன் வருவாய். நீயே அறிவாய் என்ருலும், நானும் அறிவேன் என்றுணர்த்த, தம்பி! சில நான் தொகுத்தளிப்பேன். தரமுடன் அதனைப் பயன்படுத்து; துண்டு விளம்பரம் ஆக்கலாம், சுவரொட்டிகளும் ஆக்கலாம், சிந்துகளாக்கிப் பாடிடலாம், செய்முறை, உன்திறம். விட்டுவிட்டேன். கேட்டிடு, கூறிட, கருத்துரையை :

சோறு தின்பவர் சோம்பேறி எனச் சொல்லுகிருர் நேரு பண்டிதரும்; 'ஓட்டு' கேட்கும் காங்கிரசார் உண்பது என்ன? கேட்டிடுவீர்!

கோட்டை கொத்தளம் கட்டினவர், கோபுரம் பலப்பல எழுப்பினவர், மாடமாளிகை அமைத்தவர்கள் சோறு தின்பவர், நம் இனத்தார், சோம்பேறிகளோ, அவர் களெலாம்?

கண்டவர் மெச்சும் காவியமும், கண்ணைக் கவரும் ஓவியமும் வளம்தரும் தொழில்கள் வகைவகையாய்க் கண்டவர் தமிழர்! சோறுண்டார்! அவர்தமை ஏசும் காங்கிரசை ஆதரிப்பது அறமாமோ?

அருந்தமிழ் நாட்டை ஏசுகிறார் ஆளுங் காங்கிரஸ் கட்சியினர். அவர்க்கோ 'ஓட்டு'! ஐயயோ!!

செக்கு' இழுத்த சிதம்பரனார்

வளர்த்த, காங்கிரஸ் இன்று

'செக்கு தரும் சீமானிடம் பல்லிளிக்குதே!
வெட்கம்! வெட்கம்! என்று காலம் காரித்துப்புதே!

விலங்கொடித்த வீரர்களே!
விம்மிப் பயன் என்ன!
வீறுகொண்டெழுந்திடுவீர்
மரபு காத்திட!

'உதயசூரியன்' ஒளியை நாடு பெற்றிட!
'ஓட்டு'களை அளித்திடுவீர் புதுவாழ்வு பெற்றிட!

காத்திருந்தவன் பார்த்த பெண்ணை
நேத்து வந்தவன், கடத்திச் சென்ற
கதையைப் போலக், காங்கிரசாட்சியில்
கஷ்டம் தீரும் என்று ஏழை காத்திருக்கையில்,
கள்ள மார்க்கட்காரன் வந்து அடித்தான்
கொள்ளை!! கையைத் தலையில் வைத்தழுதான்
உழைக்கும் ஏழை!
உழைத்தலுத்த உத்தமனே! அழுதது போதும்!
உதிக்குதுனக்காகவே 'உதயசூரியன்'.
இன்ப ஒளி பெற்றிட நீ வாராய் என்று
அன்புடனே அழைத்திடுது, தி. மு. கழகம்.

புஞ்சை, நஞ்சை ஆச்சென்றார்,
புதுப்புதுப் பாசனம் பார் என்றார்,

விளையுது நெல்லு மலைபோல என
விளம்பரம் பலமாய்ச் செய்திட்டார்,

விளைச்சல் அதிகம் ஆனபின்பு
விலைகள் விஷம்போல் ஏறுவதேன்?

வீட்டைத் தேடிக் காங்கிரசார்
ஓட்டுக் கேட்க வரும்போது

விளக்கம் கேட்பீர், தோழர்களே!
திருவிடம் விடுதலை பெற்றிடவே

தி. மு. கழகம் ஆதரிப்பீர்!
'உதயசூரியன்' உம் சின்னம்

உலகு தழைத்திடச் செய்வதுவும்
'உதயசூரியன்' உணர்ந்திடுவீர்!

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஏட்டினில்!
இந்தி குட்டக் குனியும் குணக்கேடர்கள் நாட்டினில்!

கடன் பட்ட நாடு காவல் இல்லா வீடு

விழி இழந்தும் வாழலாம்
மொழி அழிந்தால் வாழ்வில்லை.

தட்டிக்கேட்க ஆள் வேண்டாமாம்
தாள் வேண்டாமாம், கதவுக்கு!

உரிமை இழந்த நாடு உயிரற்ற வெறும் கூடு

சாக்காடு மேல் என்று புலம்பும் நிலை
பூக்காடு எனப்புலவோர் மொழிந்த நாட்டில்.

சங்கம் கண்டார், முன்னவர்; தென்னவர்
பங்கப்படுகிறோம், இன்று; அவர், வழி வழி!

வாளும் வேலும், முன்னோர் கரத்தில்
தளையும் வளையும் இன்றுளார் கரத்தில்!

இனத்துக்குள்ள இயல்பினை
எவரே அழிக்கவல்லவர்கள்?

அரிசிச் சோறு கூடாதாம்! அறிவிக்கிருர் இப்போது. ஆளக் காங்கிரஸ் வந்திட்டால் அழியும் நெல்வயல்அறிவீரே

கோதுமை விளைவது வடநாட்டில். கோதுமை சாப்பிடத் தூண்டுகிருர். கோதுமை சாப்பிட நாம் முனைந்தால், கோடி கோடி பணம் வடக்குக்கு.

ஓட்டுச் சாவடி போகுமுன்பு ஒரு கணம் இதனை யோசிப்பீர்; உழவுத் தொழிலைக் காத்திடவே 'உதயசூரியன்' ஆதரிப்பீர்!

அமெரிக்கா தரும் பால் பவுடர் இலவசம், ஏழைக் குழந்தைகட்கு! அதுவும் கள்ளமார்க்கட்டு, வந்து விற்குது! காரணம் யார்?

பிச்சை எடுத்தார் பெருமாளு; அத்தைப் பறித்ததாம் அனுமாரு எனக் கொச்சை மொழியிலே கூறுவரே, இது அதுபோலத்தானே இருக்கு!

அமெரிக்கத் தூதர் கண்டிக்கிருர்; ஆளும் காங்கிரஸ் பதில் தருமா?

சிங்களம் ஆளும் சீமாட்டி சிரீமாவோ கொடுமையினுல், சிறகொடிந்த பறவைகளாய் சித்திரவதைக்கு ஆளாகிச் சீரழிகிருர், நம் நாட்டார்.

அம்மாவுக்கு மாம்பழம் ஐயா கொடுக்கிருர் பரிவோடு. ஆலாய்ப் பறக்கும் தமிழர்களை, அடித்து நொறுக்குவது அம்மாதான்!! ஐயாவுக்குக் கவலை இல்லை, ஆமாம், அவர் வடநாடு!! வதைபடுவது இலங்கையிலே, வாழ்விழந்த திராவிடராம்.

திராவிடர் வாழப் பாடுபடும் தி. மு. கழகக் கரம் வலுத்தால், தீரும் துயரம் இலங்கையினில்!

இலங்கைத் தமிழர் துயர் துடைக்க, சிங்கத் திராவிடத் தோழர்களே! பொங்கி எழுவீர்; வந்திடுவீர், பொதுத்தேர்தல் வருகுது விரைவினிலே.

பொல்லாங்கெல்லாம் அழிந்திடவே, புதுமை வாழ்வு செழித்திடவே, போட்டிடுவீர் உம் ஓட்டுகளை 'உதயசூரியன்' அழைக்கின்ருன்.

இவைகளையும் இவை போன்றவைகளையும் எடுத்துக் கூறி, நாட்டினருக்குக் கருத்து விளக்கமளிக்க நாட்கள் அதிகம் இல்லை, தம்பி! நாட்கள் அதிகம் இல்லை!

எவரெவர் எந்த எந்தத் தொகுதி என்பதும் அறிவிக்கப்பட வில்லையே, என்பது குறித்துக் கவலைப்படாதே. உன் கடமை உதயசூரியன்' வெற்றிக்காகப் பாடுபடுவது. எனவே, தம்பி!

உறங்கும் உலகை எழுப்பிவிடும்
உதயசூரியன்!

உலகு தழைக்க ஒளி தருவது
உதயசூரியன்!

உழைப்பவர்க்கு உரிய சின்னம்
உதயசூரியன்!

உமது வாழ்வு மலரச்செய்வது
உதயசூரியன்!

இருளகற்றி எழிலளிக்கும்
உதயசூரியன்!

இன அரசு விரும்புவோர்க்கு
உதயசூரியன்!

திருவிடத்தின் விடுதலைக்காம்
உதயசூரியன்!

தி. மு. கழக தேர்தல் சின்னம்
உதயசூரியன்!

ஓட்டுப் போட ஏற்ற சின்னம்
உதயசூரியன்!

நாட்டினரே! போற்றிடுவீர்!
உதயசூரியன்!

ஞாயிறு போற்றுதும் என்று கூறினாரன்றோ, இந்த ஞாலம் போற்றும் பேரறிஞன், இளங்கோவும்! அந்த ஞாயிறு இல்லாவிட்டால் ஞாலம் ஏது?

உயிர்களுக்கெல்லாம் உற்ற தோழன்
உதயசூரியன்!

அரும்பை மலரச் செய்பவனும்
உதயசூரியன்!

அனைத்துக்கும் ஒளி ஊட்டுபவன்
உதயசூரியன்!

அகிலம் ஆளும் வலிமை பெற்றோன்
உதயசூரியன்!

பொங்கிவிடும் வளத்தைத் தந்திடுபவனும்
உதயசூரியன்!

இதனை நாடு அறிந்து, நல்லோர் எல்லாம் நம்மவராகி நாட்டின் நலிவு போக்கிடும் பணியில், நமக்காதரவு மிகவும் தந்திடச் செய்திடல், உன் கடன் அறிவாய் தம்பி! மற்றவை தொடர்ந்து தெரிவித்திடுவேன், மரபு காத்திடும் உடன் பிறந்தோனே!

அண்ணன்,



29-10-61

கடிதம் : 147

பணபாணம், பஞ்சு பஞ்சாக...

சட்டசபையில் திராவிடநாடு பற்றி அமைச்சர் கருத்து—

தேர்தலில் பண பாணம்—

தம்பி!

நரகல் நடையில் ஏசுவார்கள்!
பழிச்சொற்களை வீசுவார்கள்!
வழிமடக்கி மிரட்டுவார்கள்!
வம்புவல்லடிக்கு வருவார்கள்!
வழக்கில் சிக்கவைப்பார்கள்!
தோழமையைக் கெடுப்பார்கள்!
கலகமூட்டிப் பார்ப்பார்கள்!
காவல்துறையை ஏவுவார்கள்!
எதையும் துணிந்து செய்வார்கள்!

இவ்வளவும், வேகத்துடன் விறுவிறுப்புடன், துணிச்சலுடன், செய்பவர்கள், நிரம்பிய நாடாகிவிட்டது தமிழகம்—

தேர்தல் நேரம் நெருங்கி வருகிறதல்லவா, அதனால் இப்படிப் பட்ட, உருட்டல் மிரட்டல் பேர்வழிகள், நரகல்நடை பயின்ற வர்கள் ஆகியோருக்கு நிரம்பக் கிராக்கி கிடைக்கும், இப்போதே, அந்த நிலை இங்கும் அங்கும் தெரிகிறது.

என்னடா தெரியும்

உங்க அண்ணாத்துரைக்கு?

என்று கேட்கும் பேச்சாளர்கள், அமைச்சர்களை அருகே வைத்துக்கொண்டே, தூற்றுகிறார்கள்.

குலம் கோத்திரம் தெரியாதா, குணமும் பணமும் தெரியாதா, குட்டுகள் யாவும் வெளிப்பட்டுவிடும், மட்டந் தட்டிவிட்டு மறுவேலை—என்று பேசுபவர்கள், கிளம்பிவிட் டார்கள், தூற்றியே நம்மைத் தீர்த்துக்கட்டி விடவேண்டும் என்ற நினைப்புடன்.

உங்க அண்ணாத்துரை ஒழிந்தான் இத்தோடு! மண்ணைக் கவ்வப்போகிறான்! பார்! பார்!—என்று மீசை முறுக்குவார்கள். அமைச்சர்களே ஆலமரத்தடி ஆரூடக்காரர் நிலைக்குத் தமது தரத்தைக் குறைத்துக்கொள்ளும்போது, வெந்ததைத் தின்று வாயில் வந்ததை உமிழும் உத்தமர்களைப்பற்றிக் கேட்கவா வேண்டும்!

திட்டுவதோடு அல்ல, தம்பி! திட்டமிட்டபடி இருக் கிறார்கள்.

காதைப் பிடித்திழுத்துத், தலையில் குட்டி, இவ்வளவுதானா உன் திறமை? என்று கேட்டுக் கண்டிக்கும் எஜமானர்கள் போன்ற நிலையில் உள்ள டில்லித் தேவதைகள், இங்கு உள்ள காங்கிரஸ் தலைவர்களைக் கண்டிக்கிறார்கள். தி. மு. கழகத்தைத் தீர்த்துக் கட்டப்போகிறீர்களா, இல்லையானால், உங்களைத் தீர்த்துக் கட்டவா, என்று மிரட்டுகிறார்கள்.

ஈவு இரக்கமற்ற முறையில் வேலை வாங்கும் எஜமானன், உழைத்து உருக்குலைந்து கிடக்கும் வேலையாளை ஏசுகிறா னல்லவா,

மூக்குப் பிடிக்கத் தின்கிறாயல்லவா?

வேளைக்குப் படி சோறு கொட்டிக் கொள்கிறாய் யல்லவா?

மரமண்டையாடா உனக்கு?

தண்டச் சோறு தின்னவா வந்து சேர்ந்தாய்?

என்றெல்லாம்.

அரசியல் நிலையில், கேள்விகேட்க, வேலைவாங்க, திருத்த, கண்டிக்க, மடக், இடிக்க, தடுக்க, அதிகாரம் பெற்றவர்களாக அல்லவா, டில்லியில் உள்ள மேலவர்கள்—மூலவர்கள் உள்ளனர். அவர்களின் அனுமதி பெற்று, ஆதரவு நாடி, பிழைத்துத் தீரவேண்டிய அரசியல் கழைக்கூத்தாடிகள், பாவம், என்ன செய்வார்கள்? எதிர்த்துப் பேச முடியுமா? ஏனென்று கேட்க முடியுமா? சீட்டுக் கிழிந்துவிடுமே—ஆகவே, காட்டிய வழிநடக்க, நீட்டிய இடத்தில் கையெழுத்திட, குட்டும்போது குனிய, தொட்டிழுக்கும்போது பணிய வேண்டிவருகிறது.

தி. மு. கழகத்தை அழித்தொழித்துக் காட்டுகிறோம், எம்மை அழித்துவிடாதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்டுப், படைபலம் பெற்றுத் தேர்தல் களத்திலே நம்மைச் சந்திக்க வருகிறார்கள், இங்கு உள்ள காங்கிரஸ் தலைவர்கள்.

நம்மைத் தாக்கினால் மட்டுமே, தென்னகக் காங்கிரஸ் தலைவர்கள் வடக்கத்தித் தலைவர்களின் தாக்குதலிலிருந்து தம்மைக் காப்பாற்றுக் கொள்ள முடியும்.

நிலைமை. தம்பி! என்னவென்றால், தி. மு. கழகம் குறித்து டில்லி மேலிடம் கேட்டபோதெல்லாம், தென்னகக் காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் கீர்த்தியும் கித்தாப்பும் கெட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில், தி. மு. க. பற்றி,

சிறிய கும்பல்

சீந்துவார் இல்லை

சிதறிப்போகும்

என்றெல்லாம் சொல்லிவைத்திருந்தாககள். தென்னகக் காங்கிரஸ்காரர் சிலருக்கு, உண்மையாகவே, அகில உலகிலும் தம்மைவிட அறிவாளிகள் இல்லை, தம்மைத் தவிர தியாகத் தீயிலே குளித்தெழுந்த தீரர்கள் இந்தத் தரணியிலேயே வேறு எவரும் இல்லை, என்ற எண்ணமும், கழகத் தோழர்கள் ஏதும் அறியாதவர்கள், எத்தர்களின் பிடியிலே சிக்கிக்கொண்ட

ஏமாளிகள், வெறிச் செயலில் ஈடுபடுவோர் என்று ஓர் எண்ணமும் இருக்கிறது.

பயல்களுக்குப் பண்பே கிடையாது

என்று நம்மை ஏசுவதன்மூலம், பண்பின் பெட்டகம் என்ற பட்டப்பெயர் தமக்குப் பாரிலுள்ளோர் கூடித் தந்துவிடுவர் என்று எண்ணிக்கொண்டுள்ளனர்.

தென்னகத்துக் காங்கிரஸ் தலைவர்கள், தி. மு. க. கவனிக்கப்படவேண்டிய அவசியமே இல்லாத ஒரு சிறு கும்பல் என்று, வடக்கே அமைந்துள்ள பேரரசு நடாத்துவோருக்குக் கூறிவிட்டனர்; ஆனால், நாளும் கழகநடவடிக்கைகள் புது விறுவிறுப்புடன் நடப்பதும், மக்கள் ஆதரவு பெருகுவதும், கிளர்ச்சிகளில் தி. மு. கழகம் ஈடுபடவேண்டிய நிலையும் தேவையும் ஏற்படும்போது, அதன் வடிவமும் வண்ணமும் வகையாக இருப்பதும், பேரரசினருக்குப் புரிந்துவிட்டது. எனவே, அவர்கள் தி. மு. க. பற்றி, நீங்கள்,

தப்புக் கணக்கு காட்டினீர்கள்.

தவறான விளக்கம் கொடுத்தீர்கள்.

வளரவிட்டு விட்டீர்கள்.

வெறும் வாய்ச்சவடால் அடிக்கிறீர்கள்.

என்று கூறிக் கண்டிக்கிறார்கள்; ஏன் தி. மு. கழகம் வளருகிறது? சிறு கும்பல் என்றீர்கள்; அது பெரும் இயக்கமாகி இருக்கிறது; சீந்துவார் இல்லை என்றீர்கள், எல்லாத் துறைகளிலும் கழகக் கரம் தெரிகிறது; சிதறிப்போகும் என்றீர்கள் வளர்ந்த வண்ணம் இருக்கிறது; ஏன் இப்படித் தவறான தகவல் கொடுத்தீர்கள் என்று இடித்துக் கேட்கிறார்கள்.

பேரரசிலுள்ளோரின் மனப்போக்கை எடுத்துக் காட்டும் முறையிலே, வடநாட்டு 'ஏடுகள்' அடிக்கடி எழுதுகின்றன.

தம்பி! சட்டமன்றத்தில் ஒருமுறை, நிதி அமைச்சர் சுப்ரமணியம்,

திராவிடநாடு கேட்பதைப் பத்து வருடம் தள்ளிப் போடும்படி பேசினாரே, நினைவிலிருக்கிறதல்லவா? அப்போது, பம்பாய் ஆங்கில ஏடொன்று, எடுத்தது பேனா, தொடுத்தது கண்டனம் அமைச்சர்மீது.

எப்படி, சமரசம் பேசலாம்?

பத்து வருஷத் தவணை கேட்கலாமா?

கழகத்துக்கு நீ உடந்தையா?

கதர் உடையில் கழகமா?

இப்படிப்பட்டவர் காங்கிரஸ் அமைச்சராக இருக்கலாமா?

அண்ணாத்துரையே பரவாயில்லை, பிரிந்து போகிறேன் என்கிறான். அமைச்சர் வேலை பார்க்கும் காங்கிரஸ்காரர், 10 வருடம் ஒட்டிக்கொண்டு இருந்துவிட்டு, அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு, பிறகு நாட்டைப் பிரித்துக்கொள்ளத் திட்டமிடுகிறார்.

இது மிகமிக ஆபத்து!

காங்கிரஸ் அமைச்சரின் பேச்சு, கண்டிக்கத் தக்கது.

என்றெல்லாம் அந்த ஆங்கில ஏடு எழுதிற்று.

உணருகிறார்களோ இல்லையோ, பேரரசு நடாத்தும் நிலையில் உள்ள வடநாட்டுத் தலைவர்கள், கழகத்தின்மீது கோபம் கொள்கிறார்கள்; ஆனால் தென்னகத்துக் காங்கிரஸ் தலைவர்கள் மீதோ, சந்தேகம் கொள்கிறார்கள்.

இவர்கள் பதவியில் ஒட்டிக்கொண்டு, பலனைச் சுவைத்துக் கொண்டு இருப்பதால், பல்லிளித்துக் கொண்டுள்ளனர்; உள்ளூர இவர்களுக்கும் கழகக்காரர் போலவேதான், வடநாடு தென்னாடு என்ற பேத உணர்ச்சி இருக்கிறது; இவர்கள்,

கூடிக் குடிகெடுக்கிறார்கள்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள்.

இந்தியா ஒன்று என்கிறார்கள் "எமக்கு இவ்வளவு தானா?" என்று பங்குச் சண்டை போடுகிறார்கள்!

இவர்களை முழுவதும் நம்பிவிடுவதற்கு இல்லை! எந்த நேரத்திலும் இவர்கள் தமது கோலத்தை மாற்றிக் கொள்வார்கள்; கோபம் கக்குவார்கள்! இவர்கள்மீது எப்படியும் ஒரு கண் வைத்தபடிதான் இருக்கவேண்டும், என்று பேரரசினர் எண்ணுகின்றனர்.

எனவே வடக்கே அமைந்துள்ள பேரரசினை நடாத்திச் செல்பவர்கள், காங்கிரஸ் கட்சியினராக இருப்பினும், தென்னகத் தலைவர்களைச் சந்தேகிக்கிறார்கள்.

இது தென்னகத் தலைவர்களுக்கும் புரிந்துவிட்டது.

எனவே, அந்தச் சந்தேகத்தையும் துடைத்துத் தீர வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, தென்னகக் காங்கிரஸ் தலைவர்கள், பேரரசு நடாத்தும் பேறுபெற்றோரின் 'தாக்கீது' கண்டு, கடுங்கோபத்தை வரவழைத்துக்கொண்டு, தி. மு. கழகத்தைத் தாக்கிடத் துணிவு கொண்டுவிட்டனர். ஆமடா தம்பி, ஆமாம்! உள்ளதை உள்ளபடி கூறிவிட்டேன்! உண்மையை மறைக்க விரும்பவில்லை. தி. மு. கழகத்தை ஒழிக்க, எல்லாவிதமான வலியினையும், திட்டமிட்டுச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறது, காங்கிரஸ் கட்சி.

அச்சமூட்டக் கூறுவதாக எண்ணிக்கொள்ளாதே! ஆனால், அலட்சியத்தாலே, உண்மையை மறைத்து வைப்பது தவறல்லவா? அதனால் கூறினேன்.

வலிவு கண்டு அஞ்சும் இனம் அல்ல நீ; அறிவேன்; பெருமைப்படுகிறேன்!

நான், தென்னகக் காங்கிரசு தலைவர்கள், பேரரசு நடாத்துவோரின் சந்தேகத்தை நீக்கவும், கசப்பைப் போக்கவும், தி. மு. கழகததைத் தாக்குவதுதான், தமக்குள்ள ஒரே வழி என்ற முடிவுக்கு வந்து, தளவாடங்களைத் திரட்டி வைத்துக்கொண்டும், துந்துபி முழக்கிக்கொண்டும், தொடை தட்டிக்கொண்டும் கிளம்பும் நிலையைக் காட்டுவது—அச்சம் ஏற்படுத்த அல்ல—தம்பி! உன் உயர்தரமான உழைப்பின் பயனாகக் கழகம் பெற்றுள்ள வளர்ச்சி, அத்துணை பெரிது, அத்துணை வலிவுமிக்கது. எனவேதான் கழகத்தைத் தாக்க, காங்கிரசு அத்துணை திட்டமிட்டுத் தளவாடங்களைத் திரட்ட வேண்டி வருகிறது என்பதை உணர்ந்து உவகை பொங்கும் நிலையைக் காணத்தான்!

பத்துப்பேருக்கு நடுவே வீற்றிருக்கும் ஒருவன், அணிபணி பூண்டிருப்பினும், நறுமணம் பூசியிருப்பினும், நகைமுகம் காட்டிடினும், ஒருவரும் திரும்பியும் பாராமல், என்ன என்று கேளாமல், அலுவல்களைக் கவனித்துக்கொண்டும், உரையாடி மகிழ்ந்தபடியும் இருந்திடின், கவனிக்கப்படாமல் விருப்பவன், மனம் என்ன பாடுபடும்! அங்கு உள்ள சுவரினையும் கதவினையும்

விரிப்புதனையும் பிறவற்றையும், காண்போர், எங்ஙனம் அவை குறித்து, நாட்டம் ஏதும் காட்டாதிருப்பரோ, அஃதேபோல, நடுவிலே இடம்பெற்றுள்ள ஒருவனைக் கண்டவர்கள், துளியும் பொருட்படுத்தாது இருப்பின், வெட்கம் பிய்த்துத் தின்னும், வேதனை பீறிட்டு எழுமல்லவா? உருவம் கூடவா தெரியவில்லை! உரையாடக் கூடவா, மனம் இல்லை! அற்பனென்று எண்ணிக் கொண்டனரோ? அனுமதேயம் என்று கருதினரோ?—என்றெல்லாம் எண்ணி ஆயாசப்படுவானல்லவா?

பொதுத் தொண்டில் ஈடுபடுவோரின் மனதை வெகுவாகப் புண்படுத்தக்கூடியது,

எதிர்ப்பு

ஏசல்

இழிமொழி

பழிச்சொல்

இவைகள் அல்ல! அலட்சியப்படுத்தப்படுவதுதான், அவர்களின் மனதை மிகுதியாக வாட்டும்; வேதனை கொட்டும்; மனம் புண்படும்.

அதிலேயும், மிகத் தேவையான, மிகத் தூய்மையான ஒரு இலட்சியத்துக்காகப் பணிபுரிவோரை, மற்றவர், கவனிக்க மறுத்தால், இலட்சியவாதிகள் இரத்தக் கண்ணீர் வடிப்பர்.

தம்பி! நமது நிலை அப்படி இல்லை! சிலகாலம், ஏறெடுத்துப் பார்ப்பதும், யாரடா அவன் என்று கேட்பதும்கூட, அளவுக்கதிகமான தகுதியைக் கொடுத்துவிடும் என்று எண்ணிக் கொண்டு, நம்மை அலட்சியப்படுத்தி வந்தனர்.

அப்போதெல்லாம், தம்பி! உண்மையைக் கூறுகிறேன் நான் குன்றிப்போனேன்.

நமது கழகத்தாரின் பேச்சு, 'ஓசை' என்ற அளவு கூடவா இல்லை; ஒருவரும் கவனித்ததாகத் தெரியவில்லையே, என்றெண்ணி மெத்தவும் வாடினேன்.

பிறகுதான், மெள்ளமெள்ள, ஒருவரிருவர், நம் பக்கம் திரும்பி, 'என்ன இரைச்சல் இது?' என்று கேட்கலாயினர்; நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

தம்பி! கலம், வழிதவறிக் கடலிலே சென்று கொண்டிருக்கிறது. போய்ச்சேரவேண்டிய இடத்துக்கும், இப்போது கலம் ஊசலாடும் இடத்துக்கும் தொடர்பே தெரியாத நிலை! கரை காணமுடியவில்லை! கலம் உள்ளோர், எத்துணை கலக்க மடைவர்!

கடலிலேயே அமிழ்ந்து அழியத்தான் போகிறோம் என்று சிலர் அலறித் துடித்தழும் வேளை.

கலம் செலுத்துவோன் கருத்தற்றவன், திறமையற்றவன், இவனை நம்பி இந்தக் கலத்திலே ஏறிப் பயணப்பட்டதே அறிவீனம் என்று சிலர், கைபிசைந்து கொள்கின்றனர்.

ஆற்றல் மிக்கவர் எம் தலைவர்! அவர் அறிவார் எவ்வழியும்! அலறி அழாதே ஆரணங்கே! ஆபத்தின்றிப் போய் வருவேன்!—என்று கூறிக் கண்ணீரைத் துடைத்து, கன்னத்தைத் தடவிக்கொடுத்துவிட்டு, காதலிக்குத் தைரியம் கூறி, விடைபெற்றுக்கொண்டு வந்தவன், கலம் செல்லும் நிலை கண்டு, கண்ணீர் உகுத்தவண்ணம் உள்ளான்.

கலம் செலுத்தும் தலைவனிடம் கலகலப்பாகப் பேசி வந்தவர், காணவும் கூசுகின்றனர்; காணும்போதே, கண்கள் கேள்விக் குறிகள் ஆகின்றன!

கலம்விடு தலைவனோ, கடுங்கோபமும் கொள்கிறான்; நிலைமையை அறிந்து அடக்கிக் கொள்கிறான்!

கலத்தின் மேல் தட்டிலே உலவுகிறான்; கலக்கம் நிறைந்த உள்ளத்துடன்; சுற்றும் முற்றும் பார்க்கிறான்; கரை காண முயலுகிறான்!

எங்கும் தண்ணீர்! அலைகள் எழும்புகின்றன, மடிகின்றன! நம்பிக்கை அவன் இதயத்தில் எழும்பி மடிந்த நிலைகூடப் போய்விட்டது; இதயமே பாழ் வெளியாகிவிட்டது.

புயல் வீசுகிறது! கலம் கட்டுக் கடங்காமல், எப்பக்கமெல்லாமோ இழுத்துச் செல்லப்படுகிறது! கலத்திலுள்ளோர் கூவுகின்றனர்; இருள் கப்பிக்கொள்கிறது; அந்நிலையில் மேல் தட்டிலே உள்ள கலம்விடு தலைவன், உடல்மீது ஏதோ வந்து வீழ்கிறது; என்னவென்று எடுத்துப் பார்த்தால், அரும்பும் மலரும் கலந்து காணப்படும் ஒரு பூங்கொம்பு!! கலம்விடு தலைவன் அதைக் கண்டதும், என்ன நிலை பெறுவான்? களிநட

மிடுவான். ஏன்? பூங்கொத்து! ஆமாம்! பெருங்காற்றால், கிளை முறிந்து, அதிலொரு துண்டு, இங்கு அடித்துக்கொண்டு வரப்பட்டு, வீழ்ந்துளது!! ஆகவே, எங்கோ, மிக அருகில் கரை இருக்கிறது!

“கலங்காதீர்கள்! அழிவு இல்லை! கரை சேரப் போகிறோம்! இதோ, பூங்கொத்து! காற்றால் அடித்துக்கொண்டு வரப்பட்ட பூங்கொத்து! பக்கத்திலேயேதான் கரை இருக்கவேண்டும்! கரை மிக நெடுந்தொலைவில் இருப்பின், மரம் ஏது, செடிகொடி ஏது! பூங்கொத்து கண்டோம்; இனிக் கரை காண்போம். காரிருள் நீங்கிவிடும், கரை உள்ள திக்கு விளங்கிவிடும்!”—என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுவான்; மற்றவரும் அதன் பொருள் அறிந்து பூரிப்படைவர்!

தம்பி! பணியாற்றியபடி நாமிருந்தபோது, எவரும் நம்மைப் பொருட்படுத்தாமலிருந்த நிலை இருந்ததே, அது எனக்கு கரை காணவே முடியாதோ என்ற கலக்கத்துடன், கலம் இருந்த நிலை போன்றுதான் இருந்தது.

காற்றால் பறித்தெடுக்கப்பட்டு வந்து வீழ்ந்த பூங்கொத்துப் போலிருந்தது, நம்மைப்பற்றி நெரித்த புருவத்தினர் சிலர் கேலிமொழி பேசியபோது, கரை அருகாமையில்தான், என்று கலம்விடுவோன் எண்ணி மகிழ்ந்ததுபோல, நான் மகிழ்ந்தேன், நம்மை, மாற்றார் தூற்றக் கேட்டு.

கவனிக்கப்பட்டு விட்டோம், அலட்சியப்படுத்தப்படவில்லை.

அலட்சியப்படுத்தவில்லை, ஆகவே, நமது முயற்சி பொருளற்றுப் போய்விடவில்லை.

முயற்சி பொருளற்றுப் போகவில்லை, ஆகவே, பலன் தராமற் போகப்போவதில்லை.

தூற்றுகிறார்கள், ஏனெனில் கவனித்துவிட்டார்கள்.

எதிர்க்கிறார்கள், ஏனெனில் நமக்கு வலிவு ஏறுவது புரிவதால்.

தாக்குவார்கள், நம்மைத் தகர்த்தாக வேண்டும் என்ற துடிதுடிப்பால்!

தாங்கிக்கொள்வோம், அதற்கேற்ற ‘உரம்’ நமக்குக் குறிக்கோளில் உள்ள பற்று பெற்றுத் தரும்,

தாங்கிக்கொண்டால், தாக்குவோருக்குக் களைப்பு மேலிடும்.

களைப்பு மேலிட்ட நிலையிலும் தாக்குவர்; மேலும் களைத்துப் போவர்!

பிறகு? பிறகா! தாக்குதல் வலிவிழக்கும்! நமது வலிவு அவர்க்கு விளங்கும்! வெற்றி நமக்குக் கிடைக்கும்.

தம்பி! விடுதலை எனும் தூயதான குறிக்கோளுக்காகப் பணியாற்றும் இயக்கம் கொள்ளவேண்டிய இந்த எண்ணம் தான், நமக்கெல்லாம்! ஆகவேதான், நாம், தாங்கிக்கொள்ளும் சக்தியைப் பெறுகிறோம்; இவர்களின் தாக்கும் சக்தி குறைந்து வருகிறது. இம் முறை நடைபெறும் பொதுத்தேர்தல், அவர்கள் தமது தாக்கும் சக்திக்குத் துணைதேடி, அதிகப்படுத்திக் கொண்டுவந்து, தேர்தல் களத்தில் நம்மைத் தாக்க ஏற்பட்டுள்ள வாய்ப்பு.

இதைத் தாங்கிக்கொண்டால், தம்பி! இஃது உறுதி. பிறகு அவர்களின் தாக்கும் சக்தி வலிவிழந்துபோகும்!!

பிறகு வேறுகட்டம் எழக்கூடும்! கண்காணுத் தீவுக்கு எடுத்தேகும் கட்டம்! கட்டிவைத்துச் சுட்டுத்தள்ளும் கட்டம்! கண்ணைப் பெயர்த்திடும் கட்டம்!

இப்போது, தங்களால் திரட்டமுடிந்த தளவாடங்களைக் குவித்துவைத்துக் கொண்டு, தாக்கித் தகர்த்திடுவேன் என்று அறைகூவலை விட்டபடி, காங்கிரஸ் கட்சி தி. மு. கழகத்தை, பொதுத் தேர்தல் எனும் களத்துக்கு அழைக்கும் கட்டம்.

இதிலே, நமது கழகம், தாங்கும் சக்தியை உலகறிய எடுத்துக்காட்டினுல், காங்கிரஸ், தனது தாக்கும் சக்தி வலிவிழந்துவிட்டதை உணர்ந்துகொள்ளும்.

பிறகு வேறு முறைகளைத் தேடிடும்; களத்தின் அமைப்பு வேறுவேறு ஆகிடும்; அது பிறகு! இப்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை தேர்தல் எனும் களம் நின்று, காங்கிரசுக்கு உள்ள தாக்கும் சக்தியைத் தாங்கிக்கொள்ளும் வலிவு, தி. மு. கழகத்துக்கு உண்டா என்பதாகும்.

என்ன சொல்கிறுய் தம்பி! தாங்கும் சக்தி இருக்கிறதா?

என்ன அண்ணு! இப்படி நீ கேட்டிடவேண்டிய காரணம் என்ன? கடுவழி எனினும் நடந்திடுவேன்! பழிச்சொற்களைப் பொறுத்திடுவேன்! மாடும் மனையும் மறந்திடுவேன்! மலரணை துறப்பேன், மறப்பேன் இல்லம்! கூழோ களியோ, தருவர் அங்கு எனினும், அச்சிறை அஞ்சிடுவேன் அல்லேன்! ஓயாதுழைப்பேன், பலன் கேளேன்! உற்ருர் எனினும் பற்றுக் காட்டினும், கொள்கைக்கல்லால் வேறெதற்கும், கட்டுப்பட்டிடேன்!—என்றெல்லாம் சொல்ல எனக்குத் தெரியாதெனினும், செய்து காட்டியவனல்லவோ! என்னைப்போய் தேர்தல் களத்தில், காங்கிரஸ் காட்டிட முனையும் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் வலிவு உனக்கு உண்டா என்று கேட்டிடலாமா?—என்று தம்பி! உன் கண் பேசுகிறது; அதிலே நீர்த்திவலை இருப்பதையும் காண்கிறேன். உன் உறுதியை உணருகிறேன், நான் உறுதி பெறுகிறேன்.

பச்சிளங் குழந்தைக்கு வந்துற்ற பயமூட்டும் நோயினை நீக்குதற்கு, மருத்தவர் கேட்டிடும் மூலிகை, வேங்கை உலவும் காடதனில், பாம்புப்புற்றுக் கருகினிலே கிடைக்கும் என்று தாய் அறிந்தால், தயக்கம் காட்டி நிற்பாளோ, தடுத்தாலும் போகாதிருப்பாளோ!!

அதுபோலத்தானே தம்பி! நாம் நமது இலட்சியத்துக்கு எதிர்ப்புக்காட்டுபவர்கள், இந்தத் தேர்தலை ஓர் வாய்ப்பாக்கிக் கொண்டு நம்மைத் தாக்கும்போது, நிலை குலையாமல், உறுதி தளராமல், தாங்கும் சக்தி நமக்குண்டு, மேற்கொண்டும் பணியாற்றும் வலிவும் நாம் பெற்றுள்ளோம் என்பதை எடுத்துக்காட்டியாக வேண்டும்.

எனவே தம்பி! தேர்தல்களத்துக்காக, ‘தளவாடம்’ பலப் பல இலட்சம் உள்ளதுவாம், என்று கேள்விப்பட்டு, நாம், நமது உறுதியைத் தளரவிட முடியுமா—தளர்ந்து போகுமா?

கோபமூட்டி நம்மைச் செயலாற்ற இயலாதவர்களாக ஆக்கிடவேண்டும் எனும் நோக்குடன், கேவல மொழிகள் பேசியும், கீழ்த்தரப் பழிகளைச் சுமத்தியும், மாற்று முகாமினரும், அவர்கட்கு ‘மேய்ப்புத் தேய்ப்பு’ வேலையினைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்களும், அங்குச் சிந்தியதைச் சிதறியதை எடுத்துவந்து சுவைத்திடும் போக்கினரும், அரசியல் பிரசாரம் என்ற பெயராலே, நாவால் நாராசத்தை வெளிப்படுத்துவர். கோபத்துக்குத் துளியும் இடன் கொடாதே! பொறுத்துக் கொள்! நீ பொங்கி எழவேண்டியது, போக்கிடமற்றவர்கள்

நோக்கம் மறந்து, தம் நாக்கு வலிக்கத் திட்டுகிறார்களே, அதை எண்ணி அல்ல.

நாடு உள்ள நிலையைக் கண்டு, தம்பி! உனக்குக் கண்ணீர் பொங்கவேண்டும்!

வளம் குறைந்து, வாழ்வுக்கான வகைகள் குன்றி, வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் வருவாய் தேய்ந்து, தேய்ந்த வருவாய்கொண்டு வயிற்றையேனும் கழுவிக்கொள்ளலாம் என்றெண்ணி, அங்காடி சென்று, பண்டம் பலவற்றின் விலையைக் கேட்டிடின், பற்றி எரியுதே வயிறு என்று பலரும் பதறும்படி விலைகள் யாவும் ஏறிவிட்ட நிலையிலே, நாடு இருக்கிறது.

நல்லவர்கள்! நம்மவர்கள்! வல்லவர்கள்! வாழவைக்கவந்தவர்கள்—என்றெல்லாம் சாற்றுக்கவிபாடி ஏற்றுக்கொண்டனர் மக்கள், காங்கிரஸ் ஆட்சியினை. ஆண்டு பதினைந்தை எட்டிப் பிடிக்கிறோம். இந்நிலையில் இந்நிலை! என்னென்பது!

வடித்த சோறு போதாமல், வயிற்றைப் பிசைந்து வாட்டமுறும் வறியோர் நிலையினை எண்ணிப்பார்!

மாற்று ஆடை கிடைக்காமல், மரத்தில் பாதி உடலில் பாதி சுற்றியபடி உலர்த்திடும் மாதர் நிலையை, மனதில் கொண்டு பார்த்திடு!

உருகி உடல் கருகி, உள்ளீரல்பற்றிய நோய், உயிரைக் குடிப்பது தெரிந்தும், அதனைப் போக்கிடும் மருந்து வாங்கிடப் போதிய பணம் இல்லாமல், அணையும் விளக்கு என்றறிந்தும், எண்ணெய் இல்லாது ஏக்கமுறும் நிலையைத், தம்பி! நினைத்துப் பார்.

இரத்தம் தோய்ந்த வாயுடனே, கொல்லும் புலி உலாவுகையில், குட்டியை இழந்த தாய்மானும், குப்புற வீழ்ந்து மடிந்துபடும் கொடுமை நிறைந்த காட்சியைப் போல், கொள்ளை இலாபம் அடித்தவர்கள் கோலாகலமாம் வாழ்க்கையிலே, குடிசையில் சுருண்டு படுத்துழலும் ஏழையின் நிலையை எண்ணிப்பார்!

திண்டுகள் அடுக்கிச் சாய்ந்துகொண்டு, நோட்டுகள் நெளியும் பெட்டியுடன், சேட்டுகள் கடையில் இருக்கையிலே, மூக்குத்தி அடகு வைத்துவிட்டு, பதிலுக்கு, துடைப்பக் குச்சியைச் சொருகி நிற்கும் அந்த சொக்கி, சுப்பி, இவர்களைப் பார்!!

களஞ்சியம் நிரம்பி வழிந்ததனால், மற்றதை மூட்டை களாய்க்கட்டி, மாட்டுத் தொழுவம்தனில் போட்டு வீட்டுக்குப் போடா, வேலப்பா! எனக் கட்டளையிட்டிடும் கனதனவான்; அவன் கழனி உழுது செல்வம் சேர்த்து, மாளிகைக் கதனைச் சொந்தமாக்கி, மனைக்கு ஓடும் இல்லாமல், கூரைவேய்ந்து குடி இருந்து, குப்பி கொடுத்த சோற்றுருண்டை உள்ளே போக வெங்காயம், தேடி அலைபவன், வேலப்பன்!

நாட்டின் நிலைமை இதுதானே—இன்னும் பலப்பல கூறிடவோ!

இவைகளை எண்ணி, உன் மனதில், இரக்கம் அன்பு எழல் வேண்டும்; அறநெறி அரசு சென்றிட்டால், அவதி இத்துணை இராதென்ற எண்ணம் மலரும், சிந்தித்தால். அறநெறி அரசு செலவேண்டின், அரசு நடக்கும் போக்கினையும், அறநெறிக்கான முறைதனையும், அனைவரும் அறியச் செய்திட, நாம், ஆவன செய்திடவேண்டாமோ? அதற்கு ஏற்ற வாய்ப்புத்தான், அடுத்துவருகிற பொதுத்தேர்தல்! ஆட்சி நடத்தும் காங்கிரசு அரை கோடி அளவு என்கிறார்கள்; ரூபாய்களைக் குவித்துக்கொண்டு, தாக்கும் நோக்குடன் இருப்பதனைக் காணுகிறோம்; எனின், கடமை செய்திட மறந்திடல், அறம் அலவே.

நாடு முழுவதும் நம் வீடு! நாட்டிற்குழைத்தல் நம் கடமை! ஆட்சி அமைத்திட அரும் வாய்ப்பு அடுத்து வருகிற பொதுத்தேர்தல்.

பணத்தாலான கோட்டைக்குள்ளே பதுங்கிக் கொண்டால், பயந்துபோய், நமக்கேன் இந்த வீண்வேலை, நத்திப்பிழைப்போம் என்று கூற, நாமென்ன மரபு அறியா மாக்களோ, அல்லது மரக்கட்டைகளோ! இல்லை, தம்பி! நான் அறிவேன்! எடுத்ததை முடித்திடும் ஆற்றல்மிக்க, ஏறுகள் உண்டு நாட்டினிலே! அவர்க்கு எதையும் தாங்கும் இதயம் உண்டு! ஏமாறமாட்டார், பணக் குவியல்கண்டு! என்பதனை நான் அறிந்துள்ளேன்.

எதனையும் தட்டிக் கேட்டிட நாம் இத்துணை வலிவுடன் உள்ளபோதே, ஊர்க்குடி கெடுத்திடும் பேர்களுடன் உறவுகள் கொண்டு, பணம் குவித்து, உழைப்போர் குடியை உருக்குலைத்து ஊராளும் வழிக்கு விலைபேசி, வெற்றிகள் பெற்றிடும் நினைப்புடனே! உலவுது காங்கிரசு, மமதையுடன்.

கூரை குடிசை உம் பக்கம்! கூடகோபுரம், மாடமாளிகை, எம் பக்கம்! யாது செய்யவல்லீர்கள்! எமக்கிருப்பது பண பாணம்! கவசம் இருக்குது தங்கத்தால்!—என்று காட்டாட்சி, நடத்துபவன் போட்டிடும் முறையில் கூச்சலிட்டு, மிரட்டுது நம்மைக் காங்கிரசு!

உண்டி குலுக்கி அலேவீர்கள், நாங்கள் 'உம்' என்றால் இலட்சம் உருண்டுவரும்! பஞ்சைகள் நீங்கள், அறிவோமே! பங்களாவாசியை எதிர்க்கப்போமோ?—சீமான்களின் அணைப் பிலே உள்ள காங்கிரஸ் கட்சி கேட்கிறது.

இருட்டடிப்பால் தாக்கிடுவேன்! இழிமொழியில் அமிழ்த் திடுவேன்! ஏன் என் பகையைத் தேடுகிறாய், எவரும் என்னிடம் தப்பியதுமில்லே! தகரக்குவளை, நீயப்பா! தகாது உனக்கு தேர்தல் என்று, தர்பார் நடத்தும் காங்கிரசு எச்சரிக்கை விடுகிறது.

ஆளப்பிறந்தவர் நாங்களன்றோ! அதற்கேற்ற அந்தஸ்து எமக்குண்டப்பா! வீணாய் ஆசை கொண்டலேந்து, விரோதம் தேடி அழியாதே! விடமாட்டோம் உமை நாடாள, என்று வீறாப்புப் பேசுது காங்கிரசு.

காங்கிரசு போடும் கூச்சலினால், கதிகலங்கிப் போவதற்கா நாங்கள் உமக்குத் துணை நிற்போம், என நாளும் மக்களிடம் கூறிவந்தோம்!!

ஆயின், காங்கிரசுக் கட்சிக்கு அன்று 1957ல் இருந்ததைவிடப் புது ஆற்றல், வந்துளதோ இன்றென ஆராய்ந்தால், மமதை அதிகம் வளர்ந்ததன்றி, தூய்மை வாய்மை நேர்மையுடன் வலிவு வளர்ந்த அறிகுறிகள் எங்கும் காணேம்? கண்டனேயோ?

கண்டவர் காங்கிரஸ் நுழைந்ததனால், கரையுது மதிப்பு மாண்பென்று, கதறும் சஞ்சீவியார் நிலேயும், இதற்குச் சான்று; வேறென்ன?

பற்பல தொகுதியில் வேட்பாளர் என வெளிக் கிளம்பிய காங்கிரசார், முன்னாள் எங்கு இருந்தவர்கள்? முறைகள் யாவை அவர் தொழிலில்? மூதறிவு மிக்கவரோ?—நாட்டவர் இதனேக் கேளாரோ?

இவர்தான் 'ஓட்டு' கேட்க வரும் உத்தமர் இரத்தினம், காங்கிரசு; இவர்க்கே உங்கள் ஓட்டுகளேக் கொடுத்திடவேண்டும்

எனத் தரகர் கேட்டிடும்போது, 'ஓட்டு' உள்ள மக்கள் மனதில், என்ன எழும்? பற்றும் பாசமும் நேசமுமா? இல்லே, தம்பி! அவை அல்ல! திகைப்பு, திகில், வெறுப்புணர்ச்சி! இவர்க் கெலாம் காங்கிரஸ் புகலிடமா! என்று இவர் நல்லது செய்திட் டார்? கொன்றவனேக் கண்டறிந்து, மாலேகள் சூட்டிடச் செல்வானே, மகளே இழந்து துயரம் உறும் தகப்பன் தரம் மிகக் குறைந்திடினும்!!

எத்துணை பணபலம் காட்டிடினும், எத்தருக்கெல்லாம் இடமளித்து, மற்றவர் வாழ்வை மதியாது, தேயவைத்து ஆண்டுவரும், காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்காமல், காட்டிக் கொடுப்பதோ மக்கள் தமை?

போனதெல்லாம் போகட்டும்; பொல்லாங்குகள் இனிப் போகும்; நல்லவை பலவும் நாம் தருவோம், எனச் சொல்லா லாகிலும் வரமளிக்க, காங்கிரஸ் கட்சி முன்வருமா? அதுவும் இல்லேயே!

விலேகள் குறைக்கச் சொல்லாதீர்! விம்மி விம்மிக் கிடக்காதீர்!

விலேகள் குறைய உள்ள வழி, வயிற்றை இறுக்கிக் கட்டுவதே! வேறு முறைகள் கிடையாது! சோறு குறைத்துச் சுகப்படு!

வரிகள் வளரும், சொல்லிவிட்டேன்! குறைகள் பேசிக் கிடக்காதீர்! கொடுக்கவேண்டும், புதுவரிகள்!!

கடன் சுமை ஏறும், குறையாது! கட்டுக்கடக்க முடியாது!

தொழில்கள் நடத்த முதலாளி! தோழமை அவருடன் கொண்டுவிட்டோம்! இதுவோ சமதர்மம் எனக்கேட்டு பேசுதல் தீது; சிறை உண்டு!

கொள்ளே இலாபம் அடிப்போர்கள் கொட்டம் அடக்கு என்றெல்லாம் கூச்சலிடாதீர், அவரெல்லாம் கதரை அணிந்தார், காணுங்கள்; காங்கிரசானார் கேளுங்கள்!

நோயும் நொடியும் போக்கிவிட, மாய மந்திரம் கற்றோமா! பிறப்பார், இறப்பர், அதற்கென்ன? பிரபஞ்ச மர்மம் இதுதானே!!

இப்படியல்லவா, தம்பி! காங்கிரஸ் கட்சி, துணிந்து கருத்து அறிவிக்கிறது.

இன்று உள்ள நிலையில், ஏழைகள், மறைமுக வரியினால் மிகவும் கொட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொருளாதார நிபுணர்களெல்லாம் எடுத்துரைக்கிறார்கள். எனினும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 1600 கோடி ரூபாய் வரியாம்! அதிலே பெரும் பகுதி மறைமுக வரியாமே! கேட்டனையா, அக்ரமத்தை!! கேட்பார் இல்லை என்ற துணிவன்றி வேறு என்ன? குலைநோயால் கதறுபவன், தாளம் தவறிப் பாடுகிறான் எனக் கோல்கொண்டு தாக்கிடும் கொடியவன் ஒருவன் இருந்தானெனக் கதையிலும் இல்லை; ஆனால் தம்பி! குமுறி ஏழை அழிகின்றான், அவனைக் காங்கிரஸ் கட்சி பார்த்து, கிளர்ச்சி செய்தால் துப்பாக்கி, சுடுவது கொல்ல, அறிந்திடு, எனச் சொல்லக் கேட்கிறோம்; என் செய்தோம்!

திட்டம் தீட்டினோம் பாரென்றார். கொட்டினர் வரிப்பணம் கோடி கோடி! ஒட்டிய வயிற்றினர் பாடுபட ஒய்யாரச் சீமான்கள் கொழுக்கின்றார். வளருது செல்வம் திட்டத்தால், வகை வகையாக என்று சொன்னார்; வறுமை வாட்டம் போகாமல், வலிவு இழந்து ஏழை மக்கள் கோடிகோடி இருக்கின்றார்! வளர்ந்த செல்வம் ஒளிந்தது எங்கே?

தேடச் சொல்லி குழு ஒன்றைத் தேசம் ஆளும் நேருபிரான், அமைத்து அறிவித்துவிட்டார்; அக்குழு பேச்சு மூச்சு இல்லை!!

செல்வம் யாவும் ஒரு சிலரின் கரத்தில் சிக்கிக் கொண்டதென, செப்புகிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்—முன்னாள் நிதி அமைச்சர்! அங்ஙனம் அவர் கூறுவதை. யாரறிவார் எனும் எண்ணமுடன், இங்குள நிதி அமைச்சரவர், சுப்பிரமணிய பெருமானார், சொல்லுகிறார் சொகுசாக, செல்வம் பரவிவிட்டது காண்! செழுமை எங்கும் வழிந்திடுது! ஏழை வாழ்வு மலர்ந்திடுது! எலலாம் எம்மால்—என்னால் தான்!!—என்று அடித்துப் பேசுகிறார்! அபத்தம் அலவோ, எனக் கேட்பாய், ஆமாம், ஆனால் அமைச்சர்நிலை, அதற்கும் பயன் படவில்லையெனில், எற்றுக்கந்தப் பதவி என எதிர்த்துக் கேட்பார்; வெகு தீரர்!

ஏழை மக்கள் தொகை தொகையாய் ஏங்கிச் சாகும் நிலையில் உள்ளார்!—என்று நாம் கூறவந்தால், ஏடா மூடா!

நாடதனை அறிவாயோ நீ, கூறிவிடு! நானா, நீயா, அமைச்சர்? அதை மறந்து பேசுவதழகல்ல!!—என்று கேட்டுவிடத் துணிவுண்டு—ஆற்றலரசர், அவர்தமக்கு, அவனி காலுக்குப் பந்து, அறிவுக்கடலின் நீர் முழுதும். அவரது வாய்க்கு ஒரு முழுங்கு!!

ஆனால் டி. டி. கே. முன்னாள் நிதி அமைச்சர், கூறிவிட்டார் நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து பேர், தரித்திர நிலையில் காலந் தள்ளுகிறார்கள்; பணம் ஒரு சிலரிடம் சிக்கிக்கொண்டு விட்டது என்று.

தம்பி! நாட்டு நிலைமை புரிகிறதல்லவா? உனக்குப் புரிகிறது, ஆனால், மற்றவர்க்கு? புரியச்செய்யவேண்டியது, உனக்கு உள்ள புனிதக் கடமை! அதனை இன்றே துவங்கு.

காங்கிரசாட்சியினால் விளைந்த கேடுபாடுகளை விளக்க முன்பு—இரு கிழமைகளுக்கு முன்பு—வெளியிட்டிருந்தேனே! கருத்துரைகள், ஏன் தம்பி! அவைகளைத் துண்டு வெளியீடுகளாக்கி, மக்களுக்குத் தந்தனையா? ஆம், எனில், ஏன் எனக்கு ஒன்றுகூட, உள்ளம் களிப்படையும் முறையில் அனுப்பி வைக்கவில்லை? திரைகளிலே தீட்டி, கழகத்திலே தொங்க விட்டிருக்கலாம். செய்தனையோ? தம்பி! காங்கிரசின் பணபாணம், நம்மை ஒன்றும் செய்யமுடியாதவிதமான, ‘கேடயம்’ அல்லவா, அந்தக் கருத்துரைகளை ஓவியமாக்குவதும், ஊருக்கு அறிவிப்பதும்.

தம்பி! 1100. கோடி ரூபாய் செலவிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டாகிவிட்டது, தெரியுமல்லவா? ஏது அவ்வளவு பணம்? என்று கேட்கிறாயா? நாடு நாடாகச் சென்று கடன் வாங்கியும், ஓடாகிப் போயுள்ள நிலையிலும் மக்களை விடாமல் வரிகளைப் போட்டும், நோட்டுகளை அச்சடித்துக் குவித்தும், இந்தப் பெருந்தொகையைப் பெற வழிகண்டுள்ளனர். 11000 கோடி!

நமக்கு இதிலே—தமிழக துரைத்தனத்தாரின் அளவிடற்கரிய ஆற்றலின் காரணமாகக் கிடைப்பது, எவ்வளவு தெரியுமோ? 291 கோடி!!

தமிழகக் காங்கிரஸ் அரசு 400 கோடி கேட்டது. கிடைத்தது, 291 கோடிதான்!

எவ்வளவு தேவைப்படும் ஒரு திட்டம் தீட்டிக் கணக்குப் போட்டுச் சொல்லுங்கள் என்று, தமிழகக் காங்கிரஸ் அரசு நிபுணர்களைக் கேட்டிட, அவர்கள் பல நாட்கள் பாடுபட்டு, புள்ளி விவரங்களைத் தேடிக் கண்டெடுத்துக் கோர்த்து, திட்டம் தயாரித்து, 600 கோடி வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டனர்.

பார்த்தவுடனே துரைத்தனத்துக்கு, ஆசையாகத் தான் இருந்தது; ஆனால் உடனே அச்சம் குடைந்தது, அவ்வளவு எங்கே கொடுக்கப்போகிறார்கள் என்ற பயத்தால், 600 கோடியை 400 கோடி என்று குறைத்தார்கள். அந்த 400 கோடியை, டில்லியில் உள்ள பேரரசு 291 கோடியாகச் குறைத்தது! சரி! என்றனர், வேறு? பிடிவாதம் பேசினால், பதவி நிலைக்குமா! பதவி இல்லையெனில், பணக்காரர்களின் கூட்டுறவு கிடைக்குமா? அந்தக் கூட்டுறவு கிடைக்காவிட்டால் பண பாணம் எப்படித் தயாரிக்க முடியும்!!

தம்பி! டாட்டா பிர்லா எனும் இரண்டு செல்வவான்களிடம் மட்டும், இன்று, உள்ள தொழில்கள் எவ்வளவு தெரியுமா? ஏறக்குறைய 600 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ள தொழில்! கொழுத்த இலாபம் கிடைக்கிறது! மானைக் கொல்வது வேங்கை! ஆனால், புதரருகே உள்ள நரிக்கும், சிறுசிறு துண்டுகள் உண்டல்லவா? அதுபோல, இந்தக் கோடீஸ்வரர்கள் பெறும் கொள்ளை இலாபத்தில், காங்கிரஸ் கட்சிக்கும் பங்கு, தேர்தல் நிதியாகக் கிடைக்கிறது.

டாட்டா கம்பெனி முன்பு பெருந்தொகை, காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நிதியாகக் கொடுத்ததும், வழக்குப் போடப்பட்டதும், அதுபோது நீதிபதிகள் எடுத்துரைத்த அற உரையும் அறிந்திருப்பாய்.

தம்பி! கான்பூர் எனும் திருத்தலத்துக்கு, இப்படிப்பட்ட முதலாளிமார்களிடம் நன்கொடை பெற, நேரு பண்டிதர், நடத்திய புனிதப் பயணம் பற்றி, இதழ்களில் படித்திருப்பாய்.

கொள்ளை இலாபம் அடிப்போரிடம் 'கைநீட்டுவது' பஞ்ச சீலம் பேசும் பண்டிதருக்கு, ஆறாவது சீலமாகி விட்டது! அவர் என்ன செய்வார், பாவம், அவரை நம்பித் தேர்தலில் ஈடுபடுவோர் அவரைப் பிய்த்து எடுக்கிறார்கள்.

பிர்லாவுக்குச் சொந்தமான இந்துஸ்தான் மோட்டார் கம்பெனி மட்டும், இம்முறை, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நிதிக்காக, இருபது இலட்சம் கொடுத்து!

பெரிய தொகை? ஆமாம்! ஆனால் கசக்குமா, கொடுக்க? காங்கிரஸ் ஆட்சியால் மட்டுந்தானே, தம்பி! சமதர்மம் பேசிக் கொண்டே இப்படிப்பட்ட முதலாளிகளை ஆதரிக்க முடியும்! அந்த ஆதரவின் காரணமாக பிர்லாவின் மோடார் கம்பெனிக் கிடைத்த இலாபம் (160ல்) எவ்வளவு தெரியுமா 2, 85, 71, 127 ரூபாய்! கொடுக்க மனம்தான் வராதா? கைதான் நீளாதா!? டாட்டாவுக்கு? 5 கோடி 77 இலட்சம் இலாபம்!

தம்பி! பணபாணம் காங்கிரசிடம் இருக்கிறதே என்று பதறாதே, அந்தப் பணபாணம் எப்படித் தயாரிக்கப்படுகிறது, என்பதை நாடு அறிந்திடச் செய்திடு, பிறகு பார், அந்தப் பணபாணத்தை, மக்கள், எத்துணை துச்சமென்று கூறிக் காரித் துப்பிவிடுகிறார்கள் என்பதை.

சமதர்மம் பேசுவது, முதலாளிகளை மிரட்ட! எமது குறிப் பறிந்து நடந்துகொள்ளாவிட்டால், சமதர்மத் திட்டப்படி, தொழில்களை நாங்களே நடத்தத் திட்டமிட்டு விடுவோம்; உமது கொட்டம் அடங்கிவிடும் என்று கூற!

அதேபோது, முதலாளிகளிடம் தொழில்களை விட்டு வைப்பது, இலாபத்தில் பங்குபெற! நாடு வாழ அல்ல! தொழிலாளர் வாழ அல்ல! காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நிதிக்காக!! அதாவது, பணபாணம் தயாரித்துப் பொதுமக்களை மிரட்ட. தம்பி! மக்கள் இதனை அறியச்செய் —பார் பிறகு பணபாணம், பஞ்சு பஞ்சாகப் பறந்துபோவதை.

டாட்டா பிர்லா கூட்டாளி
பாட்டாளிக்குப் பகையாளி!

என்பதை எங்கெங்கும் எடுத்துக் கூறு, தம்பி! இன்றே உன் பொழுதுபோக்குச் செலவுக்கென உள்ள சிறு தொகையை, இதற்கு ஒதுக்கி துண்டு வெளியீடுகளைப் பரப்பலாமே!!

சாக்கடையில் ஊறியது என்று தெரிந்தால், கரும்புத் துண்டினை எவர், விரும்பிச் சுவைப்பர்?

வாட்டம் போக்காக் காங்கிரசு
நோட்டம் பார்க்குது ஓட்டுப்பெற
பாட்டாளித் தோழர்களே!
பட்டது போதும்; விடுபடுவீர்!

★

உழைத்து வாழும் உத்தமரே!
உலகம் உமது உணர்வீரே!
உடனே வருவீர் புதுப்பாதை
உதயசூரியன் ஒளிதருமே!

என்று எடுத்துக் கூறலாமே, தம்பி! பேச்சாக, பாட்டாக! துண்டு வெளியீடுகளாக! செய்வாயா, தம்பி! நாள் அதிகம் இல்லை.

தம்பி! துவக்கத்திலே குறிப்பிட்டேனே,

நரகல் நடை

இழிமொழி

பழிச்சொல்

இவைகளை, நம்மை அழித்திட எண்ணுவோர் கூறிடும்போது கோபம் கொள்வதிலே, துளியும் பயன் இல்லை. சொல்லப் போனால், நாம் கோபமடையவேண்டும், நம் குணம் கெட வேண்டும், பாதை தவறவேண்டும், பண்பு பாழாகவேண்டும், இலட்சியத்தை இழக்கவேண்டும் என்பதற்காகவே அவர்கள் ஆத்திரமூட்டும் பேச்சுக்களைப் பேசுகிறார்கள். அதை அறிந்து, தம்பி! அந்தப் பேச்சுகள் பற்றிய கவலையை விட்டொழித்து, நாட்டுக்கு நாம் எடுத்துக்கூறவேண்டியது ஏராளம் இருக்கிறதே, அவைகளை எடுத்துச் சொல்வதற்குப் போதுமான நாட்கள்கூட இல்லையே என்பதை எண்ணி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில், சிறு சிறு பங்கு செலுத்தவேண்டும் என்ற தன்மையில், துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள், திரை ஓவியங்கள், என்பன போன்றவைகள் மூலம், காங்கிரஸ் ஆட்சியினால் ஏற்பட்ட கேடுபாடுகளை நாட்டு மக்களுக்கு எடுத்து கூறு. தம்பி! பார்த்துக்கொண்டிருக்கும்போதே, நாட்கள் பறந்தோடிப் போகின்றன!

தம்பி! புள்ளினம் இசை எழுப்புகிறது, மெல்லிய இசை! என் அருகே படுத்துறங்கும், கவுன்சிலர் இராசகோபாலுடைய குரட்டைச் சத்தம், சுருதி இல்லாத சங்கீதமாக இருக்கிறது. வளை ஒலி! தொலைவில்! மாதர்கள், இல்லங்களைத் துப்புரவு ஆக்குகிறார்கள். பொழுது விடிகிறது, தம்பி! உதயசூரியன் எழுகிறான்! உலகுக்கு ஒளி கிடைக்க இருக்கிறது! இருள் கலைகிறது!!

நாடு ஒளிபெற
உதய சூரியன்

★

நமது சின்னம்
உதய சூரியன்

★

உழவுக்கும் தொழிலுக்கும் உயிரளிப்பது
உதய சூரியன்

★

உலகு செழித்திட
உதய சூரியன்

★

உறங்குவோரை எழுப்பிடுவது
உதய சூரியன்

★

பசியும் பிணியும் பறக்கடிக்க
உதய சூரியன்

★

பாருக்கெல்லாம் ஒரே விளக்கு
உதய சூரியன்

★

உதய சூரியன்
உமது சின்னம்

★

உதய சூரியன்

எழுவது திண்ணம்

★

உலகு புகழும் இளங்கோவடிகள் வாழ்த்தியது

உதய சூரியன்

★

உதய சூரியன் கிளம்பிவிட்டால்
உண்டோ இருளும் நாட்டில்? வீட்டில்?

தம்பி இப்படியெல்லாம், நீ நண்பர்களுடன், இனிய குரலெழுப்பித் தெருக்களிலே பாடிக்கொண்டு செல்வது போல வும், முதியோரும் வாலிபரும், ஆடவரும் ஆரணங்குகளும், முகமலர்ச்சியோடு, இசைகேட்டு மகிழ்வதுபோலவும், ஓர் காட்சி காண்கிறேன். நீ மனம் வைத்தால், நாடு காண முடியாதா, அந்தக் காட்சியை!

அண்ணன்,



19-11-61

கடிதம் : 147

முயன்றால் முடியும்!

அமைச்சர் கருத்துப்படி காங்கிரஸ்—

காங்கிரஸார் கொடுமை—

தி. மு. க. வின் தனித்தன்மை—

தம்பி!

காங்கிரஸ் கட்சியில் இன்று உள்ளவர்கள் எப்படிப்பட்ட வர்கள், அவர்களை என்னென்ன பெயரிட்டு அழைக்கலாம் என்பதைக் கூறட்டுமா? நமக்கும் அவர்களுக்கும் கட்சி வேறு என்பதாலே ஏற்படக்கூடிய எரிச்சல் காரணமாக அல்ல; அவர் களின் இயல்பு, நிலைமை, நினைப்பு, செயல் ஆகியவைகளைக் கவனித்து, அவைகளுக்கு ஏற்ற பெயர் என்னென்னவாக இருக்கமுடியும், என்னென்ன பெயர்கள் பொருத்தமுள்ளதாக வும் பொருள் உள்ளதாகவும் இருக்கமுடியும் என்பதைக் கவனித்துக் கூறுகிறேன்; கசப்பு, கோபம் காரணமாக அல்லவே அல்ல.

இடந் தேடிகள்

பணம் பிடுங்கிகள்

பத்தாம் பசலிகள்

வகுப்புவாதிகள்

சிண்டுபிடித்திழுப்போர்

செயலாற்ருதார்

கொள்கை அறியாதார்

என்ன அண்ணு இது! காங்கிரஸ்காரர்களைக் கடுமையாகத் தாக்கக் கூடாது, கேவலமாகப் பேசக்கூடாது, தூற்றக்கூடாது என்றெல்லாம் எங்களுக்குக் கூறிவிட்டு, நீ! காங்கிரஸ்காரர் களை இவ்வளவு கடுமையாகக் கண்டித்துப் பேசுகிருயே,

இடந்தேடிகள்

பணம்பிடுங்கிகள்

என்றெல்லாம் கேவலமாகப் பெயரிட்டு அழைக்கிருயே, என்று தானே, தம்பி, கேட்கிருய். நியாயமான கேள்வி. விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இடந் தேடிகள்

பணம் பிடுங்கிகள்

என்பவைகள், கடுமையான வார்த்தைகள், கேவலமான சொற்கள், இழிமொழிகள். இல்லை என்று கூறவில்லை. ஆனல் இப்படிக் காங்கிரஸ்காரர்களைத் தூற்றும் நிலைக்கு நான் கீழே இறங்கவில்லை; இறங்கவும் மாட்டேன். இப்படியெல்லாம் பெயரிட்டு அழைக்கத் தக்கவிதமான கண்டனத்தை, கடுமொழியை, காங்கிரசார்மீது நான் வீசவில்லை. வீசியவர், விவரம் தெரியாதவரும் அல்ல; காங்கிரசுக்குப் பகைவரும் அல்ல; எதுவோ கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏமாற்ற மடைந்து எரிச்சல் மூட்டப்பட்டவருமல்ல; நல்ல நிலைமையிலே உள்ளவர்; தரம் உயர்ந்தது; பதவி உயர்வானது; ஆராய்ந்து பொறுப்புணர்ச்சியுடன் பேசக்கூடியவர்; பண்டித ஜவஹர்லால் நேருவின் நேரடியான நிர்வாகத்திலே உள்ள வெளிநாட்டு விவகாரத் துறையிலே பொறுப்பேற்றுள்ளவர்; நேருவுக்குத் துணையாக இருப்பவர்; துணை அமைச்சர்; இலட்சுமி மேனன் அவர்களின் பேச்சிலே இருந்து எடுத்தவைகளே,

இடந்தேடிகள்

பணம்பிடுங்கிகள்

எனும் கருத்துவிளக்க மொழிகள்! நாணுவது அவ்வளவு துணிந்து, காங்கிரசாரைத் தூற்றுவதாவது!

அம்மையார், காங்கிரஸ் கட்சிதான்; இப்போதும்.

வீண் தகராறுகளில் தம்மைச் சிக்கவைத்துக் கொள்பவரு மல்ல; எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் இயல்பு உள்ளவருமல்ல. அநேகமாகத் தானுண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவர். அப்படிப்பட்ட இலட்சுமி மேனன் அவர்களுக்குத்தான் என்ன கடுங்கோபமோ தெரியவில்லை, மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளார், காங்கிரஸ் கட்சியினரை— நேருவை நீக்கிவிட்டு; பிறரை.

காங்கிரசைவிட்டு வெளியேறி வெகுண்டு பேசிய வார்த்தைகளும் அல்ல. இருக்கும் கட்சியிலேயே தானேர் அதி அற்புத மேதை என்ற ஆணவம் பிடித்தலைபவரும் அல்ல அம்மையார். எனினும், காங்கிரஸ்காரர்களைப்பற்றி, காங்கிர சுக்குப் பல ஆண்டுகளாக எதிர்ப்புக் காட்டிவருபவர்கள்கூடச் சொல்லத்துணியாத கண்டனமொழிகளை வீசுகிருர்; காரணங் களும் மிகப் பொருத்தமாகக் காட்டுகிருர்.

கேட்கும்போதே, காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆத்திரம் பீறிட்டு எழும்; கண்களிலே கனலும் புனலும் ஒருசேரக் கிளம்பும். பிய்த்து எறிந்துவிடவேண்டும் என்று கோபம் உண்டாகும்.

இடந்தேடிகள்

பணம்பிடுங்கிகள்

பத்தாம்பசலிகள்

என்றெல்லாம் இழிமொழி கூறினவர் மட்டும், காங்கிரசல்லா தாராக இருந்திருப்பின், இந்நேரம், காங்கிரஸ் பெருந்தலைவர் கள், பூமிக்கும் ஆகாயத்துக்குமாகக் குதித்திடுவர்; மந்திரி சுப்ரமணியத்தைப் போன்ற அரைகுடமாக இருப்பின், இதற்குள் 'சவால்கள்' பிறந்திருக்கும். ஆனல், எவ்வளவு வெட்கம், வேதனை, ஆத்திரம் பிறந்தாலும், பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது; ஏனெனில், கண்டனச் சொற்களைக் கூறினவர், காங்கிரஸ் கட்சியினர், அமைச்சர், நேருவுக்குத் துணை அமைச்சர். எனவே, வாய்பொத்திக் கிடக்கிருர்கள்! வேறு வழி!

அம்மையார், ஒளிவு மறைவு இன்றி, அச்சம் தயை தாட்சணியத் துக்குக் கட்டுப்பட மறுத்து, உண்மையை, விளைவுபற்றிய கவலையற்று எடுத்துப் பேசுகிறார்கள். காரணங்களை அழகுற எடுத்துக் காட்டுகிறார்கள். என் செய்வர் காங்கிரஸ் தலைவர் கள்—தொண்டர்கள்! மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கிறார்கள்.

பொதுத் தேர்தலுக்காகக் காங்கிரஸ் கட்சி, சல்லடம் கட்டிக்கொண்டு, சங்கநாதம் எழுப்பிக்கொண்டு, சந்துமுனைச் சிந்து பாடுவோரில் இருந்து, சந்தைக்கடை தரகு வியாபாரி போலப் பேரம் பேசிக்கொண்டு சோரம் போகத் தயாராக இருக்கும் பேர்வழிகள் வரையில் படைதிரட்டித் தயாராக வைத்துக்கொண்டு, இருக்கும் நேரமல்லவா!!

தயாரிக்கப்பட்ட மாலையைக் கழுத்திலிருந்து கணுக்கால் வரையில் தொங்கத்தொங்கப் போட்டுக்கொண்டு, 'தேச பக்தர்கள்' பட்ட கஷ்டநஷ்டங்களை, சிதம்பரனார் செக்கிழுத் ததை, குமரன் மண்டை உடைந்ததை, கொடிய அடக்கு முறைக்குப் பலியானதைக் காங்கிரஸ் பேச்சாளர்கள் எடுத்துக் கூறி, 'அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியின் அபேட்சகர் இவர்' —என்று அர்ச்சனை செய்வதைக் கேட்டு அகமகிழும் நேரம்! அமைச்சர் வேலை நிச்சயம் கிடைக்குமா, முழு அமைச்சரா, குட்டி அமைச்சரா, ஏதாகிலும் கிடைக்குமா என்று ஆரூடம் பார்க்கும் நேரம்! அவர்களே கேட்டு ஆச்சரியப்படும்படி, துதி பாடகர்கள், கட்டணம் பெற்றுக்கொண்டு, புகழுரைகளைப் பொழியும் நேரம். அப்படிப்பட்ட நேரத்தில், இப்படிப்பட்ட தூற்றல் கணைகளை அம்மையார் தொடுப்பது, தம்பி! பருவ மங்கையின் கழுத்தில் தாலிகட்டப் போகும்போது, மாப்பிள்ளைக்குக் 'காக்காய் வலிப்பு' வருவதுபோலவும், சீனி யுடன் பிஸ்தா பருப்பும், குங்குமப் பூவும் போட்டு, காய்ச்சி வெள்ளிப் பாத்திரத்திலே ஊற்றி, காலில் சதங்கை கொஞ்சிட, கண்களில் கனிவு ஒழுகிட, அன்னநடை நடந்துவரும் ஒரு சின்ன இடைக் கிளிமொழியாள் தர, ஒரு முழுங்கு பருகும் போது, பாலில், செத்துக்கிடக்கும் பூச்சி இருப்பது கண்டால், எப்படிக் குமட்டுமோ, அதுபோலவும் அல்லவா இருக்கும்.

கொண்டாட, புகழ்பாட, கொடிதூக்கிகள் கும்பல் கும்ப லாகக் கிளம்பியுள்ள நேரம் பார்த்தா, அமைச்சர் வேலை பார்க்கும், அமைதியான இயல்புபடைத்த திருமதியார் இலட்சுமிமேனன், இப்படிப்பட்ட, அருவருப்புத்தரத்தக்க இழி மொழிகளை வீசுவது!! பரிதாபம்! பரிதாபம்!!

மாப்பிள்ளையைக் காணோமே? வழிதவறிவிட்டதோ? என்று கேட்டுப் பதறிநிற்கும் மாமனாரிடம், 'பார்த்தேன் உமது மாப்பிள்ளையை! பாதையில்! படுத்து உருண்டு கொண்டிருந் தார் சாக்கடை ஓரத்தில்! கேட்கப்போனால், இது பன்னீர்க் குளம் என்கிறார்!!" என்று ஒருவர் சொன்னால், மாமனார் மனம் எப்படிப் பதறும். அவ்வளவுக்குப் போவானேன், தரமான மாம்பழம் என்று எண்ணி வாங்கிச் சுவைத்திடும்போது, ஒரு பக்கம் புளிப்பாகவும், மற்றோர் பக்கம் வெம்பலாகவும், முழுதும் நாராகவும் இருந்தால், மனம் என்ன பாடுபடும்!

அதுபோல, மாலையும் மரியாதையும், மக்கள் ஆதரவும் பெறத்துடிக்கும் நேரத்தில், தியாகிகள்! தீரர்கள்! ஊருக்கு உழைக்கும் உத்தமர்கள்! என்று வாழ்த்துரைகளைப் பெற்று மெய்மறந்து கிடக்கும் வேளையில்,

இடந்தேடிகள்

பணம்பிடுங்கிகள்

பத்தாம்பசலிகள்

வேடதாரிகள்

கபடர்கள்

சுயநலப்புலிகள்

என்றெல்லாம் பொருள்பட, அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மிகப் பொறுப்பான பதவியில் உள்ள அம்மையார், திட்டவட்டமாகக் கூறிடக் கேட்டால், எப்படி இருக்கும் 'அரசியல் அந்தஸ்து' தேடிக்கொண்டிருக்கும் காங்கிரசாருக்கு!

போகட்டும், பொதுமக்கள் மட்டும், பாவம், என்ன நினைப் பார்கள்?

பேச்சாளர்களும் எழுத்தாளர்களும், காங்கிரசில் உள்ள வர்களைப்பற்றி,

உண்மைத் தொண்டர்கள்

ஊருக்கு உழைப்பவர்கள்

தியாகச் செம்மல்கள்

தீரமிக்கவர்கள்

என்று பலபடப் புகழக்கேட்டு, இவ்வளவு பேர்கள் புகழ்ந்து பேசுவதால், காங்கிரசில் உள்ளவர்கள், தகுதியுள்ளவர்களாக, தன்னலமற்றவர்களாக, தொண்டாற்றக் கூடியவர்களாகத் தாம் இருப்பார்கள் என்று பொதுமக்கள் ஒருகணம் மயங்கும் நேரமாகப்பார்த்து, அம்மையார், சவுக்கடி கொடுக்கிறார்களே,

ஆளுக்கேற்ற பேச்சுப் பேசுவோர்

அகப்பட்டதைச் சுருட்டுவோர்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்,

கட்சி வளர ஏதும் செய்தறியாதார்!

காரியவாதிகள்!

என்றெல்லாம்!!

மெத்தக் கஷ்டப்பட்டுப், பெரும்பொருளும் செலவிட்டுக் காங்கிரசார் பொதுமக்களிடம் செல்வாக்குத் தேடும் நேரமாகப் பார்த்து, இந்தக் காலத்துக் காங்கிரசார் கபடர், கசடர், என்று காங்கிரஸ் அமைச்சராகப் பணிபுரியும் பொறுப்புள்ளவர் பேசிடக் கேட்டால், பொதுமக்கள் மனமும் படபடவெனத்தானே அடித்துக் கொள்ளும். இவர்களைப் போய், காந்திய வழிவந்தவர்கள், ஊருக்கு உழைக்கவரும் உத்தமர்கள், தன்னலமற்ற பெரியோர்கள், தகுதி யாவும் பெற்றவர்கள் என்று, நாம் இதுநாள்வரை எண்ணிக்கொண்டிருந்தோமே, இப்போதல்லவா தெரிகிறது இவர்களின் உண்மை வடிவம்'—என்றுதானே எண்ணிக் கொள்வர். அதிலும் இது தேர்தல் நேரம்; எடைபோடும் நாட்கள்; 'மாத்து' கண்டுபிடிக்கும் காலம்! அப்படிப்பட்ட காலத்திலே, மிகக் கேவலமான எண்ணம் கொண்டவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இன்று உள்ள காங்கிரசார் என்று இலட்சுமிமேனன் கூறுவது, காதிலே நாராசம் காய்ச்சி ஊற்றுவது போலல்லவா இருக்கும்.

நாட்டிலே நல்ல திட்டங்கள் வேண்டும், மக்கள் சுகப்பட வேண்டும், வாழ்வு துலங்கவேண்டும், வஞ்சகம் வீழ்ந்துபட வேண்டும், வலியோர் எளியோரை வாட்டி வதைத்திடும் கொடுமை ஒழிக்கப்படவேண்டும், அதற்கு ஏற்றமுறையிலே ஆட்சிமுறை அமைய வேண்டும் என்பதற்காக, எதிர்வரிசை

நின்று சொந்தத்துக்கு ஒரு சுவையும் பயனும் எதிர்பார்க்காமல், மனதிற்குச் சரியென்று பட்டதை, மரியாதை கலந்த உறுதியுடன் நாம் எடுத்துச் சொல்கிறோமே, தம்பி! என்னென்ன ஏசிப் பேசுகிறார்கள், எவரெவரை விட்டுப் பேசவைக்கிறார்கள், அங்கம் அங்கமாக வர்ணிக்கிறார்கள், பரம்பரைகளை ஆராய்கிறார்கள், பழிச்சொற்களை வீசுகிறார்கள், பற்களை நறநறவெனக் கடிக்கிறார்கள், தாவித்தாவிக் குதிக்கிறார்கள், காங்கிரசார்—தலைவர்கள் வரிசையிலே உள்ளவர்களேகூட; பார்க்கிறோம். இதோ அம்மையார், செம்மையாகக் கொடுக்கிறார்களே, சவுக்கடி. வாய் திறக்கிறார்களா! முடியுமா!! எல்லா ரோஷமானமும் ஆத்திரமும் ஆர்ப்பரிப்பும், நம்மை நோக்கித்தான் பாய்கிறதேதவிர, பத்தாம்பசலி என்கிறார், படுமோசம் என்கிறார், சுயநலமிகள் என்கிறார், சுகபோகிகள் என்கிறார், கொள்கை தெரியாதார் என்கிறார், கூடிக் குடிகெடுக்கிறார்கள் என்கிறார், அம்மையார்; ஒரு வார்த்தை, ஒரு கனைப்பு, ஒரு இருமல், தும்மல்! கிடையாது! சுருண்டு சுருண்டு கீழேவிழும் அளவுக்குக் கொடுத்திருக்கிறார் அம்மையார்; துடைத்துக்கொண்டு, அதை எங்கே நாம் பார்த்துவிடுகிறோமோ என்று கவலைப்பட்டுத், தழும்புகளை மறைத்துக்கொள்கிறார்களே தவிர, எங்களையா இப்படிக் கேவலமாகப் பேசுவது? எப்படிப் பேசலாம்? எப்படிப் பொறுத்துக் கொள்வோம்? ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்கும் துணிவு இருக்கிறதா! எப்படி இருக்கமுடியும்? அம்மையார்தான், புட்டுப்புட்டுக் காட்டுகிறார்களே! கிளறினால், .மேலும் பல வெளிவந்துவிடுமே என்ற கிலி! எனவேதான் வாயடைத்துக் கிடக்கிறார்கள்.

இருந்தபோது சாமரம் வீசியவர்கள், விலகி இழிமொழி கக்கினால், அதைச் சிந்தாமல் சிதறாமல் பிடித்துக்கொண்டு வந்து, சந்தைக் கடையிலே கூவிக் கூவி விற்கிறார்களே காங்கிரசார், நம்மைக் கேவலப்படுத்த; இலட்சுமி மேனன் தரும் வார்த்தைகள், நற்சான்றுப் பாத்திரங்கள் என்று கருதுகின்றனரா!!

நம்மைவிட்டு விலகியோர், நாடிப்பெற்ற கொள்கையை வெறுத்தோர், பழிசுமத்தி, இழிமொழி பேசிப், பகைகக்கித், தங்கள் போக்குக்குச் சமாதானம், விளக்கம் தேடிக்கொள்கிறார்கள். அவர்கள் நம்மைப் பகைத்துக் கொண்டதால் பேசித்தீரவேண்டியது என்ற தரக்குறைவான முறை காரணமாக, கடுமொழி பேசினால், பார்! பார்! போடுபோடென்று

போடுகிருன்! கேள்! கேள்! கொடு கொடு என்று கொடுக்கிறன் என்று கூவுகிருர்கள், கூத்தாடுகிருர்கள், இதே காங்கிரஸ் காரர்; கூட இருந்துகொண்டே குட்டுகிருர், குடைகிருர், இடிக்கிருர், உடைக்கிருர், மானத்தைப் பறிக்கிருர், யோக்கிய தை கெட்டதை அம்பலமாக்குகிருர் இலட்சுமி மேனன்; திருடனைத் தேள் கொட்டியது போலல்லவா, திருதிருவென்று விழித்தபடி இருக்கிருர்கள் காங்கிரஸ் காரர்கள்.

இலட்சுமி மேனன் சொல்லியது, பொதுமக்கள் காதுக்கு எட்டாமல் இருக்க என்னென்ன செய்யலாம் என்று தந்திர முறையைக் கையாளுகிருர்களே ஒழியப், பொங்கி எழுகிருர் களா? முடியுமா? அச்சம்! இப்படிப் பேசலாமா என்று கேட்க ஆரம்பித்து, அம்மையார், நான் சொல்வதை மறுத்துப்பேச வக்கிருந்தால் பேசுங்கள் என்று கூறிக் 'குரங்குப் புண்'ணுகை விஷயம் ஆகிவிடப்போகிறது என்ற அச்சம். நல்லவேளை, இந்த அம்மையார், பொதுப்படையாகப் பேசினுர்கள்; ஊரும் பேரும் சொல்லி மேலும் மானத்தைப் பறிக்காது விட்டு வைத்திருக் கிருர்களே, அதுவரையிலே இலாபம், என்ற நினைப்பிலே இருக் கிருர்கள்.

காங்கிரஸ் கட்சி தவிர, தரமான, தகுதியான கட்சியே கிடையாது; அதிலே உள்ளவர்கள் மட்டுமே ஆளப்பிறந்த வர்கள். ஆளத் தெரிந்தவர்கள்; மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது, தன்னல மறுப்பும் கிடையாது என்று, மேடையிலே நின்று மார்தட்டிப் பேசுகிருர்கள் காங்கிரசார். அதிலும் எவ்வளவுக் கெவ்வளவு பேசுபவர்களுக்கும் காங்கிரசின் தியாகச் செயல் நிரம்பிய வரலாற்றுக்கும் தொடர்பே இல்லாம லிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு உரத்த குரலில், உறுதி காட்டி, உருட்டி மிரட்டிப் பேசுகிருர்கள்.

திடீரென்று கேட்டால், தண்டி என்பது ஊரின் பெயரா, ஆளின் பெயரா என்றுகூடச் சந்தேகப்பட்டுக் குழம்பும் காங்கிரஸ்காரர்கள் இருக்கிருர்கள்.

ரவுலட் சட்டம் தெரியுமா என்று கேட்டுப்பார், தம்பி! புத்தம் புதுக்கதர் ஆடையை! விவரம் தெரியாமல் விழிப்பார் கள்! மகமதலி சவுக்கதலி தெரியுமா? தெரியாது! பாஞ்சாலத் திலே வீர மரபு ஏற்படுத்திய லாலா லஜபதிராய் வாழ்க்கை வரலாறு தெரியுமா? தெரியாது! வேறு என்ன தெரியும்? மந்திரியிடம் பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொடுக்கக்கூடிய

தரகர் யார்? அவருக்கு என்ன தரவேண்டும்? என்பது தெரியும்! எந்தத் தொகுதியில் எந்த ஜாதி மக்கள் அதிகம்? அது தெரியும்! மயக்குவதா மிரட்டுவதா அந்த மக்களை? அது தெரியும்! காங்கிரஸ் நடாத்திய வீரப்போராட்டங்கள், விறுவிறுப்பான சம்பவங்கள், எதுவும் தெரியாது.

அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கையே இன்றைய காங்கிரசில் அதிகம்! அந்த எண்ணிக்கை வேகமாக வளர்ந்தும் விட்டது. அதுகண்டுதான், ஒரு நல்ல கட்சி, நாட்டுக்கு விடுதலை பெறப் பாடுபட்ட கட்சி, சபர்மதி முனிவர் என்று சான்ருேர் போற்றிய காந்தியார் வளர்த்த கட்சி, இன்று இந்தக் கதிக்கு வந்துவிட்டதே என்று மனம் குமுறி, மனதில் உள்ள பாரத்தைக் குறைத்துக்கொள்வதுபோல், இலட்சுமி மேனன் அவர்கள் அவ்வளவு வெட்டவெளிச்சமாக்கிவிட்டார் உள்ள ஊழல்களை!

அதுசரி அண்ணு! இலட்சுமி மேனன் எப்போது அப்படிப் பேசினுர்கள்? எங்கே பேசினுர்கள்? காங்கிரசில் உள்ளவர்கள், என்னைக் குடைந்து எடுப்பார்களே! உங்கள் அண்ணுத்துரை கூறுவது அண்டப்புளுகு என்பார்களே! நான் என்ன பதில் அளிக்க?—என்று கேட்கத் துடிக்கிருய்—தெரிகிறது தம்பி! கூறுகிறேன், விவரம், தெரிந்துவைத்துக்கொள்.

பத்து நாட்களுக்கு முன்பு நாகபுரியில் காங்கிரஸ் ஊழியர் கூட்டம் நடைபெற்றது. நாகபுரி நகர காங்கிரஸ் குழுத் தலைவர், தலைமையில்! அதிலேதான் அம்மையார், இலட்சுமி மேனன் இன்றைய காங்கிரசாரின் போக்கை அம்பலப்படுத்திக் கடுமையாகக் கண்டித்துப் பேசினுர். ஆங்கிலப் பத்திரிகையான "Times of India" டைம்ஸ் ஆப் இந்தியாவில் விரிவாகவே வெளியிடப்பட்டிருக்கிறது.

அம்மையார் அருளிய மணிவாசகங்களிலே சில கூறவா?

> "நேரு ஒருவர் மட்டுமே காந்திய வழியைக் கடைப்பிடிக் கிறவர்; மற்றக் காங்கிரசாரில் மிகப் பெரும்பாலோர், காந்திய வழி நடப்பதாக ஆணையிடுகிருர்கள். ஆனுல், அவர்கள், இந்தியாவில் உள்ள பிற்போக்குச் சக்திகளின் பிரதிநிதிகளாகவே உள்ளனர்."

கபடர்! காதகர்!—எனும் கடுமொழிகள், அம்மையாரின் இந்தப் பேச்சிலே தொக்கி நிற்கின்றன என்பதைப் புரிந்துகொண்டா யல்லவா?

காந்தியத்தின்மீது ஆணையிடுகிறார்கள்.

பிற்போக்குத்தனத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். மிகப்பெரும்பாலான காங்கிரஸ்காரர்.

உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவதல்லவா, இது; நயவஞ்சகம், வெளிவேடம், ஏய்ப்பது, என்றெல்லாம் கூறலாமல்லவா. இந்தக் கருத்தைச் சுருக்கமாக்கிக்காட்ட, நான் தம்பி, அவ்வளவையும் விட்டு விட்டு, 'பத்தாம் பாலி' என்று மட்டுமே குறித்துக்காட்டினேன். .சொல்வதென்றால் இன்னும் நிரம்பச் சொல்லலாம்.

காந்தியத்தின்மீது ஏன் ஆணையிடுகிறார்கள்? பிறகு ஏன் பிற்போக்குச் சக்திக்குத் துணை நிற்கிறார்கள்?

காந்தியத்துக்கு மக்களிடம் நிரம்பச் செலவாக்கு இருக்கிறது, எனவே, தாங்கள் அதன்வழி நடப்பதாக ஆணையிட்டால்' மக்கள் தங்களை நம்புவார்கள், ஆதரவு தருவார்கள்! அதிலே கிடைக்கும் ஆதாயத்தைப் பெறலாம் என்ற எண்ணம். இது சுயநலமல்லவா? மக்களை நம்ப வைத்துக் கழுத்தறுப்பது அல்லவா? வெளிவேஷம் போட்டு மக்களை ஏய்ப்பதல்லவா?

நானா கூறுகிறேன்? இலட்சுமி மேனன்!

நயவஞ்சகம், வெளிவேஷம் போடுபவர், பத்தாம் பசலிக் கொள்கையுடன் குலவுபவர், ஒருவர் இருவர் அல்ல! அம்மையார் கூறுகிறார், நேரு நீங்கலாக உள்ள காங்கிரஸ்காரர்களில் மிகப்பெரும்பாலானவர்கள், இப்படிப்பட்டவர்கள் என்று.

அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சிதான், நாடு ஆள நாங்களன்றி வேறு எவருளர்? ? எவருக்கு உண்டு அந்தத் தகுதி என்று எக்காளமிடுகிறார்கள்; கேட்கப்போனால், சவால் விடுகிறார் சுப்பிரமணியனார்!!

மானம் போகக் காணோம் மிகப்பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் நயவஞ்சகர்கள் என்ற பொருள்பட அம்மையார் பேசிடக்கேட்டு; நம்மீது பாய்கிறார்கள்!!

அம்மையார், காரணம் காட்டாமலிருந்தால், தூற்றித் திரிகிறார்கள் என்றுகூடச் சொல்லிவிடலாம். ஆனால், தக்க காரணம், விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

"நீண்ட காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டிய சமுதாய சீர்திருத்தத்துக்கான முற்போக்கான சட்டங்கள், பாராளுமன்றத்திலே கொண்டுவரப்படும் போதெல்லாம், காங்கிரஸ் உறுப்பினர்கள்தான், முன்னால் நின்று அவைகளை எதிர்த்து வந்தனர். என் உள்ளம் வெதும்புகிறது."

எப்படி இருக்கிறது, தம்பி! பத்தாம்பசலிகள் என்று நான் குறிப்பிட்டேனே, தவறா? முற்போக்கான சட்டதிட்டங்கள் வருகிறபோது, காங்கிரசில் இருந்துகொண்டு எதிர்க்கிறார்கள்—நியாயமா? இவர்களா நாடாளத் தகுதிபெற்ற கட்சியினர்! இப்படிப்பட்டவர்களைக் கொண்டுள்ள கட்சியா மக்களை வாழ வைக்கும் கட்சி?

என் உள்ளம் வெதும்புகிறது என்று அம்மையார் மட்டுமா, அறிவுத் தெளிவுள்ள, முற்போக்குக் கருத்துள்ள, அனைவரும் தான் கூறவேண்டி இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட நயவஞ்சகர்களில் இருந்தல்லவா 'ஆளவந்தார்கள்' பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள்.

அவர்களிலே பலர் கதர் கட்டுகிறார்கள். ஆனால், உள்ளூர வகுப்புவாதக் கட்சிகளான, ஜனசங்கம்,இந்துமகா சபை, ஆர். எஸ். எஸ்—போன்றவைகளிடம் அன்பும் அபிமானமும் கொண்டுள்ளனர்; அவைகளுக்குக் கட்டுப் படுகின்றனர்.

கட்டுவது கதர்! கனிவு காட்டுவது காட்டுமுறை விரும்பும் கட்சிகளுடன்! கதர் கட்டுவது எதற்கு? ஊராரை மயக்க! மகாத்மாவின் தொண்டர்கள், தூயவர்கள் என்று பிறர் நம்பிக்கொள்ளும்படி செய்ய! ஆனால் உண்மையில்? வகுப்புவாதக் கட்சிகளுடன் குலவுகிறார்கள்.

தம்பி! கபடர்கள் என்று கூறினேன்—தவறா?

பணம்.பிடுங்கிகள் என்று நான் குறிப்பிட்டது. பலருக்குச் சற்றுக் கடுமையான மொழி என்று தோன்றக்கூடும். ஆனால், பொருத்தமில்லாமல் கூறிடவில்லை என்பதை அமைச்சரின் மற்றோர் மணிமொழி கேட்டால், புரிந்துகொள்வார்கள்.

காங்கிரஸ்காரர்களும் காங்கிரஸ் கமிட்டிகளும் பணத்தை நாடும் போக்கு, வளர்ந்தபடி இருக்கிறது. விடுதலைப் போரிலே வீரத்தியாகம் புரிந்தவர்களைப் புறக்கணித்துவிட்டுக் காங்கிரஸ் கமிட்டிகளுக்குப் பணம்

கொடுக்கக்கூடியவர்களைக் காங்கிரஸ் கமிட்டிகள் ஆதரிக்கின்றன.

இது தேர்தலுக்கு 'அபேட்சகர்களை'ப் பொறுக்கினுர்களே, அதிலே வெட்டவெளிச்சமாகத் தெரிகிறதல்லவா? தொண்டர்கள், தூயவர்கள், தியாகிகள் இவர்கள் சீந்துவாரற்றுப் போய்விட்டார்கள்; பணம் பந்தியிலே என்று ஆகிவிட்டது என்று அம்மையார் வேதனைப்படுகின்றுர்கள்.

> முன்பெல்லாம் ஆக்க வேலைகளிலே ஈடுபடுவார்கள்; இப்போதைய காங்கிரசார் சில்லறைச் சண்டைகளிலே மூழ்கிக் கிடக்கின்றனர். நாட்டு முன்னேற்றத்துக்கான திட்டங்களில் அக்கரை காட்டுவதில்லை. காங்கிரஸ் துரைத்தனம், மக்கள் நல்வாழ்வுக்காக என்னென்ன செய்திருக்கிறது என்பதைக் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லும் செயலில் ஈடுபடுவதில்லை.

எப்படி ஈடுபட அவர்களுக்கு மனம் வரும்? அவர்கள் அதற்கா சேர்ந்தனர் காங்கிரசில்? காந்தியப் போர்வையில் இருந்து கொண்டு, அகப்பட்டதைச் சுருட்டத் திட்டமிடுகிறுர்கள்; வெளிவேஷம்; சுயநலம்; நயவஞ்சகம்!!

> இரண்டு திட்டங்கள்பற்றி, மிகுந்த சிரமப்பட்டுச் செலவிட்டு அச்சடிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு வழங்கச் சொல்லி அனுப்பிவைக்கப்பட்ட கட்டுக்கட்டான புத்தகங்கள், காங்கிரஸ் கமிட்டிகளில் கட்டுக்கூடப் பிரிக்கப்படாமல் கிடந்ததை என் கண்ணுல் கண்டேன்.

தம்பி! இதைவிட வேதனையுடன் எவரும் பேசிட முடியாது. இப்போது எண்ணிப் பார்க்கச் சொல்லு காங்கிரசாரை, நான் குறித்துள்ள 'அடைமொழிகள்' பொருத்தமற்றவைகளா என்று! கோபிக்காமல்! குட்டு வெளிப்பட்டுவிட்டதே என்று ஆத்திரப்படாமல், யோசித்துப் பார்க்கச் சொல்லு. இந்தக் குற்றச் சாட்டுகளைக் கூறுபவர், வேறு கட்சி அல்ல; காங்கிரஸ்! ஏனேதானே! அல்ல! துணை அமைச்சர்!

மகாராஷ்டிரம் சென்றிருந்தார்களாம் அம்மையார்! அங்கு, தகுதியுள்ளவர்களைக் காங்கிரஸ் சார்பில் தேர்தலுக்கு நிறுத்தாமல், கசடர்கள், காதகர்கள், காட்டிக் கொடுப்பவர்கள், நேற்றுவரை காங்கிரசை எதிர்த்தவர்கள் ஆகியோர் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிறுத்தப்பட இருக்கிறுர்களாம். பயங்கரமாக இருக்கிறது என்கிறுர், இலட்சுமி மேனன்.

மகாராஷ்டிரத்தில் மட்டுமல்ல, எங்கும் இதேதான்.

பணம் இருக்கவேண்டும் நிரம்ப! எப்படிச் சேர்த்த பணமாக இருந்தாலும் சரி! கள்ளமார்க்கட் பணமாக இருந்தால், மிக நல்லது. ஏனெனில், கணக்குக்காட்ட வேண்டிய அவசியமில்லாமல் தேர்தலில் செலவழிக்கலாம். பண்பு இருக்கிறதா? பொதுத்தொண்டாற்றிப் பயிற்சி இருக்கிறதா? சட்டமன்றத்திலே பணிபுரியும் தகுதி இருக்கிறதா? இவைகளைக் கவனிக்கவே இல்லை! பணம் உண்டா—! ஏராளமாக! தாராளமாகச் செலவிடத் தயாரா? அப்படிப் பட்டவர்தான் வேண்டும்? எதற்கு? துறவியாக வாழ்ந்து, தூய்மைக்கும் வாய்மைக்கும் மதிப்பளித்த மகாத்மா வளர்த்த கட்சியைக் காப்பாற்ற! வெட்கக்கேடு ·இதைவிட வேறு உண்டா? ஆனல், நாட்டிலே இன்று இதைத்தானே காண்கிறேம். ஆங்காங்கு, தேர்தலில் வேட்பாளர்களாகக் காங்கிரசால் நிறுத்திவைக்கப் பட்டிருப்பவர்களின் தகுதி, திறமை, பண்பு, பயிற்சி, முன்னுள் தொடர்பு, இவைகளைச் சற்றுப் பார்க்கச் சொல்லேன், தம்பி!

தம்பி! பார்க்கச் சொல்லேன் என்று நான் கூறுகிறேனே தவிர, இப்போதே மக்கள் இதைக் கூர்ந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறுர்கள் என்பது, எனக்கும் தெரியாமல் இல்லை.

அதுமட்டுமல்ல, உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள் உளம் வெதும்பித்தான் கிடக்கிறுர்கள். எவரெவர் ஊர்க்குடி கெடுப்பவர்களோ அவர்களெல்லாம் காங்கிரசில் இழுத்துப் போடப்பட்டு, அபேட்சகர் ஆக்கப்பட்டு, உலா வருகின்றனர். அவர்களுக்குக் கொடிபிடிக்கும் காலமும் வந்ததே என்று வெட்கித் தலைகுனிகிறுர்கள் விவரம் தெரிந்த காங்கிரஸ்காரர்கள். களத்துமேடு கால்படியாவது கிடைக்காதா என்று அலையும் பேர்வழிகள்போலக், கதர்போட்டுக்கொண்ட கனவான்கூடச் சென்று 'காசு' பறிக்கலாம் என்று உள்ளவர்களும் உள்ளனர். ஆனல், காங்கிரசில் இழுத்துப்போடப்பட்டுள்ள பணக்காரர் வீட்டு வேலையாட்கள்கூடக் காங்கிரஸ் கட்சியை இன்று மதிக்க மறுக்கிறுர்கள்—இவ்வளவு தரம் குறைந்துபோய்விட்டதே இந்தக் கட்சி என்று.

தம்பி! இதோ ஒரு குடிசை! சற்று உள்ளே செல்வோமா— கற்பனை உலகுதானே! யாரும் நம்மைக் காணமாட்டார்கள், வா; அஞ்சாமல் வருகிருன் பார்! வண்டி ஓட்டும் முனியன்! மிட்டா மாணிக்கத்திடம் வேலே. அவன் மனைவி முத்தம்மா! இருவரும் பேசிக்கொள்கிருர்கள் கேட்போம், சந்தடி செய்யாமல், உற்றுக் கேள்:

முனியன் :

அய்யா செய்யும் அக்கிரமம்
அய்யே! உனக்குத் தெரியாதென்று
கேலி என்னைச் செய்தாயே!
கேளடி! கேளடி! முத்தம்மா!!
நாடு மீட்டவர் நல்லவர்கள்
ஆட்சி நடத்தி வருபவர்கள்
காங்கிரசார் எனச் சொன்னுயே
அந்தக் காங்கிரஸ்காரர் செயலதனை
கேளடி முத்து! கேளம்மா!
நம்ம அய்யா வீடு வந்தார்கள்!!

முத்தம்மா :

ஊரை ஆளும் உத்தமர்கள்
உங்க அய்யாவிடமா வந்தார்கள்?
உலகம் புகழ வாழ்பவர்கள்
உங்க அய்யாவிடமா வருவார்கள்?
நாடு மெச்ச வாழ்பவர்கள்
நாடி வருவரோ, அவரிடந்தான்?

முனியன் :

வந்ததைக் கண்ணுல் பார்த்தேண்டி!
வாய்பிளக்க நின்றேண்டி!
வந்தார் காங்கிரஸ் தலைவரெலாம்
வரிசையாகவே மாளிகைக்கு!

முத்தம்மா :-

வந்து?

முனியன் :-

வந்தா? மாலைகள் பலப்பல போட்டாரடி!
மண்டி யிடக்கூடப் பார்த்தாரடி!
மானம் காத்திட வேணுமென்று
மனுக்கள் கொடுத்தார் அய்யாவிடம்!
காங்கிரஸ் வெற்றி உம்கரத்தில்
கருணை காட்ட வேண்டு மென்ருர்!

முத்தம்மா :-

உங்க அய்யாவிடமா?
அறுந்த விரலுக்கும் சுண்ணும்பு
அய்யே! அவர்தர மாட்டாரே!
அடுத்த வீட்டான் வாழ்ந்திட்டால்
ஆத்தே! வயிறு எரிவாரே!
அய்யா இலட்சணம் ஊரறியும்
யார்தான் அவரை நாடிடுவார்!

முனியன் :-

எதையோ சொல்லு முத்தம்மா!
எவன்உன் பேச்சை மதிக்கிருன்!
அய்யா தேர்தலில் குதிக்கிருர்
ஆறேழு இலட்சம் செலவழிக்கிருர்!!

முத்தம்மா :-

இவரா காங்கிரஸ் கட்சியிலே
இப்ப தேர்தலில் நிற்கிருர்!
கள்ளுக் கடையை நடத்தினவர்
இந்தக் கண்ணியவான் அல்லவா?

தமிழ் நூல் காப்பகம் ★ தமிழ் நகர், விருத்தாசலம் - 606001.

முனியன் :-

அய்யா சொன்னார் அதைக்கூட.
அதனால் பாதகமில்லையென்று
அடித்துப் பேசினார் பெரியவரும்.
மண்டலக் காங்கிரஸ் தலைவரடி!
மந்திரிக்கும் அவர் சொந்தமடி!
கதரும் கட்டிப் பழக்கமில்லை
கண்ட பயல்களைக் காண்பதில்லை!
கண்டிப்பான பேர்வழி நான்
என்றும் சொன்னார், எஜமானர்.

முத்தம்மா :-

அய்யா சொன்னதைக் கேட்டபின்பு!

முனியன் :-

மெய்யாத் தாண்டி, எல்லோரும்
மேதையின் பேச்சிது என்றார்கள்!

முத்தம்மா :-

ஐய்யே! இது அனியாயம்
அடிப்பவர் கொள்ளை பல தொழில்
அதை அனைவரும் அறிவார் தெளிவாக
அன்பும் அறமும் அவர் அறியார்
அழுத கண்ணைத் துடைத்தறியார்
எரிந்து விழுவார் எவரிடமும்
எவருக் கிவரால் உபகாரம்?
சத்திரம் சாவடி கட்டினாரா?
சாலைகள் சோலைகள் அமைத்தாரா?
சாத்திரம் பலபல கற்றாரா?
சான்றோருடன் சேர்ந் துழைத்தாரா?
சட்டம் திட்டம் அறிவாரா?
சட்டசபையில் நின்று உரைப்பாரா?
சஞ்சலம் துடைத்திட வல்லவரா?

முனியன் :-

அதெல்லாம் எனக்குத் தெரியாது!
ஆமாம், அவர்க்குப் படிப்பில்லை!
ஆன்றோர் பேசும் சொல்லெல்லாம்
அவர்க்குக் காதில் ஏறாது.
அய்யா உழைக்க மாட்டார்தான்!
அதனால் என்ன முத்தம்மா!
அனைவரும் கூடி ஒருமுகமாய்
உம்மால்தான் இது ஆகுமய்யா
உடனே கையெழுத்திடும் என்றார்.

முத்தம்மா :-

இப்படியா காங்கிரஸ் சீரழியுது
எப்படித்தான் ஒப்பி மக்கள் ஓட்டளிப்பார்கள்?
தப்பிதங்கள் மெத்தவுமே செய்தவராச்சே
தருமம் துளிகூடச் செய்தறியாரே!

முனியன் :-

புலம்பிக் கிடடி முத்தம்மா!
அய்யா, புதுசா கதரு போட்டாச்சி!
போகுது புறப்பட்டுக் கொடிபடையும்
போலோ பாரத் மாதாக்கீ
ஜே! ஜே! என்று கூவிக்கொண்டு.

முத்தம்மா:-

ஓட்டுக் கேட்கவா போகுது
உலக உத்தமர் வளர்த்த படை?

முனியன் :-

அய்யாவுக்கு ஓட்டுபோடச் சொல்லி நேருவும்
அனைவரையும் கேட்கிறாரே
இன்னும் என்னடி?

முத்தம்மா:-

நேருவா இவருக்குப் போடச்சொல்லுறுர்
நேர்மைக்கும் இவருக்கும் பகையாச்சே!
நேத்துவரை, காங்கிரசின் எதிரியாச்சே!

முனியன் :-

இருந்தால் என்ன முத்தம்மா!
இதுதான் இப்பத்திக் காங்கிரசு!!

முத்தம்மா :-

'ஓட்டு' சீட்டுள்ள மக்களெல்லாம்
உன்னைப்போல இருந்திடப் போவதில்லே
உழைப்புக்கும் உண்மைக்கும்
தோல்வி இல்லே பார்!
உங்க எஜமானருக்குப் பட்டை நாமம்தான்!
ஊர்க்குடி கெடுப்போர்க்கு ஓட்டு இல்லே
ஊராளும் காங்கிரசு பேர் சொன்னாலும்
உதயசூரியன் சின்னந்தான்
உழைப்பின் சின்னம், ஊரறியும்.
உழைக்கிற மக்கள் 'ஓட்டு' உண்மையாக
அதற்கேதான்!
ஊர்முழுதும் படைதிரட்டி
உங்க எஜமானரை நான்
தோற்கடிப்பேன்!!
'உதயசூரியன்' சின்னம்
வெற்றிபெற
உழைப்பேன்; இது உறுதி
அறிந்திடு நீ!

முனியன் :-

மூளே உனக்குத் தானேடி
மொத்தமாய் இருக்குது முத்தம்மா!

நானும் உண்மை அறிவேண்டி
நாடும் தூங்கிக் கொண்டில்லே!
நம்மைப்போலப் பாடுபடும்
ஏழை மக்கள் எல்லோர்க்கும்
ஏற்ற சின்னம் அறிவேண்டி
'உதயசூரியன்'நம் சின்னம்
உழைப்போம், வெற்றி பெற்றிடுவோம்.

தம்பி! நாடெங்கும் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் விழிப்புணர்ச்சியின் விளைவுகளாக அமைந்துள்ள எழுச்சிமிகு நிகழ்ச்சிகளிலே, ஒன்று இது.

மக்கள் தெளிவுடன்தான் உள்ளனர் பயம் வேண்டாம்!

பணம் படைத்தோர்களைக் காங்கிரஸ் கட்சி எதற்காகப் பிடித்திழுத்துத் தேர்தலிலே நிறுத்துகிறது என்பது, 'பாமரர்' என்று ஆட்சியாளர்களால் ஏளனமாகக் கருதப்படும் மக்களுக்கும், மிக நன்றாகப் புரிந்துதான் இருக்கிறது. எனவே தம்பி, இனி உன் வேலே, ஏற்கனவே, மக்கள் அறிந்திருப்பதை, அடிக்கடி பக்குவமான முறையிலே, கவனப்படுத்தியபடி இருப்பதுதான்.

★

தி. மு. க.

சட்டசபை சென்று

கொள்கை இழக்கவில்லே
கோணல்வழி செல்லவில்லே.

கோலேந்தும் காங்கிரசின்
கோலம் கண்டு

மயங்கவில்லே
மருளவில்லே

நாடு செழித்திடும் திட்டம்
நல்லாட்சிக்கான சட்டம்

வேண்டுமென
வாதாடி

ஏழைவாழ வழிதேடி

ஏற்ற பொறுப்பை
நிறைவேற்றி

விருந்து வைபவம்
நாடாமல்

எதிர்க்கட்சியாய்
பணியாற்றி

விதவித வடிவம்
தேடாமல்

நாடு மீட்டிட், கேடு அழித்திட

எதிர்ப்புக்கண்டு அஞ்சாமல்

ஏளனம் கேட்டுப் பதருமல்

எங்கள் தொண்டு நாட்டுக்குண்டு

எதையும் தாங்கும் இதயம் உண்டு

தென்னகம் பொன்னகம் ஆகிடவும்

தேம்புவோர் நிம்மதி பெற்றிடவும்

எலலோருக்கும் நல்வாழ்வு எங்கும் நீதி நிம்மதி

கண்டிட நாளும் போராடி!

பணிபுரிவது நாடறியும்

அறிவொளி பரப்பி

அரசியல் விளக்கி

மக்களாட்சியின் மாண்பு காத்திட

மீண்டும் அனுமதி வேண்டி நிற்கிரேம்.

நாட்டினரே நல்லாதரவு தந்திடுவீர்

பாதை வழுவாது பணிபுரிவோம்
பாட்டாளியின் அரசு அமைப்போம்

ஏழையை வாட்டும் விலைவாசி
முதுகை முறிக்கும் வரிச்சுமைகள்
எதிர்ப்போம் குறைப்போம் உமதருளால்!

செல்வம் சிலரிடம் சிக்குவதும்
செத்திடும் நிலையில் மிகப்பலரும்

உள்ள கொடுமை களைந்திடுவோம்!
உறுதி தளரோம்! இது திண்ணம்!
இம்முறை செய்திட அலுவல்கள்
ஏராளம்—குவிந்திருக்குது.

தொண்டுகள் புரிந்திட அனுமதிதந்து
எமை வாழ்த்துவீர், தோழர்காள்!
திருவிடம் விடுபட! தீமைகள் பொடிபட!

தி. மு. க. தொண்டு
நாட்டுக்கு என்றும் உண்டு!

தம்பி! இதை நாடெங்கும் உள்ளவர்கள் அறிந்திடச் செய். —பார், பிறகு, எங்கெங்கும், ஆதரவு பெருகி, வருவது காண்பாய். காங்கிரசாட்சியின் கேடுபாடுகளை மக்கள் அறியா திருக்கிருர்கள்—பொருளை வாரி இறைத்து ஓட்டுப் பெற்று விடலாம் என்று மனப்பால் குடிக்கிருர்கள், மமதையால் நிலைமையை உணர மறந்துவிட்ட காங்கிரஸ் பெருந்தலைவர்கள். ஆனால், மக்கள் ஏமாளிகளுமல்லர், மனதிலே உள்ளதை அப்படி அப்படியே கொட்டிக்காட்டும் பழக்கமும் அவர் களுக்குத் தெரியாது. நல்ல தீர்ப்பளிக்க அவர்கள் தவறமாட் டார்கள் என்பதை நான், நாடு சுற்றி நித்தநித்தம் கண்டு வருகிறேன். எங்குச் சென்ருலும், மக்கள் முகத்திலே ஒரு ஏக்கம்—வார்த்தைகளிலே துக்கம்—வாழ்விலே தடுமாற்றம்— இவைதான் தென்படுகின்றன. பொறுப்புணர்ச்சியும் பொறுமைக்குணமும் மிகுந்தவர்களாக நம் நாட்டு மக்கள் இருப்பதனல் மட்டுமே, இவ்வளவு அலங்கோலம் நாட்டிலே நெளிந்து கொண்டிருக்கும் நிலையிலேயும், புரட்சி இங்கு

வெடித்துக் கொண்டு வெளிக்கிளம்பவில்லை. ஆகவே, நமக்கு ஆபத்து இல்லை என்று எண்ணி இறுமாந்து கிடப்பவர்களின் ஆதிக்கம், பார்த்துக்கொண்டிருக்கும்போதே பேய்க்காற்றால் சாய்க்கப்பட்ட நெடுமரம்போலாகப் போகிறது. நான் காணும் கிராமத்தார்கள்,—பெரியவர்களின் முகம், பார்வை, பேச்சு, என்ன கூறுவதாக எனக்குத் தோன்றுகிறது, தெரியுமா, தம்பி!

காத்திருந்தேன்! காத்திருந்தேன்
காலமெல்லாம் காத்திருந்தேன்,
கஷ்டமெல்லாம் காங்கிரசால் தீருமென்று காத்திருந்தேன்!
வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி
வரிகளெல்லாம் கொடுத்துவிட்டேன்,
வாழ்வில் சுகம் வருமென்று ஆவலோடு காத்திருந்தேன்!
வருஷம் பதினைந்துமாச்சு
வந்த சுகம் ஒன்றுமில்லை
வாடுகிறேன் ஓடாகி, மாடாக நான் உழைத்தும்!
கள்ளமார்க்கட் கழுகு கண்டேன்
அவை கதர்உடை போடக் கண்டேன்
கொள்ளை இலாபக்காரர் கூடி,
கொடி பிடிக்கும் காட்சி கண்டேன்.
கரையான் புற்றெடுக்க, கருநாகம் புகுவதுபோல்
காந்திமகான் வளர்த்த கட்சி,
கபடர் குகை ஆகக் கண்டேன்.
கள்ளக் கும்பிடுகள் போட்டுக்
காங்கிரசார் வந்து நின்று
'ஓட்டு' கேட்கிறார்கள் என்னை
ஓட்டாண்டி ஆக்கிவிட்டு!
பட்ட தெல்லாம் போதுமய்யா
படமுடியா தினித்துயரம்
பாட்டாளி ஓட்டு இனி உமக்கில்லை
போ! போ! என்றேன்.
பாடுபடும் தோழர்களே! பாங்காக நாம் வாழ,
பாடுபடும் தி. மு. க. நம் கட்சி;
அதனாலே

பரிந்தளிப்போம் ஓட்டுகளை
உதய சூரியனுக்கே!

★

ஆனால் அண்ணா! மந்திரிகள் பம்பரம்போலச் சுழன்று வருகிறார்களே, மக்கள் மனது மாறிவிடாதா? மயக்கமொழி பேசுவார்களே—மக்கள் உறுதி குலைந்துவிடாதா? வீடுவீடாக வருகிறார்களே, விவரமறியாத மக்கள் அதை மிகப்பெரிய 'தியாகம்' என்று எண்ணி ஏமாந்துவிடமாட்டார்களா என்றெல்லாம் உனக்குக் கேட்கத் தோன்றும். தம்பி! நானும் அது குறித்துக் கேட்டுபார்க்காமல் இல்லை. கண்டால் கலிதீரும் என்று எண்ணும் நிலையிலே மக்கள் இல்லை. உயிரோடு இருக்கிறார்களா, ஓட்டுப் போடவேண்டியவர்களாயிற்றே என்ற நினைப்புடன்தான் அமைச்சர்கள் வருகிறார்கள்—வேறு உருப்படியான உதவிசெய்யும் உள்ளத்துடன் அல்ல என்பதை மக்கள் உணருகிறார்கள். பேசமாட்டார்கள்! அதற்கென்ன ஆகட்டும் என்பார்கள்! ஆனால், அமைச்சர் வந்துபோனால், அல்லல் போய் விடும் என்று அவர்கள் எண்ணவில்லை. ஏன்? மந்திரிகளை வரவேற்று, ஒரு பலனும் இதுவரை காணவில்லையே, அதே மந்திரிகள்தானே வருகிறார்கள். வந்து வந்து போகிறார்கள்! வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி வரி கட்டும் மக்கள், வறுமையிலே வாடுவதைக் கண்ணால் கண்டார்களே தவிர, அதனை நீக்க என்ன வழிசெய்தார்கள்? இதுவரை ஒன்றும் இல்லையே. இந் நிலையில், வீடுவீடாக வந்தால் என்ன, கையைப் பிடித்துக் கொண்டு, இது கை அல்ல! என்று கெஞ்சினால் என்ன? பலன்? ஒன்றுமில்லையே!—என்று எண்ணுகிறார்கள். மந்திரி வந்து போன ஊரில், போய்வருவோம், வா, தம்பி! கற்பனையூர், ஆனால் கருத்தூர்!

★

மாலைகள் போட்டு வரவேற்றோம்
மந்திரி ஐயா வந்தபோது!
மாரிக்குக் கூடச் செய்யாத
மரியாதைகள் செய்திட்டோம்.
மேளதாளம் பலமாக
ஏராளமான பணச் செலவு

கரகம் காவடி ஆட்டத்துடன்
கவர்ச்சி மிக்க மயிலாட்டம்!
மந்திரி மனது மகிழ்ந்துவிட்டால்
முந்திரிக் கொடியின் பழம்போல
வந்திடும் சுவைதரும் நன்மை என்று
சொன்னான் கதருடைக் கந்தப்பன்.
கஷ்டம் தீரும் என்று எண்ணி
கடனும் பட்டுப் பணம் திரட்டிக்
'கனம்' மந்திரிக்கு விருந்து வைத்தோம்.
வேண்டுவ தென்ன கூறிடுவீர்
வேற்றான் என எண்ணற்க
ஊருக்குழைக்க நான் வந்தேன்
உள்ள குறைகளைக் கூறுமென்றார்!
பாலும் பழமும்
வேண்டாமய்யா,
பட்டுப் பட்டாடை
அது வேண்டாம்,
பழையகால ஏரி இது
ஆழம் இல்லை, தூர்ந்ததனால்;
ஏரி ஆழமாகிவிட்டால்
ஏழைகள் மனது குளிருமய்யா!
எட்டுக் கல்லில் ஊரிருக்கு
எதற்கும் அங்கு போய்வருவோம்
பாதை சரியாய் அமையவில்லை,
பள்ளம் மேடு பயங்கரம்;
பாதை போட்டுக் கொடுத்துவிட்டால்
பாதம் போற்றிக் கிடப்போமய்யா!
பள்ளி ஒன்று இருக்குது
மரத்தடியில் நடக்குது
கட்டிடம் இல்லாக் காரணத்தால்
பிள்ளைகளுக்குப் பெருந்தொல்லை!
ஓலைக்கொத்தோ, ஓடோ, எதுவோ,

கட்டிடமென்று இருந்துவிட்டால்
பிள்ளைகள் படிக்கும்; புண்ணியமுண்டு!
விளைச்சல் இங்கு அதிகம் இல்லை.
மண்ணின் சத்து மிகக் குறைவு.
உரம் போட்டால் உயர்வு வரும்
உரமோ கேட்டால் கிடைப்பதில்லை.
ஒன்றுக்குப் பத்து விலை கொடுத்தால்
கிடைக்குது கள்ளச் சந்தையிலே.
அவ்வளவு பணம் அதற்கழுதால்
கட்டி வருமா, எங்களுக்கு.
கருணைவைத்துக் கஷ்டம் போக்கி
ஏரும் எருதும் உரமதுவும்
மலிவு விலைக்குக் கொடுத்திட்டால்
மன்னா! உம்மை வாழ்த்திடுவோம்!
நோய்நொடி வந்தால் மருந்து தர
வைத்தியசாலை இங்கு இல்லை.
வடக்கே எட்டுக்கல் போனால்
வைத்தியர் உண்டு; மருந்தில்லை!
இந்தக் குறையும் தீர்த்துவைத்தால்
ஏழை பிழைப்போம் சாகாமல்.
ஊரின் கோடி புறம்போக்கு
உழுதால் நல்ல பலன் கிடைக்கும்
உழுபவனுக்குக் கொடுத்திட்டால்
ஊருக்கு உணவு கிடைத்துவிடும்
ஏழைக்குப் பிழைப்பும் இருந்துவிடும்.
விதைக்கு நல்ல நெல் இருக்கு
வேணுமட்டும் பெறலா மென்றார்.
நாலைந்து நடை நாங்கள் சென்றோம்
நாளை, நாளை, என்று சொல்லிவந்தார்.
கூடை தூக்கி நடந்திருந்தோம்.
பிறகு ஒருநாள் கொடுத்தார்கள்.
செம்பாளை நெல்லு பத்துப்படி.

கேட்டது சம்பா நெல்லய்யா
கிடைத்தது செம்பாளே, என்ன செய்வோம்.
கடன்பட்டுக் கெட்டுப் போகாதீர்
காங்கிரஸ் சர்க்கார் உதவி செய்யும்
வட்டி அதிகம் வாங்காது, வா, வா என்ருர்.
சென்று கேட்டோம்;
நடந்தது நாற்பது நாளிருக்கும்,
ஆயிரம் கேள்விகள் கேட்டுவிட்டு,
அப்பன் கையெழுத் தெங்கே என்ருர்
அவர் செத்து வருஷம் அஞ்சாச்சி.
அவருடை மகன்தான் நீ என்ருல்
ஆதாரம் கொண்டுவா, என்ருல்
ஆத்திரம் வராதா, எஜமானே!
அவமானம் ஆகாது, தடுத்திடுங்கள்.
நல்லவர் நம்மவர் மந்திரியார்
உள்ள குறையெலாம் கூறிடுக
கோபம் வராது! குணமுள்ளவர்!
எனக் கூறினுன் கந்தப்பன்; அதனுலே
கொட்டினர் குறைகளை மந்திரிமுன்.
மந்திரி, இவைகளைக் கூறச்சொல்லி
அந்த மக்களுக்கு வேலை கொடுத்துவிட்டு,
கந்தனை அருகே தான் அழைத்து
மிகக்கவனமாய்க் கேட்டது
என்னவென்ருல்,
எத்தனை ஓட்டுகள் இங்கிருக்கு?
எல்லப்பன் சொன்னுல் போடுவரா?
என்ன ஜாதி இந்த அதிகம்?
எவர் பேச்சுக்கு மதிப்புண்டு?
சொன்னுல் சொன்னபடி நடப்பவரா?
இல்லை, மிரட்டினுல் மட்டுமே படிவரா?
எப்படி இவர் குணம் சொல்லப்பா?
எல்லாம் எனக்குத் தெரியவேண்டும்!

இப்படி மந்திரி கேட்டிட்டார்
இதமாய்க் கண்ணன் பதிலளித்தான்.

உற்ற குறைகளைக் கூறிவிட்டீர்,
ஊராள்வதிலே உள்ள
குறை, மெத்த உண்டு
அதை அறிந்திடுவீர்!
எல்லாம் செய்து முடித்திடலாம்
எம்மால் ஆகும், பயப்படாதீர்
காலம் அதற்கு வரவேண்டும்
கஷ்டம் பொறுத்திடப் பொறுமை வேண்டும்
வயிற்றை இறுக்கிக் கட்டுங்கள்
வாய்தா பணத்தைச் செலுத்துங்கள்.
குறைசொல்லிக் குமுறிக் கிடக்கவேண்டாம்
குழந்தைகள் அதிகம் பெறவேண்டாம்.
ஓட்டுகள் அத்தனையும் சேர்த்து
போட்டிடுவீர் காளை மாட்டுக்கு!
காளை மாட்டுக்கு ஓட்டளித்தால்
பாலும் தேனும் ஓடிவரும்!
வந்தேமாதரம்! போய்வருவேன்!
வந்துபோனதை மறவாதீர்!

கந்தன் கைதட்டிக் காட்டிடவே
மக்களும் அதுபோல் செய்திட்டார்.
காரில் ஏறி அவர் சென்ருர்
கந்தன் அவர்பின் னேடுசென்ருன்;
கட்டிய தோரணம் ஆடிற்று
கூடிய மக்கள் வீடுசென்ருர்!

ஏரெடுத்துச் சென்ற சின்னனை
எப்படி மந்திரி பேச்சு என்று,
பொன்னன் கேட்டான், சிரிக்காமல்!
மந்திரி பேச்சுப் புரியவில்லை.

மக்களுக்கு அவர் வாக்கு அளிக்கவில்லை.
குறைகளைச் சொன்னோம்
கேட்டுக்கொண்டார்,
போக்கும் நாளைக் கூறவில்லை—என்றான்.

போடா! நீ, போக்கிரி
பொய் பேசுகின்றாய்,
போகுமுன்னம் மந்திரியார்
சொன்னார், கேட்டாய்!
பாலும் தேனும் ஓடிவரு
மென்றாரே, மறந்தா போனாய்?
என்று கேட்டான் பொன்னன்.
கேட்டேன்; மறக்கவில்லை
சிரிப்பு வந்தது, அடக்கிக்கொண்டேன்;
பால் பெருகும் என்றார், உண்மை!
அதற்கு, காளையையா காட்டுவது
செ! சே! என்றான் சின்னான்.

இருவரும் சிரித்தபடி சென்றனர்!

எதிர்ப்புறம் வந்தான் கழகத்தோழன்.

"உதயசூரியன்"
சின்னத்துடன்

★

தம்பி இதுதான் நாட்டு நிலை! நாட்டு நிலையை மாற்றி அமைத்திட நம்மால் மட்டுமே ஆகும் என்று நம்பிக்கை கொண்டு, நம்மைத் தமது உற்ற நண்பர்களாக, உயிர்த் தோழர்களாக, உண்மைத் தொண்டர்களாக கருதிக் கை கொடுக்கத் தயாராகக், காடுகரம்பு உழுபவர்கள், கஷ்டப் பட்டுப் பிழைப்பவர்கள், கள்ளங்கபடமற்றவர்கள், காத்திருந்து காங்கிரசாட்சியால் பலன் காணாதவர்கள், மிக ஏராளமாக இருக்கிறார்கள்.

அவர்களை அணி திரட்டி ஓட்டுச்சாவடி கொண்டு வந்து சேர்க்கும் காரியத்தை நேர்த்தியான முறையில் செய்திட வேண்டிய பொறுப்பு, தம்பி! உன்னுடையது. மலர்க்குவியல் இருக்கிறது—மணமும் வண்ணமும் மிகுதியாக எடுத்திட வேண்டும். மாலையாகத் தொடுத்திடவேண்டும்.

வாகை சூடியவர் வழிவழி வந்தவர்க்கு, இது இயலாத காரியமா!

மலர்க்குவியல் இருக்கிறது—ஆனால், தானாக மாலையாகி விடாது. மக்களின் நல்லெண்ணம், ஆதரவு, நம் பக்கம் இருக்கிறது. ஆனால் அதனை முறைப்படுத்தி, ஓட்டுச்சாவடியில் அதன் உருவம் தெரியத்தக்க வகை காணவேண்டும். தம்பி! உன்னால் முடியும்! உன்னால் மட்டுமே முடியும்! முயன்றால் முடியும்!

அண்ணன்,



26-11-61

கடிதம் : 149

தீமைகளை ஒழித்துக்கட்ட உதயசூரியன்

தேர்தலுக்கு முன் காங்கிரஸின் பலம்—

தமிழகத்தில் குறைபாடுகள்—

சட்டமன்றத்தின் காங்கிரஸார்—

தம்பி!

தேர்தல் மூன்று மாதங்களுக்குப் பிறகு, என்று எண்ணிக் கொள்ளாதே; இதோ இல்லத்தில் இன்னொரிடத்தில் ஏழெட்டுத் தோழர்கள், அடிகள் வீட்டில் பத்துப்பேர், திராவிடநாடு நிலையத்தில் பதின்மர், இதுபோல், நூற்றுக்கணக்கான தோழர்கள், காஞ்சிபுரம் நகரில் வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்க, வந்து குழுமியுள்ளனர்.

ஊரெங்கும் தோரணங்கள், கொடிகள், வளைவுகள்! ஒரே நாளில் காஞ்சிபுரம் நகர் முழுவதும் உலாவர ஏற்பாடாகி விட்டது.

மெத்தச் சரி அண்ணா? இப்படித்தான், சுறுசுறுப்பாக, முன்கூட்டிக் காரியமாற்றவேண்டும். காஞ்சிபுரம் வழிகாட்டு

கிறது. கழகம் விறுவிறுப்புடன் பணியாற்றுகிறது—என்று மகிழ்ச்சி பொங்கப் பொங்கக் கூற எண்ணுகிறாய். ஆனால், தம்பி! நமது தோழர்கள் 1-12-61 காலை, தி. மு. கழகத்துக்கு ஆதரவு தேடக் காஞ்சிபுரம் நகரில் உலாவர ஏற்பாடு ஆகிவிட்டது கண்டு, களிப்பு அதிகம் கொண்டிடாதே—காங்கிரஸ் அபேட்சகருக்கு 'ஓட்டு' கேட்க, உள்துறை அமைச்சர் பக்தவத்சலனார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அளகேசனாருடன், 28-11-61 அன்றே, தெருத்தெருவாக உலா வந்தாகிவிட்டது. அதுமட்டுமல்ல, 30-11-61 அன்றே, காங்கிரஸ் அபேட்சகர், தம் குழுவினருடன், வீடு வீடாக ஓட்டுக் கேட்க ஆரம்பித்து விட்டார். எனவே 1-12-61-ல், நமது கழகத்தவர், உலாவருதல் கண்டு,' நாம்தான் தேர்தல் வேலையை மும்முரமாகத் துவக்கி விட்டோம்' என்று எண்ணிக்கொள்ளாதே. பொதுவாக, காஞ்சிபுரம் தேர்தல், 'பரபரப்பூட்டும்' கட்டத்தை இப்போதே பெற்றுவிட்டது.

தோழர்களும், தொண்டர்களும் நமக்காக!

அழைப்பாளர்களும், பிழைப்பாளர்களும் காங்கிரசிடம்!

கொடிகள் கட்டுவதும், தோரணங்கள் அமைப்பதும், எந்தக் கட்சியினருக்கும் இயல்பாக ஏற்பட்டுவிடும் அலுவல்.

ஆனால், இதோ செல்கிறார்கள் நமது தோழர்கள்—இரவு மணி ஒன்றாகிவிட்டது—உற்சாகத்துடன், கொடிகளுடன், ஏறுநடை போடுகிறார்கள்! எவரும் எமக்கு நிகர் இல்லை என்று அவர்களின் கண்கள் எக்காளமிடக் காண்கிறேன். காரணம்? கேட்டால், இடி இடியெனச் சிரிப்பார்கள்! வெற்றி வீரர்களல்லவா அவர்கள்!! கோட்டை பறிபோய்விடும், கொலு மண்டபம் பிறர்கை சென்றுவிடும், மாநகராட்சியிலே மாற்றார் முடிசூட்டிக்கொள்வர், என்றெல்லாம் கிலிகொள்ளத் தக்க பேச்சுகள் கிளம்பி, நமது தோழர்களின் மனதைக் குடைந்த நிலை அறிவாயல்லவா? நீ மட்டுமென்ன, ஆவலெனும் புரவிமீதுதானே அமர்ந்திருந்தாய். வெற்றி நமக்கு! மேயர், நம் கழகத்தவர்! துணைமேயரும், நம்மவர்!—என்ற நிலை ஏற்பட்டுவிட்டதல்லவா? சொல்லவா வேண்டும், நம் தோழர்களின் உற்சாகத்தின் அளவை! நான்தான் மேயர்! நானுந்தான்! நான்மட்டும் என்னவாம்! —என்று கேட்பவர்கள்போல, ஒவ்வொருவர் முகத்திலும் ஒரு புதுப் பொலிவு; நடையிலே ஒரு கெம்பீரம்; பேச்சிலே ஒரு வீரக்களை தெரிகிறது.

ஒவ்வொரு நாளும் இங்கு கூட்டங்கள் நடக்கின்றன,

பெரியார் இரண்டாவது முறையாக வந்துபோனுர், மீண்டும் வருவதாகக் கூறிவிட்டு! ஆமாம்; என்னை மறப்பாரா? எவ்வளவு வேலைகள் இருப்பினும், தள்ளாமை மேலிடினும், என்மீது வைத்த கண்ணை வேறுபக்கம் திருப்புவாரா!! இதனை நன்கு அறிந்த காங்கிரஸ்காரர்கள், பெரியாரை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கசக்கிப் பிழியவேண்டுமோ, அவ்வளவும் செய்துவிடுவது என்று திட்டமிட்டு, வேலை செய்கிறுர்கள்.

வேறு எவரும் ஏசக்கூசும் அளவிலும், முறையிலும், பெரியார் என்னை ஏசுகிறுரர்ம்! கூறுகிறுர்கள்! மெத்த வருத்தப் படுகிறேன்!! என்னைத் திட்டுகிறுரே, அதனுல் எனக்கு ஆதரவு கெட்டுவிடுமே என்ற அச்சத்தினுல் அல்ல.

கைலையம்பதியானையும், கணபதியையும், வள்ளி மணுளனை யும், பவளவண்ணனையும், வால்மீகியுடன் வாதவூராரையும், தவசிகளையும், ரிஷி சிரேஷ்டர்களையும், காந்தியாரையும், நேரு குடும்பத்தாரையும், பாபு ராஜேந்திரரையும், கண்டித்துப் பேசும் நிலையிலிருந்துவந்த பெரியார், என்னை ஏசிப்பேசும் நிலைக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டாரே; அவர் மூலம், புராணப் புரட்டு, புரோகிதப் புரட்டு, இதிகாசப் புரட்டு, காங்கிரஸ் புரட்டு என்பனவற்றுக்கெல்லாம் எதிர்ப்புரை, மறுப்புரை கேட்டு, மக்கள் தெளிவு பெறும் நிலை எங்கே! இன்று, என்னைப் பற்றி ஏசிப்பேசும் நிலைக்கு அவர் வந்து சேர்ந்துவிட்டாரே! அதை எண்ணி நான் துக்கப்படுகிறேன்.

காந்தியாரின் தத்துவங்களை, தாகூரின் வேதாந்தத்தை, நேருவின் அரசியலை, அலசிக்காட்டி, அவைகளிலே உள்ள அழுக்குகளை, அபத்தங்களை எடுத்து விளக்கிக்கொண்டு வந்தவர், பாவம், இன்று, என்னைப் பற்றி அல்லவா, அலச, ஆராய, வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவருடைய பொதுத்தொண்டின் அளவு, தரம், இவைகளைக் கவனிக்கும் போது, அவர் இப்போது, எதை எதைப் பேசவேண்டியவர்! உலக நாடுகள் மன்றம் பற்றி! ஊராள்வோர் கூறும் தத்துவம் பற்றி! அறியாமை இருளை அகற்றும் வழிவகை பற்றி! திட்டம்பற்றி! இவைகளைப் பேசவேண்டியவர், இன்று என்னைப் பற்றி, என் பேச்சு எழுத்து, சொத்து, சுகம், சூது, சூழ்ச்சி, இவைபற்றி அல்லவா 'ஆராய்ச்சி நடத்துகிறுர்! நான்தானு கடைசியில் அவருக்கு அகப்பட்டேன் என்று கேட்கவில்லை, தம்பி! கடைசி யில் அவர் என்நிலை அளவுக்கா தமது நிலையைத் தாழ்த்திக் கொள்ளவேண்டும்! யாரோ மூட்டிவிட்ட போதனை, பரிதாபம்

அவரை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. ஏசுகிறுர். ஏதேதோ புதிய போதனைகளை உலகுக்கு அளிப்பார் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்! ஏசுகிறுர்—என் னென்னவிதமாக எட்டாந்தரக் காங்கிரஸ் பேச்சாளர்கள் பேசுவார்களோ அம்முறையில். இவருக்கா இந்த வேலை! இந்த வேலையையா இவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்! எனக்கு மக்கள் தரும் ஆதரவுதனை அழித்திட, இவர் தேவைப்படுகிறுராமே!! காமராஜரும் சுப்ரமணியமும் போதவில்லை; காட்டுக் கூச்சலிடும் பேச்சாளர் படை போதவில்லை; கத்திக்குத்துக் காரர்கள் போதவில்லை; விபூதிகள், வெடிகுண்டுகள் போதவில்லை; காவி க்மண்டலங்கள் போதவில்லை; பெரியாரே தேவைப்படுகிறுர்! ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, அவர் ஈட்டி வைத்துள்ள வலிவு—செல்வாக்கு—திறமை—இவை தேவைப்படுகிறது, என்னைச் சமாளிக்க!! தம்பி! பார்த்தாயா, இந்த வேடிக்கையான நிலைமை! வேடிக்கையாக இருக்கிறதே தவிர, இதுதானே உண்மை நிலையாக இருக்கிறது.

வானவெளி பறந்த காகரின், காற்றுடிவிடுவது என்றுல் எப்படி இருக்கும்!! அப்படி அல்லவா இருக்கிறது, மனிதகுலம் மடைமையிலிருந்து விடுபட வழி என்ன என்ற மகத்தான பணியில் ஈடுபட்டிருந்த பெரியார், அண்ணுத்துரைக்கு 'ஓட்டு' கிடைக்காதிருக்க என்னென்ன வழிகள் என்று பேச வருவது!!

உள்ளபடி எனக்குள்ள வருத்தம்—இதை எண்ணித்தான்.

நமது படை வீரர்களிலே ஒரு 'கத்துக்குட்டி'யை ஏவி விட்டாலே போதும், இந்த அண்ணுத்துரையை அக்குவேறு ஆணிவேருகப் பிய்த்துவிடுவான் என்று கூறவேண்டிய, வயதும் அனுபவமும், ஆற்றலும் படைத்தவர், அகில இந்திய காங்கிரசு ஆதிக்க ஒழிப்புக்கே,

ஒரு ஜின்னு

ஒரு அம்பேத்கார்

ஒரு பெரியார்

என்றும் பலரும் வியந்து பாராட்டத்தக்க நிலைபெற்றிருந்தவர் அல்லவா பெரியார்!!

தங்கப் பேழையிலே தவிடு கொட்டிவைப்பதுபோல, உடைவாளை உருவி உருளைக்கிழங்கு நறுக்குவதுபோல, செங்கோலைக் கொண்டு 'சீடை'யை உடைப்பதுபோல,

பெரியார், ஆண்டு பலவாகத் தேக்கிவைத்திருக்கும் ஆற்றலை, என் செல்வாக்கை அழிக்கப் பயன்படுத்துவது வேடிக்கை மட்டுமல்ல, வேதனை தருவதுமாகும்.

எனக்குத் தம்பி! காங்கிரசார்மீது கோபம் எழக் காரணம் பல உண்டு; ஆனால், மிகக் கடுமையான கோபம் எழக்காரணம், அப்படிப்பட்ட பெரியாரை, இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட வைத்துவிட்டார்களே என்பதுதான்.

யானையை மார்மீது நிற்கவைத்துத், தன் உடல் வலிவு காட்டிய ஒரு ஆணழகன், சில ஆண்டுகளுக்குப் பிறகு, என் மார்புமீது ஒரு மலர்க்கூடையை வைத்து என் வலிவு, திறமை, இதனைக் காட்டுவேன், வந்து பாருங்கள், வாழ்த்துக் கூறுங்கள் என்று—அறிவித்தால், கேட்பவர்களுக்கு எப்படி இருக்கும்! அப்படி அல்லவா இருக்கிறது!! ஏசுவின் வாசகத்திலே இன்ன குறை இருக்கிறது, புத்தர் பொன்மொழியில் இத்தனை மாத்துக் கம்மி, காந்திய தத்துவத்தில் இவ்வளவு கசடு இருக்கிறது, வள்ளுவர் மொழியிலே இவ்வளவு கவைக்குதவாதன உள்ளன என்ற, இத்தனை பெரிய தத்துவமேதையாகத் திகழ்ந்தவர், வாருங்கள்! வாருங்கள்! வந்து கேளுங்கள், நான் அண்ணாத் துரையை ஏசப்போகிறேன்!—என்று ஊராரை அழைப்பது!!

கூண்டிலிருந்த கிளி பறந்துபோய்விட்டால், கூண்டினைக் காலியாகவேனும் வைத்திருக்கலாமே தவிர, ஏதாவது இருக் கட்டும் என்று ஒரு கோட்டானைப் பிடித்தா அந்தக் கூண்டுக் குள்ளே அடைத்துவைப்பார்கள்!!

விரலிலிருந்த வைரமோதிரம் பறிபோய்விட்டால், வெறும் விரலாகவே இருக்கட்டும் என்று விட்டுவைப்பார்களா, ஓட்டாஞ் சல்லியில் துளைபோட்டு, விரலில் மாட்டிக் கொள் வார்களா!!

தோட்டத்து மல்லிகை பூத்திடவில்லை என்பதற்காக, எருக்கம்பூவைப் பறித்தா, மல்லிகைக் கொடியிலே ஒட்ட வைப்பார்கள்!!

தாம் செய்துகொண்டுவந்த பெருந்தொண்டு, தொடர்ந்து நடத்தப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை அமையவில்லை என்பதற் காகப், பெரியார், என்னை ஏசும் காரியத்திலா தம்மை ஈடுபடுத்திக்கொள்வது! எத்துணை வேதனை நிரம்பிய நிலை!!

தம்பி! பெரியாரைவிட்டு என்னைத் தாக்கச் செய்வதிலே காங்கிரசாருக்கு இரட்டை இலாபம்—ஒன்று, நான் தாக்கப்

படுகிறேன்—மற்றொன்று, பெரியாரின் நிலையைத் தாழ்த்தி விடுகிறார்கள்!!

ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர்நாள், இந்த எண்ணம் அவர் மனதை உறுத்தும்; எவரும் காணாதபோது இரண்டோர் சொட்டுக் கண்ணீர் கசியும்; எப்படிப்பட்ட உயர்ந்தநிலையில் இருந்து, உலகத்தலைவர்கள் வரிசையில் இடம்பெற்றவர் என்ற நிலையில் இருந்து வந்தோம்; இன்று, ஒரு அண்ணாத்துரையை ஏசுவதைப், பேச்சின் பொருள் ஆக்கிக்கொள்ளும் நிலையை நாமாகத் தேடிக்கொண்டோமே, என்று எண்ணுவார். எப்படித் தம்பி! அந்த எண்ணம் எழாமலிருக்க முடியும்?

காங்கிரசார், இந்த முறையைக் கையாள்வதுடன், தமக்கு வெற்றிகிடைத்துவிடும் என்று நம்பிக்கொண்டு இல்லை. தேர்தலில் வெற்றிபெற, வேறு 'தளவாடங்களை'த் தேடிப் பெற்று, மலைபோலக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள்—என்னை வீழ்த்த. பெரியாரின் பேருரையை மட்டும் நம்பிக்கொண்டு இல்லை. இதுவும் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது.

பெரியாரின் பேராற்றலால், தி. மு. கழகத்தை அழித்து விடமுடியும் என்று, காங்கிரஸ் திடமாக நம்பினால், வேறுவேறு வலிவுகளைத் தேடமாட்டார்கள். தி. மு. கழகத்தை அழிக்க, பெரியாரின் பேராற்றல் பயன்படாது என்று உள்ளூர அவர்கள் உணருவதால்தான்,

வாண்டையார்
வடபாதிமங்கலத்தார்
நெடும்பலத்தார்
கருப்பம்பலத்தார்
பாண்டேசுரத்தார்
ஓரக்காட்டுப் பேட்டையார்
மணலியார்
வலிவலத்தார்
உக்கடையார்
உத்தமபாளையத்தார்
செட்டிநாட்டார்
சேதுபதியார்

மூப்பனர்

பழையகோட்டையார்

பேட்டையார்

போன்ற, செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பத்தார்களைத் தமது முகாமுக்குள் கொண்டுவந்ததுடன்,

ஆலை அரசர்கள்

பஸ் முதலாளிகள்

கள்ளமார்க்கட்காரர்

கொள்ளை இலாபமடிப்போர்

ஆகியோரையும் சேர்த்துக்கொண்டு, பணபாணம் தயாரிக்கிறார்கள். பெரியாரின் பேச்சு போதாது. தி மு. கழகத்தை அழிக்க என்று எண்ணுகிறார்கள்.

நிலை குலைந்தாலும், தி. மு. கழகத்தை அழிக்கும் அளவுக்காகிலும் பெரியாரின் பேராற்றல் இருக்கிறது என்று திருப்தி பெறக்கூடக் காங்கிரஸ்காரர்கள் இடங்கொடுக்கவில்லையே தம்பி! நான் என்ன செய்ய!!

பெரியாரின் பேராற்றலைத் துணைகொண்டால், தேர்தலில் பெரிய வெற்றி பெற்றிடலாம் என்ற நம்பிக்கை, காங்கிரசுக்கு இல்லை. அதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. என் மனதிலே பட்டதைச் சொல்கிறேன்.

பெரியாரின் பேராற்றல் தேர்தல் வெற்றியை, எப்போதுமே, எந்தக்கட்சிக்கும் தேடிக்கொடுத்தது இல்லை!!

ஆமாம், தம்பி! தோற்கும் கட்சிக்குத், தேர்தல் பிரச்சார வேலை செய்து செய்துதான், பெரியாருக்குப் பழக்கம்.

நாடாண்ட ஜஸ்டிஸ் கட்சி, பெரியாரின் பேராற்றலைத் துணைகொண்டது. காங்கிரசின் பிரசார பலத்தை முறியடிக்கப் பெரியாரைத்தான் ஜஸ்டிஸ் கட்சி மலைபோல நம்பிக்கொண்டிருந்தது. ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களான சர். ஏ. இராமசாமி முதலியார், பேசுவார்—பேருரைதான்—விவரம் விளக்கம் இருக்கும்—காரணம், கட்டுக்கோப்பு இருக்கும்—ஆனாலும், காங்கிரசாருக்குச் சூடுகொடுக்க, காரசாரமாகப் பேச, 'ரோய ரோய'ப் பேச, பெரியார்தான் அழைக்கப்படுவார்! சர். ஏ.

இராமசாமி, பேச்சில் பூங்காற்று வீசும்! பூரிப்பு எழும்! பெரியார் பேச்சு, புயலைக் கிளப்பும், மரங்கள் விழும்! சர். ஏ. இராமசாமி இலையைக் காட்டி மரத்தின் தன்மையை விளக்குவார்! பெரியார். மரத்தையே பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து கீழே போடுவார்! சர். இராமசாமியின் பேச்சைக் கேட்பவர்கள் கனிவு காட்டுவர். கடுங்கோபம் எழும் காங்கிரசின் மீது, பெரியார் பேசக் கேட்டால்! சம்மட்டி அடி கொடுப்பார், பெரியார்!

எல்லாம் சரி! ஆனால் பலன்? பெரியாரின் பேராற்றலைத் துணையாகப் பெற்ற ஜஸ்டிஸ் கட்சி, தேர்தலில் வெற்றிபெறவில்லை—அடியற்ற நெடும்பனையென வீழ்ந்தது. எங்கும் தோல்வி! எல்லோரும் தோற்றனர்! பெரியாரின் 'ஜாதகம்' அப்படி! அவருடைய பேச்சுக்குக் கிடைக்கும் பலன் அவ்விதம்!

அன்று பெரியாரின் பேராற்றலைத் துணைகொண்ட ஜஸ்டிஸ் கட்சி, அதற்கு முன்பு பெற்றிருந்த இடத்தை இழந்து, தோற்று ஒழிந்தது; இன்று பெரியாரின் பேராற்றலின் துணை காங்கிரசுக்குக் கிடைக்கிறது!!

ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டபோது, பெரியார், வருத்தப்பட்டாரா? எவ்வளவோ பெரியவர்கள், நல்லவர்களாயிற்றே, தோற்றுவிட்டார்களே, என்று துயரப்பட்டாரா? அதுதான் இல்லை!

தொலையட்டும் சனியன்கள்! தெரியும் எனக்கு அப்போதே! மடப்பசங்க ஒழியட்டும்! நாமம் விபூதி போட்டுக்கிட்டு ஊரை ஏய்த்தா, நடக்குமா! தோற்றான்கள். சுயமரியாதையத்த ஆசாமிகள்!

என்றுதான், நண்பர்களுடன் பேசினார்; மகிழ்ச்சியுடன்.

அதேதான், காங்கிரசு தோற்கும்போதும்.

தெரியும் எனக்கு அப்போதே!

கதர். கதர்னு கத்தினபோதே தெரியும்!

திட்டம் திட்டம்னு உளறினபோதே தெரியும்!

என்று சொல்லிவிட்டுப், பெரியார் சந்தோஷம் கொண்டாடுவார்! அது அவருடைய சுபாவம், அவருக்குத்

தேர்தலில் நம்பிக்கை கிடையாது!

மக்களுக்கு ஓட்டு வந்ததிலே, மகிழ்ச்சி கிடையாது!

'மாட்டுச் சாணியையும் மூத்திரத்தையும் கலக்கிக் குடிக்கிறவனிடம் 'ஓட்டு' கொடுத்தால், நாடு உருப்படுமா, என்ன? குட்டிச்சுவராத்தான் போகும்'

என்ற எண்ணம் கொண்டவர், அப்படிப்பட்டவரின் 'பிரசார பலத்தை'க்கொண்டு, காங்கிரஸ் எப்படித் தேர்தல் வெற்றி தேடிக்கொள்ள முடியும்?

என்னைத் திட்டிப் பேசுகிறாரே, அதுதான் மிச்சம்! வேறு உருப்படியான பலன், பெரியார் மூலமாகக் கிடைக்காது; காங்கிரஸ் மூலவர்கள் அதனையும் நன்கு அறிந்துகொண்டிருப்பதால்தான், வேறுவேறு 'கருவிகளை'க் கூராக்கியபடி இருக்கிறார்கள்.

ஆனால், பெரியாரைக்கொண்டு என்னை ஏசிப்பேசத்தான் வைக்கமுடிகிறதே தவிரக், காங்கிரஸ் ஆட்சியினால் விளைந்துள்ள கேடுகளை, கேடுகள் அல்ல என்று பேச வைக்க முடிகிறதா? முடியவில்லை!

பக்ராநங்கலைப் பாராட்டுங்கள்,

பாரத ஒற்றுமை பற்றிப் பேசுங்கள்,

நேருவின் பெருமையைக் காட்டுங்கள்.

என்றெல்லாம் பெரியாரிடம் சொன்னால், ஒத்துக்கொள்கிறாரா? அதுவும் இல்லை! அண்ணாத்துரையைத் திட்டவா? காமராஜரைப் புகழவா? இந்த இரண்டும் தெரியும்; பிடிக்கும்; பழக்கம்? சிந்திரி, சித்தரஞ்ஜன், பிம்ப்ரி, பிலாய், இவைபற்றி எல்லாம் பேசச்சொன்னால், மனம் இடம் கொடுக்குமா பெரியாருக்கு!! ஒருக்காலும் இல்லை!!

தம்பி, இன்று, பண்டித நேரு ஐரோப்பிய பொதுச்சந்தையிலே மாக்மில்லன் பிரிட்டனைச் சேர்த்தது சரியா தவறா என்பதிலே இருந்து, நீர்வளிக் குண்டுகளை ரஷியாவும் அமெரிக்காவும் மாறிமாறி வெடித்தபடி இருப்பதைக் கண்டிப்பது வரையில், காஸ்ட்டிரோவின் ஆட்சி முறையிலிருந்து காங்கோ பிரச்னை வரையில் பேசுகிறார். அவர் நிலைமை

அவ்வளவு நேர்த்தியானதாக ஆகிவிட்டுப், பாருக்கே பஞ்சசீலம் போதிக்கும் நிலையைத் தேடிக்கொண்டார்.

குருஷேவும் தெகாலும், மாக்மிலனும் அடினரும், கென்னடியும் நடந்துகொள்ளும் முறை சரியா என்பது பற்றிக் கருத்துரை வழங்குகிறார் நேரு! இவர், நான் சட்டசபைக்குப் போனது எதற்காக? என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். எனக்கே வேதனையாக இருக்கிறது. அமெரிக்கா சென்றிருந்த நேரு பண்டிதர், உலகப் பொதுப் பிரச்சினைகள் பற்றிக் கென்னடியுடன் பேசாமல், உருளைக்கிழங்கு 'பொடிமாஸ்' செய்வது எப்படி? என்பதுபற்றிப் பேசிவிட்டு வந்தால், உலகு அவரைப்பற்றி என்ன நினைக்கும், கூறும்? பெரியார் என்னைத் திட்டும்போது, அதுபோலத்தான் கேட்பவர்களுக்குத் தோன்றும்.

ஆண்டுபல ஆகிவிட்டாலும், எனக்கேகூட, நேருபண்டிதர் குருஷேவுடனும், டிட்டோவுடனும், மாக்மில்லனுடனும், நாசருடனும் பேசுகிறார் என்று கூறும் நிலைபெற்றிருக்கும் நேரத்தில், பெரியார், மண்டலக் காங்கிரஸ் தலைவர் மாரிமுத்துவிடமும், இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஏகாம்பரத்திடமும் பேசிக்கொண்டிருக்கும் நிலையைக் காணும்போது, வருத்தமாகத்தான் இருக்கிறது. நேருவுக்கு நியூயார்க்கில் வரவேற்பு என்கிறார்கள்—பாரிசில் விருந்து என்கிறார்கள்—பெரியாருக்கோ, சாத்தூரில் சால்வை போர்க்கும் விழா, வேலூரில் எடைக்கு எடை காசு தரும் விழா என்கிறார்கள்—நடத்துபவர்களில் நடுநாயகமாக இருப்பவர், காங்கிரஸ்காரர் என்கிறார்கள்!—கேட்கும்போதே கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் என்ன செய்யட்டும் தம்பி! யானைமீது அம்பாரி அமைத்து ஏறிச்செல்கிற ஒருவர், திடீரென்று கீழே குதித்து, நான் உடும்பு பிடிக்கப்போகிறேன் என்று ஓடினால், எப்படி இருக்கும்! அப்படி இருக்கிறது பெரியாரின் இன்றைய நிலை!!

இந்த நிலைக்குப் பெரியாரைக் கொண்டுவந்தாகி விட்டது. இனி, தி. மு. கழகத்தை ஒழிக்கவேண்டியது ஒன்றுதான் பாக்கி என்ற நினைப்பில், இந்தத் தேர்தலை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுப் பணியாற்றுகிறார்கள் காங்கிரசார்.

ஆசை காட்டினோம் மயங்கவில்லை!

அதட்டிப் பேசினோம் அஞ்சவில்லை!

அவரும் இவரும் மாறினபோதும்
அணுவளவேனும் மாறவில்லை!

எதையும் துருவி ஆராய்ந்து
ஏழைக்கேற்றது எதுவென்று
இடித்துக் கேட்கிறார் எப்போதும்.
அப்பப்பா! பெருந்தொல்லை!
பிளவு ஏற்படும், சிதறிவிடும்
கலகம் மூளும், கருகிவிடும்

எனக் காத்திருந்தும் பயனில்லை.

பட்டிதொட்டிகள் போகின்றார்
பலப்பல உண்மை கூறிடவே!

வரிகள் போட்டிட முடியவில்லை.
வருமே எதிர்ப்பு எனும் பயத்தால்!

வறட்டுப் பயல்கள் என்றிருந்தோம்
இவர் வகையாய்ப் பணிபல புரிகின்றார்!

மக்கள் மனதில் இடம் பெற்று,
மாண்புகள் மிகுந்து திகழ்கின்றார்!

எத்தனை இலட்சம் ஆனாலும்
இவர்களை ஒழித்திட வேண்டுமம்மா!

இல்லை என்றால் நமது கதி என்னாகும்? அது அதோகதி!

நம்மை நம்பி டாட்டாக்கள்
நோட்டு நோட்டாய் தந்துவிட்டார்.

வீட்டு விளக்கு அணையாமுன்
விரும்பும் செயல் செய வழி எது?

நாட்டைக் காத்திடத் துடிதுடிக்கும்
தி. மு. க.வை நசுக்கி விட்டால்

நாடு நமது வேட்டைக்காடு!
நமக்கு ஏது பாரினில் ஈடு!

காங்கிரஸ் கருதுகிறது! இதுபோல!

இதற்காகத் தம்பி! காங்கிரஸ்காரர்கள் கட்டிவிடும் புகார்கள், இட்டுக் கட்டிடும் பேச்சுக்கள், உலவவிடும் வதந்திகள். கொஞ்ச நஞ்சமல்ல.

ஏற்கனவே தோற்றுப்போன இடங்களிலே, காங்கிரசார் செய்துவரும் பிரசாரம்!

தொகுதிகள் சீர்பட வேண்டுமானால், காங்கிரசுக்கு ஓட்டுப் போடவேண்டும்.

காங்கிரஸ் வெற்றிபெற்ற தொகுதிகளிலேதான் வசதிகள் பெருகி உள்ளன.

என்கிற முறையிலே இருக்கிறது. இது மேடைப் பேச்சாக அல்ல, திண்ணைப் பேச்சாக நடக்கிறது.

மக்கள் இதைக் கேட்டு மிரளுவார்கள்—ஐயய்யோ! நமது தொகுதி பாழாகி விடுமாமே—காங்கிரசுக்கு ஓட்டுப் போடாவிட்டால், என்று பீதி அடைவார்கள். அந்தச் சமயமாகப் பார்த்து, ஓட்டுகளைப் பறித்துக் கொள்ளலாம் என்ற நப்பாசை கொள்கிறது, நாடாளும் காங்கிரஸ் கட்சி.

அதிலும், இந்தப் பிரசாரத்தைக் கிராமத்து மக்கள் எளிதாக நம்பிவிடுவார்கள்; நமக்கு எதற்கு அரசியலும் கட்சிகளும்; ஏரி சீர்பட வேண்டும், எரு எருது கிடைக்க வேண்டும், உரம் உப்பு கிடைக்கவேண்டும். வீடுவயல் தழைக்க வேண்டும், பாதை பாலம் இருக்கவேண்டும், இவைகளை நாம் அடையாமலிருப்பது காங்கிரசை ஆதரிக்காததால்தானும், ஏன் நாம், எதிர்க் கட்சிக்கு ஓட்டுப்போட்டு, நமக்கு வரக்கூடியதை இழக்கவேண்டும்; காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கிராமத்தார்கள் நினைப்பார்கள், என்று நம்புகிறது காங்கிரஸ் கட்சி. தம்பி! இந்த எண்ணம் தவறு என்பதைக் கிராமத்து மக்களுக்கு மட்டுமல்ல, நகரத்து மக்களுக்கும், நாம் விளக்கியாக வேண்டும். ஒரு விளக்கம் தருகிறேன். அதனை மேலும் விரிவுபடுத்தி, நாட்டினருக்கு எடுத்துக் கூறும் பொறுப்பு, உன்னுடையது.

"நான் வாழும் பிரதேசம் மலைப்பிரதேசம். அந்த மலைப் பிரதேசம் நாலாயிரம், ஐயாயிரம் அடிக்கு மேல் உள்ளது. அங்கு தேயிலைத் தொழில் சிறந்த தொழிலாக

இருக்கிறது, ...இரண்டு இலட்சத்துப் பதினையாயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொண்ணூற்றை யாயிரம் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. 1951ல் பிளான்டேஷன் ஆக்ட் (தோட்டத் தொழிலாளர்க்கான சட்டம்) வந்திருந்தும், 1955ல் அதற்கான விதிகளை ஏற்படுத்தியிருந்தும், தொழிலாளர்களுக்கு மிகவும் அடிப்படையாகக் கொடுக்க வேண்டிய சலுகைகளைக்கூடப் பிளான்டேஷன் ஆக்டிலிருந்து (தோட்டத் தொழிலாளர்க்கான சட்டத்திலிருந்து) எக்ஸம்ஷன் (விதி விலக்கு) வாங்கிக்கொண்டு, முதலாளிகள் கொடுக்க மறுக்கிறார்கள். உதாரணமாக! சிறுநீர் கழிக்கும் இடம், கான்டின் (உணவு விடுதி), கல்வி முதலியவற்றில் இருக்கக் கூடிய சாதாரண உரிமைகளைக்கூட வழங்குவது இல்லை என்றால், இது சுதந்திரநாட்டில் சொல்லவும் வெட்கக்கேடாக இருக்கிறது.''

திரு. பொன்னையன் இதைக் கூறுகிறார்.

பொன்னும் பொருளும் கொழித்திடும், பாலும் தேனும் பெருகிவரும் என்று வாக்களித்து, மக்களை மயக்கி ஓட்டுப் பெற்று நடத்தும் காங்கிரசாட்சியில்தான், இந்த நிலைமை!

'சொல்லவும் வெட்கக்கேடாக இருக்கிறது' என்று திரு. பொன்னையன் கூறும் நிலைமை.

வெட்கக்கேடு மட்டுமல்ல இது, இதிலே ஒரு வேதனையும் இருக்கிறது.

திரு. பொன்னையன், காங்கிரஸ் எதிரி அல்ல; கழகம் அல்ல. காங்கிரஸ்காரர்.

ஆமாம், ஐயா! ஆமாம்! காங்கிரசாட்சி தொழிலாளர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துவதில்லை என்று கழகத்தோழர்கள் கூறினால், காங்கிரஸ் பேச்சாளர்களுக்கும், காங்கிரஸ் ஆதரவுப் பிரசார குத்தகைதாரர்களுக்கும் கோபம் கோபமாக வருகிறது. மேடையைத் தட்டித் தட்டிப் பேசுகிறார்கள். என்ன தெரியும் இந்த அண்ணாத்துரைக்கு! என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

ஆனால், பாடுபடும் தொழிலாளிக்கு உள்ள கஷ்டம் தீர்க்கப்படவில்லை; காங்கிரசாட்சி இதைக் கவனிக்கவில்லை; சட்டம் இருந்தும், அது சரிவர நிறைவேற்றப்படவில்லை; என்று திரு. பொன்னையன் கூறுகிறார்; அவர் ஒரு காங்கிரஸ்காரர். எம், எல். ஏ.

சொல்லவும் வெட்கக்கேடாக இருக்கிறது என்று, பேசினாரே திரு. பொன்னையன், காங்கிரஸ், எம். எல். ஏ. எங்கே பேசினார் தெரியுமா? சட்டசபையில் எட்டுக் காங்கிரஸ் மந்திரிகள் கொலுவீற்றிருக்கும் சபையில்.

கழகத் தோழர்கள், காங்கிரசாட்சியின் கேடுபாடு பற்றிப் பேசினால், காங்கிரஸ் மந்திரிகளுக்கு எவ்வளவு கோபம் வருகிறது!! என்னென்ன ஏசுகிறார்கள்! மிரட்டுகிறார்கள்! சவால் விடுகிறார்கள்! பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள்.

காங்கிரசாட்சி தொழிலாளர்கள் வாழ்வைச் சீராக்கவில்லை என்று, காங்கிரஸ் எம். எல். ஏ. பொன்னையன் என்பவர் சட்டசபையில் பேசுகிறார்—எட்டு மந்திரிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்—ஒருவராவது எழுந்து மறுத்தார்களா? இல்லை!!

கழகத்தார்மீது பாய்கிற மந்திரிகள், காங்கிரஸ் எம். எல். ஏ சீர்கேடுகளை அம்பலப்படுத்தும்போது, பல்லைக் கடித்துக்கொண்டு இருக்கிறார்கள், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்.

ஆகவே, இதிலிருந்து மூன்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒன்று: காங்கிரசாட்சியிலே தொழிலாளர் நிலை உயர வில்லை; செம்மைப்படவில்லை என்று கழகம் கூறுவது, மறுக்க முடியாத உண்மை.

இரண்டாவது: காங்கிரஸ் எம். எல். ஏ.யே இதைக் கூறுகிறார். சட்டசபையில் மறுத்துப் பேச மந்திரிகளாலும் முடியவில்லை.

மூன்றாவதாக: எதிர்க்கட்சி, அதிலும் குறிப்பாகக் கழகம், எந்தத் தொகுதியில் வெற்றிபெறுகிறதோ, அந்தத் தொகுதிக்கு நன்மை கிடைக்காது என்று பேசுகிறார்களே, அது எவ்வளவு தவறு என்பதும் தெரிகிறதல்லவா?

அண்ணாத்துரை வெற்றி பெற்றதாக இந்தத் தொகுதி இருக்கிறது; காங்கிரசுக்கு மட்டும் ஓட்டுப் போட்டிருந்தால், என்னென்ன நடக்கும் தெரியுமா? எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் தெரியுமா? என்று பேசுகிறார்களே ஓட்டுக் கேட்க

வரும் காங்கிரஸ் பேச்சாளர்கள். அந்தப் பேச்சு பச்சைப் புளுகு என்பது விளங்குகிறதல்லவா?

காங்கிரஸ் வெற்றி பெற்ற தொகுதி பற்றித்தான், திரு. பொன்னையன் பேசுகிறார்.

காங்கிரஸ் எம். எல். ஏ. தன் தொகுதியில் தொழிலாளர் நிலைமை இப்படி இப்படி இருக்கிறது என்று கூறித் தருகிறார். சட்டசபையில், மந்திரிகள் எதிரில், என்றால் காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால், வண்டி வண்டியாக நன்மைகள் வந்துவிடும் என்று பேசுகிறார்களே, இது பச்சைப் புளுகு அல்லவா?

தொழிலாளர்களுக்கு வசதி செய்து தருவதற்காகச் சட்டம் இருக்கிறது.

முதலாளிகள் அந்த வசதிகளைச் செய்துகொடுக்க முடியாது என்று கூறினால், காங்கிரஸ் சர்க்கார் ஏன் ஒத்துக் கொள்கிறது?

தொழிலாளிகளைக் காட்டிக் கொடுக்கலாமா? காட்டிக் கொடுக்கிறதே! திரு. பொன்னையன், சட்டசபையில் பேசியது சட்டசபைக் குறிப்பேட்டில் இருக்கிறது.

காங்கிரஸ் எம். எல். ஏ. யே, காங்கிரசாட்சியில், காங்கிரஸ் சர்க்கார், முதலாளிகள் சார்பாக நின்று, தொழிலாளர்களுக்குச் சலுகை செய்யாமல், அவர்களை வெட்கக்கேடான நிலைமையில் வைத்துக்கொண்டிருப்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறாரே, இதைக் கேட்ட பிறகு, என்ன சொல்லுகிறீர்கள்? யோசித்துப் பாருங்கள்!

வைத்திய வசதி இல்லாமல் இருப்பவர்கள் தொழிலாளர்கள் மட்டும் அலல. பொதுவாகவே, வைத்திய வசதி போதுமான அளவு இல்லை. கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டுகிறோம் என்று கூறுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள். எங்கே போகிறதோ தெரியவில்லை—வைத்திய வசதி கிராமங்களில் இல்லை!

இதை எதிர்க்கட்சிக்காரர் கூறும்போது, காங்கிரஸ்காரர்கள் கடுங்கோபம் கொள்கிறார்கள். உள்ளதைச் சொன்னால், எரிச்சல் ஏற்படுகிறது. வேண்டுமென்றே எதிர்க்கட்சிக்காரர்கள் காங்கிரஸ் ஆட்சி மீதுகுறை கூறுகிறார்கள்;

நாங்கள் எல்லா ஏற்பாடுகளையும் சீராகத்தான் செய்திருக்கிறோம் என்று பேசுகிறார்கள்.

சென்னை சட்டசபையில், காங்கிரஸ் எம். எல். ஏ.க்களே, காங்கிரசாட்சியிலே, வைத்திய வசதி சரியான முறையில் இல்லை என்பதை எடுத்துக்காட்டி, வருத்தத்தையும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்.

> "சாதாரணமாக 500 கைதிகள் உள்ள ஜெயில்களில்கூட இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, 5000, 10,000 ஜனத்தொகை கொண்ட இடங்களில், ஆஸ்பத்திரி இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது."

இப்படிச் சட்டசபையில் பேசியிருக்கிறார். என். ஆர். தியாகராசன் என்ற காங்கிரஸ் எம். எல். ஏ. மந்திரிகள் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்; மறுப்புக் கூறவில்லை.

ஜெயில்களைவிடக் கிராமங்களின் நிலைமை மோசமாக இருக்கிறது!

அதுவும், காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டுக், காங்கிரஸ்காரரை எம். எல். ஏ—யாக அனுப்பிக் கொடுத்த தொகுதியில்!

காங்கிரசுக்கு ஓட்டுப்போடாததால்தான், நமது தொகுதிக் கஷ்டம் நீடிக்கிறது, முன்னேற்றம் கிடைக்கவில்லை, என்று பேசிக், காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால் கஷ்டம் யாவும் தீர்ந்துபோகும் என்று பேசுகிறார்களே சிலர், அந்த வாதம் எவ்வளவு உப்புச்சப்பற்றது என்பது புரிகிறதல்லவா? ஜெயில்களைவிட மோசமான நிலைமையில் உள்ள கிராமங்கள் உள்ள தொகுதி, அண்ணாத்துரை தொகுதி அல்ல, கருணாநிதி தொகுதி அல்ல, கோவிந்தசாமி தொகுதி அல்ல, காங்கிரசை ஆதரித்துத் தீப்பொறி பறக்கப் பேசுவர் என்று கூறப்படும் தேனீ எம். எல். ஏ தியாகராசன் தொகுதியாகும்—காங்கிரஸ் எம். எல். ஏ—யின் தொகுதி.

காங்கிரஸ் தோற்றுப்போன கோபத்தால், சில தொகுதிகளில் நன்மை கிடைக்கவில்லை என்கிறார்களே, தேனித்தொகுதியில் காங்கிரஸ்தானே வெற்றிபெற்றது! ஏன் அங்கு உள்ள கிராமங்களின் நிலைமை ஜெயில்களைவிட மோசமாக இருக்கிறது! கேட்டுப்பாருங்கள்! பதில் கிடைக்காது? கோபம்தான் கிளம்பும் காங்கிரசாருக்கு.

கிராமங்களைக் கவனிக்கச்சொல்லி எந்த எம். எல். ஏ. முறையிட்டாலும், அவர் காங்கிரசுக்கு வெற்றி தேடியவராக இருந்தாலும் சரி, காங்கிரசைத் தோற்கடித்தவராக இருந்தாலும் சரி, அவர் பேச்சைத் துச்சமென்று எண்ணுகிறது இந்தக் காங்கிரஸ் சர்க்கார். காங்கிரசை எதிப்பவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். தேனித் தொகுதி எம். எல் ஏ தியாகராசன், காங்கிரஸ்காரர், அவர் கூறுவது என்ன?

> என்னுடைய தொகுதியான தேனியில், மேஜர் பஞ்சாயத்து போர்டுள்ள இடத்தில், 25,000 மக்கள் இருந்தாலுங்கூடப், பத்து ஆண்டுகளாக முயற்சி செய்தும், அங்கு ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்படவில்லை.

இப்படிச் சட்டசபையில் இடித்துப் பேசுகிறார் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. எட்டு மந்திரிகளும் பிடித்துவைத்த பிள்ளையார் போல் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார்களே ஒழிய, ஒரு வார்த்தை மறுத்துப் பேசவில்லை. முடியவில்லை.

பத்து வருஷம் முயற்சி செய்கிறார் ஒரு கிராம ஆஸ்பத்திரிக்கு, ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. முடியவில்லை.

இந்தக் காங்கிரஸ் எம். எல் ஏ, மதுரை ஜில்லா போர்ட் தலைவராகக்கூட இருந்தவர்.

அப்படிப்பட்டவருக்கே இந்தக் கதி! என்ன தெரிகிறது இதிலிருந்து? காங்கிரஸ் சர்க்கார், யார் முறையிட்டாலும் கவனிப்பதில்லை; கிராமங்களைத் திருத்துவதில்லை, என்பது தான்!

விவரம் அறியாதவர்களை ஏமாற்ற, காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால், எல்லாம் கிடைத்துவிடும் என்று தேர்தல் தரகர்கள் பேசுகிறார்கள். காங்கிரசுக்கு ஓட்டுப்போட்ட தேனித் தொகுதியில் ஜெயிலைவிட மோசமாகக் கிராமநிலை இருக்கிறது; பத்து வருஷமாகக் காங்கிரஸ் எம். எல். ஏ. முயற்சி செய்தும் பலிக்கவில்லை.

உண்மை இப்படி இருக்க, காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டால் ஊர் சீர்படும் என்று சிலர் பேசுவதிலே, பொருள் இருக்கிறதா? யோசித்துப் பாருங்கள்!

இந்தக் குறைகளைப் போக்கத்தான், சமுதாயநல திட்டம் தீட்டியிருக்கிறோம் என்று பளிச்சென்று பதில் சொல்வார்கள்

காங்கிரஸ் பேச்சாளர்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் குறை சொன்னார்கள்; எங்கள் காங்கிரஸ் பேச்சாளர் பளார்! பளார்! என்று கன்னத்தில் அறைவதுபோலப் பதிலளித்தார் என்று; பேசி, மகிழ்ச்சி அடைவார்கள்,

ஆனால், அந்தச் சமுதாயநலத் திட்டத்தின் இலட்சணமாவது சரியாக இருக்கிறதா என்று பார்ப்போம்.

> "கிராமங்களில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாயநலத் திட்டங்கள் இருக்கக்கூடிய இடங்களில் Rural dispenseries (கிராம ஆஸ்பத்திரிகள்) அமைக்க ஏற்பாடு செய்துகொண்டுவருகிறோம். ஏற்பாடு செய்கிறோமே தவிர, நடைமுறையில் அவைகள் சரியானபடி நடக்கவில்லை.''

இப்படிக் கூறுகிறவர், கழகத் தோழர் அல்ல; காங்கிரசைக் குறைகூறுவதே வேலையாகக் கொண்டவர் அல்ல; காங்கிரஸ்காரர் பேச்சு இது; காங்கிரஸ் எம். எல். ஏ. சட்டசபையில் சொன்னது.

> சமுதாயநலத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் கிராம ஆஸ்பத்திரிகள் சரியானபடி நடக்கவில்லை.

என்று கண்டித்துப் பேசினவர், காங்கிரஸ் எம். எல். ஏ. யான முனுசாமிக் கவுண்டர்.

கிராம ஆஸ்பத்திரிகள் சரியானபடி நடக்கவில்லை என்று பொதுப்படையாகப் பேசிவிட்டால் போதுமா? விவரம் தரவேண்டாமா? காரணம் காட்டவேண்டாமா? என்று குறுக்குக் கேள்வி கேட்டுத், தமது காங்கிரஸ் பக்தியைக் காட்டிக்கொள்ளவேண்டுமென்று சிலருக்கு ஆவலாக இருக்கும். காங்கிரஸ் எம். எல். ஏ. முனுசாமிக் கவுண்டர், காரணமும் காட்டிவிட்டார்.

நர்சுகள் கிடையாது.

டாக்டர் கிடையாது.

கம்பவுண்டர்கள் கிடையாது.

எப்படி நிலைமை, கவனித்தீர்களா? காங்கிரஸ் ஆட்சியின் இலட்சணம் தெரிகிறதா? கிராமத்தில் ஆஸ்பத்திரிகள் கட்டுகிறார்கள், ஆனால் அங்கு,

டாக்டர் இல்லை

நர்சு இல்லை

கம்பவுண்டர் இல்லை

வேறு என்ன இருக்கிறது? கட்டிடம்! போர்ட்! விளம்பரம்!

பார்! பார்! ஆஸ்பத்திரி பார்! எத்தனை பெரிய கட்டிடம் பார்! எங்க காங்கிரஸ் கட்டியது பார்! எடு ஓட்டுகளை! கொடு எங்களிடம்! என்று காங்கிரஸ் பேச்சாளர்கள், முழக்கமிட இந்தக் கட்டடங்கள்; நோய் போக்க அல்ல! கிராமத்தாரை வாழவைக்க அல்ல! கிராமத்தாரின் நோய்போக்க ஆஸ்பத்திரி கட்டினால்,

டாக்டர் இல்லை

நர்சு இல்லை

கம்பவுண்டர் இல்லை.

என்ற நிலைமை இருக்கும்!!

நிலைமை இப்படி இருக்கிறது. இதை ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ—யே சட்டசபையில் இடித்துப்பேசுகிறார்—எட்டு மந்திரிகள் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாலையிலே பாருங்களேன், மேடை ஏறியதும், இதே மந்திரிகள், மார்தட்டிப் பேசுவதை.

ஆளத்தெரிந்தவர்கள் நாங்களே!

நாங்கள்தான் ஆளுவோம்!

வேறு எவருக்கும் நாட்டை ஆளும்

யோக்யதை இல்லை.

என்று பேசுகிறார்கள்.

டாக்டர் இல்லாத

நர்சு இல்லாத

கம்பவுண்டர் இல்லாத

ஆஸ்பத்திரிகளைக் கிராமங்களில் கட்டிவிட்டு, இந்தத் தாவு தாவுகிறார்களே, என்னென்பது!

கிராம ஆஸ்பத்திரிக் கட்டிடம் கட்டி முடித்ததும் ஒரு கோலாகலத் திறப்புவிழா நடக்கிறது! முதல் மந்திரி வருகிறார்! முன்னாலே பின்னாலே போலீஸ்! பக்கத்திலே சீமான்! கொடி ஏற்றுகிறார்! வெடி கிளம்புகிறது! மாலை சூட்டுகிறார்கள், வாழ்த்துப் பத்திரம் படிக்கிறார்கள்! மந்திரி கட்டிடத்தைத் திறக்கிறார். போட்டோ எடுக்கிறார்கள்! பாட்டுப்பாடுகிறார்கள்! மந்திரி பேசுகிறார் :

காங்கிரஸ் சர்க்கார்தான் கிராமத்தை முன்னேற்றம் அடையச் செய்யும்.

என்றெல்லாம்,

ஆனால், ஆஸ்பத்திரியின் நிலைமை என்ன?

டாக்டர் இல்லை

நர்சு இல்லை

கம்பவுண்டர் இல்லை

இப்படிச் சொல்பவர் யார்? ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. அவர் இன்னமும் விளக்கமாகக்கூடப் பேசியிருக்கிறார்.

"இன்றைய தினம் ஆஸ்பத்திரியைத் திறந்தார்கள், நாளைய தினம் டாக்டர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள், என்ற நிலைமைதான் இருக்கிறது."

திராவிட முன்னேற்றக் கழகம் இவ்வளவு பலமாக எதிர்த்துக் கொண்டிருக்கும்போதே, காங்கிரசாட்சியின் போக்கு டாக்டரும், நர்சும், கம்பவுண்டரும் இல்லாத ஆஸ்பத்திரி கட்டுகிற நிலையிலே இருக்கிறது என்றால், இந்த எதிர்ப்பே இல்லை என்றால், நிலைமை இன்னும் எவ்வளவு மோசமாகிவிடும், என்பதை எண்ணிப் பாருங்கள். டாக்டர் இல்லை, நர்சு இல்லை, கம்பவுண்டர் இல்லை, என்று ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. முனுசாமிக் கவுண்டர் சொன்னார்—மருந்து விஷயம் எப்படி? அதையும் கேளுங்கள்.

"நம் மாநிலத்தில் 80 சதவிகித மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். ஆனால், இப்போது, நகரங்களில்தான் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே, வைத்திய சுகாதாரத்திற்குக் .கிராமங்களில் அதிக பணம் செலவழிக்கப்படவில்லை.

> அநேக கிராம ஆஸ்பத்திரிகளில் வைத்தியர்களே கிடையாது.
>
> மேலும் கிராம ஆஸ்பத்திரிகளில் தகுந்த மருந்து களோ, போதிய மருந்துகளோ கொடுக்கப்படுவதில்லை.
>
> இதுபற்றி ஆஸ்பத்திரி வைத்தியர்களிடம் கேட்டால். அவர்கள் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை, நாங்கள் என்ன பண்ணுவோம்? என்று சொல்கிறார்கள்.
>
> ஆஸ்பத்திரியில் ஊசி மருந்து இல்லாத நிலையில், நோயாளிகளுக்கு ஊசி போட வேண்டியிருந்தால், அப்போது வைத்தியர்கள், நீங்கள் 3 ரூபாய் கொடுத்தால் உங்களுக்கு பிரைவேட்டாக (தனியாக) ஊசிபோடுகிறோம் என்று, நோயாளிகளிடம் சொல்கிறார்கள். இந்த நிலைமையை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.''

டாக்டர் இல்லை! நர்சு இல்லை! கம்பவுண்டர் இல்லை என்று சொன்னார் முனுசாமிக் கவுண்டர், காங்கிரஸ் எம். எல். ஏ. அங்கு மருந்தே இல்லை என்று கூறுகிறார் மற்றொரு காங்கிரஸ் எம். எல். ஏ. எஸ். இராமலிங்கப் படையாச்சி!!

காங்கிரஸ் ஆட்சி நல்லபடி காரியங்களைச் செய்யவில்லை என்று கழகத் தோழர்கள் சொன்னால், கண், கோவைப்பழம் போலச் சிவந்துவிடுகிறது. புலிபோலச் சீறுகிறார்கள் காங்கிரஸ் மந்திரிகள், தலைவர்கள்!! டாக்டர் இல்லாத, மருந்து இல்லாத ஆஸ்பத்திரி கட்டுகிற காங்கிரஸ் சர்க்காரை வாழ்த்தவா முடியும்! கண்டிக்காமலிருக்க முடியுமா! எதிர்க்கட்சி கண்டனம் கூறினால், எத்தனை இலட்சம் செலவானாலும், எதிர்க் கட்சியை, கழகத்தை ஒழித்துக்கட்டி விடுவேன் என்று மிரட்டுகிறார்கள்.

பொதுமக்களுக்காக, ஆட்சியில் உள்ள குறைகளை எடுத்துக்காட்ட எதிர்க்கட்சி இல்லை என்றால், ஆட்சி இன்னும் எவ்வளவு மோசமானதாகிவிடும், நாடு மேலும் எவ்வளவு வேகமாக நாசமாகிவிடும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

> ''பல கிராமங்களில் குடி தண்ணீர் வசதி இல்லை. பல கிராமங்களில் குடி தண்ணீர் மிகவும் மோசமானதாக இருக்கிறது. குறிப்பாகத் திருச்சி ஜில்லாவில் உடையார் பாளையம் தாலுகாவில் குடிதண்ணீர் மிகமிக மோசமான தாக இருக்கிறது. அங்கே பூமியை 100 அடி ஆழம் வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே

> குட்டை குளங்களில் உள்ள குடிதண்ணீரை அங்குள்ள மக்கள் குடித்து வருகிறார்கள்.''

என்றும் கூறுகிறார் இராமலிங்கப் படையாச்சி. காங்கிரஸ் வெற்றிபெற்ற தொகுதியிலே உள்ள நிலைமை இது! காங்கிரஸ் வெற்றிபெறாத தொகுதிகளில்தான் நிலைமை மோசமாக இருக்கிறது! ஆகவே காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டுத் தொகுதியைச் செம்மையானதாக்கிக் கொள்ளுங்கள் என்று பேசுகிறார்களே, சில பேச்சாளர்! காங்கிரஸ் வெற்றிபெற்ற தொகுதியில் உள்ள நிலைமையைக் காங்கிரஸ் எம். எல். ஏ.யே, காங்கிரஸ் அமைச்சர்கள் முன்னிலையில் எடுத்துக்காட்டிக் கண்டிக்கிறாரே, இதற்கு என்ன பதில் கூறுகிறார்கள்? வெட்கமாக இல்லையா காங்கிரஸ் ஆட்சியின் இலட்சணத்தைக் கண்டித்துக் காங்கிரஸ் எம். எல். ஏ. யே பேசும்போது.

ஏன், காங்கிரஸ் எம். எல். ஏ. இராமலிங்கப் படையாச்சி அப்படிப் பேசுகிறார்?

> காங்கிரசுக்கு ஓட்டுப்போடுங்கள், கஷ்டமெல்லாம் போய்விடும், வசதிகள் கிடைக்கும், வாழ்க்கை மேம்பாடு அடையும்

என்றெல்லாம் சொல்லித்தான் அவர் 'ஓட்டு' வாங்கினார்.

அவர் சொன்னது எதுவும் நடக்கவில்லை. குடிதண்ணீர் வசதிகூடக் கிடைக்கவில்லை. மக்கள் இராமலிங்கப் படையாச்சியை—''ஐயா! காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டால், பாலும் தேனும் கலந்து ஆறாக ஓடும் என்று சொன்னீர்களே! குடிக்கத் தண்ணீர்கூடக் கிடைக்கவில்லையே! இப்படி இருக்கிறதே உங்கள் ஆட்சியின் இலட்சணம்?'' என்றெல்லாம் கேட்கமாட்டார்களா! அந்த இடி பொறுக்கமாட்டாமல்! அவர், பாவம், சட்டசபையில் பேசுகிறார், மக்கள் படுகிற கஷ்டம் அவ்வளவு இருக்கிறது!!

> அசுத்தத் தண்ணீரைக் குடிப்பதால் அங்குள்ள மக்களுக்கு நரம்புச் சிலந்தி என்ற வியாதி வருகிறது. அது அங்கே மிகவும் அதிகமாக இருக்கிறது. அங்கே 80 சதவிகித மக்களுக்கு நரம்புச் சிலந்தி வந்திருக்கிறது.
>
> அங்குள்ள மக்கள் எல்லோரும் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். மக்கள் கைகால்களில் கட்டுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களிடம் அது என்ன கட்டு?

என்று கேட்டால், நரம்புச் சிலந்திக் கட்டு என்கிறார்கள். பெருவாரியான மக்களுக்கு இந்த வியாதி வந்திருப்பதால் அங்குள்ள மக்கள் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய கவலையைப் போக்க அரசாங்கம் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை."

எவ்வளவு பொறுப்பற்ற முறையிலே, காங்கிரஸ் சர்க்கார் நடந்துகொண்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா?

சட்டசபை சென்று, ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. வாதாடினால்தான் தொகுதிக்கு நன்மை கிடைக்கும்; எதிர்க்கட்சி வெற்றி பெற்றுப்போனால், தொகுதிக்கு நன்மை கிடைக்காது என்று சொல்கிறார்களே சிலர், இதோ, காங்கிரஸ் எம். எல். ஏ.தான் முறையிடுகிறார், அரசாங்கம் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. இதற்கென்ன சொல்கிறார்கள்?

குடிதண்ணீர் வசதிகூட இல்லை, காங்கிரஸ்காரர் வெற்றி பெற்ற தொகுதியில்!

திருச்சி ஜில்லாவில் மட்டுந்தான் இந்த நிலைமை என்று எண்ணிவிடாதீர்கள்.

மதுரை மாவட்டத்தில் பழனித் தொகுதி இருக்கிறது. அந்தத் தொகுதி எம். எல். ஏ. இலட்சுமிபதி ராஜு—காங்கிரஸ்காரர்—கடுங்கோபம் வரும் காங்கிரசைத் தாக்கினால்...அவர் பேசுகிறார், கேளுங்கள், தமது தொகுதி நிலைமை பற்றி.

"பல இடங்களில் குடிதண்ணீர் வசதி இல்லாமல் அங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரைக் குடித்துக்கொண்டு பல வியாதிகளால் அங்குள்ள மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நரம்புச் சிலந்தி என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் அவர்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு குடும்பத்தைப் பார்த்தால் அதில் நாலைந்து பேர் கட்டுகளைக் கட்டிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் கட்டிக்கொண்டிருக்கும் கட்டுகளை அவிழ்த்துப்பார்த்தால், உள்ளே ஒரு சிறிய நரம்பு கம்பிபோல் தெரியும். அதை

இழுத்துக் கட்டிக்கொண்டிருப்பார்கள். அதனால் அவர்கள் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அதற்கு எண்ணெய் தடவிக் கட்டிக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட வியாதிக்குக் காரணம், அங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீரை எடுத்துக் குடித்ததால். அப்படிப்பட்ட வியாதிகளால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்."

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் காங்கிரசாட்சி நடத்தும் கிராமங்களில்,

குடிதண்ணீர் வசதி இல்லை.

நரம்புச் சிலந்திபோன்ற நோய் வாட்டுகிறது.

ஆஸ்பத்திரிகளில் டாக்டர் இல்லை, கம்பவுண்டர் இல்லை, மருந்து இல்லை!

இவைகளை எடுத்துக்காட்டிக் கண்டித்தாலோ, காங்கிரஸ் தலைவர்களுக்கு பொறுமை இருப்பதில்லை; ஆத்திரம் பீறிட்டு கொண்டு வருகிறது.

காங்கிரஸ் எம். எல். ஏ.க்களாலேயே சகித்துக்கொள்ள முடியவில்லை காங்கிரஸ் ஆட்சியின் அவலட்சணங்களை!

கிராமங்களிலே, குடிதண்ணீர் வசதியில்லாமல், நரம்புச் சிலந்தி போன்ற கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படும் மக்கள் யார்?

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

ஆதித்திராவிட சமுதாயத்தினர்.

இவர்களின் எண்ணிக்கை பல கோடி! இவர்களிடம் தந்திரமாகப் பேசி, 'ஓட்டுகளை' வாங்கிக்கொண்டு, இவர்களைக் காங்கிரசாட்சி இந்தக் கதியிலே வைத்திருக்கிறது. கேட்டால் கோபம் வருகிறது கோலேந்திகளுக்கு! ஒரு கோடி செலவானாலும் சரி, எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டிவிடுகிறோம் என்கிறார்கள்.

எதிர்க் கட்சிகளை ஒழித்துக்கட்டுவது, காங்கிரசாட்சியிலே உள்ள குறைபாடுகளைக் கண்டிக்கும் காங்கிரஸ்காரர்களை. சட்டசபைக்குப் போக ஒட்டாமல் தடுப்பது, என்ற திட்டமிட்டுத்தான் காங்கிரஸ் கட்சியை ஆட்டிப்படைக்கும் பெரியவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஐயோ! பாவம்

நரம்புச் சிலந்தி கொடுமையான வியாதியாயிற்றே, அதனால் அவதிப்படுபவர் நமக்கு ஓட்டு அளித்த ஏழை எளியோர்களா யிற்றே, அவர்களைக் காப்பாற்றுவோம் என்று துடித்தெழுந்து காரியமாற்றுகிறதா காங்கிரஸ் அரசு? இல்லை! மாறாக, இதை யெல்லாம் அம்பலப்படுத்துகிறவர்களை அழித்துவிடவேண்டும் என்ற, ஆத்திரம்தான் அவர்களுக்கு ஏற்படுகிறது.

"அரிஜனங்கள் இரண்டு மூன்று மைல்கள் சென்று, தலையில் குடத்தை வைத்துக்கொண்டு போய்த் தண்ணீர் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது. அதனால் அரிஜனங்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல."

இதனையும் பழனித் தொகுதி எம். எல். ஏ.தான் கூறுகிறார்.

பழனித் தொகுதி மக்கள் காங்கிரசுக்கு ஓட்டு போட்டுக் கண்ட பலன் என்ன? நரம்புச் சிலந்தி!!

காங்கிரஸ் வெற்றிபெறாத இடங்களிலே, காங்கிரஸ் தலைவர் கள் சென்று, காங்கிரசை வெற்றிபெறச் செய்யாததாலேயே, இந்தத் தொகுதி சீர்படவில்லை என்று செப்புகிறார்கள். பழனித் தொகுதிக்கு என்ன? காங்கிரஸ் கட்சிக்குத்தானே மக்கள் ஓட்டுகளைத் தந்தனர்? பிறகு எதற்காக, பழனித் தொகுதிக்கு இந்தக் கதி?

காங்கிரஸ் எம். எல் ஏ. இருக்கும் தொகுதியிலே, இத்தனை அவதி ஏன் காணப்படுகிறது?

"கிராமத்திலுள்ள ஒரு தாய் பிரசவிக்கவேண்டுமானால் அவள் தலைநகர ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியதாக இருக் கிறது. அப்படி வருவதற்குள், அவள் பெரிய மரண வேதனையை அடையவேண்டியதாக இருக்கிறது.

என்று கூறுகிறார் காங்கிரஸ் எம். எல். ஏ.

எதிர்க்கட்சிகள், எங்கள் காங்கிரஸ் கட்சியை வேண்டு மென்றே கண்டிக்கின்றன என்று பேசுகிறவர்கள், காங்கிரஸ் எல். எல். ஏ.க்களே கண்டித்துத் தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டிருப்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி, எதிர்க்கட்சிகளையும் ஒழித்துவிட முடியாது. காங்கிரஸ் கட்சியிலேயே, உண்மையை மறைக்க முடியாதவர்கள் இருக்கிறார்களே, அவர்களையும் அழித்துவிட முடியாது.

குறைகளைக் கண்டிக்க இவ்வளவு விழிப்புணர்ச்சியுடன் இவ்வளவு பேர் இருக்கும்போதே, இந்த இலட்சணத்தில் இருக்கிறதே காங்கிரஸ் ஆட்சி, எதிர்க்கட்சியும் இல்லாது போனால், மோசமான நிலைமை இன்னுமல்லவா மோசமாகி விடும்!!

கிராமத்தார்கள், வைத்திய வசதியில்லாததால், நகரத்துக்கு வருகிறார்கள்—பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு. அங்கு மட்டும், அவர்கள் சீராக நடத்தப்படுகிறார்களா? போதுமான கவனிப்பு இருக்கிறதா? பெரிய ஆஸ்பத்திரிகளிலே மட்டும் நிலைமை, முதல் தரமாக இருக்கிறதா? இல்லை!

இல்லை! என்று சொல்பவர் யார்? எதிர்க்கட்சிக்காரர்தானே என்று கேட்பார்கள் காங்கிரஸ்காரர்கள். எதிர்க்கட்சி மட்டு மல்ல, காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களே சொல்கிறார்கள்.

"தாராபுரம் டவுனில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. சர்க்கார் ஆஸ்பத்திரி என்ற பெயரால், அது 20 வருஷமாக நடந்துவருகிறது. ஆனால், அதைப் பார்த்தால் ஒரு திருவிழாவிற்குச் சத்திரக்தில் கூட்டம் வந்து தங்கியிருப்பது போல் உள்ள நிலையில்தான், அங்கு ஆஸ்பத்திரிகளில் நோயாளி மக்கள் அவஸ்த்தைப் பட்டுக்கொண்டிருக் கிறார்கள்."

என்று சேனாதிபதிக் கவுண்டர் கூறுகிறார். காங்கிரஸ் எம். எம். ஏ. ஆமாம், அவருடைய பேச்சுத்தான் இது—சட்ட சபையில்.

காங்கிரஸ் எம். எல். ஏ. இலட்சுமிபதி ராஜு, இன்னும் விளக்கமாகக் கூறுகிறார்.

"ஆஸ்பத்திரிக்கு வந்தால் அங்குள்ள படுக்கைகள் ஒரே அழுக்காக இருக்கின்றன. கிட்டப்போனால் துர்நாற்றம் அடிக்கிறது. யுத்தகாலத்தில் அடிபட்டுக் கீழே விழுந்தவர் களுக்குப் போட்ட படுக்கைகளோ என்றுகூடத் தோன்று கிறது. அவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது அங்குள்ள படுக்கைகள்."

ஆக, மொத்தத்தில் பார்த்தால், கிராமங்களில் வைத்திய வசதி இல்லை; நகரங்களில் உள்ளது போதுமானதாகவும் இல்லை; திருப்பதிகரமாகவும் இல்லை; நகர பெரிய ஆஸ்பத்திரி களின் நிர்வாகமும் சரியாக இல்லை.

இதனைவிடக் கொடுமை ஒன்றும் இருக்கிறது. சர்க்காரை நடத்தும் எந்தக் கட்சியும் வெட்கித் தலைகுனிய வேண்டிய, கொடுமையான நிலைமை. எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் எதிர்ப்பு உணர்ச்சியால் பேசுகிறார்கள் என்று, சொன்னாலும்கூட, தப்பித்துக்கொள்ள முயற்சிக்க சாக்குப்போக்குச் சொல்லித் லாம்; சொந்தக் கட்சியில் உள்ளவரே சொல்லும்போது, என்ன செய்வது?

என்ன அந்தக் கொடுமை என்பதை காங்கிரஸ் எம்.எல்.ஏ. இலட்சுமிபதி ராஜு சொல்கிறார்.

> "ஆஸ்பத்திரிகளில்கூட இலஞ்சம் தாண்டவமாடு கிறது; பணம் கொடுத்தால்தான் காரியங்கள் நடைபெறு கின்றன."

காங்கிரசாட்சியிலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

இவைகளை அன்றாடம் எடுத்துக்கூறி, இடித்துக்காட்டி, குட்டுகளை உடைத்து, ஊழல்களை அம்பலப்படுத்துகிறதே தி. மு. கழகம் என்ற எரிச்சல், காங்கிரஸ் கட்சிக்கு, அதனால், இம்முறை எப்படியாவது தி. மு. கழகத்தைத் தோற்கடித்து விட வேண்டும்; அப்போதுதான், நிம்மதியாக நமது இஷ்டப்படி ஆட்சியை நடத்திக்கொண்டு போகலாம், கேள்வி இருக்காது, எதிர்ப்பு எழாது, தொல்லை வராது என்று எண்ணமிட்டுத், திட்டமிட்டு வருகிறது காங்கிரஸ் கட்சி.

பொதுமக்களுக்கு அமையும் சர்க்கார், பொறுப்புணர்ச்சி மறந்து, காட்டுப்போக்கிலே காரியமாற்றி, மக்களின் வாழ்வினைக் குலைக்கும்போது, தடுத்திட, திருத்திட, உள்ள ஒரே கருவி, எதிர்க்கட்சி! அதனை ஒழித்துவிட எண்ணுவது பொதுமக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு பாதுகாப்பையும் போக்கி விட்டுக், கண்மூடி தர்பார் நடத்துவதற்குத்தான்.

செய்யப்படுகிற காரியங்கள் செம்மையாக இருக்கவேண்டு மானால், எதிர்க்கட்சிமீது எரிந்துவிழுகிற இயல்பும், எதிர்க் கட்சி இருப்பதே நமக்கு இடையூறு என்ற எண்ணமும், ஆளும் கட்சிக்கு ஏற்படக் கூடாது.

எதிர்க்கட்சிக்கள், இன்றுள்ள ஆட்சியிலே நடைபெறும் பல காரியங்களிலே குற்றம் குறை காணுவதும், கண்டிப்பதும், எவ்வளவு தூரம் நியாயமானது என்பது, ஆளுங்கட்சியைச்

சேர்ந்தவர்களே, காங்கிரஸ் எம். எல். ஏ.க்களே, தமது கண்டனத்தைத் தெரிவித்திருப்பதிலிருந்து விளங்கும்.

மற்றோர் எம். எல். ஏ. இன்றுள்ள ஆட்சியிலே உள்ள முறைகேடு, சீர்கேடு ஆகியவைபற்றிச் சட்டசபையிலே பேசி யிருப்பதைப் பார்க்கலாம்;

> கிராமங்களில் மராமத்து இலாகா சரியானபடி வேலை செய்வது இல்லை. கிராமங்களிலுள்ள ரோடுகள் ரொம்ப வும் மோசமான நிலையில் இருக்கின்றன. அங்குள்ள ரோடுகளில் மனிதன்கூட நடந்துபோக முடியாமல் இருக்கிறது. ரோடுகளுக்கு மராமத்து இலாகா சரியான படி 'மெட்டல்கள்' (கப்பி) போடுவதில்லை. அது எதனால் ஏற்படுகிறது என்றால், ரோடுகளைப் போடுவதற்குக் காண்ட்ராக்டுக்கு விடும் கண்ட்ராக்டர்களிடம்தான் குறைபாடு இருக்கிறது. அவர்கள் அதிகப்படியாக இலஞ்சம் கொடுத்து வருவதால், அவர்கள் சரியாக ரோடு களைப் போடாமல் விட்டுவிடுகிறார்கள். அதனால் ரோடு களைப்போடும் வேலையைக் கண்ட்ராக்டர்களுக்கு கொடுக் காமல், அந்த முறையையே எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களால்தான் இலஞ்சம் அதிகரிக்கிறது. எந்த டிபார்ட்மெண்டில் (இலாகாவில்) அதிகப்படியான இலஞ்சம் இருக்கிறது என்றால், இப்படிப் பட்ட கண்ட்ராக்டர்கள் இருக்கக்கூடிய மராமத்து ஹைவேஸ் (நெடுஞ்சாலை இலாகா) டிபார்ட்மெண்டில் தான் அப்படி இருக்கிறது. அவர்களால்தான் அரசாங்கத் தின் கோடிக்கணக்கான ரூபாய், கிராமங்களுக்குச் செலவு செய்யப்படாமல் விரயமாகிறது.

காங்கிரஸ் எம்.எல். ஏ.க்கள் மனதிலும், இந்த ஆட்சிமுறையிலே காணப்படும் குறைபாடுகள் பற்றி, எவ்வளவு குமுறல் இருக் கிறது என்பது விளக்கமாகத் தெரிகிறது.

மற்றொருவர், சட்டசபையில், இதே முறையில்,

> கிராம நிர்வாகம் முதற்கொண்டு ஜில்லா நிர்வாகம் வரையிலும் செக்ரடேரியட் நிர்வாகம் வரையிலும் வேலைகள் ரொம்பவும் தாமதமாக நடந்துவருகிறது. அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அப்படித் துரிதப் படுத்தினாலொழிய, வேலை சரிவர நடைபெறாது. சிறு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கவேண்டும் என்றாலும், அது

> சாங்ஷன் ஆவதற்கு அநேக நாட்கள் ஆகிறது. சாங்ஷன் வாங்குவதற்குள் பல சங்கடங்கள் ஏற்படுவதோடு, கால தாமதமும் ஏற்படுகிறது. அதனல் கிராமவாசிகளுக்கு இருக்கும் கஷ்டம் சொல்லி முடியாது.

என்று பேசியிருக்கிருர்.

காங்கிரஸ்காரர் வெற்றிபெற்ற தொகுதிகளிலே, காரியங்களை அப்படி அப்படியே முடித்துவிடலாம், சர்க்கார் உத்தரவு விரைவில் எளிதாகக் கிடைக்கும், கழகத்துக்காரன் வெற்றி பெற்ற இடமாக இருந்தால் ஒரு வேலையும் நடக்காது, என்று சிலர் பேசுகிருர்கள்; விவரம் தெரியாமல் சிலரும், வேண்டுமென்றே சிலரும்.

> நிர்வாகம் எவ்வளவு தாமதமாக இருக்கிறது.

என்று திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் பேசியிருப்பதைக் கவனித்துப் பார்ப்பவர்கள், சர்க்காரிலே பிடித்திருக்கிற 'நோய்'தான், காலதாமதம் ஏற்படக் காரணமே யொழியக் கட்சிப் பிரச்சினை காரணமல்ல என்பதைத் தெரிந்துகொள்வார்கள்.

எல்லோராலும் முடிகிறதா இப்படித் தெளிவுபெற; பொருள் என்ன இந்த நிலைமைக்கு என்று புரிந்துகொள்ள முடிவதில்லை. எனவேதான், அவர்களிடம் போய்க் கலகம் மூட்டிப் பார்க்கிருர்கள். காங்கிரஸ் மட்டும் இந்தத் தொகுதியில் வெற்றிபெற்ருல், என்னென்ன வேண்டுமோ அவ்வளவும், கண்மூடிக் கண் திறப்பதற்குள் சாதித்துக்கொள்ளலாம் என்று நாக்கில் தேன் தடவுகிருர்கள்.

ஓட்டு வாங்குவதற்காக மட்டுமே, வெளியே இப்படிக் காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிருர்கள்; சட்டசபைக்கு உள்ளேயோ, சஞ்சலத்தோடு பேசுகிருர்கள்; காங்கிரசாட்சியின் சீர்கேடுகளை இடித்துக் கூறுகிருர்கள். காங்கிரசின்மீது ஒரு தூசு விழுந்தால் தம் கண்ணில் விழுந்ததுபோலக் கருதிக் குமுறுவார், கிருஷ்ணசாமி நாயுடு எனும் காங்கிரஸ் எம். எல். ஏ. அவராலேயே தாளமுடியாமல்,

> "கிராம அபிவிருத்தி வேலைகளைப் பொறுத்த மட்டில் பொது மக்களுக்கு அதிர்ப்தி வளர்ந்து கொண்டு வருகிறது."

என்று மந்திரிகளைப் பார்த்துக் கூறினர், சட்டசபையில்,

குற்றம் குறைகளை எடுத்துக் காட்டுவதும் கண்டிப்பதும், மந்தமாக உள்ள சர்க்காரின் போக்கை மாற்றும். அதற்காகத்தான் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் அவ்விதம் பேசுகிருர்கள் என்று சமாதானம் தேடிக் கொள்ளக்கூடும். உண்மையில் குறைகளைக் கூறக்கேட்கும் மந்திரிகள், துடித்தெழுந்து காரிய மாற்றி நிலைமைகளைச் சரிசெய்கிருர்களா என்ருல், அதுதான் இல்லை. உள்ள குறைகளை, ஊழல்களை, சீர்கேடுகளை, முறைகேடுகளை எடுத்துச் சொன்னபடி இருக்கிருர்கள். மந்திரிகளோ, அவைகளைக் காதில் வாங்குவதாக இல்லை.

> "நாங்கள் தொகுதியிலே இருக்கும் குறைபாடுகளைப் பற்றிக் குறிப்புகள் அனுப்புகிரேம். பல விண்ணப்பங்களை அனுப்புகிரேம். ஆனல் அவைகளுக்கெல்லாம் பதில் அனுப்புவதில்லை."

என்று சட்டசபையில், காங்கிரஸ் எல். எல். ஏ. ஜி. பி. மாணிக்கம் என்பவர், குறைபட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் வெற்றி பெருத தொகுதிகளிலே இருந்து அனுப்பப்படும் மனுக்களைக் கவனிக்கமாட்டார்கள் என்று சில குறைகுடங்கள் கூறுகின்றன. மாணிக்கம், காங்கிரஸ்காரர். அவர் அனுப்பிய மனுக்களும் விண்ணப்பங்களும். காங்கிரஸ் மந்திரிகளால் கவனிக்கப்படவில்லை, என்பதை அவரே எடுத்துக் கூறுகிருரே, இதற்கென்ன சொல்வது!

அண்ணுத்துரை போன்ற காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் அனுப்பும் மனுக்களை, காங்கிரஸ் மந்திரிகள், குப்பைக் கூடைக்குத்தான் அனுப்புவார்கள்; காரியம் நடக்காது என்று தரக்குறைவாக, அரசியல் அநாகரிகப் பேச்சுப் பேசுகிருர்கள் அரைவேக்காடுகள்! காங்கிரஸ் எல். எல் ஏ. அனுப்பிய மனுக்கள் எந்தக் கூடைக்குப் போயின என்பதைச் சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

> "இதில் எங்களுக்குத்தான் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. என்ன வேலை செய்யவேண்டுமென்று தெரிவதில்லை. போட்ட விண்ணப்பத்திற்குப் பதில் இல்லையென்ருல் நாங்கள் என்ன செய்வது."

என்று கேட்கிருர், மாணிக்கம், காங்கிரஸ் எம். எல். ஏ.

காங்கிரஸ்காரர், எம். எல். ஏ. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், என்னென்ன நன்மைகளோ கிடைக்கும் என்று பேசு

கிருர்களே, என்ன பலன் கண்டார், மாணிக்கம் எனும் காங்கிரஸ் எம். எல். ஏ. காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கும் எம். எல். ஏ. க்களின் எதிரிலேயே, காங்கிரஸ் அமைச்சர்களின் அலட்சியப் போக்கைக் கண்டிக்கிருர்கள், எங்கள் விண்ணப்பங்களைக் குப்பைக் கூடைக்கு அனுப்பிவிடுகிருர்களே என்று பேசி ஆயாசப்படுகிருர்கள்.

நிர்வாகத்திலே ஒழுங்கு இல்லை, சுறுசுறுப்பு இல்லை, பொறுப்பு இல்லை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறும்போது, மீசை படபடக்கிறது, கோபம் கொந்தளிக்கிறது, காங்கிரஸ் தலைவர்களுக்கு. அதிலும் கழகத்தார் பேசிவிட்டாலோ, வெந்தபுண்ணிலே வேல்சொருகுவதுபோல் இருக்கிறதே என்று கூறுகிருர்கள்.

இல்லாததையா எதிர்க்கட்சியினர் கூறுகிருர்கள்? வேண்டுமென்றே, பழி சுமத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் பேசுவதுதான் எதிர்க்கட்சிக்காரர்களின் போக்கு என்று அங்கலாய்த்துக்கொள்ளும் அன்பர்கள், இதற்கு என்ன பதில் கூறுகிருர்கள், என்பது தெரியவேண்டும்.

> "நம்முடைய அரசாங்கத்திலிருந்து இலட்சக்கணக்கான பண உதவி ஏழை விவசாயிகளுக்கும், பிற்பட்ட வகுப்பாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. ஆனல் அவற்றை அப்படியே நேரிடையாக விவசாயிகள் பெறமுடியாதபடி இலஞ்சம் நடமாடுகிறது. அதிகாரிகளை அணுகி அந்தப் பண உதவி முழுவதையும் பெறுவதற்குள் விவசாயிகள் பாதிப்பணத்தை இழந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கிருர்கள்:"

என்று முதியவர் கோமதி சங்கர தீட்சதர் எனும் காங்கிரஸ் எம். எல். ஏ. சட்டசபையில் பேசியுள்ளார்.

இலஞ்சம் நடமாடுகிறது என்று காங்கிரஸ் எம். எல்.ஏ. யே கூறுகிருர்! கேட்டுக்கொண்டுதான் இருக்கிருர்கள் காங்கிரஸ் மந்திரிகள்!!

எதிர்க்கட்சிக்காரர்கள் என்னென்ன குறைபாடுகள் இந்த ஆட்சியிலே இருப்பதாகச் சொல்லுகிருர்களோ, அவைகளையே, காங்கிரஸ் எம். எல். ஏ. க்களும் கூறுகிருர்கள். வெட்கம், துக்கம், கோபம், எதுவுமின்றிக் காணப்படுகிருர்கள் மந்திரிமார்! எதிர்க்கட்சிக்காரர் இதுபோலப் பேசினலோ, ஏசுகிருர்கள். இது எந்தவகையான நியாயமோ தெரியவில்லை.

இடையிடையே இரண்டொரு புகழுரைகளை வீசிவிட்டுக், கழகத்தைத் தாக்கி நாலு வார்த்தை பேசிவிட்டு, காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் ஆட்சியின் போக்கைக் கண்டிக்கிருர்கள்.

ஆயிரம் திட்டட்டும், நம்மைக் கைவிட்டுவிடாமல் இருக்கிருர்கள் அல்லவா, நமது கட்சியில் இருக்கிருர்கள் அல்லவா, அது போதும், என்பது மந்திரிகளின் எண்ணம்.

அதிகமாகக் கண்டித்துப் பேசிவிட்டால், அடுத்த முறை கட்சியின் தயவு கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பயம், சட்டசபையில் இடம்பெற்ற காங்கிரஸ்காரர்களுக்கு.

இரு சாராரும், ஒருவர்மீது ஒருவர் ஓராயிரம் குறைகள் கூறிக்கொண்டே, 'குடும்பம்' நடத்துகிருர்கள்.

அதிகாரம் காங்கிரசிடம் இருப்பதால் மட்டுமே, பிய்த்துக்கொண்டுவராமல், ஒட்டிக்கொண்டு, கிடைத்ததைச் சுவைத்துக்கொண்டு பலர் இருக்கிருர்கள்.

அதுபோலவே, பணபலம், ஆள்கட்டு, ஜாதிபலம் போன்றவைகள் உள்ளவர்களை இழுத்துப்போட்டு வைத்தால், அவர்கள் எப்பாடுபட்டாகிலும் 'ஓட்டு' வாங்குவார்கள், கட்சி வெற்றி அடையும், அதிகாரத்தைக் கைப்பற்றலாம்; என்பது காங்கிரஸ் தலைவர்களின் எண்ணம்.

அதனுல்தான், காங்கிரசுக்கு எந்தவிதத்திலும் முன்தொடர்பு இல்லாதவர்கள், ஊர் மக்களுக்கு ஒரு துளி உதவியும் செய்தறியாதவர்கள், சொந்த இலாபத்துக்காகக் காலமெல்லாம் பல தொழில்களிலே ஈடுபட்டு உழல்பவர்கள், இன்று காங்கிரசில் சேர்ந்துகொண்டு, தங்கள் இலாப வேட்டைக்குக் குந்தகம் வராமல் பார்த்துக்கொள்கிருர்கள்.

இந்த இடுக்கித் தாக்குதலில் சிக்கி, ஏழை எளியோர் தொல்லைப்படுகிருர்கள்.

இந்த இடுக்கி இருக்கிறமட்டும், மக்களாட்சி முறை வெறும் கேலிக்கூத்தாகத்தான் ஆக்கப்பட்டுவிடும். மக்களுக்கு 'ஓட்டு' இருக்கும்; ஆனல், அது அச்சம், தயை, தாட்சணியத்துக்குப் பறிகொடுக்கப்படும் பரிதாபநிலை இருக்கும்.

காங்கிரஸ்காரர் வெற்றிபெருத தொகுதிகளில் காரியம் சரிவர நடைபெருது என்று பயமூட்டுவார்கள்—பயமூட்டுகிருர்கள்.

காங்கிரஸ் எம். எல். ஏ—க்களே காங்கிரசாட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பேசியிருப்பதிலிருந்து, காங்கிரஸ் வெற்றிபெற்ற இடங்கள். பொன்பூத்த இடங்களாகி விடவில்லை; அங்கு, ஆஸ்பத்திரிகளில்,

டாக்டர் இல்லை!

நர்சு இல்லை!

கம்பவுண்டர் இல்லை!

மருந்து இல்லை!

இலஞ்சம் தாண்டவமாடுகிறது!

நிர்வாகம் சுறுப்பாக இல்லை!

என்பது விளக்கமாகத் தெரிகிறது.

கிராமங்களையும், பழங்குடி மக்களையும், பாட்டாளிகளை யும், காங்கிரசாட்சி புறக்கணித்தும், கேவலப்படுத்தியும், கொடுமைப்படுத்தியும் வருகிறது,

சலுகைகள், வசதிகள், அந்தஸ்துகள், இலாபம் தரும் தொழில்கள் யாவும், முதலாளிகளுக்குத் தரப்படுகின்றன.

காங்கிரக்கட்சி அது யாருக்காக?

கனதனவான், முதலாளிக்காக!

என்ற நிலைமைதான் இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர்களோ, பொதுமக்கள் இந்தச் சூது சூழ்ச்சியைத் தெரிந்துகொள்ளவில்லை என்ற எண்ணத்தில், சமதர்மம் பேசுகிறார்கள். இவர்கள் பேசும் சமதர்மத்துக்கும் உண்மையான சமதர்மத்துக்கும் சம்பந்தமே கிடையாது. இவர்களுக்குச் சமதர்மத் திட்டத்தை நிறைவேற்றும் ஆர்வமும் கிடையாது; நம்பிக்கையும் நிச்சயம் இல்லை.

காங்கிரசாட்சி ஏற்பட்டபிறகு—இந்தப் பதினைன்கு ஆண்டுகளில் முதலாளிகளின் ஆதிக்கம் மலைபோல வளர்ந் திருக்கிறது. ஆனால், மக்களை மயக்க, ஊர் மெச்ச, உலகம் மெச்ச, உதட்டளவில் சமதர்மம் பேசுகிறார்கள்.

காட்டிலுள்ள புலிகள் எல்லாம்
கடும்தவம் செய்த கதைபோல

காங்கிரஸ் கனவான் பேசுகிறார்
கதை கதையாக, சமதர்மம்!

*

தம்பி! இதனை எல்லாம் நாட்டினருக்கு எடுத்துக்கூற வேண்டுமே! நானே ஒவ்வொரு இடத்துக்கும் வந்திருந்து இவைகளைக் கூறமுடியுமா—நேரம்தான் கிடைக்குமா—உடல் நிலைதான் இடம் கொடுக்குமா!

எனவேதான், உன்மூலம் ஊராருக்கு இவைகளை அறிவிக்க எண்ணுகிறேன். நாட்கள் அதிகம் இல்லை! கூறவேண்டியவை களோ அடுக்கடுக்காக!!

பெரியாரின் தூற்றலைக்கேட்டோ, காங்கிரசாரின் கபடப் பேச்சினைக் கேட்டோ, பொதுமக்கள் ஏமாந்துபோய்விடவில்லை என்பதை, ஊரார் உரையாடல் காட்சிகளைக் கண்டால், உணர்ந்துகொள்வாய்.

ஒரு காட்சி காட்டட்டுமா? நடந்தது எவ்விடத்தில் என்று தானே கேட்கிறாய்? நாட்டில், ஓரிடத்தில்! இரு தாய்மார்கள்! காங்கிரசுக்காக ஓட்டுக் கேட்டுவிட்டு, 'தரகர்' போனபிறகு, உரையாடுகிறார்கள் பெயர் கேட்கிறாயா? வைத்துக் கொள்ளேன், கன்னி—பொன்னி—என்று.

கன்னி :-

வந்தவர் யார்? பொன்னம்மா?
வளைந்து நெளிந்து நின்றாரே!
பேச்சில் வெல்லம் கலந்தாரே
பேந்தப் பேந்த விழித்தாரே!

பொன்னி :-

வாழவிடாமல் வரி போட்டு
வாட்டிய காங்கிரஸ் காரரடி
கேட்டுவிட்டேன் துணிவாக
'ஓட்டு' இல்லை, 'போ' என்றேன்.

கன்னி :-

காதில் இருந்தது காணேமே
காரணம் என்ன? பொன்னம்மா?

பொன்னி :-

காங்கிர சாட்சியில் போட்டவரி
கட்டக், கம்மலை விற்றுவிட்டேன்.

கன்னி :-

வீட்டுக்காரரர், சௌக்கியமா?
வேலை கிடைத்து விட்டதுவா?

பொன்னி :-

வேதனை கேளடி, பொன்னம்மா!
வேலையில்லை! எனும் பலகை
எழுதும் வேலை அவருக்கு!
நாள் முழுதும் பாடுபட்டால்
கிடைப்பது ஒண்ணரை ரூபாய்தான்!

கன்னி :-

ஏழைகள் வாழச் சுயராஜ்யம்
என்று பேசினர் இனிப்பாக,
ஏமாந்து போனோம் பொன்னம்மா!

வருகுது தேர்தல் விரைவாக
வாட்டிய காங்கிரசை ஓட்டிடலாம்
ஓட்டுகள் நம்மிடம், பொன்னம்மா!
'உதயசூரியன்' ஒளிவிடவே
உழைப்பவர் வாழ்வு தழைத்திடவே
பாடுபடுவது, தி. மு. க.

பொன்னி :-

அண்ணன் அதைத்தான்
சொல்லுகிறார், இருவண்ணக்கொடியை
ஏந்துகிறார், திண்ணம்
வெற்றி என்று கூறிநித்தம் வாழ்த்துகிறார்.

கன்னி :-

உண்மை அதுதான், பொன்னம்மா!
'உதயசூரியன்' நம் சின்னம்
'ஓட்டுகள்' அதற்கே, போட்டிடுவோம்.

தாய்மார்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுவிட்டார்கள், தம்பி! காங்கிரஸாட்சி, ஏழை எளியோருக்கு இல்லை, என்கிற உண்மையை. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தெளிவைத் திகிலூட்டிப் போக்கிவிடக், காங்கிரஸ் பலமான முயற்சியில் ஈடுபடுகிறது. ஆனால் அரிசிப்பானை அரசியல் பேசுகிறது! காங்கிரஸ் சாயம் வெளுத்துப்போகிறது. தாய்மார்கள் அதிக விலைகொடுத்து வாங்கிடும் சேலையின் சாயம் போவது காணும் போதே, தொட்டதற்கெல்லாம் வரிப்போடுவது கண்டு, அவர்கள் வாட்டமடைந்துள்ளனர். நாட்டை மீட்டவர்கள் என்கிறார்களே! நல்லவர்கள், நம்மவர்கள், என்கிறார்களே! என்று கனிவுகாட்டி ஓட்டுப் போட்டார்கள்—ஆனால் வீடு வாழவில்லை, வேதனை குறையவில்லை, காண்கிறார்கள். எனவே, காங்கிரசாட்சியை நீடிக்கவிடக்கூடாது என்று எண்ணுகிறார்கள். ஆடவர் பேசுவது, அந்த உறுதியை அதிகப்படுத்துகிறது. ஒருதாய் வயிற்றில் பிறந்தோமா; ஒட்டு உறவு கொண்டோமா என்று கொட்டும் பேச்சுப் பேசாத, குணமுடையார் இருவர், அண்ணன்—தம்பி முறையுடன் பேசுகின்றனர்; எங்கோ ஓரிடத்தில். பெயரா? வைத்துக்கொள்ளேன், காசி, மாசி, என்று.

காசி :-

வளருவது காங்கிரசு ஆட்சியிலே
என்ன அண்ணேன்?
வகையாக எனக்கதனைச் சொல்லு
அண்ணேன்!

மாசி :-

எதை என்று நான் உனக்குக்
கூறுவேன், தம்பி!
என் இதயம், குமுறுதே, எண்ணிக்
கொண்டால்;

கள்ள மார்க்கட்டு வளருதப்பா!
கனதனவான் இலாபம் பெருகுதப்பா!
வரிகள் சரமாரி ஏறுதப்பா!
வறுமை பிணிபலவும் ஓங்குதப்பா!
பெர்மிட்டு லைசென்சு பெருத்துப்போச்சு!
பெற்றுத்தரக் கங்காணிக் கூட்டமாச்சு!
ஓட்டுக்குத் தர காசு குவிந்துபோச்சு!
உண்மை, அன்பு, அறம் பண்பு இளைத்துப்போச்சு

ஆட்சியில் ஆணவம் அதிகமப்பா!
அச்சம்கொண்ட மக்கள் தொகை கொஞ்சமல்ல!
அடுத்துவரும் தேர்தலிலே காங்கிரஸ் கெலித்தால்
அடிமைநிலை, தமிழருக்கு, முற்றுமப்பா!!

காசி :-

ஐயய்யே! அண்ணேன்! இதற்கு
என்ன செய்யலாம்? அனியாயம் ஒழிய
வழி ஒண்ணுமில்லையா?

மாசி :-

கண்ணுன என் தம்பி! வழி இருக்குது!
பொன்னுன வாய்ப்பும் கிடைத்திருக்குது,
பொதுத்தேர்தல் சமயத்தில் பொறுப்பை
உணர்ந்து,
பொல்லாங்கை ஒழித்திட நாம் எல்லாம்கூடி,
போட்டிடலாம் 'ஓட்டுகளை' கழகச்
சின்னம் அதற்கே!!
திக்கற்றோம் என்றே நாம் தேம்ப வேண்டாம்!
தி. மு. க. துணை இருக்கு, பயமே வேண்டாம்!
தி. மு. க. சின்னம்தான், 'உதயசூரியன்'
தீமைகளை ஒழித்துக்கட்ட 'உதயசூரியன்'

*

இதைத்தான், தம்பி! நாடு அறிய வேண்டும். ஒவ்வொரு வீடும் அறியவேண்டும். அதனை அறியச் செய்வதற்காகத்தான், நமது கழகக் காவலர்கள் காஞ்சியில் முகாமிட்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டதால் ஏற்பட்ட களிப்பு, என் களைப்பை யெல்லாம் போக்கி, இவ்வளவு நேரம் எழுத வைத்தது. மணி தெரியுமா, தம்பி! நாலு!! விடியப்போகிறது! உதயசூரின் எழக் காத்திருக்கிருன்! உனக்கு நான் கூறுகுறேன், ஊராருக்கு, நீ, சொல்லு.

அண்ணன்,

அண்ணாதுரை

3-12-'61

தமிழ் நூல் காப்பகம்
09213
தமிழ் நகர் விருத்தாசலம் - 606

அறிஞர்

அண்ணாவின் நூல்கள்

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(முதற் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(இரண்டாம் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(மூன்றும் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(நான்காம் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(ஐந்தாம் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(ஆறும் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(ஏழாம் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(எட்டாம் பகுதி)

தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்—(ஒன்பதாம் பகுதி)

கைதி எண் — 6342

பார்வதி பி.ஏ.

ரங்கோன் ராதா

மாஜிக் கடவுள்கள்

காதல் ஜோதி

ஓர் இரவு

அண்ணாவின் சொற்செல்வம்

பாரி நிலையம்

184, பிராட்வே :: சென்னை-1

Jacket Printed at Neo Art Press, Madras-14